முனைவர் **பெ. இளையாப்பிள்ளை**
பேராசிரியர் & துறைத்தலைவர்,
இலக்கியத்துறை
தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.

முனைவர் **ஜெ. தேவி**
கருத்தரங்க ஒருங்கிணைப்பாளர்
பேராசிரியர், இலக்கியத்துறை
தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.

பன்னாட்டு கருத்தரங்க கட்டுரைகள் 2022

தமிழ் இலக்கியங்களில் அறம்

தொகுப்பாசிரியர்

முனைவர் ஜெ.தேவி

துறைத்தலைவர்

முனைவர் பெ.இளையாப்பிள்ளை



PUBLICATION HOUSE

நூற்குறிப்பு...

தலைப்பு	:	தமிழ் இலக்கியங்களில் அறம்
ஆசிரியர்	:	முனைவர் ஜெ.தேவி
முதற்பதிப்பு	:	2022
உரிமை	:	பதிப்பகத்திற்கே
பதிப்பாசிரியர்	:	எஸ்.கௌமாரீஸ்வரி எம்.ஏ., எம்.எல்.ஐ.எஸ்.,
பக்கம்	:	324
பொருள்	:	கட்டுரை
விலை	:	ரூ.350.00
தட்டச்சு	:	ஜெ.ஜெ.டிசைன்ஸ், திருச்சி. 9952034876
அச்சிட்டோர்	:	அ.எஸ்.எக்ஸ் பிரிண்டர்ஸ், சென்னை 1.

TAMIL ILAKKIYANGALIL ARAM

By	:	Dr. J.Devi
Published on	:	2022
CopyRights ©	:	MJ PUBLICATION HOUSE
Editor	:	S.Gowmareeswari M.A., M.L.I.S.,
Pages	:	324
Subject	:	Non-Fiction
Price	:	Rs.350.00
Typeset by	:	JJ Designs, Trichy. 99520 34876
Printed @	:	A.S.X Printers, Chennai 1.
ISBN	:	978-93-91379-29-2
Book ID	:	MJPH 10160

MJ PUBLICATION HOUSE

#9, Saint John Church Complex, Rockins Road, Trichy - 1.

Ph : 99434 28994, 0431 4038 994. mjpublications2018@gmail.com.

@mjpublication @facebook.com/mjpublicationhouse

16.	அகவியல் அறத்தில் முடிசூடும் முல்லை	முனைவர் தி.நெல்லையப்பன்	165
17.	தெய்வங்கள் திருக்கோயில்கள்சார் பழமொழிகள் சுட்டும் அறங்கள்	பேரா. மு.பாண்டி	175
18.	மருதத்திணைப் பாடல்கள் முன்வைக்கும் அறக் கருத்துகள்	முனைவர் மூ.பாலசுப்பிரமணியன்	182
19.	காமத்தில் அறம்	முனைவர் செ. பாலு	204
20.	தமிழ்ச்சூழலில் அறக் கருத்துக்களின் தாக்கமும் ஆசாரக்கோவையின் வகிபாகமும்	முனைவர். வ.மகேசுவரன்	212
21.	தமிழர் அறக்கோட்பாடுகள் சமூக உளவியல் நோக்கு	முனைவர் ஆ. மணவழகன்	226
22.	திருக்குறள் : அறச்சிந்தனையின் கோட்பாட்டுச் சூழல்கள்	ந. முத்து மோகன்	238
23.	இலக்கியங்களில் ஈட்டல், ஈதல் அறங்கள்	வீ. ரேணுகாதேவி	254
24.	அரசும் அறமும்	பேராசிரியர் முனைவர் க. சங்கர்	264
25.	நீதி இலக்கியங்களில் அறம்	முனைவர் அ.சையத் ஜாகீர் ஹசன்,	271
26.	திருக்குறள் கூறும் அறம்	முனைவர். இ.ஆர். இரவிச்சந்திரன்	278
27.	கம்பனில் வாழ்வியல் அறங்கள்	முனைவர் கா.வாசுதேவன்	284
28.	வெண்பா மற்றும் ஆசிரியப்பா வழி அறம்	ப.செந்தில் முருகன்	290
29.	கவிஞர் வெண்ணிலா கூறும் இல்லற அறம்	வி.எம்.பெனாசிர் ஜெய்னப்	298

25. நீதி இலக்கியங்களில் அறம்

முனைவர் அ.சையத் ஜாகீர் ஹுசன்,
இணைப்பேராசிரியர் மற்றும் தலைவர் (பொ),
முதுகலைத் தமிழாய்வுத்துறை, கலைப்புல முதன்மையர்,
ஜமால் முகமது கல்லூரி, திருச்சிராப்பள்ளி – 620 020.

வாழ்க்கை என்பது மின்னலைப் போன்றது அல்ல. மின்னியது காணாமல் போவது தான் மின்னலின் தன்மை. ஆனால் மனித வாழ்க்கை என்பது ஏதோ பிறந்தோம் ஏதோ வளர்ந்தோம் ஏதோ வாழ்ந்தோம் ஏதோ இறந்தோம் என்பது அல்ல. ஆண்டவன் முன் அனைவரும் சமம் என்றார் இராமானுசர். தீண்டாமையை ஒழிக்க வேண்டும் என்றார் காந்தியடிகள். சாதிமத வேறுபாட்டை அறவே நீக்க வேண்டும் என்றார் தந்தை பெரியார். ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காணலாம் என்றார் பேரறிஞர் அண்ணா. ஆக மனிதம் போற்றப்பட வேண்டுமானால் மனிதன் முதலில் அறங்களைப் பேணி மனிதனாக வாழக் கற்றுக்கொள்ள வேண்டும். அறம், பொருள், இன்பம், வீடுபேறு என்பது நாற்பொருளும் மனித வாழ்க்கையின் இன்றியமையாத அடிப்படை காரணிகளாக உள்ளன. அதனால் தான் அறத்தில் தொடங்குகிறது மனித வாழ்க்கை. அறம் சார்ந்த வகையில் பொருளைச் சேர்த்து, அறம் சார்ந்த இன்பத்தை மனிதன் பெறுவானானால் அவன் வீடுபேறு அடைவது திண்ணம். ஆகவே தான் நம் நீதி இலக்கியங்கள் யாவும் அறத்தை முதன்மைப்படுத்தியே பேசுகின்றன.

அறத்தின் தன்மை

அறம் மிகவும் வலிமையானது. மனிதனை நன்மையின் பக்கம் இட்டுச்செல்வது. இன்றைய காலத்தில் அரசியல், சமூக, பண்பாட்டு களத்தில் அறமானது முக்கியப் பங்கினைப் பெற்றுள்ளது. 'யாதும் ஊரே யாவரும் கேளீர்', 'செல்வத்துப்பயனே ஈதல்', 'எல்லோரும் ஓர் குலம், எல்லோரும்

ஓர் இனம்', 'பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்', 'உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோர்' போன்ற வாசகங்கள் அறத்தை வலியுறுத்துவதாக அமைந்துள்ளதை நாம் காணமுடிகிறது.

உளத்தூய்மையே அறம்

மனிதனின் வாழ்க்கையானது பிறப்பில் தொடங்கி இறப்பில் முடிகிறது. மனிதனின் அனைத்து செயல்களுக்கும் அடிப்படையாக இருப்பது மனமே. மனமது செம்மையானால் மந்திரங்கள் தேவையில்லை என்பதற்கு இணங்க மனமானது தூய்மையுடன் அமைதல் வேண்டும். ஆகவே தான் வள்ளுவப் பெருந்தகை,

"மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்தறன்
ஆகுல நீர பிற" **(குறள்: 34)**

என்று அறிவுறுத்துகிறார். மனத்தூய்மை என்பது மனிதனுடைய நடத்தைகளையும், செயல்களையும் அடிப்படையாகக் கொண்டது. மனம் தான் உணர்வுகளை உண்டாக்குகிறது. உணர்வுகள் தான் எண்ணங்களாகப் பரிணமிக்கின்றன. எண்ணங்கள் தான் செயல்களாக மாறுகின்றன. செயல்கள் தான் பழக்கங்களாக மாறுகின்றன. பழக்கங்கள் தான் நடத்தைகளாக மாறுகின்றன. நடத்தைகள் தான் மனிதனை அறம் சார்ந்த வாழ்க்கையை வாழ மனிதர்களை உருவாக்குகின்றன.

ஔவையார் தன்னுடைய, ஆத்திசூடியில் அறம் செய்ய விரும்பு என்றார். மனத்தை, ஒருமுகப்படுத்தித் தூய்மையாக வைப்போமானால் அதுவே பெரிய அறத்திற்கு வழிவகை செய்யும். மனமானது மாசுகளாகி அழுக்காறு, அவா, கோபம், கடுஞ்சொல் ஆகிய நான்கினையும் ஒழித்து, தூய்மைபெற வேண்டும் என வள்ளுவர் வலியுறுத்துவதை,

"அழுக்காறு அவாவெகுளி இன்னாச்சொல் நான்கும்
இழுக்கா இயன்றது அறம்" **(குறள்: 35)**

என்பதால் அறியலாம்.

கற்றுணர்ந்தவர்களின் அறம்

இவ்வுலகில் மனிதன் வாழ்வாங்கு வாழ வேண்டுமானால் கல்வி மிகவும் இன்றியமையாதது. கல்வியறிவு இல்லையென்று

சொன்னால் மக்களின் மனமானது அறவழியிலும், அறச் செயல்களிலும் செய்யாமல் சூதாட்டம், பித்தலாட்டம், பொய், கொலை, வஞ்சனை, விபச்சாரம், கள்ளச் சாராயம், கலப்படம் என்று மனிதன் தவறான பாதையில் செல்வதை நாம் காணமுடிகிறது. கல்வி கற்றவர்கள் இழிவான செயல்களைச் செய்ய மாட்டார்கள் என்பதை,

"வடுச்சொல் நயமில்லார் வாய்த்தோன்றும் கற்றார்வாய்ச்
சாயினுந் தோன்றா கரப்புச்சொல் - தீய
பரப்புச்சொல் சான்றோர்வாய்த் தோன்றா கரப்புச்சொல்
கீழ்கள் வாய்த்தோன்றி விடும்."

(நா.ம.க.95)

என்ற செய்யுள் அடிகளால் விளம்பிநாகனார் எடுத்துக் காட்டுகிறார். மேலும் சிறுபஞ்ச மூலத்தில் காரியாசான்,

"வழிப்படர் வாய்ப்ப வருந்தாமை வாய்மை
குழிப்படல் தீச்சொற்க ளோடு - மொழிப்பட்ட
காய்ந்து விடுதல் களைந்துய்யக் கற்றவர்
ஆய்ந்து விடுதல் அறம்".

(சிறு.ப.மூ. 102)

என்ற பாடலின் மூலம், கற்றுணர்ந்தவர்கள் நல்வாழ்வை அடையும் பொருட்டு தீச்சொற்களைக் கூறுவது, வழிப்பறிக் கொள்ளை செய்வது, பிறர் பொருளைக் கவர்வது, மெய்ம்மையைத் தவறுவது போன்ற இழிவான அறம் பிறந்த செயல்களைச் செய்யமாட்டார்கள். அறம் செய்வது என்பது வெறும் குளங்களை வெட்டுவதும், அன்னதானம் செய்வதும், கோவில் கட்டுவதும் அன்று. மாறாக மனிதன் வாழ்வாங்குவாழ தேவையான நடத்தை ஒழுகலாறுகளும் அறத்தை வலியுறுத்துவனவாக உள்ளன.

அறங்களில் சிறந்தவையாக ஆசிரியர்களுக்குக் காணிக்கை தருதலும், வேள்விகளைச் செய்தலும், தவத்தினை மேற்கொள்ளும் கல்வி கற்றலும் ஆகிய நான்கினையும் மனம், மொழி, மெய் ஆகிய மூன்றாலும் மாறுபடாமல் அடக்கத்துடன் ஒழுகுதல் வேண்டும் என ஆசாரக்கோவை சுட்டுவதை,

"தக்கணை வேள்வி தவம்கல்வி இந்நான்கும்
முப்பால் ஒழுக்கினாற் காத்துய்க்க - உய்க்காக்கால்
எப்பாலு மாகா கெடும்.

(ஆ.கோ. 3)

என்பதால் அறியலாம்.

ஒழுக்கத்தின் மேன்மை

வள்ளுவர் ஒழுக்கமுடைமை என்ற அதிகாரத்தை அமைத்து ஒழுக்கத்தின் இன்றியமையாமை மக்களுக்கு அறிவுறுத்துகின்றார். மனிதனானவன் வாழ்க்கையில் எதை வேண்டுமானாலும் இழக்கலாம். ஆனால் ஒழுக்கத்தை மட்டும் இழத்தல் கூடாது. ஒழுக்கமானது உயிரினும் மேலானது என்பதை.

> "ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்
> உயிரினும் ஓம்பப் படும்" (குறள்: 131)

என்ற குறளால் அறியலாம். ஆகவே பழந்தமிழர்களின் ஒழுக்கம் என்பது அறமாகப் போற்றப்பட்டது. ஒழுக்கம் பொருட் செல்வத்தைக் காட்டிலும் சிறந்தது என்பார் ஔவையார்.

> "ஈட்டும் பொருள்முயற்சி எண்ணிறந்த வாயினும்
> கூட்டும் பயனன்றிக் கூடாவாம் - தேட்டம்
> மரியாதை காணும் மனிதலத்தீர் கேண்மின்
> தரியாது காணும் தனம்." (நல்வழி: 8)

என்ற பாடலில் அளவற்ற பொருளைத்தேடி வைத்தாலும் ஊழின் அளவே அது நமக்குப் பயன்படும். எனெனில் செல்வம் நிலையில்லாதது. ஆகவே வாழ்வை வளமாக்கும் நிலைபெறும் நல்லொழுக்கத்தையே மனிதன் தேட வேண்டும். அதுவே அவனுக்கு நிலையான அறமாகும் என்று அறிவுறுத்துகிறார் ஔவையார்.

அடக்கத்தோடு வாழ்வது அறம்

நாம் இறைவனை வணங்கும்பொழுது மனம், மொழி, மெய் ஆகிய மூன்றினாலும் வணங்குகிறோம். இதை சைவசமயத்தில் முக்கரண வழிபாடு என்றழைப்பர். மனம், மொழி, மெய் இந்த மூன்றையும் அடக்கி வாழ்ந்தால் மனிதன் பெருவாழ்வுவாழ முடியும். மனம், மொழி, மெய் மூன்றையும் அடக்காமல் வாழ்பவன் தீய நிலைக்குத் தள்ளப்பட்டு, பல இன்னல்களுக்கு ஆளாவதை நாம் சமுதாயத்தில் கண்கூடாகப் பார்க்க முடிகிறது. ஆகவே வள்ளுவர்,

> "அடக்கம் அமரருள் உய்க்கும் அடங்காமை
> ஆரிருள் உய்த்து விடும்." (குறள்: 121)

ஒழுக்கத்தின் மேன்மை

வள்ளுவர் ஒழுக்கமுடைமை என்ற அதிகாரத்தை அமைத்து ஒழுக்கத்தின் இன்றியமையாமை மக்களுக்கு அறிவுறுத்துகின்றார். மனிதனானவன் வாழ்க்கையில் எதை வேண்டுமானாலும் இழக்கலாம். ஆனால் ஒழுக்கத்தை மட்டும் இழத்தல் கூடாது. ஒழுக்கமானது உயிரினும் மேலானது என்பதை,

"ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப் படும்" (குறள்: 131)

என்ற குறளால் அறியலாம். ஆகவே பழந்தமிழர்களின் ஒழுக்கம் என்பது அறமாகப் போற்றப்பட்டது. ஒழுக்கம் பொருட் செல்வத்தைக் காட்டிலும் சிறந்தது என்பார் ஔவையார்,

"ஈட்டும் பொருள்முயற்சி எண்ணிறந்த வாயினும்
கூட்டும் பயனன்றிக் கூடாவாம் - தேட்டம்
மரியாதை காணும் மகிதலத்தீர் கேண்மின்
தரியாது காணும் தனம்." (நல்வழி: 8)

என்ற பாடலில் அளவற்ற பொருளைத்தேடி வைத்தாலும் ஊழின் அளவே அது நமக்குப் பயன்படும். ஏனெனில் செல்வம் நிலையில்லாதது. ஆகவே வாழ்வை வளமாக்கும் நிலைபெறும் நல்லொழுக்கத்தையே மனிதன் தேட வேண்டும். அதுவே அவனுக்கு நிலையான அறமாகும் என்று அறிவுறுத்துகிறார் ஔவையார்.

அடக்கத்தோடு வாழ்வது அறம்

நாம் இறைவனை வணங்கும்பொழுது மனம், மொழி, மெய் ஆகிய மூன்றினாலும் வணங்குகிறோம். இதை சைவசமயத்தில் முக்கரண வழிபாடு என்றழைப்பர். மனம், மொழி, மெய் இந்த மூன்றையும் அடக்கி வாழ்ந்தால் மனிதன் பெருவாழ்வுவாழ முடியும். மனம், மொழி, மெய் மூன்றையும் அடக்காமல் வாழ்பவன் தீய நிலைக்குத் தள்ளப்பட்டு, பல இன்னல்களுக்கு ஆளாவதை நாம் சமுதாயத்தில் கண்கூடாகப் பார்க்க முடிகிறது. ஆகவே வள்ளுவர்,

"அடக்கம் அமரருள் உயக்கும் அடங்காமை
ஆரிருள் உய்த்து விடும்." (குறள்: 121)

என்று மக்களுக்கு அறிவுறுத்துகின்றார். ஔவையார் தன்னுடைய மூதுரையில் அடக்கத்தை இகழாதே என்று சுட்டிச் செல்கின்றார்.

"அடக்க முடையார் அறிவிலரென்று எண்ணிக்
கடக்கக் கருதவும் வேண்டா - மடைத்தலையில்
ஓடுமீன் ஓட உறுமீன் வருமளவும்
வாடி யிருக்குமாம் கொக்கு"

(மூதுரை: 16)

கொக்கு தனக்கேற்ற பெரியமீன் வரும்வரை அமைதியாக இருப்பது போல பெரியவர்களும் தமக்கு ஏற்ற காலம் வரும் என அறத்தோடு அடங்கியிருப்பர். அடக்கத்தை அறியாமை என்று நினைத்து அவர்களை வெல்ல நினைப்பவன் தோற்றுப்போவான். அடக்கமே என்றும் வெற்றிபெறும். அடக்கத்தில் மிகவும் சிறந்தது நாவடக்கமும், பணிவுமாம். இதனை வள்ளுவர்,

"யாகாவா ராயினும் நாகாக்க காவாக்கால்
சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு" **(குறள்: 127)**

என்றும்,

"பணியுமாம் என்றும் பெருமை சிறுமை
அணியுமாம் தன்னை வியந்து" **(குறள்: 978)**

என்றும்,

"நாவடக்கம் நல்கிடும் நல்வாழ்வின் வெற்றியை
மேவும் நலங்கல் மிளந்து" **(நபிமொழிக் குறள்: 160)**

என்றும் சுட்டுவதிலிருந்து நாவடக்கத்தில் இன்றியமையாமையை உணரமுடிகிறது.

பொருள் இருக்கும் போதே அறம் செய்க

மனிதன் தான் வாழும் காலத்தில் பொருளைச் சேர்த்து பதுக்கி வைக்காமல், இருக்கும் போதே அறவழியில் தானதர்மங்களைச் செய்தல் வேண்டும். ஏனெனில் செல்வமானது ஆற்று வெள்ளத்தில் உண்டாகும் மேடு பள்ளங்களைப் போன்று செல்வமும் நம்மிடையே வளரவும், குறையவும் செய்யும். ஆதலால் இருக்கும் போதே அச்செல்வத்தைச் சோறாகவும், தண்ணீராகவும் கொடுத்தால் மனம் தூய்மையுறும் என்பார்,

"ஆறிடும் மேடும் மடுவும்போல் ஆஞ்செல்வம்
மாறிடும் ஏறிடும் மாநிலத்தீர் - சோறிடும்

தண்ணீரும் வாரும் தருமமே சார்பாக
உண்ணீர்மை வீறும் உயர்ந்தது" (நல்வழி: 32)

என்பதால் அறியலாம். தானம் செய்யாமல் பெற்ற செல்வத்தைப் புதைத்து வைத்தால் அது யாருக்கும் பயன்படாது. நாம் இறந்த பின் அப்பணம் நம்மோடு வருவதில்லை என்பதை ஒவ்வொருவரும் உணர்ந்து அறச்செயல்களைச் செய்து வாழ்தல் வேண்டுமென்பார்,

"பாடுபட்டுத் தேடிப்பணத்தைப் புதைத்து வைத்துக்
கேடுகெட்ட மானிடரே கேளுங்கள் - கூடுவிட்டிங்கு
ஆவிதான் போயினபின் யாரே அனுபவிப்பர்
பாவிகாள் அந்தப் பணம்." (நல்வழி: 22)

என்ற பாடலால் உணராலம். வருத்தி உழைத்துப் பொருள் சேர்த்து உண்ணாமலும், அறஞ் செய்யாமலும் பொருளை மறைத்து வைப்பவர்கள் பாவிகளாவார்கள். அவர்கள் இறந்தபின் அப்பொருளை யாரோ அனுபவிப்பார்கள். ஆகவே வாழும் காலத்திலேயே தான தர்மங்கள் செய்து வீடுபேறு அடைவதற்கான வழிகளை நாம் தேட வேண்டும் என்று அறிவுறுத்துகின்றார் ஔவையார்.

வாழ்க்கையில் ஈட்டிய பொருளை நம் வாழ்நாள் முடிவதற்கு முன்னால் அறஞ்செய்து வாழவேண்டும். வெள்ளம் வருவதற்கு முன் அணைகட்டி வைக்க வேண்டும். அனைகட்டி வைக்காதவர் வெள்ளம் பெருகும்போது ஒன்றும் செய்ய முடியாமல் தன் பொருளை எல்லாம் இழந்து துன்புற நேரிடும். ஆகவே எமன் வந்து நம் உயிரைக் கொண்டு செல்வதற்குமுன் மனங்கனிந்து அறச் செயல்களைச் செய்தல் வேண்டும். இதனை,

"கொள்ளுங் கொடுங்கூற்றம் கொல்வான் குறுகுதன்முன்
உள்ளங் கனிந்தறஞ்செய் துய்கவே - வெள்ளம்
வருவதற்கு முன்னர் அணைகோலி வையார்
பெருகுதற்கண் என்செய்வார் பேசு" (நன்னெறி: 30)

என்று சிவப்பிரகாசர் சுட்டிக்காட்டுகின்றார். ஆகவே அறச்செயல்களைச் செய்து மனிதன் வாழுங்காலத்தில் வாழ்வாங்கு வாழ வேண்டும் என்று வலியுறுத்துவதை நாம் காணமுடிகிறது.

பிறன்மனை நோக்காப் பேராண்மை

அறங்களில் சிறந்த அறமாகப் போற்றப்படுவது பிறன்மனை நோக்காப் பேராண்மையோடு இருக்கலாகும்.

வள்ளுவர் பெருந்தகை பிறனில் விழையாமை என்ற ஒரு அதிகாரத்தை வகுத்து பிறன்மனை நோக்காப் பேராண்மை ஆடவர்க்குச் சிறந்த அறமாகச் சுட்டிக்காட்டுகிறார்.

"பிறன்மனை நோக்காத பேராண்மை சான்றோர்க்கு
அறனொன்றோ ஆன்ற ஒழுக்கு"

(குறள்: 148)

என்ற குறட்பா மூலம் பிறர் மனைவியை விரும்பாத பெருங்குணம் அறிவுடையோர்க்கு சிறந்த அறம் சார்ந்த ஒழுக்கமாகும். இதையே கொன்றை வேந்தன்,

'பிறன்மனை புகாமை அறமெனத் தகும்' **(கொன்றை வே.: 61)**

என்றும் சுட்டுகிறது. மேலும் ஔவையாரும் நல்வழியில்,

"நண்டுசிப்பி வேய்கதலி நாசமுறுங் காலத்தில்
கொண்ட கருவளிக்குங் கொள்கைபோல் - ஒண்டொடி
போதந் தனங்கல்வி பொன்றவரும் காலமயல்
மாதர்மேல் வைப்பர் மனம்"

(நல்வழி: 36)

என்று குறிப்பிடுகிறார். நண்டும் சிப்பியும் மூங்கிலும் வாழையும் தாம் அழியும் காலத்தில் கருக்களை ஈனும். அதுபோல ஒருவன் தன் மனைவியையன்றிப் பிற மகளிரை விரும்பும்போது, அவனிடமுள்ள ஞானம், செல்வம், கல்வி ஆகிய மூன்றும் அழிவதற்கு அறிகுறியாகும். ஆகவே பிறர் மனைவியை விரும்பாது இருத்தலே சிறந்த அறமாகும். இவ்வாறாக நீதி இலக்கியங்களில் அறம் சார்ந்த கருத்தாக்கங்கள் விரவிக் காணப்படுவதை நாம் அறியமுடிகிறது.

துணைநின்ற நூல்கள்:

1. முனைவர் அ.சையத் ஜாகீர் ஹசன், நீதி நூல்களில் கல்வி, இராஜா பதிப்பகம், காஜாமலை, திருச்சி.
2. முனைவர் அ.சையத் ஜாகீர் ஹசன், மனிதம் மலர, இராஜா பதிப்பகம், காஜாமலை, திருச்சி.
3. வ.சுப.மாணிக்கம், ஏழிளந்தமிழ் நீதிநூல்கள், மாணிக்க வாசகர் பதிப்பகம், சென்னை.
4. திருவள்ளுவர், திருக்குறள், கழக வெளியீடு, சென்னை.
5. சு.ந.சொக்கலிங்கம், குறள் கூறும் வாழ்க்கை நெறி, சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழகம், சென்னை.
6. ச.வே.சு., பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள், மாணிக்கவாசகர் பதிப்பகம், சென்னை.

■

தூய நெஞ்சக் கல்லூரி (தன்னாட்சி)

தமிழ் முதுகலை மற்றும் ஆய்வுத்துறை

(தேசியத் தரமதிப்பீட்டுக் குழுவினரின் 'A+' (3.31/4) தரம் பெற்றது)

திருப்பத்தூர்-635 601. திருப்பத்தூர் மாவட்டம்

நடத்தும்

பன்னாட்டுக் கருத்தரங்கம்

நாள் : 08.03.2022 செவ்வாய்க்கிழமை

சர்வதேச உழைக்கும் மகளிர் தினம்

தமிழ் மரபில் பெண் படைப்பாளர்களும் பெண் எழுத்தும்

சான்றிதழ்

திருமிகு/முனைவர் ..... அவர்கள் 08.03.2022 அன்று

தமிழ் மரபில் பெண் படைப்பாளர்களும் பெண் எழுத்தும் என்னும் பொருண்மையில் நடைபெற்ற பன்னாட்டுக் கருத்தரங்கில் .....

என்ற தலைப்பில் ஆய்வுக்கட்டுரை வழங்கினார் / பங்கேற்றார் எனச் சான்றளிக்கப்படுகிறது.

முனைவர். கி.பார்த்திபராஜா
கருத்தரங்க இயக்குநர்

முனைவர். பொன்.செல்வகுமார்
தமிழ்த்துறைத் தலைவர்

முனைவர். த.மரிய அந்தோணிராஜ்
முதல்வர்

Scanned with CamScanner

தமிழ் மரபில் பெண் படைப்பாளர்களும் பெண் எழுத்தும்

(பன்னாட்டுக் கருத்தரங்கக் கட்டுரைகளின் தொகுப்பு)



பதிப்பாசிரியர்கள்

திருமதி. இரா.விஜயலட்சுமி

திருமதி. ப.ஈஸ்வரி

திருமதி. கு.அன்பரசி

Scanned with CamScanner

தமிழ் மரபில் பெண் படைப்பாளர்களும்
பெண் எழுத்தும்

பதிப்பாசிரியர்கள்
இரா. விஜயலட்சுமி
ப. ஈஸ்வரி
கு. அன்பரசி

முதல் பதிப்பு : மார்ச் 2022

வெளியீடு : பரிதி பதிப்பகம்
56சி/128, பாரத கோயில் அருகில், ஜோலார்பேட்டை,
திருப்பத்தூர் மாவட்டம் - 635 851.
மின்னஞ்சல் : parithijpt@gmail.com

அச்சாக்கம் : ரத்னா ஆப்செட், சென்னை.
ஒளி அச்சு : தங்கம் கிரபிக்ஸ்

பக்கங்கள் : XII + 522
விலை : ரூ. 500

Thamizh Marapil Pen padaippalarkalum
Pen Eluttum

Published by :
R. Vijayalakshmi
P. Eswari
K. Anbarasi

First Edition : March' 2022

Published by Parithi Pathippagam
56C/128, Near Bharatha Kovil, Jolarpettai,
Tiruppattur District – 635 851.
Email : parithijpt@gmail.com

Printed at Rathna Offset, Chennai
Layout : Thangam Graphics, Chennai
Pages : XII + 522
Price : Rs. 500

ISBN : 978-93-941-87-21-4

Scanned with CamScanner

வ. எண்	கட்டுரையாளர் பெயர்	கட்டுரைத் தலைப்பு	எண்
36	சின்னச்சாமி .ப	அதிகாரத்தின் அரசியல்கள் மீது கேள்வியெழுப்பும் கவிதைகள் - 'ஆகுளி' கவிதைத் தொகுப்பை முன்வைத்து	225
37	சுதா .மு	ராஜம் கிருஷ்ணனின் தனிமை சிறுகதையில் பெண் இருப்பு	231
38	சுரேஷ் .கு	இராஜம் கிருஷ்ணன் பார்வையில் கற்பு	236
39	சூரியகுமார் .சி	காரைக்கால் அம்மையாரின் படைப்புகளால் தென்னிந்திய இசையில் ஏற்பட்ட மாற்றங்கள்.	241
40	செல்வராணி .றோ	'பெண் கவிதைகளில் பெண்மொழி'அன்றும் இன்றும் -ஓர் ஆய்வு	247
41	செல்வராஜ் .க	கொங்கு வட்டாரப் பெண் படைப்பாளர்களின் படைப்புகளில் மகளிர் சிக்கல்கள்	253
42	செவ்வந்தி .வே	அள்ளூர் நன்முல்லையார் எழுத்தும் உளவியலும்	259
43	சையத் அகமது பிரோசு .ச அ.	பெண் எழுத்தில் ஒலிக்கும் பெண்ணின் குரல்	265
44	தமிழ்ச்செல்வி .ம .ப	"நெருஞ்சிமுள்" நாவலில் பெண் இருப்புநிலை	270
45	தனசேகர் .ந	சிவசங்கரியின் புதினங்களில் பெண்மாந்தர்கள்	276
46	திருப்பதி .பொ	பெண்ணிய நோக்கில் குறுந்தொகை - பெண்பாற் புலவர்கள் பயன்படுத்தும் உவமைகள் ஓர் ஆய்வு	281
47	திருமுருகன் .மு	பெண் படைப்புகளில் பெண்ணின் இருப்புநிலை	285
48	தீபா .பெ	கீதாரி நாவல் உணர்த்தும் ஆட்டுக்கார மக்களின் பழக்கவழக்கங்கள்	289
49	தேவி .ம	நப்பசலையாரின் கவிதைத் திறனாய்வுகள்	296
50	தேவி .வி	ஆண்டாள் பிரியதர்ஷினி நாவலில் சமூக வெளிப்பாடு	301
51	தேன்மொழி .மு	புறநானூற்றில் அவ்வை கூறும் வாழ்வியல்	307
52	தொண்டியம்மாள் .சு	கற்பு ஒழுக்க மரபில் செல்வ கீதாவின் தலைவி	312
53	நதியா .நி	இயற்கையும் பெண்மையும் - மாலதிமைத்ரி	318

Scanned with CamScanner

பெண் எழுத்தில் ஒலிக்கும் பெண்ணின் குரல்

முனைவர் ச.அ.சையத் அகமது பிரோசு,
உதவிப்பேராசிரியர்,
முதுகலைத் தமிழாய்வுத்துறை,
ஜமால் முகமது கல்லூரி (தன்னாட்சி),
திருச்சிராப்பள்ளி - 620 020.
safirozphd@gmail.com

சமூகத்தில் பெண்ணின் இருப்பை உணர்த்தும் ஊடகங்களில் இலக்கியம் முன்னிலை வகிக்கிறது. சங்க காலம் முதல் இக்காலம் வரை எழுத்துலகின் ஆதிக்கம் ஆண்கள் கைகளில் இருந்தாலும் பெண்ணின் குரலும் காலந்தோறும் ஓயாமல் ஒலித்து வருவதை மறுக்க இயலாது. மனிதன் தனக்குள் உரையாடத் தொடங்கிய காலம் முதலே கதை சொல்லும் மரபும் தோற்றம் பெற்றுவிட்டது. தமிழ்ச் சிறுகதை மரபில் பெண்களின் பங்கு மகத்தானது. அ.வெண்ணிலா அவர்கள் 'மீதமிருக்கும் சொற்கள்' என்னும் கதைத் தொகுதியில் 1930 தொடங்கி 2004 வரையிலான காலகட்டத்தில் எழுதிய 45 பெண் படைப்பாளிகளின் கதைகளை ஆவணப்படுத்தியுள்ளார். அவற்றுள் மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் எழுதிய 'தமயந்தி' மற்றும் வாஸந்தி எழுதிய 'நஞ்சு' ஆகிய இரு சிறுகதைகளை முன்வைத்து இந்த ஆய்வுக் கட்டுரை எழுதப்படுகிறது.

சிறுகதையும் சமூகமும்

மனித வாழ்வைச் சமூகக் கட்டமைப்புகள் வரையறை செய்கின்றன. இந்த அமைப்பிற்குள் உள்ளடங்க மனமில்லாத சுயஜீவிகள் தங்கள் உணர்வுகளின் வெளிப்பாடாக சிறுகதை முன்னிற்கிறது. இருபதாம் நூற்றாண்டு தமிழ்ச் சமூகச் சூழலில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்திய இரண்டு முக்கிய பிரச்சினைகளைத் 'தமயந்தி', 'நஞ்சு' ஆகிய கதைகள் கவனப்படுத்துகின்றன. தேவதாசி முறையும், பெண் சிசுக்கொலை பழக்கமும் பெண்ணினத்தை இழிவுபடுத்தும் தன்மைகளாக இருந்து வந்தன. இருந்தும் வருகின்றன. இந்த சமூக அவலங்களை மேற்கூறிய இருகதைகளும் பதிவு செய்கின்றன. சமூகச் சிக்கல்களுக்கு எதிரான ஒருதனிமனிதக் குரலாக இக்கதைகள் ஒலிக்கின்றன. 'திராவிட நாடு' இதழில் 1945 ஆம் ஆண்டில் தொடர்ந்து ஐந்து வாரங்கள் தொடராக வெளிவந்து வடிவம் பெற்ற கதை 'தமயந்தி'. மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் அவர்கள் தம் வாழ்நாளில் எழுதிய ஒரே சிறுகதை இது. தமக்கான அரசியலின் வெளிப்பாடாக இந்தக் கதையை அவர் புனைந்துள்ளார். 1930 ஆம் ஆண்டு சென்னை மாகாண சட்ட மேலவையில் தேவதாசி ஒழிப்புச் சட்ட முன்வரைவை முத்துலட்சுமி ரெட்டி அவர்கள் அறிமுகம் செய்தபோது அவருக்கு துணைநின்றவர். "பாடுபட்டு அறியாதவன் பட்டாளியின் கஷ்டத்தை உணர முடியாது. சேற்றில் இறங்கி அறியாதவன் ஒரு விவசாயியின் துயரத்தை அறிய முடியாது. பேனாவைத் தேய்த்து தேய்த்து எழுதினாலும் உள்ளத்தை ஊடுருவித் தைக்கும்படியான இதயம் ஒன்றிய ஈடுபாடு பெற உண்மை ஒளி வீசும் எழுத்துகள் ஆக்கம் பெற பாதிக்கப்பட்ட குடும்பங்களிலிருந்து எழுத்தாளர்கள் தோன்ற வேண்டும்"[1] என்று கல்கி சிறுகதைக்கு வரையறை எழுதுவதற்கு முன்பே இராமாமிர்தம் அம்மையார் எழுதத் தொடங்கிவிட்டார். தேவதாசிக் குடும்பத்தில் பிறந்து தேவதாசி ஒழிப்பிற்குக் குரல் கொடுத்தவர் இவர் என்பது குறிப்பிடத்தக்கது. கர்னாடகா மாநிலத்தில் பிறந்து வளர்ந்து இந்தியா முழுவதும் பயணம் செய்து இந்தியக் கலாச்சாரப் புரிதல் பெற்றவர் வாஸந்தி. அரசியல் ஆய்வாளர், இதழாளர், களப்பணியாளர் என்ற அனுபவங்களைப் பெற்ற இவர் உசிலம்பட்டி பெண் சிசுக்கொலை, தமிழகப் பெண் பீடித் தொழிலாளர் நிலை குறித்துக் கவனம் செலுத்திய

Scanned with CamScanner

செயற்பாட்டாளர். படைப்பாளிகளின் சூழல்களும் அனுபவங்களும் அவர்தம் கதைகளுக்குக் களங்களாக அமைகின்றன என்பதற்கு மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் அவர்கள் எழுதிய 'தமயந்தி' கதையும் வாஸந்தி எழுதிய 'நஞ்சு' கதையும் திகழ்கின்றன.

பெண்ணின் குரல்

பெண் படைப்பளிகளின் பெண்ணுரிமைக் குரல் பெண் கதைமாந்தர்கள் வழியே ஒலிக்கிறது. 'தமயந்தி' சிறுகதை நிலப்பிரபுக்களின் காலத்தன்மைகளைப் பிரதிபலிக்கிறது. புவனகிரி ஜமீன்தார் குணசேகர் ஆண் வாரிசு இல்லை என்ற குறையைப் போக்க பல பரிகாரங்கள் செய்து தோற்றவர். இறுதியாகத் தன் மகள் தமிழரசியை பட்டத்து இளவரசியாகத் தயார்படுத்த விழைகிறார். அதற்காகத் தமயந்தியைத் தமிழரசிக்கு ஆசிரியையாக நியமித்துப் பயிற்சி அளிக்கிறார். நிலவுடைமை வர்க்க நலன்களைப் பேணும் கல்விமுறையாக அல்லாமல் பகுத்தறிவுச் சிந்தனைகள், சமூகச் சீர்திருத்தக் கருத்துகள், மக்களாட்சியின் மாண்புகள் ஆகியவற்றைத் தமயந்தி தமிழரசிக்குப் புகட்டுகிறார். தமயந்தி தாசி குலத்தில் பிறந்தவர். கட்டழகியாக வளர்ந்தும் தாசி மரபை உதறத் துணிந்தவர். தன்னுடைய மாணவி தமிழரசி விதவைக் கோலம் பூண்டு அரியணை ஏற பிற்போக்குத் தன்மைகள் தடையாக நின்றபோது "உத்தமர்கள் உதித்த நம் நாடு ஏன் இன்று ஊதாரிகள் நிறைந்த நாடாயிற்று? வீரர்கள் தோன்றிய நாடு ஏன் இன்று வீணர்கள் மலிந்த நாடாயிற்று? நமது நாட்டுப் பெண்மணிகள் உத்தமிகளாக வீரர்களாக வலிமை பொருந்தியவர்களாய் விளங்கவே நான் பாடுபடப் போகிறேன்"[2] என்று தன் தோழி மதனசுந்தரியிடம் தமயந்தி சூளுரைப்பது இங்கு நினைவுகூரத்தக்கது. முற்போக்குச் சிந்தனையாளர்கள் புடைசூழ தமிழரசி அரியணை ஏறுகிறார். அதே அரங்கில் தமிழரசி - வீரகுணசீலன் மறுமணமும் தமயந்தி - திருநாவுக்கரசர் கலப்பு மணமும் அரங்கேறுகின்றன. தேவதாசி மரபைக் கட்டிக் காக்கும் மடாதிபதி தமிழ்க் கல்வி பரப்பும் கல்வியாளராக மாறுகிறார். ஒரு பெண் தான் கற்கும் கல்வி தீவிரமான செயற்பாடுகள் துணிச்சலான மரபை மீறும் புதுமை, வலிமையானக் கருத்துரிமை ஆகியவற்றின் வாயிலாக சமுதாய மாற்றத்தை ஏற்படுத்த இயலும் என்பதை 'தமயந்தி' என்ற கதைமாந்தர் மூலமாக கதையாசிரியர் உணர்த்துகிறார்.

பெண்சிசுக் கொலை என்ற சமூக அவலம் 'நஞ்சு' சிறுகதையின் கருவாக அமைந்துள்ளது. வாஸந்தி தாம் பெற்ற களப்பணி அனுபவங்களை இக்கதையில் வெளிப்படுத்துகிறார். கிராமம் ஒன்றில் பெண்களுக்குப் பிரசவ வலி ஏற்பட்டால் முக்கியமாக இரண்டு பெண்களைத் தேடுவார்கள். ஒருவர் சுப்புத்தாயீ இன்னொருவர் ரங்கமணி. முன்னவர் மருத்துவச்சி. பின்னொருவர் பிறந்த குழந்தை பெண்ணாக இருந்தால் நாசித் துவாரத்தில் நெல்மணியைச் சொருகி பின்கட்டுக் கொல்லையில் பள்ளம் தோண்டிப் புதைப்பவர். பிரசவவலியைவிட ரங்கமணியின் வருகைதான் பெண்களின் அலறலுக்கு பெரும் காணரமாக இருக்கும். தாங்கள் பெற்ற குழந்தைச் செல்வங்கள் என்பதாலேயே அவற்றைப் பறிகொடுத்த மீனாட்சி, கோமதி அல்லது வரிசையாக தாம் பெற்ற ஏழு குழந்தைகளையும் இழந்துத் தவித்த காமாட்சி இவர்கள் யாரும் தங்கள் குரலை உசத்தவில்லை. முன்கட்டின் அதிகாரத்திற்குப் பயந்தே இவர்கள் உள்ளடங்கியிருந்தார்கள். ஆணாதிக்கத்தை நிலைநாட்ட ஆண்கள் பெரும்பாலும் பெண்களையே சார்ந்துள்ளனர் என்பதற்கு ரங்கமணி ஒருபெரும் சான்று. பழகப் பழகப் பாலும் புளிக்கும் என்பதை "நான் ஆணாகவும் இருக்கலாம். நீ எதுவுமில்லே. நீ காளிங்கன் கம்ஸன் பூதனை"[3] என்ற ரங்கமணியின் மனப்போராட்டம் புலப்படுத்துகிறது. பெற்ற குழந்தையைப் பறிகொடுத்து மீண்டும் கணவனின் ஆசைக்கு இணங்கி கருவை சுமந்து அடுத்த பேற்றிற்குத் தயாராகும் பெண்களைப் பார்க்கும்போது "அடத்தூ நாதியத்த பொணங்களா மானமத்தவங்களா; ரோசம் கெட்டவங்களா; அவன் குடுக்கற

Scanned with CamScanner

சோத்துக்கும் கூரைக்கும் பணிஞ்சு போன பஞ்சமா பாதகிகளா"[4] என ஆணாதிக்கத்திற்கு எதிரானக் குரலாக ஒலிக்கிறது ரங்கமணியின் குரல்.

தமயந்தி, ரங்கமணி என்ற இந்த இரண்டு பாத்திரங்களும் தங்களுடைய எத்தகைய முரண் நிலைகளும் இல்லாமல் தன்னளவில் முழுமை பெற்ற மாந்தர்களாக வார்க்கப்பட்டுள்ளமை படைப்பின் வெற்றி எனக் கூற வேண்டும். சொல்லிற்கும் செயலிற்கும் முரண்பாடுகள் இல்லாத மாந்தர்களாக இவர்கள் படைக்கப்பட்டுள்ளனர். இவ்விருவரின் சொல், செயல் இரண்டுமே சிக்கல்களுக்குத் தீர்வுகளாக அமைந்துள்ளன. தமயந்தி தமிழரசிக்குக் கல்வி புகட்டுகிறார். தம் தோழி மதன சுந்தரியிடம் தன் எண்ண உணர்வுகளை வெளிப்படுத்துகிறார் என்பதோடு நிறுத்திக் கொள்ளாமல் திருநாவுக்கரசரோடு இணைந்து பிற்போக்குச் சக்திகளுடன் கடுமையாகப் போராடி வெல்கிறார். ரங்கமணி பெண் சிசுக்கொலைக்குக் காரணமாக உள்ள ஆண்களின் ஆசை வலைக்கு இரையாகும் பெண்களைக் கடுமையான தொனியில் விமர்ச்சிக்கிறார். அதற்கு ஏற்றாற்போல் திருமணம் என்ற பந்த உணர்வில் சிக்கிக் கொள்ளாத சுதந்திரப் பறவையாக உலா வருகின்றார்.

காலமும் கருத்தும்

இலக்கிய ஆய்வுகளில் காலம் முக்கியமான வகிபாகத்தைக் கொண்டுள்ளது. இராமாமிர்தம் அம்மையார் 'தமயந்தி' கதையை 1945 ஆம் ஆண்டு எழுதினார். தமிழ் நாட்டில் தேவதாசி ஒழிப்புச் சட்டம் 1947 ஆம் ஆண்டு நிறைவேறியது. பல முற்போக்குச் சிந்தனைகளை இக்கதை வெளிப்படுத்தினாலும் கதையின்சொற்களுக்குள் செய்திகளைத் தேட முனைகிறபோது அனைத்துப் பிற்போக்குகளின் உள்நோக்கமாகவும் பாலியல் வன்புணர்ச்சி இருப்பதைக் காணமுடிகிறது. இந்தியா விடுதலைபெற்று ஓரிரு மாதங்கள் கடந்து இச்சட்டம் நிறைவேற்றபட்டிருந்தாலும் 1930 களில் இதற்கான முன்முயற்சிகள் தொடங்கின. அப்போதைய இதன் சட்ட முன்வரைவை கடுமையாக எதிர்த்தவர்கள் தேவதாசி மரபில் வாழ்ந்த பெண்கள் என்பது குறிப்பிடத்தக்கது. பாலியல் தொழிலாக இதனை அடையாளப்படுத்தும் போக்கு என்ற புரிதலே இந்த எதிர்ப்புக்குக் காரணமாகியது. அதனால்தான் இதனைப் பொதுச்சட்ட முன்வரைவாக அல்லாமல் தனிச்சட்ட முன்வரைவாக நிறைவேற்றத் தந்தை பெரியார் வழிகாட்டினார் .[5] கலாச்சாரப் பாதுகாப்பு என்ற போர்வை போலித்தனமான வாதம் என்று கருத்து பொதுவெளியில் நிலைபெற பதினேழு ஆண்டுகள் வரை காத்திருக்க வேண்டிய நிலை ஏற்பட்டது.

பெண் குழந்தைகளுக்கு எதிரான மக்கள் மனநிலையை ஐக்கிய நாடுகளின் சபை கவலையுடன் உற்று நோக்குகிறது. நாள் ஒன்றிற்கு 2000 பெண்சிசுக்கள் கருவிலேயே கலைக்கப்படுகின்றன என்று ஓர் அறிக்கை கவலை தெரிவிக்கின்றது. பெண் சிசு இறப்பு விகிதம் அதிகமுள்ள நாடுகளாக இந்தியாவும் சீனாவும் கருதப் பெறுகின்றன. ஆண் பெண் குழந்தைகள் பிறப்பு விகிதம் 100:105 என உலக நாடுகளில் இருக்க இந்தியாவில் இந்த விகிதம் 100:93 [6] என்றுள்ளது எனவும் அந்த அறிக்கை கவலையுடன் தெரிவிக்கிறது. இந்தப் புள்ளி விபரங்கள் யாவும் சமகாலம் சார்ந்தவை என்பது குறிப்பிடத்தக்கது. பெண் சிசுப் பாதுகாப்பு என்ற விழிப்புணர்வின் காரணமாகப் பிறக்கும் முன்பே பாலினத்தை கண்டறிவதைத் தடுக்கும் பாலினத் தேர்வு தடைச் சட்டம் 1992 ஆம் ஆண்டில் இந்திய அரசு நிறைவேற்றியது. பெண் சிசுக்களைப் பாதுகாக்கத் தொட்டில் குழந்தைத் திட்டத்தை தமிழக அரசு நிறைவேற்றியதும் 1992ஆம் ஆண்டு[7] என்பது நினைவுகூரத்தக்கது. 1994 ஆம் ஆண்டு இந்தியா டுடே இலக்கிய மலரில் வாஸந்தியின் 'நஞ்சு' கதை வெளியானது. கதைகள் காலத்தின் குரல்கள் என்பதை மேற்கூறிய தரவுகள் வாயிலாக அறியமுடிகின்றது.

Scanned with CamScanner

கலை நுணுக்கங்கள்

சிறுகதைகளின் முக்கிய உறுப்புகளாக எண்ண ஒருமை, உச்ச கட்டம், முதல், தொடர்ச்சி, முடிவு, அமைப்பு ஆகியனவற்றை எடுத்துரைப்பார் புரூக் ஸ்வாரன் என்ற மேலை நாட்டு அறிஞர். தலைப்பு நெற்றியில் இடும் திலகத்திற்குச் சமம் என்பார் சி.சு.செல்லப்பா. சிறுகதைகளின் இக்கூறுகள் இலக்கிய வடிவத்தின் கலை நுணுக்கங்கள் என்றால் மிகையாகாது. "பிள்ளைப்பெறு உண்டாவதென்பது எளிதில் முடியக்கூடிய காரணமன்று, தாங்கள் இப்பிறவியில் பாவம் எதுவும் செய்யவில்லை என்ற போதிலும் முற்பிறப்பில் செய்த பாவத்தின் காரணமாகவே தங்கட்குப் பிள்ளைபேறு இல்லாது போயிற்று"[8] எனத் தொடங்குகிறது 'தமயந்தி' கதை. கதைப் பொருளை அதன் தொடக்கம் தெளிவாகவே உணர்த்துகிறது. புரோகிதத்தின் அடிச்சுவடுகள் சமூகத்தில் எங்கனம் புரையோடியுள்ளன என்பதை இக்கூற்று விளக்குகிறது. "சுற்றிலும் இருந்த மையிருட்டில் தான் மூழ்கிப் போனது போல் இருந்தது அவளுக்கு. கொல்லை முழுவதும் கிளை பரப்பியிருந்த மாமரமும் பலாமரமும் இருளுக்குக் கருமையூட்டின. இன்று நட்சத்திரம்கூட கண் சிமிட்டாமல் சோகம் காத்தது. ரங்கமணிக்கு லேசாக சிலிர்த்தது. தன்னுடைய உடலில் ஓடும் ரத்தத்துக்குப் பஞ்ச பூதத்துடன் நேரிடை பந்தம் இருப்பதுபோல் பட்டது. சொல்லி வைத்தாற் போல் வானம் இருண்டு காற்று ஒடுங்கி நீர் வற்றிப் போவதான பிரமை ஏற்படுகிறது"[9] என்று இயற்கை வருணனை என்ற பாணியில் தன் சிந்தனை வெளிக்குள் காணப்படும் வெறுமையை ரங்கமணி உணர்வதின் வெளிப்பாடாக 'நஞ்சு' கதை தொடங்குகிறது. கதையின் தொடக்கம் சுவாரஸ்யமாக இருந்தால் வாசிப்பு விறுவிறுப்பாக இருக்கும் என்பதற்கு எடுத்துக்காட்டாக இப்பகுதிகள் திகழ்கின்றன. "நாடு எங்கும் இன்பமும் அன்பும் நிலவி அறிவும் ஆராய்ச்சியும் பெருகிப் பிரகாசித்தது"[10] என்று 'தமயந்தி' கதை நிறைவுபெறுகின்றது. பெண்ணைப் பெற்ற சண்பகம் அதைத் தனியாக வளர்க்கிறார்"[11] என்று முடிகின்றது 'நஞ்சு' சிறுகதை. இன்பமான முடிவுகள் என்பதைவிட பொருத்தமான முடிவுகளாக இவை விளங்குகின்றன. கதைகள் முன்வைக்கும் சிக்கல்களுக்கானத் தீர்வுகளாகவும் இவை அமைந்துள்ளன. முற்போக்குக் கருத்துகளின் தொடர்ச்சியான பரப்புரைகள் சமுதாய மாற்றத்திற்குக் காரணிகளாக 'தமயந்தி' சிறுகதையில் எடுத்துரைக்கப்படுகிறது. பெண்சிசுக் கொலைக்குச் சௌகர்யமாக உள்ள குடும்பச் சூழலை உதறித் தான்பெற்ற பெண்குழந்தையைத் தனியாக வளர்க்கத் தலைபடுகிறார் சண்பகம். கதையின் தொடக்கம், முடிவு மைய கதை மாந்தரின் பெயர். கதைப்பொருள் இவற்றுள் ஏதேனும் ஒன்றோடு தொடர்புடையதாக இருக்கும் கதையின் தலைப்பு. 'தமயந்தி' கதையில் தமயந்தி கதையின் மைய கதைமாந்தர் என்பது குறிப்பிடத்தகுந்தது. தாய்க்கும் அவள் கருவில் சுமக்கும் குழந்தைக்கும் இடையிலான பிணைப்பு நஞ்சுக்கொடி மூலமே ஏற்படுகிறது. குழந்தை பிறந்தவுடன் இந்த நஞ்சுக்கொடி வேண்டாத பொருளாக நீக்கப்படும். நஞ்சுக் கொடியைப் போன்று பெண்சிசுவையும் வேண்டாத பொருளாக கொன்று அகற்றும் நஞ்சைவிடக் கொடிய மனநிலையக் கருவாகக் கொண்ட கதை என்பதனால் இக்கதைக்கு 'நஞ்சு' எனப் பெயரிடப்பட்டிருக்கலாம். கதைப்பொருளே கதையின் தலைப்புக்கு இங்கு காரணமாகியுள்ளது. கதையின் எதிர்பாராத திருப்பங்கள் உச்சநிலைகளாக கருதப்பெறுகின்றன. இதனை 'ஓ ஹென்றி' பாணி எனவும் குறிப்பிடுவர். அமெரிக்க எழுத்தாளரான ஓ ஹென்றியின் கதைகள் எதிர்பாராத திருப்பங்களுக்குப் பெயர் பெற்றவை. இறந்ததாகக் கருதப்பெற்ற வீரகுணசீலர் திடீரென தமிழரசி முன் தோன்றுதல், வழமையாக பெண் குழந்தைகளின் நாசியில் நெல்லைச் சொருகிக் கொல்லும் ரங்கமணி காமாட்சிக்கு எட்டாவதாகப் பிறந்த ஆண்குழந்தையை அதே பாணியில் கொன்று ஆண் குழந்தை மோகத்திற்குப் பாடம் கற்பிக்கும் தன்மை ஆகியன முறையே 'தமயந்தி', 'நஞ்சு' ஆகிய கதைகளின் திடீர் திருப்பங்களாக அமைவது குறிப்பிடத்தக்கது.

Scanned with CamScanner

நிறைவுரை

கதையின் எழுத்தாளர்கள் மூவலூர் இராமாமிர்தம் அம்மையார், வாஸந்தி இருவரும் சமூகச் செயற்பாட்டாளர்கள். தாங்கள் வாழ்ந்த சமூகத் தாக்கத்தையே கதைகளாக இவர்கள் வார்த்துள்ளனர். வாழ்க்கையின் சௌகர்யமான அம்சங்களை மிகைப்படுத்தி சித்தரிக்காமல் படிப்பவர்கள் முகம் கோணாத நிலையில் சிக்கல்களை இந்த இரண்டு எழுத்தாளர்களும் சித்தரித்துள்ளனர். தனிமனித அல்லது ஒரு சமூகத்தின் வேட்கைகளை குணங்களை அடைவதற்கான முயற்சிகளாக இக்கதைகளைக் காணமுடிகிறது. வடிவம் பற்றிய விவாதம் காலந்தோறும் நடைபெற்று வந்தாலும் இக்கதைகளின் பொருண்மை உருவ அமைதியை நிலைபெற செய்துள்ளன. பாத்திரங்களின் குரல் படைப்பாளிகளின் குரலாகவே கதை முழுதும் காணக்கிடக்கின்றன. இவை பிரச்சாரத் தொனி எனப் புறந்தள்ளிவிட முடியாது. மனித நிலையை சிறப்புற மாற்றியமைக்க வேண்டும் என்ற வேட்கைதான் இப்படைப்புகளின் முயற்சி எனலாம். இந்த வேட்கை இருபத்தொன்றாம் நூற்றாண்டிலும் தீரவில்லை.

சான்றெண் விளக்கம்

1. சிவத்தம்பி, கா., தமிழில் சிறுகதையின் தோற்றமும் வளர்ச்சியும், பக்.92-93 (1978), தமிழ்ப் புத்தகாலயம், சென்னை
2. வெண்ணிலா, அ., மீதமிருக்கும் சொற்கள்-பெண் எழுத்தாளர்களின் சிறுகதைகள் (1930-2004), ப.81, (2007), நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்., சென்னை.
3. மேலது, ப.311
4. மேலது, ப.305
5. https://ta.m.wikipedia.org
6. மேலது,
7. ta.vikapedia.in
8. வெண்ணிலா, அ., மீதமிருக்கும் சொற்கள்-பெண் எழுத்தாளர்களின் சிறுகதைகள் (1930-2004), ப.80, (2007), நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்., சென்னை.
9. மேலது, ப.304
10. மேலது, ப.89
11. மேலது, 315

Scanned with CamScanner



இரா.விஜயலட்சுமி: அரசினர் தமிழ்ப் பாலர் பள்ளி, இளங்கலை பட்டத்தைத் தம்பாத்திருந்தபோது கல்லூரியிலும், 2009 ஆம் ஆண்டு திருவண்ணாமலையில் உள்ள பல்கலைக்கழகத்திலும் 2012 ஆம் ஆண்டு முதுகலை பட்டத்தையும் பல்கலைக்கழகத்திலும் பயின்றார். கலைக் கல்லூரியில் 2018 ஆம் ஆண்டு நாவல்' எனும் தலைப்பில் ஆய்வியல் தற்போது திருப்பத்தூர் தூய நெஞ்சக் கல்லூரியில் சூழலியல் ஒன்பதையும் திணைச் சூழல் பிட்டம்' எனும் தலைப்பில் பட்ட ஆய்வினைச் செய்து வருகிறார். 1996 ஆம் ஆண்டு இயக்கத்தில் பங்கு பெற்றுள்ளார். மாநில அரசின் SET தேர்விலும், மத்திய அரசின் UGC-NET தேர்விலும் தேர்ச்சிப் பெற்றுள்ளார்.



ப.ஈஸ்வரி: தமிழில் எம்.ஏ., எம்.ஃபில் பட்டங்களையும், கல்வியியலில் பி.எட் பட்டமும் பெற்றவர். பல தொலைக்காட்சிகள் பேச்சாளராக பங்கேற்று சிறப்பான பேச்சாற்றலை வெளிப்படுத்தியவர். திருப்பத்தூர் மாவட்டம், வாணியம்பாடி கொத்தக்கொட்டை அரசு உயர்நிலைப் பள்ளியில் தமிழாசிரியராக பணிபுரிந்து வேலூர் விஜய கல்லூரியில் சிறந்த ஆசிரியருக்கான விருது பெற்றவர். 2013 ஆம் ஆண்டு 'பெண் கவிஞர்களின் கவிதைகளில் காதல் வெளிப்பாடுகள் (2001-2015) எனும் தலைப்பில் ஆய்வியல் நிறைஞர் பட்டத்தைப் பெற்று தற்போது தூய நெஞ்சக் கல்லூரியின் தமிழ்த்துறையில் 'பெண்விழுதுகளின் கவிதைகளில் பொருண்மையும் வடிவமும் (2001-2015)' எனும் தலைப்பில் பகுதி நேர முனைவர் பட்ட ஆய்வினை செய்துவருகிறார்.



கு.அன்பரசி: பி.லிட்., எம்.ஏ., பி.எட்., பட்டப்படிப்புகளை நிறைவு செய்த கு.அன்பரசி, ஆய்வியல் நிறைஞர் பட்டத்தை (2013) பல்கலைக்கழகத்தில் "எளச்சிப்பாளையம் ஒன்றிய நாட்டுப்புறப்பாடல்கள்' என்னும் தலைப்பில் நிறைவு செய்தார். மேலும் 2012ஆம் ஆண்டு உதவிப்பேராசிரியர் பணிக்கான UGC-NET தேர்வில் தேர்ச்சி பெற்றார். 2014ஆம் ஆண்டு பச்சையப்பன் அறக்கட்டளையின்கீழ் இயங்கிவரும் சி.கந்தசாமி நாயுடு மகளிர் கல்லூரியில் நிரந்தராப்பணியில் தமிழ்த்துறையில் உதவிப்பேராசிரியராகப் பணியாற்றிக் கொண்டிருக்கிறார். அக்கல்லூரியில் இயங்கும் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத்தின் பொறுப்பாளராகவும் செயல்படுகிறார். தற்போது தூய நெஞ்சக் கல்லூரியில் முதுகலை தமிழ் மற்றும் ஆய்வுத்துறையில் உதவிப்பேராசிரியர் முனைவர் கி.பார்த்திபராஜா. அவர்களின் நெறியாளுகையில் "மக்கள் நாட இயக்கங்களும் க.செல்வராஜின் நாடக ஆக்கங்களும்" என்ற தலைப்பில் பகுதி நேர முனைவர் பட்ட ஆய்வினைச் செய்து வருகிறார்.

ISBN 978-93-941-87-21-4

பாத பதிப்பகம்

9 789394 187214

Scanned with CamScanner

யுனிவர்ஸல் பப்ளிஷர்ஸ்

இஸ்லாமிய இலக்கியக் கழகம்

ஜமால் முகமது கல்லூரி முதுகலைத் தமிழாய்வுத் துறை

யுனிவர்ஸல் பப்ளிஷர்ஸ்

பன்னூலாசிரியர் எம்.ஆர்.எம். அப்துற்-றஹீம்

நூற்றாண்டு விழா - பன்னாட்டு ஆய்வரங்கம்

திருச்சி ஜமால் முகமது கல்லூரியில் 26.03.2022 அன்று

எம். ஆர்.எம். அப்துற்-றஹீம் படைப்புலகம்

என்ற தலைப்பில் நடைபெற்ற பன்னாட்டு ஆய்வரங்கில்

திரு. ~~திருமதி~~ முனைவர் ச.அ.சையத் அகமது பிரோஸ் .....அவர்கள்

ஜமால் முகமது கல்லூரி, திருச்சி .....

பங்கேற்று ஆய்வுக் கட்டுரை வழங்கியமையைப் பாராட்டிச் சான்றளிக்கப்படுகிறது

தலைவர்
முதுகலைத் தமிழாய்வுத் துறை
ஜமால் முகமது கல்லூரி

மேலாண்மை இயக்குநர்
யுனிவர்ஸல் பப்ளிஷர்ஸ்

தலைவர்
இஸ்லாமிய இலக்கியக் கழகம்

அப்துற்-றஹீம்

ஆய்வுச் சரம்



யுனிவர்ஸல்
பப்ளிஷர்ஸ்

அப்துற்-றஹீம்
ஆய்வுச் சரம்

தொகுப்பாசிரியர்கள்

முனைவர் **சேமுமு முஹமதலி,**
முனைவர் **மு.அப்துல் சமது,**
முனைவர் **மு.இ. அகமது மரைக்காயர்,**
எஸ்.எஸ். ஷாஜஹான்

யுனிவர்ஸல் பப்ளிஷர்ஸ்

2, வடக்கு உஸ்மான் சாலை, முதல் மாடி,
(கோடம்பாக்கம் மேம்பாலம் அருகில்)
தியாகராய நகர், சென்னை - 600 017.
✆ : 2834 3385, 94440 47786
E-mail: universal_pub2002@yahoo.co.in
Website: www.universal publishers.co.in

அப்துற்-றஹீம் ஆய்வுச் சரம்
முனைவர் சேமுமு முஹம்மதலி,
முனைவர் மு.அப்துல் சமது,
முனைவர் மு.இ. அகமது மரைக்காயர்,
எஸ்.எஸ். ஷாஜஹான்
பதிப்பு விவரம்
முதற் பதிப்பு மார்ச், 2022
உரிமை © பதிப்பகத்திற்கு
வெளியிடுபவர்
பாத்திமா ஷாஜஹான்
யுனிவர்ஸல் பப்ளிஷர்ஸ்
2, வடக்கு உஸ்மான் சாலை,
(கோடம்பாக்கம் மேம்பாலம் அருகில்)
முதல் மாடி, தியாகராயர் நகர்,
சென்னை - 600 017.
✆ : 044-2834 3385, 94440 47786
ஒளி அச்சு : சு. அசோக்குமார், 94877 31019
அட்டை வடிவமைப்பு : ஜானி, 98414 96549
அச்சு : கிளிக்டுபிரிண்ட், சென்னை - 600 018.
பக்கங்கள் : 512 (⅛ டெமி)
விலை : ₹ **450/-**

ISBN: 978-93-92346-30-9

Title of the Book : **ABDUR-RAHEEM AAIVUCH CHARAM**
Dr. SeMuMu MUHAMMAD ALI,
Dr. M. ABDUL SAMAD,
Dr. M.E. AHAMED MARAICKAYAR,
Alhaj S.S. SAJAHAN
© Publisher
Language : **Tamil**
Edition : **First - March, 2022**
Publisher
Fatima Sajahan
Universal Publishers
2, North Usman Road,
(Near Kodambakkam Overbridge)
T. Nagar, Chennai - 600 017.
✆ : 044-2834 3385, 94440 47786
Typeset : **S. Asokkumar,** 94877 31019
Wrapper design : **Johny,** 98414 96549
Printed at: clictoprint | *Chennai-600 018.*
No.of Pages : **512** (⅛ Demy)
Price : ₹ **450/-**

பக்கம்

15. எம்.ஆர்.எம். அப்துற் றஹீமின் இல்லறம் நூல் - ஓர் பார்வை 179
முனைவர் செ.ப. சலீமா

16. எம்.ஆர்.எம். அப்துல் ரஹீம் உணர்த்தும் வாழ்வில் வெற்றிக்கு வழி 184
முனைவர் சு. சாகுல் ஹமீது

17. வாழ்க்கையில் வெற்றி 198
டாக்டர் சே. சாதிக்

18. பன்னூலறிஞர் எம்.ஆர்.எம் படைப்புகள் ஓர் அலசல் 204
உ. சுப்பிரமணியன்

19. எம்.ஆர்.எம்.அப்துற் றஹீம் படைப்புக்களில்-பாடுபொருள் 214
முனைவர். இரா. சுமதி

20. 'வாழ்க்கையில் வெற்றி' நூல் விளம்பும் வாழ்வியல் சிந்தனைகள் .. 222
முனைவர் ச.அ. சையத் அகமது பிரோசு

21. அப்துற் றஹீம் - வாழ்வது ஒரு கலை 233
முனைவர் சு. சோலையம்மாள்

22. 'குணத்தின் குன்று' நாவலில் பாத்திரப் படைப்பு 243
முனைவர். ம. ப. தமிழ்ச்செல்வி

23. கவிஞர் எம்.ஆர்.எம். அப்துற் றஹீமின் படைப்பாளுமை 256
முனைவர் மு. தமீம் மன்சூர்

24. ஒளிவெள்ளம் நாவலில் அப்துற் றஹீம் அவர்களின்
சுய அனுபவங்கள் 270
சு. தொண்டியம்மாள்

25. நபிகள் நாயகக் காவியத்தில் போர்ச் சூழல்களும், சமூகமும் 278
முனைவர் மீ. தெளலத் பேகம்

26. நகைச்சுவை வெளிப்பாட்டில் 'படியுங்கள் சிரியுங்கள்' 285
பேராசிரியர். முனைவர் ஒ. நசீமா பானு

27. பன்னூலறிஞர் அப்துற் றஹீமின் இஸ்லாமிய கலைக் களஞ்சியம்
'ஒரு கலைப் பொக்கிஷம்' 298
நியாஸ் ஏ. ஸமத்

28. அப்துற் றஹீம் படைத்த 'ஒளி வெள்ளம்' நாவலில் இணை
முரண்களின் போராட்டமும், அறத்தின் வெற்றியும் 311
முனைவர் மு. பழனியப்பன்

29. வழுக்கலில் ஊன்றுகோல் 321
மு. பாத்திமாக்கனி

‘வாழ்க்கையில் வெற்றி’ நூல் விளம்பும் வாழ்வியல் சிந்தனைகள்

முனைவர் ச.அ. சையத் அகமது பிரோசு

உதவிப்பேராசிரியர்
முதுகலைத் தமிழாய்வுத்துறை
ஜமால் முகமது கல்லூரி (தன்னாட்சி)
திருச்சிராப்பள்ளி – 620 020.

இருபதாம் நூற்றாண்டின் தலைசிறந்த தன்னம்பிக்கை எழுத்தாளர் என்று போற்றப்படுபவர் எம்.ஆர்.எம்.அப்துற் றஹீம் அவர்கள் ஆவார். இளம் வயது நூலக அனுபவம் இவர் எழுத்து ஆர்வத்தைத் தூண்டியது. தம் இருபத்து இரண்டாம் வயதில் ‘அரேபியாவின் அதிபதி’ என்னும் மொழிபெயர்பு நூலை வெளியிட்டார். தொடர்ந்து அரைநூற்றாண்டு காலம் எழுத்துக்காகவே தம் வாழ்வை அர்ப்பணித்தார். இவர் எழுதிய ‘வாழ்க்கையில் வெற்றி’ என்னும் நூல் 1948ஆம் ஆண்டு வெளிவந்தது. ஒன்பது பதிப்புகளைக் கண்டு 2 இலட்சம் பிரதிகளுக்கு மேல் விற்பனையாகி சாதனை படைத்துக் கொண்டிருக்கிறது இந்நூல். பன்னிரண்டு அத்தியாயங்களைக் கொண்ட இப்படைப்பை சென்னை யுனிவர்சல் பதிப்பகம் வெளியிட்டுள்ளது. ‘வாழ்க்கையில் வெற்றி’ நூல் வெளிப் படுத்தும் வாழ்வியல் சிந்தனைகளைத் தொகுத்துக் காண்பது இக்கட்டுரையின் நோக்கமாகும்.

நூலமைப்பு

ஒரு நூல் எங்கனம் சிறக்கிறது என்பதை பல இலக்கண நூற்கள் விளக்குகின்றன. பத்து வகைக் குற்றங்கள் நீங்கப்பெற்று

நுண்பொருளாகிய முப்பத்திரண்டு வகை உத்திகள் பொருந்திவரவேண்டும் என்கிறார் தொல்காப்பியர். விட்டு அகல்வு தவிர்த்தல், விரித்துரைக்கும் பாங்கு, காரண காரிய நடை, பொருத்தமான எடுத்துக்காட்டுகள் நூற்களை அணிசெய்யும் கூறுகளாகும். ஒத்த கருத்துகளை உடைய முன் நூற்களின் மேற்கோள்கள், வாசகர்களின் ஐயத்தையும் பொருள் மயக்கத்தையும் போக்குதல் நூலாசிரியரின் கடமைகளாகும். "நூலின் இயல்பே நுவலின் ஓர் இரு / பாயிரம் தோன்றி மும்மையின் ஒன்றாய்/நாற்பொருள் பயத்தோடு எழுமதம் தழுவி / ஐயிரு குற்றமும் அகற்றி அம்மாட்சியோடு / எண் நான்கு உத்தியின்" என சிறந்த நூலிற்கான இலக்கணத்தை பகுத்துக் கூறுகிறார் பவணந்தி முனிவர்.

முகவுரை

'மனித இனத்திற்கு ஊழியம் செய்வதே வாழ்க்கையின் வெற்றி' என முகவுரையில் நூலின் நோக்கத்தைப் புலப்படுத்து கிறார் நூலாசிரியர். தன்னம்பிக்கை, தைரியம், முயற்சி போன்ற அருங்குணங்களைச் சுரக்கும் அமுதசுரபியாக மனித மனங்கள் திகழ்கின்றன. இலட்சியம், உத்வேகம், எதையும் தாங்கும் இதயம், தலைமைப் பண்பு, வெற்றி, வளமான வாழ்க்கை, அன்பு, எதிரிகளை நண்பர்களாக்குதல் ஆகியன இந்நூல் கற்றலின் பெரும் பயன்கள் எனச் சுட்டிக்காட்டப்பெறுகிறது.

மதிப்புகூட்டப் பெற்ற எழுத்துகள்

இந்த உலகில் முழுநேர எழுத்தாளராக வாழ்வது மிகுந்த சவாலானது. எழுத்திற்காகவே தம் வாழ்வை அர்ப்பணிப் பவர்கள் வாழ்க்கையில் சோரம் போவதில்லை. இதற்கான சான்றுகள் தம் நூலில் பல இடங்களில் உரிய சான்றுகளுடன் நிறுவியுள்ளார் எம்.ஆர்.எம்.அப்துற் றஹீம் அவர்கள். எழுத்தராக இருந்து எழுத்தாளராக முன்னேற்றம் கண்டவர் பெர்னாட்ஷா அவர்கள். எல்லா எழுத்தாளர்களைப் போன்றே இவரும் ஆரம்ப காலத்தில் பல சோதனைகளை எதிர் கொண்டார். நாள் ஒன்றிற்கு ஐந்து பக்கங்கள் எழுதும் வழமையுடைய பெர்னாட்ஷா ஒன்பது ஆண்டுகாலம் அவர்

சம்பாதித்தவை வெறும் ஆறு பவுண்டுகள் தாம். நவீன நாடகக்கலையின் மிகச் சிறந்த முன்னோடியான ஜார்ஜ் பெர்னாட்ஷா அவர்கள் 1925ஆம் ஆண்டிற்கான இலக்கியத்திற்கான நோபல் பரிசை பெற்றார் என்பது குறிப்பிடத்தக்கது. வறுமையின் துயரத்தில் வாடி வதங்கிய ரூசோ பிரேஞ்சு புரட்சிக்கு வித்திட்ட 'சமுதாய ஒப்பந்தம்' என்ற நூலை எழுதினார். 'நாங்கள் இந்தியாவை வேண்டினும் இழப்போம். ஷேக்ஸ்பியரின் காவியங்களை ஒரு போதும் இழக்க மாட்டோம்' என பிரிட்டானியரின் பெருமிதத்திற்குக் காரணமான ஷேக்ஸ்பியர் படைப்புகள் ஏழ்மையின் பேனா முனையிலிருந்து கிளம்பிய வெள்ளப் பிரவாகமாகும். முதலாளியின் கொடுமையைத் தாங்கமுடியாமல் கடிதம் எழுதிய தம் மாணவரின் எழுத்துத் திறமையைக் கண்டறிந்தார் ஓர் ஆசிரியர். அவர் ஊக்குவிப்பில் உருவான மிகச்சிறந்த உடோபியன் வகை எழுத்தாளராக இன்று உலகில் அடையாளம் காணப்பெறுகிறார் ஹெச்.ஜி.வெல்ஸ் அவர்கள். பிச்சை எடுத்த காரணத்திற்காக சிறைவாசம் அனுபவித்துப் பிற்காலத்தில் தம் எழுத்துத் திறனால் அமெரிக்க அதிபரின் வருமானத்தை விட இருமடங்கு அதிகமாக சம்பாதித்துச் சாதித்தார் ஜேக் லண்டன் என்ற எழுத்தாளர். தம் வாழ்நாளில் ஆயிரத்து இருநூறு தொகுதிகளை எழுதி பத்து லட்சம் பவுன்களை ஈட்டிய சாதனையாளர் அலெக்ஸாண்டர் டூமாஸ் அவர்கள். இவ்வாறு வறுமையில் தொடங்கி சிகரங்களைத் தொட்ட பல சாதனைச் செம்மல்கள் எழுத்துலகில் எங்கனம் கொடிகட்டிப் பறந்தனர் என்பதை அரிதின் முயன்று தொகுத்த ஆவணங்களாக புலப்படுகின்றன எம்.ஆர்.எம்.அப்துற் றஹீம் அவர்களின் எழுத்து முத்துகள்.

சமயோசிதத்தில் விளையும் வீரம்

பன்னிரண்டு வயது இருக்கும் போது இலண்டன் மாநகரில் போயர் யுத்த இராணுவ அணிவகுப்பைக் கண்டு களித்த சிறுவன் மனதில் உருவான தூண்டல் உணர்வு இரண்டாம் உலகப் போரின்போது ஆப்ரிக்க கண்டத்திலிருந்து ஜெர்மன் படைகளை விரட்டியடிக்கும் தளபதியாக வளர்த்தெடுக்க

உதவியது. ஃபீல்ட் மார்ஷல் பெர்னாட் மண்ட் கோமரி சிறுவயதில் கண்ட காட்சியே பிற்கால அவருடைய சேவைக்குக் காரணமாகியது. மெக் ஆர்தர் அவர்களும் இளம்வயது இராணுவ ஜெனரலாக பணியாற்றிய சிறப்புடையவர். நெய்போலியன் ஒரு மாவீரர். அவரை வென்ற மாவீரர் வெலிங்டன். 'வாட்டர்லூவை நான் ஈட்டன் பள்ளி விளையாட்டு வெளியில் வென்றேன்' என்ற அவருடைய கூற்று 'விளையும் பயிர் முளையிலே தெரியும்' என்ற பழமொழியை நினைவுபடுத்துகிறது. போயர் போரில் அமெரிக்க அச்சுறுத்தலைப் பொருட்படுத்தாமல் போர் விமான சாகசம் நிகழ்த்தியவர் வின்சன்ட் சர்ச்சில். மனித வரலாற்றில் வீரம் காலம் காலமாக உணர்த்தப்பட்டுவரும் ஒரு விழுமியமாகும். இந்த குணம் ஒருவருக்குத் திடீரென்று வந்துவிடாது. மரபணு காரணங்கள், இள வயது தூண்டுதல்கள் இப்பண்பு மேலோங்க வழிவகுக்கின்றன என்பதை சான்றுகளுடன் நூலாசிரியர் தொகுத்துரைக்கின்றார். மூர்க்கத்தனம் வீரத்திலிருந்து முற்றிலும் வேறுபட்டது. மனிதநேயமும் சமயோசித அறிவும் 'வீரம்' என்ற குணத்தை எழிலுற செய்கின்றன என்பதை இந்நூலின் வழியாக உணரமுடிகிறது.

நூல் பல கல்

வாசிப்பை சுவாசமாக கொண்டவர்கள் வாழ்க்கையில் நிறைய சாதிக்கிறார்கள் என 'வாழ்க்கையில் வெற்றி' நூல் வாசிப்பவர் மனதில் ஆழப்பதியும் வகையில் பதிவுசெய்கிறது. சமதர்ம ரஷ்யாவைக் காண நிலைகளனாக லெனின் அவர்களுக்கு விளங்கியது கார்ல் மார்க்ஸ் எழுதிய 'மூலதனம்' என்ற நூல் என்றால் மிகையாகாது. அமெரிக்க நாட்டில் ஹோம்ஸ் என்ற நீதியரசர் தம் 93 வயதில் ஓய்வு பெற்றார். ஓய்வு காலத்தில் பிளேட்டோவின் நூலை அவர் வாசிக்கத் தொடங்கியதை ரூஸ்வெல்ட் வியந்துள்ளார். நிம்மதியான ஓய்விற்குப் பொறுமையான வாசிப்பு பயனளிக்கும் என அனைவரும் உணர ஆரம்பித்தால் குடும்பப் பிரச்சினைகள் பெருமளவில் குறையும். ஜார்ஜ் மார்ஷல் என்பார் மூன்று மணி நேரத்தில் 200 பக்கங்கள் வாசிக்கும் திறனைப் பெற்றிருந்தார்.

வாசிப்பு உலக அனுபவங்களுக்கான சாளரங்களைத் திறக்கிறது. மனித மனங்களைப் பக்குவப்படுத்துகிறது. பிரச்சினைகளை இல்லாமல் செய்கிறது. மனோதிடத்தை உருவாக்குகிறது.

இளம் வயது சாதனைகள்

சாதிக்க வயது வரும் வளர காத்திருக்க வேண்டியதில்லை. சூழ்நிலையும் சந்தர்ப்பமும் சரிவர பொருந்தி வரும்போது சாதனைகளும் கைகூடுகின்றன. 'வெற்றி', 'வாய்ப்பு' என்னும் போர்வையில் கதவுகளைத் தட்டும். 'தயக்கம்' அந்த வாய்ப்பைத் தட்டிப் பறிக்கும். 'அதிஷ்டம்' என்ற காத்திருப்பு தப்பித்தல் மனோபாவத்திற்கு வழிகோலும். இளமையில் சாதித்த பலரையும் தம் நூலில் எம்.ஆர்.எம்.அப்துற் றஹீம் அவர்கள் கவனப்படுத்துகிறார். மாமன்னர் அக்பர் பன்னிரண்டு வயதில் முடிசூடினார். ஸ்வீடன் மன்னராக 12வது சார்லஸ் பொறுப்பேற்ற போது அவருக்கு வயது 19 ஆகும். இருபத்தொரு வயதில் அலெக்ஸாண்டர் வெற்றி வாகை சூடினார். புவியீர்ப்பு விசையை நியூட்டன் கண்டுபிடித்த போது அவருக்கு வயது 24 ஆக இருந்தது. மார்கோனி ரேடியோவை 27 வயதில் கண்டுபிடித்தார். ஜான்சி ராணி, டால்ஸ்டாய், பென்சிலின், ஓமர் பிராட்லி எனப் பலரையும் இளம் சாதனையாளர்களாக பட்டியலிடுகிறார் நூலாசிரியர். அனுபவம் ஒரு சிறந்த ஆசிரியராகும். இளம் வயதுத் தோல்விகள் பிற்கால சாதனையாளர்களை வடிவமைக்கின்றன என்பதைக் காந்தியடிகள், எடிசன் ஆகியோர் வாழ்க்கையின் மூலம் சுட்டிக்காட்டுகிறார். சாதிக்க முதுமை தடையல்ல என்பதை பல சான்றோர்களின் வாழ்க்கை மனித சமுதாயத்திற்கு முன்மாதியாக உள்ளது. அலிகாரில் சர்வகலாசாலையை நிறுவும்போது சர் சையத் அகமது அவர்களுக்கு வயது 60 ஆகும். ஜெர்மானிய இரும்பு மனிதர் வரலாற்றில் அறிப்படும் மனிதராக அடையாளம் பெற 81 வயது வரை காத்திருக்க வேண்டியிருந்தது. ஔரங்கசீப் தக்காணப் போரை எதிர்கொண்ட போது அவருக்கு 91 வயது ஆகியிருந்தது.

ஆளுமை உருவாக்கத்தில் பெற்றோரின் பங்களிப்பு

தாயின் மடியே முதல் பாடசாலையாகும். ஆளுமை தகவமைப்பில் பெற்றோரின் வழிகாட்டுதல் மிகவும் இன்றியமையாதது என்பதை 'வாழ்க்கையில் வெற்றி' நூலின் வழியாக உணரமுடிகிறது. ஒரு சாம்ராஜியத்தை உருவாக்கவே தாம் பிறந்திருப்பதாக சுஉது உறுதியாக நம்பினார். அவருடைய இந்த நம்பிக்கைக்குப் பின்புலமாக இருந்தவர் அவருடைய தந்தையார் அப்துர் ரஹ்மான் அவர்கள் என்பது குறிப்பிடத் தக்கது. மொகலாய சாம்ராஜ்ஜியத்தை எதிர்த்து நின்ற மராட்டிய மன்னர் சிவாஜியின் வீரவுணர்வை ஊட்டி வளர்த்தவர் அவர்தம் தாயார் ஜீஜிபாய் ஆவார். கிளென் மார்டின் பட்டங்கள் செய்து பறக்கவிடுவதில் வல்லவராகத் திகழ்ந்தார். உலகின் முதல் விமானத்தை உருவாக்கிய ரைட் சகோதரர்களின் படத்தைப் பத்திரிக்கைகளில் பார்த்த பிறகு தான் விடும் பட்டம் போன்றே அந்த விமானத்தின் இயந்திர அமைப்பு உள்ளதைக் கவனிக்கிறார். தனக்குப் பட்டம் செய்யவும் தெரியும் பட்டம் போன்று அமைந்துள்ள இந்த இயந்திரத்தையும் தயாரிக்க முடியும் என்று திடமாக நம்பினார் கிளென் மார்டின். இயந்திரம் செய்ய இரும்புத்தடி தேவைப்பட்டது. அதை வாங்க தன் அம்மாவிடம் பணம் கேட்டபோது 'தடி வாங்க பணமில்லை என்றால் அதை செய்ய நீயே முயற்சி செய்' என அவர் பதிலளித்தார். இந்த மந்திரச் சொற்கள் தான் கிளென் மார்டினை விமானம் ஒன்றை உருவாக்க காரணமாக அமைந்தது. ரேண்டால்ஃப் சர்ச்சில் நிதி அமைச்சராக இங்கிலாந்து நாட்டில் பொறுப்பு வகித்தவர். அவர் அணிந்த மேல் அங்கி மீது அவருடைய மனைவிக்கு மிகவும் மரியாதை இருந்தது. இதே அங்கியை தம் மகனும் அணிந்து பெரிய மனிதராக வலம் வரவேண்டும் என்று கனவு கண்டார். நாற்பது ஆண்டுகள் கழித்து இந்த கனவு நிறைவெறியது. அந்த அலங்கார மேல் அங்கியை அணிந்து அந்நாட்டின் பிரதமராக பொறுப்பேற்றவர்தாம் வின்ஸ்ட்டன் சர்ச்சில் அவர்கள் ஆவார்கள். பெற்றோரின் அரவணைப்பிற்கு எந்த வகையான குறையும் இல்லாதது வாழ்க்கைத் துணைகளின்

பங்களிப்பு என்பதை லெனினின் வாழ்க்கையைச் சான்றாக காட்சிப்படுத்துகிறார் நூலாசிரியர். இருபது ஆண்டுகால சைபீரிய இன்னல்களைச் சகித்து ரஷ்யப் புரட்சிக்குத் தலைமை தாங்கிய லெனினுக்கு உறுதுணையாக இருந்தவர் அவருடைய துணைவியார் குருப்ஸ்காயா அவர்கள் ஆவார்கள். வெண்டல் ஹோம்ஸ் ஒரு மிகச்சிறந்த சட்ட நூல் தயாரிப்பதற்குக் காரண மாக இருந்தது அவருடைய மனைவியின் உற்சாகமொழிகள் என்றால் மிகையாகாது. 'கார்டல் நடக்கத் தெரிந்த நாள் முதலே பெரிய மனிதரைப் போன்றுதான் நடப்பார்' என நம்மாராயம் கூறியவர் அவருடைய தந்தை ஆவார்.

திட்டமிடுதல்

ஆளுமைப் பண்புகளில் மிகவும் முக்கியமானது திட்டமிடுதல் ஆகும். வீட்டைக் கட்டுவது, திருமணம் செய்வது, தேர்வில் தேர்ச்சி பெறுவது என எல்லாவற்றிலும் திட்டமிடுதல் இன்றியமையாத ஓர் அலகாகும். எண்ணங்களைச் செயல் வடிவமாக்க எளிதாக்கும் முறைமையே திட்டமிடுதல் எனப்படுகிறது. 'உலகமே எதிர்த்து நின்றாலும் கருமத்தைக் கைவிடாதே' என்ற விவேகானந்தர் கூற்று திட்டமிடுதலில் துணிச்சல் பெறுமிடத்தைச் சுட்டுகிறது. 'எனக்கு பத்து ஆண்டுகள் வாழ்க்கை அவகாசம் கிடைத்தால் அதில் 9 ஆண்டுகள் மனதைத் திடப்படுத்தும் பணியில் செலவிடுவேன். எஞ்சிய ஓர் ஆண்டில் மனோதிடத்துடன் சாதிப்பேன்' என்ற ஓர் அறிஞரின் கூற்றின் வாயிலாக திட்டமிடுதலின் முக்கியத்துவத்தைக் கவனப்படுத்துகிறார் எம்.ஆர்.எம்.அப்துற் றஹீம் அவர்கள். கிடைக்கப்பெறும் மொத்த கால அவகாசத்தில் பத்தில் ஒன்பது பங்கு மனோதிடத் தயாரிப்பிற்கு என ஒதுக்கீடு செய்தல் திட்டமிடுதலின் முக்கியத்துவமாகவே பார்க்க வேண்டும். சிறந்த மனோதிடம் திட்டமிடுதலை எளிதாக்குகிறது. பத்தாண்டு செயல் திட்டத்தைச் சாத்தியமாக்க ஒரு மணிநேர திட்டமிடுதல் உதவும் என்ற கூற்றின் வாயிலாக திட்டமிடுதலின் செறிவுத்தன்மையைப் பறைசாற்றுகிறார் நூலாசிரியர். 'நல்ல

தொடக்கம் பாதி வெற்றி' என்ற ஆங்கிலப் பழமொழி இங்கு நினைவுகூரத்தக்கது.

அரவணைத்தல் பண்பு

தலைமைப் பண்பு வெற்றிபெற அரவணைத்தல் பாங்கு இன்றியமையாதது. அரவணைத்தல் என்பது நண்பர்களை மட்டுமல்ல எதிரிகள், போட்டியாளர்கள் ஆகியோரும் இதில் உட்படுவர். 'யாதோர் உயிரையும் கொல்வது தகாது', 'மனிதன் அன்புறவாக திகழ வேண்டும்' என்ற சான்றோர் மொழிகளை நூலாசிரியர் சுட்டிக்காட்டுகிறார். 'நமக்கு விரும்புவதே நம் சகோதரருக்கும் விரும்ப வேண்டும்' என்ற சிந்தனையைப் பைபிள், கன்பூசியஸ், முகமது நபி ஆகியோர் உரைப்பது சான்றோர் பொன்மொழிகளைச் சமயக் குமிழக்குள் அடக்கமுடியாது என்பதை நூலாசிரியர் உணர்த்துகிறார். 'வாழ்க்கை வெற்றியின் ரகசியம் பிறர் மீதான அன்பே' என்கிறார் எர்னஸ்டைன் ஸுமான் ஹைங். 'பகைவனையும் நேசி' என்கிறார் இயேசு. தாம் சிறைவாசம் அனுபவித்தபோது சிறை அதிகாரியாக இருந்த ஸ்மட்ஸ் அவர்களுக்கு அண்ணல் காந்தியடிகள் காலணிகளை அன்பளிப்பாக தந்த நிகழ்வு உணர்ச்சிப்பூர்வமானது. அரவணைப்புப் பண்பே ஆன்மநேய ஒருமைப்பாட்டிற்கும் வழிகோலுகிறது. கலிங்கப்போர் அசோகரின் மனமாற்றத்திற்குக் காரணமானது. பிராணி களுக்கான மருத்துவமனைகளைத் திறந்தார். புறா குஞ்சு பொறித்ததனால் தம் கூடாரத்தை விட்டுக் கொடுத்தவர் அம்ரு இப்னுல் ஆஸ் என்பார். ஏழைகளை அரவணைத்தல் தலைமைத்துவ இலக்கணம் எனில் மிகையாகாது. ஏழைகளை அரவணைத்தலில் ஈகை முக்கிய இடத்தைப் பெறுகிறது. கிலாபத் இயக்கத்தை முன்னெடுத்த அலீ சகோதரர்கள் பொன்சரிகை மாலையை ஏலம் விட்டுப்பெற்ற ரூ.29,000/- தொகையை கிலாபத் இயக்க நிதிக்கு வழங்கினர் என்பது வரலாறு.

புன்னகை பொன்னகை

நேர்மறை சிந்தனைகள் மனித உள்ளங்களைச் சீரமைக்

கின்றன. நல்ல உள்ளம் உடல்நலனுக்குத் துணைபுரிகின்றது. உடல் ஆரோக்கியத்திற்கும் புன்னகைக்கும் நெருங்கிய தொடர்பு இருக்கின்றது. மனித உறவுகள் சுமுகமாக நிலவ புன்னகை பெரிதும் துணைபுரிகின்றது. எல்பர்ட் ஹப்பார்ட் என்பவர் தலைநிமிர்ந்து நடத்தல், இயற்கையை அனுபவித்தல், புன்முறுவல், கைகுலுக்கல், பிறர் எண்ணம் குறித்த அச்ச மின்மை, விருப்பங்களை மனதில் ஆழமாய்ப் பதியவைத்தல் என நேர்மறைப் பண்புகளைப் பட்டியலிடுகிறபோது புன்னகைக்கும் இடமளித்திருப்பது குறிப்பிடத்தக்கது. இதுபோன்ற ஏராளமான சான்றுகளை புன்னகைக்கு உரியன வாக நூலாசிரியர் எடுத்துரைக்கிறார். தன் புன்முறுவலின் விலை 10 இலட்சம் டாலர் என்கிறார் சார்லஸ் ஷ்வாப் அவர்கள். 'புன்னகை இல்லாத முகம் வாணிபத்திற்குப் பயனற்றது' என்பது சீனப் பழமொழியாகும். நகைச்சுவை உணர்வால் மனித உடலில் உள்ள 13 தசைநார்கள் நெகிழ்வடைகின்றன. மாறாக கடுகடுப்பான உணர்வுகளினால் 47 தசைநார்கள் இறுகுகின்றன என்ற அறிவியல் சிந்தனையை இந்நூல் நினைவுகூர்கிறது.

நாவண்மை

மொழி வெறும் தகவல் தொடர்பிற்கான சாதனம் மட்டுமன்று. மாறாக பண்பாட்டு முக்கியத்துவம் பெற்றது. மனதின் மொழியை புலப்படுத்துவது அவருடைய நாவண்மையே ஆகும். நாவண்மை சார்ந்த பல செய்திகளை எம்.ஆர்.எம்.அப்துற் றஹீம் அவர்கள் இந்நூலில் புலப்படுத்து கிறார். 'மரங்களைப் பார்த்துப் பேசி பழகியவரின் பேச்சை பிற்காலத்தில் மக்கள் கேட்டு மரமாக நின்றனர்' என ஆபிரகாம் லிங்கனின் பேச்சாற்றலை வியந்துப் பாராட்டுகிறார் நூலாசிரியர். 'முடியாது' என்ற சொல் பிரெஞ்சு அகராதியில் கிடையாது என்கிறார் நெப்போலியன். 'நான் நினைக்கிறேன்', 'அனேகமாக', 'இப்போது அப்படித்தான் தோன்றுகிறது' போன்ற தொடர்கள் பெஞ்சமின் பிராங்கிளின் அவர்களின் உரையாடல் மொழியின் தனித்துவ அடையாளமாகும். 'வாதாடி ஒரு மனிதரை வெல்ல இயலாது, இது என் நீண்ட அரசியல் அனுபவம்' என்னும் வில்லியம் பெகாருவின் கருத்து

பேச்சாற்றலின் தன்மையை வரையறைக்கு உட்படுத்துகிறது. மகளே நீ பிறரை விட அறிவாளியாக இருக்க முடியுமானால் இரு! ஆனால் அவர்களிடம் நீ அவ்வாறு இருப்பதாக மட்டும் சொல்லிவிடாதே' என்று செஸ்டர் பீல்டின் அறிவுரை வார்த்தைகளில் கடைப்பிடிக்க வேண்டிய நிதானத்தைத் தெளிவுப்படுத்துகிறது. 'உணர்ச்சியைச் சித்தரிக்காதே; அதை உணரும்படி செய்' என்ற பொன்மொழி சிந்தனையைத் தூண்டும் முதுமொழியாகும்.

புதியனவற்றைக் கண்டுபிடிக்க வேண்டும் என்ற உணர்வு, இயக்க கூட்டுணர்வு மனோபாவம், தன்னம்பிக்கை, வயதில் குறைந்தவர்களாக இருந்தாலும் அதிக திறமை உடையோரை உரியமுறையில் அங்கிகரித்தல், அச்சம் தவிர்த்தல், நம்பிக்கை துரோகம் செய்யாமை, இறை நம்பிக்கை, மன ஓர்மை, பொறாமை மறுப்பு, மழலைப்பருவம் மீதான விருப்பம், மழலையர் சொல் கேட்டல், நிர்வாகத் திறன், பிறர் நலனுக்காகத் தம் உயிரைத் தியாகம் செய்தல், இன வேற்றுமை களைதல், தொழில் நேர்மை, நிலைத்தன்மை, பெருந்தன்மை, பிறர் குறைகளை ஆராயாத தன்மை, தம் தவறுகளை மதிப்பிடும் மனவுணர்வு, தற்புகழ்ச்சி மறுப்பு, மனித உரிமைகளைப் பேணல், தன்னடக்கம், நட்பு, மனைவியை நேசித்தல் போன்ற எண்ணற்ற வாழ்வியல் சிந்தனைகளைப் பொருத்தமான சான்றோர் பெருமக்களின் வாழ்க்கை அனுபவங்களில் இருந்து நூலாசிரியர் எடுத்துரைக்கிறார். மெக் ஆர்தர், ஜேக் டெம்ப்ஸே, ரிச்சர்ட் வெலின், எமர்சன், ரூஸ்வெல்ட், கமால் பாஷா, க்யூரி, ராக்பெல்லர், லூதர் பர்பாங், டால்ஸ்டாய், அட்மிரல் செஸ்டர் நிமிட்ஸ், ராபின்சன், ஹாரிமென், மாத்திவ்ஸ், ஹக்ஸ்லி, ஜேம்ஸ் டைஸன், ஹெலன் கெல்லர், ஹுமான்ஹிங், ஆல்பர்ட் வாண்டர் பீல்ட், ஜான் பிரெலின், மார்ஷல் பீல்டு, ஜவகர்லால் நேரு, கார்லைல், வால்ட்டேர், சாக்ரடீஸ், ஒட்டக்கூத்தர், முஸ்தபா கமால், புல்மென், ஆண்ட்ரூ கார்ஜீஜ் உள்ளிட்ட சிந்தனையாளர்கள், அரசியல் மேதைகள், விளையாட்டு வீரர்கள், வர்த்தக உலக சக்கரவர்த்திகள், தத்துவ ஞானிகள், ஆட்சியாளர்கள், புலவர்கள், எழுத்தாளர்கள் வாழ்க்கையில்

நடைபெற்ற அனுபவ முத்துகளை எம்.ஆர்.எம்.அப்துற் றஹீம் அவர்கள் சுவைபட இந்நூலில் தொகுத்துத் தந்துள்ளார்.

நிறைவாக

மனித வாழ்க்கை அனைத்து மனிதர்களுக்கும் பொதுவானது என்ற உயரிய சிந்தனைக்கு இலக்கணமாக சமயம், மொழி, நாடு, இனம் என்ற எல்லைகளைக் கடந்து படிப்பினைகளை ஆவணப்படுத்தியுள்ளார் எம்.ஆர்.எம். அப்துற் றஹீம் அவர்கள். காலம் கடந்து நிற்கும் வாழ்வியல் விழுமியங்களைக் கருத்துகளின் களஞ்சியமாக உள்ளடக்கி யிருக்கிறது 'வாழ்க்கையில் வெற்றி' என்னும் இந்நூல் என்று சொன்னால் மிகையாகாது.

1922 ஆம் ஆண்டு பிறந்த பன்னூல் ஆசிரியரின் நூற்றாண்டினைப் பயனுறு வகையில் போற்றிட வேண்டுவது தமிழ் கூறு நல்லுலகின் கடமையாகும். அதனை உணர்ந்து இஸ்லாமிய இலக்கியக் கழகம், அவரது நூற்றாண்டு விழாவினைச் சிறப்புற நடத்திட முனைந்தது. ஆசிரியர் எம். ஆர். எம். அப்துற்-றஹீம் நூற்றாண்டு விழாவின் தொடக்க நிகழ்வை அவர் பிறந்த தொண்டியிலும், பன்னாட்டு ஆய்வரங்கை அவர் பங்கு பெற்றுத் தோற்றுவித்த இஸ்லாமிய இலக்கியக் கழகம் உருவான திருச்சி ஜமால் முகமது கல்லூரியிலும் நிறைவு விழாவினை அவர் வாழ்ந்து மறைந்த சென்னையிலும் நடத்திட இஸ்லாமிய இலக்கியக் கழகம் முடிவு செய்தது.

பன்னாட்டு ஆய்வரங்கத்தில் தமிழகமெங்கிலும் உள்ள கல்வியாளர்கள், மார்க்க அறிஞர்கள், படைப்பாளர்கள், ஆய்வாளர்கள் மிகுந்த ஆர்வத்துடன் பங்கேற்றுக் கட்டுரைகள் வழங்கினார்கள். பன்னூல் ஆசிரியரின் தன்னம்பிக்கை, மொழியாக்கம், வரலாறு, சமயம், புதினம், கலைக்களஞ்சியம் உள்ளிட்ட நூல்களைப் பற்றிய ஆய்வாக அக்கட்டுரைகள் அமைந்துள்ளன.

அக்கட்டுரைகளின் தொகுப்பாக 'அப்துற்-றஹீம் ஆய்வுச் சரம்' என்ற தலைப்பில் இந்நூல் வெளிவருகிறது.

யுனிவர்ஸல் பப்ளிஷர்ஸ்

ISBN 978-93-93316-21-9

9 789393 346309

₹450.00

அப்துற்-றஹீம்

ஆய்வுச் சரம்



யுனிவர்ஸல்
பப்ளிஷர்ஸ்

அப்துற்-றஹீம் ஆய்வுச் சரம்
முனைவர் சேமுமு முஹமதலி,
முனைவர் மு.அப்துல் சமது,
முனைவர் மு.இ. அகமது மரைக்காயர்,
எஸ்.எஸ். ஷாஜஹான்

பதிப்பு விவரம்
முதற் பதிப்பு மார்ச், 2022

உரிமை © பதிப்பகத்திற்கு

வெளியிடுபவர்
பாத்திமா ஷாஜஹான்
யுனிவர்ஸல் பப்ளிஷர்ஸ்
2, வடக்கு உஸ்மான் சாலை,
(கோடம்பாக்கம் மேம்பாலம் அருகில்)
முதல் மாடி, தியாகராயர் நகர்,
சென்னை - 600 017.
✆ : 044-2834 3385, 94440 47786
ஒளி அச்சு : சு. அசோக்குமார், 94877 31019
அட்டை வடிவமைப்பு : ஜானி, 98414 96549
அச்சு : கிளிக்டுபிரிண்ட், சென்னை - 600 018.
பக்கங்கள் : 512 (⅛ டெமி)
விலை : ₹ **450/-**

ISBN: 978-93-92346-30-9

Title of the Book : **ABDUR-RAHEEM AAIVUCH CHARAM**
Dr. SeMuMu MUHAMMAD ALI,
Dr. M. ABDUL SAMAD,
Dr. M.E. AHAMED MARAICKAYAR,
Alhaj S.S. SAJAHAN
© Publisher
Language : **Tamil**
Edition : **First - March, 2022**
Publisher
Fatima Sajahan
Universal Publishers
2, North Usman Road,
(Near Kodambakkam Overbridge)
T. Nagar, Chennai - 600 017.
✆ : 044-2834 3385, 94440 47786
Typeset : **S. Asokkumar,** 94877 31019
Wrapper design : **Johny,** 98414 96549
Printed at: clictoprint | *Chennai-600 018.*
No.of Pages : **512** (⅛ Demy)
Price : ₹ **450/-**

பக்கம்

15. எம்.ஆர்.எம். அப்துற் றஹீமின் இல்லறம் நூல் - ஓர் பார்வை 179
முனைவர் செ.ப. சலீமா

16. எம்.ஆர்.எம். அப்துல் ரஹீம் உணர்த்தும் வாழ்வில் வெற்றிக்கு வழி 184
முனைவர் சு. சாகுல் ஹமீது

17. வாழ்க்கையில் வெற்றி 198
டாக்டர் சே. சாதிக்

18. பன்னூலறிஞர் எம்.ஆர்.எம் படைப்புகள் ஓர் அலசல் 204
உ. சுப்பிரமணியன்

19. எம்.ஆர்.எம்.அப்துற் றஹீம் படைப்புக்களில்-பாடுபொருள் 214
முனைவர். இரா. சுமதி

20. 'வாழ்க்கையில் வெற்றி' நூல் விளம்பும் வாழ்வியல் சிந்தனைகள் .. 222
முனைவர் ச.அ. சையத் அகமது பிரோசு

21. அப்துற் றஹீம் - வாழ்வது ஒரு கலை 233
முனைவர் சு. சோலையம்மாள்

22. 'குணத்தின் குன்று' நாவலில் பாத்திரப் படைப்பு 243
முனைவர். ம. ப. தமிழ்ச்செல்வி

23. கவிஞர் எம்.ஆர்.எம். அப்துற் றஹீமின் படைப்பாளுமை 256
முனைவர் மு. தமீம் மன்சூர்

24. ஒளிவெள்ளம் நாவலில் அப்துற் றஹீம் அவர்களின் சுய அனுபவங்கள் 270
சு. தொண்டியம்மாள்

25. நபிகள் நாயகக் காவியத்தில் போர்ச் சூழல்களும், சமூகமும் 278
முனைவர் மீ. தெளலத் பேகம்

26. நகைச்சுவை வெளிப்பாட்டில் 'படியுங்கள் சிரியுங்கள்' 285
பேராசிரியர். முனைவர் ஒ. நசீமா பானு

27. பன்னூலறிஞர் அப்துற் றஹீமின் இஸ்லாமிய கலைக் களஞ்சியம் 'ஓரு கலைப் பொக்கிஷம்' 298
நியாஸ் ஏ. ஸமத்

28. அப்துற் றஹீம் படைத்த 'ஒளி வெள்ளம்' நாவலில் இணை முரண்களின் போராட்டமும், அறத்தின் வெற்றியும் 311
முனைவர் மு. பழனியப்பன்

29. வழுக்கலில் ஊன்றுகோல் 321
மு. பாத்திமாக்கனி

எம்.ஆர்.எம். அப்துல் ரஹீம் உணர்த்தும் வாழ்வில் வெற்றிக்கு வழி

முனைவர் சு. சாகுல் ஹமீது
உதவிப்பேராசிரியர்
தமிழாய்வுத்துறை
ஜமால் முகமது கல்லூரி,
திருச்சி – 20

வெற்றி என்பது பெற்றுக் கொள்வது, தோல்வி என்பது கற்றுக் கொள்வது. முதலில் வாழ்க்கையைக் கற்றுக் கொண்டு பிறகு பெற்றுக் கொள்வதே சிறப்பாகும். ஒவ்வொரு மனிதனுக்குள்ளும் புதைந்துக்கிடக்கும் ஆற்றல்களை முழுமையாக வெளிக்கொணர்ந்து அதை உலகிற்கு எடுத்துக்காட்டும் கருவியே வெற்றியாகும்.

> எதைத் திறமையாகச் செய்யமுடியுமோ
> அதை நீங்கள் தொடர்ந்து செய்யும் பொழுது
> வெற்றி பெறுவதைத் தவிர
> உங்களுக்கு வேறு வழியில்லை[1]

என்று வெற்றிக்கானச் சூத்திரத்தினை டாக்டர் வால்டர் டோயல் ஸ்டேபிள் குறிப்பிடுகிறார்.

வெற்றி பெற வேண்டும் என்ற வேட்கை மனிதர்களான நம் அனைவருக்கும் உண்டு. மகிழ்ச்சியாய் இருக்கிற மனிதர்கள் எல்லாம் வெற்றியை முகர்ந்தவர்களாகவே இருப்பர். வெற்றியும் மகிழ்ச்சியும் நாணயத்தின் இரண்டு பக்கங்கள் போன்றவை. இணைந்தே இருப்பவைகள் ஆகும்.

வெற்றி என்ற தமிழ்ச் சொல்லுக்கு இணையான ஆங்கிலச் சொல் 'SUCCESS' இதை ஆங்கிலத்தில் MNEMONICS (First letter of a list of points to remember) ஆக எடுத்துக் கொண்டால் அவை கீழ்க்கண்டவாறு அமைகிறது.

S - Self Confidence - தன்னம்பிக்கை

U - Understanding inter personal relationship - மனித உறவுகளைப் புரிந்து கொள்ளுதல் மற்றும் மேம்படுத்திக் கொள்ளுதல்

C - Communication Skill - கருத்து தொடர்பு ஆற்றல்

C - Creativity - படைப்பாற்றல்

E - Enthusiam & Energetic Attitude - உற்சாகமான மனப்பாங்கு

S - Superb Memory - மிகச்சிறந்த நினைவாற்றல்

S - Self Motivation - தன் செயலூக்கம்

என வெற்றி என்ற சொல்லுக்கு இணையான ஆங்கிலச் சொல் நமக்கு விரித்துரைக்கும் செய்தியாகும்.

முன்னேற்றத்தின் முடிவு நிலை வெற்றி என்று கூற முடியாது. ஆனால் வெற்றிக்கு முன்னேற்றம் என்ற கூறானது அவசியமாகிறது. மூலதனமே செய்யாமல் வெற்றிக்கிட்டுமா என்றால் ஏன் முடியாது கட்டாயம் முடியும் என்கின்றன புத்தகங்கள்.

> எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்
> கண்ணென்ப வாழும் உயிர்க்கு[2]

என்கிறார் வள்ளுவர்.

ஒருவனுக்கு கண்ணைப் போல் கைப்பிடித்து அழைத்துச் செல்வது கல்வியே ஆகும்.

"புத்தகங்கள் போன்று துன்பத்தில் உழலும் ஒருவனை முன்னேற்ற வழியில் அழைத்துச் செல்லவும், பெருஞ்சுமைகளைத் தாங்கி நிற்பவனை அந்தச் சுமைகளை மறந்துவிட்டுச்

செயலாற்றவும், நோயாளிகளை நோயின் கொடுமையை மறக்கச் செய்யவும் செய்கின்ற உயிர் நண்பன் வேறு இல்லை எனலாம். அவை, நண்பரில்லாதவர்களுக்கு நண்பர்கள், தனித்தவர்களின் தோழர்கள் மகிழ்ச்சியற்றவர்களின் மகிழ்ச்சிகள், நம்பிக்கையற்றவர்களின் நம்பிக்கைகள், மற்றவர்களுக்கு உற்சாகங்கள், ஆதரவற்றவர்களுக்கு அபயமளிப்பவர், அவையே இருளில் ஒளியைக்கொணரும் விளக்குகள்"[3] என்று கல்வியைக் கற்று வாழ்வில் வெற்றிப் பெற வேண்டும் எனத் துடிப்பவனுக்கு புத்தகங்கள் எவ்வாறு உறுதுணையாக இருக்கிறது என்பதை அப்துல் ரஹீம் அவர்கள் எடுத்துக்காட்டுகிறார். நல்ல புத்தகங்கள், நல்ல ஆசிரியர்கள், நல்ல மனிதர்கள் துணையோடு எவ்வளவு அறிவைப் பெற முடியுமோ அவ்வளவு அறிவினைச் சேகரியுங்கள் என்கிறார் டாக்டர் அப்துல் கலாம்.

> நூல்பயில் இயல்பே நுவலின் வழங்கு அறிதல்
> பாடம் போற்றல் கேட்டவை நினைத்தல்
> ஆசாற் சார்ந்தவை அமைவரக் கேட்டல்
> அம்மாண் புடையோர் தம்மொடு பயிரல்
> வினாதல் வினாயவை விடுத்தல் என்று இவை
> கடனாக் கொளினே மடம்நனி இருக்கும்[4]

என்று ஒரு நல்ல நூலினைப் பயில இவ்ஏழு செயல்களையும் கடமைகளாகக் கொண்டு அறியாமையை விரைவில் நீக்கல் வேண்டும் என நன்னூலார் குறிப்பிடுகிறார்.

நமக்கு பிடித்த புத்தகங்களே நம்முடைய எண்ணங்களை உருவாக்குகின்றன. நமக்கு உகந்த ஆசிரியர்கள் நம்முடைய ஆசானாக ஆகின்றார். அவர்களின் எழுத்துக்கள் நமக்கு அறிவுரைகளாக மாறிவிடுகின்றன. நாம் அவர்களுடைய கண்கள் மூலமாகவே உலகத்தையே பார்க்கிறோம், உயரிய நோக்கும், தெள்ளிய சிந்தனையும், ஆழமான கருத்தும், பரந்த அறிவும் உடைய நூல்கள் நம்மையும் அவ்விதமே ஆக்கி நம்மை வாழ்வில் வெற்றிப் பெறச் செய்யும். கொழுந்து விட்டெரியும் ஆவலும், கொதிக்கும் மனோநிலையும், "ஒருவன் முன்னேறு வானா, மாட்டானா என்பதைச் சோதித்துப் பார்க்கும் உரைகல் எதுவென்றால் அவன் வேலை மீது கொள்ளும் கொழுந்து விட்டெரியும் ஆவல் தான்"[5] என்கிறார் நமது ஆசிரியர்.

ஆம் விருப்பம் இல்லாமல் செய்யும் எந்த ஒரு செயலிலும் வெற்றி பெற முடியாது.

"நான் எந்தக் கருத்துக்களைப் பின் பற்றுகிறேனோ அந்தக் கருத்து எனக்கே உரியது அல்ல. அதை நான் சாக்ரடீஸிட மிருந்து வாங்கினேன், அதை செஸ்டர் பீல்டின் உதவியால் செழுமைப்படுத்தினேன். அவற்றை ஜீசஸ்சிடமிருந்து திருடினேன் அவற்றை நான் பயன்படுத்தி ஒரு புத்தகம் ஆக்கினேன். அவர்களுடைய விதிமுறைகளை நீங்கள் விரும்பவில்லை என்றால் அவற்றை யார் பயன்படுத்துவார்கள்"[6] என்று டேல் கார்னெஜி அவர்கள் ஒரு புத்தகத்தினை தான் உருவாக்கிய வழிமுறைகளையும், அதை உருவாக்க தனக்கு ஏற்பட்ட கொதிக்கும் ஆவலையும் எடுத்துரைக்கிறார். கொதிக்கும் மனநிலையுள்ளவர்கள் வாழ்க்கையில் மிகப்பெரிய வெற்றியினை பெற முடியும். மேலும் மன உறுதியினை உடையவர்களாக விளங்குவர். இந்த மன உறுதியானது எந்த நிலையிலும் மாறாத, நிலைத்தத் தன்மைக் கொண்டதாக இருக்கும்.

"கொதிக்கும் மனோ நிலையுள்ளவர் தங்களின் உலகைத் தாங்களே உண்டு பண்ணிக்கொள்ள எதுதான் தடையாக நிற்க முடியும்? எனவே தான் கன்ஃப்யூயஸீம், ஒரு பெரிய படையின் தளபதியைத் தோற்கடித்துவிடலாம். ஆனால் ஒரு குடியான வனின் உறுதி நிறைந்த மனத்தைத் தோற்கடிக்க முடியாது"[7] என்று கூறுகிறார்.

வெற்றியாளர்களுக்கும், தோல்வியாளர்களுக்கும் வேறுபாடு என்னவெனில் தங்களது மனநிலையை நெருப்பு மூட்டிக் கொதிப்பதுடன் செயல்பாட்டால் வெற்றி அதில் தளர்வு எனும் தண்ணீர் ஊற்றி குளிரச் செய்தால் அதுவே தோல்வியாக விடுகிறது. எனவே வெற்றிக்கு கொதிப்பான, திடமான மனநிலை அவசியமாகும்.

புதிய காரியத்தைச் செய்யுங்கள்

எந்த ஒரு புதிய காரியத்தைச் செய்யும் பொழுது ஒரு புதிய யுக்தி முறையை கையாளுதல் அவசியம் ஆகும். யுக்தி என்பது அறிவின் சிகரமே என்கிறார் அப்துல் ரஹீம்.

"நடுத்தர அறிவை அனுகூலமான் வழிகளில் பயன் படுத்துவது ஒளிமயமான புத்தி தீட்சண்யத்தை விட அதிகப் பெருமையைப் பெற்றுத்தரும்"[8] என்று ரோச் போகால்ட் நமது சிந்தனையை எவ்வாறு அனுகூலமான வழிகளில் பயன்படுத்துவது என்று குறிப்பிடுகிறார்.

"நாம் தினமும் கற்பனைச் செய்யவும், கற்பனையில் விளைந்தவற்றை யோசிக்கவும் நேரம் ஒதுக்குவது முக்கியம். அவை நம்மை, நம்மிடம் இருக்கிற குழந்தை உள்ளத்தை பாதுகாக்கின்றன. எப்போது நாம் நம்மிடம் இருக்கிற குழந்தை உள்ளத்தை இழக்கிறோமோ அப்போது மனித இயந்திரங் களாக மாறிப்போய் விடுவோம்"[9] என்று இறையன்பு அவர்கள் நாம் தினம்தோறும் சிந்தனை செய்து புதிய காரியத்தைத் தொடங்க வேண்டும் என எடுத்துரைக்கிறார்.

நாம் சிந்தித்து, கற்பனை செய்து அதன் மூலம் புது வகையான யுக்தி முறையை கண்டறிந்து அதன் வழியே கற்பனையின் மூலம் புதிய காரியத்தைத் தொடங்கிச் செய்யும் பொழுது நாம் வெற்றி இலக்கினை அடைய முடியும்.

தனித்தன்மையுடன் செயலாற்றுக

சிந்தனைச் செய்து புதிய செயலைச் செய்து முடிக்கும் பொழுது அது தனித்தன்மையுடன் விளங்கும் செயலாக இருந்தால் நமது வெற்றியானது மிகச்சிறந்த இடத்தினைத் தொடும். பலபேர் செய்யும் செயலில் தனித்தன்மையுடன் விளங்கும் ஒரு செயலானது வெற்றியினைப் பெற்றுத்தரும்.

"சில புத்தகங்கள் தனித்தன்மையுடன் விளங்கக் காரணம், அவைப் பிறருடைய எதிரொலியாய் இராதது தான். அதனால் அவை இதயத்தைத் தொடுகின்றன. அறிவுக்கு விருந்தளிக் கின்றன. இறவாத் தன்மையுடன் வாழ்கின்றன. காலமானது

அவற்றின் பெருமையை மங்கச் செய்யவில்லை, பெருகச் செய்கிறது"[10] என்று நமது ஆசிரியர் புத்தகங்களின் தனித் தன்மைப் பற்றி எடுத்துரைக்கிறார். புத்தகங்கள் மட்டுமல்ல மனிதர்களிடையே காணப்படும் சிந்தனைகள் கூட தனித்தன்மையுடன் விளங்கும் பொழுது வெற்றியானது நமது அருகாமையில் வந்துவிடும்.

அடுத்தவரை வெற்றி பெறுபவன் பலசாலி
ஆனால் தன்னைத்தானே பெறுபவன்
சர்வசக்தி உள்ளவன்[11]

என்று தனித்தன்மையுடன் செயல்படும் பொழுது தன்னைத் தானே வெற்றிபெற முடியும் என்பதனைக் கூறுகிறார் லவோட்ஸ் என்னும் அறிஞர்.

"எவன் கும்பலிலிருந்து வெளியாகி முந்தையதைக் கண்மூடித்தனமாகப் பின்பற்றாது தனித்தன்மையுடன் சிந்தித்துச் செயலாற்றுகிறானோ, அவனை அந்த ஒரு மனிதனைப் பல்லாயிரக் கணக்கான மக்கள் பின் தொடர்ந்துச் செல்கிறார்கள். அவனே இறுதி வெற்றி அடைகிறான். இது உலகறிந்த உண்மையாகும் என்று கூறுகிறார்.[12]

எனவே தனித்தன்மையுடன் சிந்தித்து செயலாற்றும் பொழுது நமக்கு கிடைக்கும் பரிசு மிகப்பெரிய வெற்றியாக இருக்கும் என அப்துல் ரஹீம் வெளிப்படுத்துகிறார்.

செய்வன திருந்தச் செய்க

தனித்தன்மையுடன் செயலாற்றி வெற்றி பெற்றவர்கள் அச்செயலை முறையாக, திருத்தமாக செய்யும் பொழுது மேலும் மெருகேற்றப்பட்ட வைரம் போல ஜொலிக்கத்தான் செய்கின்றனர் செய்யும் செயலில் ஒழுங்குமுறையை பின்பற்றித் திருந்தச் செய்வது அவசியமாகும்.

எப்பொருள் யார்யார் வாய்க்கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு[13]

என்கிறார் வள்ளுவர்.

எந்த ஒரு செயலையும் கவனமாக கவனித்து செயல்படல் மிக முக்கியம் என்பதற்கும், நம்மை நாமே சிந்தித்து உயர்த்திக் கொள்ள, மற்றவர்கள் நம்மை மதிக்க, சமுதாய அந்தஸ்தைப் பெற இந்தக் குறள் மூலம் நம்மை வழி நடத்திச் செல்கிறார் வான்புகழ் வள்ளுவர்.

"எது செய்யத் தகுதியுடையதோ அதை வெகு ஜாக்கிரதையுடனும், பலத்துடனும், விருப்பத்துடனும் செய்ய வேண்டும். நாம் நம்முடைய கடமை மீது கொள்ளும் விருப்பத்தை நிறுத்துப்பார்க்கவோ, ஆண்டவன் முன்னிலையில் அதற்குரிய முக்கியத்துவத்தைத் தீர்மானிக்கவோ நம்மிடம் எவ்வித அளவுகோலும் இல்லை. நமக்குச் சிறிதாகத் தெரிபவை நம்முடைய வாழ்வு அல்லது மரணம் என்ற பிரச்சினையைத் தீர்மானிக்கும் சக்தி வாய்ந்தவையாகவும் ஆகிவிடலாம்"[14]

என்று பிரபல எழுத்தாளர் ஒருவர் கூறுவதாக நமது ஆசிரியர் எடுத்துரைக்கிறார். இந்தத் தத்துவத்தை உணர்ந்து செயலாற்றியவர்கள் தாம் கலை அறிஞர் பதவியை அடைந்திருக்கின்றனர் என்று கூறுகிறார்.

மிகச்சிறந்த கருத்துத் தொடர்பு பரிமாற்றத்துக்கு நன்கு கவனித்தல் இன்றியமையாதது ஆகும். அவ்வாறு கவனித்தவற்றைப் பொறுமையாக, முழுமையாக, ஆர்வமாக, வார்த்தையின் பொருள்களை உள்வாங்கிக் கொண்டு அச் செயலைத் திருத்தமான புரிதலோடு செய்து முடிப்போமானால் எளிதாக வெற்றி இலக்கினை அடைய முடியும் என்பதில் சிறிதும் ஐயமில்லை. அணுவளவும் விடாது முற்ற முடிப்பதிலேயே முழு வெற்றியும் மறைந்து இருக்கிறது.

ஒழுங்குடன் வேலை செய்க

எந்த ஒரு செயலையும் செய்வதற்கு ஒரு ஒழுங்குமுறை அவசியமாகும். ஒழுங்கில்லாத எந்த செயலும் முறையாகச் சென்று முடிவுநிலையை அடைவதில்லை.

"உன்னுடைய எண்ணங்களையெல்லாம் அழகாக ஒழுங்குபடுத்து! சுமையானது தோளின் மீது அங்குமிங்கும்

தொங்கிக் கொண்டிருந்தால் ஒருவன் அதிகமான சுமைகளைச் சுமக்க முடியாது. ஆனால் அதை கட்டாக கட்டிவிடின் அதைவிட அதிகமான சுமையை ஒருவன் தூக்கிக் கொண்டு செல்ல முடியும்."[15] எனவே சுமைகளைச் சுமப்பதற்குக் கூட ஒரு ஒழுங்கு தேவை என ஆசிரியர் குறிப்பிடுகிறார்.

நமது எண்ணங்கள், சிந்தனைகள், சிந்தனையில் தனித் தன்மை, தனித்தன்மையிலும் ஒரு முறையான ஒழுங்கமைவு இருப்பின் நாம் வெற்றி இலக்கை அடைய முடியும். ஒழுங்கின்றி திட்டமின்றி செயலாற்றினால் முடிவானது நிறைவான வெற்றிக்கு வழிவகுக்காது. எனவே திட்டமிட்டு ஒழுங்கமைவுடன் செயலில் ஈடுபட்டு செயலாற்றினால் வெற்றி கிட்டும்.

நேரத்தை வீணாக்காதீர்

கொக்கொக்க கூம்பும் பருவத்து, மற்று அதன்
குத்கொக்க சீர்த்த இடத்து[16]

வெற்றியை விரும்புபவன் தகுந்த காலம் நோக்கி கொக்கு போல் அமைதி காக்கு, காலம் வந்ததும் அதன் அலகு போல் விரைந்து செயல்படுவான் என்கிறார் வள்ளுவர்.

வெற்றியை நோக்கி பயணத்தினை மேற்கொள்ளுபவன் தனது நேரத்தினைச் சிறிதும் வீணாக்குவதில்லை. அவனுடைய வெற்றி பயணத்தில் காலமும், நேரமும் பொன்னைப் போல் காத்துச் செயல்படுவான். உலகில் தாமதத்தால் செய்த செயலினால் ஏற்பட்ட அழிவுகள் ஏராளமாகும்.

"இழந்துவிட்ட ஒவ்வொரு நிமிடமும் துன்பத்திற்கும், துயரத்திற்கும் சந்தர்ப்பம் அளிக்கிறது"[17] என்கிறார் மாவீரன் நெப்போலியன்.

"இவ்வளவு குறுகிய நேரத்தில் இவ்வளவு அதிகமான வேலையைத் தங்களால் எவ்விதம் செய்யமுடிகிறது? என்று சர் வால்ட்டர் ரேலேயிடம் கேட்கப்பட்ட பொழுது, நான் எதையும் செய்ய வேண்டியிருந்தால் அதனை உடனே செய்து முடிக்கிறேன் என்று கூறினார். அவர் உடனுக்குடன்

செயலாற்றுகிறவன் சிறிய தவறுகளைச் செயத போதிலும், மலை பிளந்து நேரத்தை வீணாக்கித் தாமதிக்கிறவனை விட மகத்தான வெற்றியை அடைகிறான் என்று வெற்றிக்கான தனது மந்திரத்தை எடுத்துக்காட்டுகிறார்."[18]

ஞாலம் கருதினும் கைகூடும் காலம்
கருதி இடத்தால் செயின்[19]

காலத்தையும், இடத்தின் தன்மையும் அறிந்து செயல் மேற்கொண்டால் உலகத்தையே வெல்லலாம் என்கிறார் வான்புகழ் வள்ளுவர்.

வாழ்வில் முன்னேறுகிறவர்களெல்லாம் தங்களுடைய நேரத்தை கண்ணைப் போல் காத்துப் போற்றி செலவிட தங்களைப் பழக்கப்படுத்திக் கொள்ளுதல் அவசியமாகும். அவ்வாறு பழக்கப்படுத்திக் கொள்கையில் அவை தங்களுடைய வெற்றிப் பாதையில் முன்னேற்றித்தினை ஏற்படுத்தும் என்பதில் சிறிதும் ஐயமில்லை.

சுருங்கச் சொல்லி விளங்க வைப்பீர்

சுருங்கச் சொல்லி விளங்க வைத்தல்
நவின்றோர்க்கு இனிமை நன்மொழி புணர்தல்
ஓசை உடைமை ஆழமுடைத்து ஆதல்
முறையின் வைப்பே உலகம் மலை யாமை
விழுமியது பயத்தல் விளங்கு உதாரணத்து
ஆகுதல் நூலிற்கு அழகு எனும் பத்தே[20]

என்கிறார் நன்னூலார்.

பத்து வகையான அழகில் முதலில் வைப்பது சுருங்கச் சொல்லல் ஆகும். சுருக்கமாக எழுதுவதும், சுருக்கமாக பேசுவதும் மிகவும் அவசியம் ஆகும். அவை படிப்பவர்க்கும், கேட்போருக்கும் மன மகிழ்ச்சியை ஏற்படுத்தும் சுருங்கச் சொல்லி விளங்க வைப்பது ஒரு கலையாகும்.

"பேச வேண்டிய இடத்தில் பேசாமலிருப்பதும், பேச வேண்டாத இடத்தில் பேசுவதும் பேதமை. எனவே, பேச வேண்டாத இடத்தில் பேசாது வாயை மூடிக்கொண்டிருங்கள்!

நீங்கள் எங்கு முடிக்க விரும்புகிறீர்களோ அதற்கு வெகு அண்மையிலிருந்தே ஆரம்பியுங்கள்! சொல்ல வேண்டியதை ஆணித்தரமாகச் சொல்லுங்கள்! சொன்னதும் முடித்துக் கொள்ளுங்கள்"[21] என்று சுருங்கச் சொல்லி விளங்க வைத்தலின் பெருமையை மிக அழகாக எடுத்துரைக்கிறார் நமது ஆசிரியர்.

"சுருங்கச் சொல்லி விளங்க வைத்தல் தான் ஒரு சட்டசபை உறுப்பினரிடமாகட்டும், ஒரு சொற்பொழிவாளரிடமாகட்டும் போற்றத்தகுந்த பண்பு ஆகும்"[22] என்று மாபெரும் சண்டமாருதரான ஸிஸரோ குறிப்பிடுகிறார்.

உடல் நலனைப் பேணுக

நோயற்ற வாழ்வே குறைவற்றச் செல்வம் என்பது பழமொழி. அந்த குறைவற்றச் செல்வத்தினைப் பெறுதற்கு நம் உடலுக்குத் தேவையான அனைத்து சத்துக்களும் வேண்டிய அளவு இருக்கும்படியான உணவு வகைகளைத் தேர்ந்தெடுத்து உண்பது அவசியமாகும்.

நீங்கள் எவ்வளவு வயது வரை உயிர் வாழ்வீர்கள் என்று ஜெஷியா குவின்ஸீயை டாக்டர் ஜான்ஸன் கேட்டபோது மறுபடியும் டாக்டரைக் கூப்பிடும்வரை என்று பதில் மொழிந்தார் அவர். தாங்கள் கடைசி முறையாக டாக்டரை எப்பொழுது அனுப்பினீர்கள்? என்று கேட்க பட்ட பொழுது குவின்ஸி புன்முறுவலுடன் கூறினார். 86 ஆண்டுகளுக்குமுன் என்று அவர் இவ்வாறு கூறியபொழுது அவருக்கு வயது 86.

நோயில்லா வாழ்வுதனை வாழவேண்டும் என மேற்கண்ட எடுத்துக்காட்டு நமக்கு விளக்குகிறது.

உடலினை பாதுகாப்பாக வைப்பது எப்படி என்பதை வலியுறுத்துகின்ற, 'நோயற்ற வாழ்வாகிய குறைவற்ற செல்வ'த்தைப் பெற்றால் தான் எச்செல்வத்தையும் பெற்று வாழ்வில் உயர்ந்த பல வெற்றிகளை பெறமுடியும். வெற்றிக்கு பலபடிகள் இருந்தாலும் அதில் ஆணிவேறாக இருப்பது உடல்நலம் என்றால் அது மிகையாகாது.

"ஒருவன் எவ்வளவு உடல் நலமுள்ளவனாகவும், திறமை சாலியாகவும் இருந்த போதினும் அவனுடைய ஆற்றல்கள் தொடர்ச்சியாக அளவுக்கதிகமாக உபயோகப்படுத்தப்பட்டு வந்தால், எவ்விதம் வளைத்துக்கட்டி வைக்கப்பட்டிருக்கும் வில்லானது தொய்ந்து போகுமோ அதை போன்று தொய்வடைந்து போகும் என்பதில் ஐயமில்லை."[24]

உடலோம்பலுக்கு நல்ல மனத்தூய்மை வேண்டும். அழுக்காறு, அவா, வெகுளி, இன்னாச்சொல் என்னும் நான்கினையும் நீக்கி, நல்லனவே எண்ணி நல்லவற்றைச் செய்து வாழ்க்கையில் முன்னேற வேண்டும்.

'உடம்பார் அழியின் உயிரார் அழிவார்' என்றார் திருமூலர். இறைவனால் படைக்கப்பட்ட அனைத்து உயிர்களுக்கும் மனிதப்பிறவி விழுமியது. அரிதாய்ப் பெற்ற மனிதப் பிறவியைப் போற்றிப் பாதுகாத்தல் அவசியமாகும். நாம் அனைவரும் வாழ்வில் வெற்றி பெற உடல்நலம் பெற்றுச் சிறந்து விளங்க உலகில் வாழும் முறையறிந்து வெற்றியினை அடைதல் வேண்டும். வாழ்க்கையில் வெற்றியினை அடைய ஆற்றலை வீணாக்காது. சீராகச் செலவிட்டுச் சேர்த்து, எல்லாச் செல்வத்துள் சிறந்த செல்வமாகிய உடல் நலனைப் பேணி பாதுகாக்க வேண்டும்.

கடமையை ஆற்றுக

ஒவ்வொரு மனிதன் தனது அன்றாட வாழ்வில் பல இன்னல்களுக்கு இடையிலும் தனது கடமையைச் செயல் ஆற்றிக் கொண்டு தான் உள்ளனர். உழைப்பில் வரும் பயனைத் துய்ப்பதே பேரின்பம். வாழ்க்கை என்பது சிலருக்கு இன்பமாகவும், சிலருக்கு துன்பமாகவும் இருக்கிறது.

"கடமை என்பது நல்லவற்றைச் செய்வது மாத்திரமல்ல. கெட்டவற்றை எதிர்த்துப் போராடுவதுமாகும். கெட்டவற்றை எதிர்த்துப் போராடினால் தானே நல்லவற்றைக் காப்பாற்ற முடியும். குப்பைகளைப் பெருக்கினால் தானே வீடு தூய்மையாக இருக்க முடியும்.

மற்றவர்களின் துன்பங்களைப் போக்க முயல்வது மட்டும் நம்முடைய கடமையன்று, மற்றவர்கள் துன்பப்படாமல் நாம் நடந்து கொள்வதும் நமக்கு கடமையாகும்"[25] என்று நாம் ஒவ்வொருவரும் எவ்வாறு கடமையுடன் பணிகளைச் செய்தல் வேண்டும் என ஆசிரியர் எடுத்துரைக்கிறார்.

கடமை என்பது நம் எல்லோரிடமும் இருக்கிறது. வாழ்க்கையில் தொடர்ந்து வந்து கொண்டே இருக்கிற செயல் ஆகும். இந்த கடமையானது நாம் ஆற்ற வேண்டிய பொறுப்பு களை அறிவுறுத்தி நல்லனவற்றைத் தூண்டி கெட்டனவற்றைத் தடுத்துக் கொள்கிறது. நாம் ஒவ்வொருவரும் நம் வாழ்நாளில் மற்றவர்களுக்கு பயன்படும்படியான செயல்களைச் செய்து இருக்கிறோமா என சிந்தித்தல் வேண்டும்.

"நாமும் உன்னதமான உயரிய வாழ்க்கை வாழ வேண்டுமாயின், நம்முடைய வாழ்வால் உலகம் உயர்வடைய வேண்டுமாயின், நம்முடைய கடமையைச் செய்ய வேண்டும். இங்கிலாந்து ஒவ்வொரு மனிதனும் தன்னுடைய கடமையைச் செய்ய வேண்டுமென்று எதிர்பார்க்கிறது"[26] என்று நெல்ஸன் கூறுகிறார்.

ஒரு தனிமனிதனின் வாழ்க்கையைப் பொறுத்தும் அவனது வெற்றியைப் பொறுத்துமே அந்த சமுதாயத்தில் வாழ்வும் வெற்றியும் உள்ளது. அவரவருக்கென சமுதாயத்தில் சில கடமைகள் இருக்கின்றன. அதை நிறைவேற்ற வேண்டியது நமது அனைவரின் பொறுப்பாகும்.

நாம் அனைவரும் நமது சமுதாயத்தில் ஒவ்வொரு நபரும் பலனை எதிர்பார்க்காது கடமையை ஒழுங்காக செய்தோ மானால் அதுவே நமக்கு வெற்றிக்கு வழிவகுக்கும் என்பதில் எள்ளவும் ஐயமில்லை.

> வெற்றி என்பது மதிப்பு வாய்ந்த ஒரு
> இலக்கைப் படிப்படியாக அடைதல்[27]

என்கிறார் ஏர்ல் நைடிங்கேல்.

எடுத்த காரியம் யாவினும் வெற்றி
எங்கு நோக்கினும் வெற்றி, மற்றாங்கே
விடுத்த வாய்மொழிக் கெங்கணும் வெற்றி
வேண்டினேன் எனக்கருளினாள் காளி[28]

என்கிறார் பாரதியார். இது போன்று நாம் அனைவரும் எடுத்த காரியம் அனைத்திலும் வெற்றி பெற்று வாழ்க்கையில் முன்னேற்றத்தினை அடைவோம்.

முடிவரை

வாழ்வில் வெற்றிக்கான வழிமுறைகளைப் பற்றி கூறுகையில் நல்ல புத்தகங்களைப் படித்தல், கொடுத்து விட்டெரியும் ஆவல், கொதிக்கும் மனோநிலை, புதிய காரியத்தைச் செய்தல், தனித்தன்மையுடன் செயலாற்றுதல், செய்வனவற்றைத் திருத்தமாகச் செய்தல், ஒழுங்குடன் வேலை செய்தல், நேரத்தை வீணாக்காமை, சுருங்கச் சொல்லி விளங்க வைத்தல், உடல்நலனைப் பாதுகாப்பாக பேணுதல், கடமையை ஆற்றுதல் என அனைத்தினையும் ஒவ்வொரு படிக்கட்டுகளாகக் கொண்டு அவற்றை செவ்வனே திறமையாக, முயற்சியுடன் கடந்து வந்தோமானால் நமது வாழ்க்கையில் அது வெற்றிப்படிக்கட்டுகளாக அமைத்து முன்னேற்றத்தினை ஏற்படுத்தி வெற்றி மாலையைச் சூட்டும்.

அடிக்குறிப்புகள்

1. வெற்றியின் விதைகள், மனோசக்தி மாசிலாமணி, ப. 21
2. திருக்குறள்
3. முன்னேறுவது எப்படி? அப்துல் ரஹீம், ப.9
4. நன்னூல், எழுத்து, நூற்பா
5. முன்னேறுவது எப்படி? அப்துல் ரஹீம், ப.20
6. வெற்றியின் விதைகள், மனோசக்தி மாசிலாமணி, முன்னுரை
7. முன்னேறுவது எப்படி? அப்துல் ரஹீம், ப. 39
8. மேலது. ப. 45
9. கற்பனைச் சிறகுகள், இறையன்பு, ப. 32
10. முன்னேறுவது எப்படி? அப்துல் ரஹீம், ப. 59

11. வெற்றியின் விதைகள், மனோசக்தி மாசிலாமணி, ப. 64
12. முன்னேறுவது எப்படி? அப்துல் ரஹீம், ப. 59
13. திருக்குறள். 423
14. முன்னேறுவது எப்படி? அப்துல் ரஹீம், ப. 87
15. மேலது, ப. 118
16. திருக்குறள் 490
17. முன்னேறுவது எப்படி? அப்துல் ரஹீம், ப. 131
18. மேலது, ப. 133
19. திருக்குறள் 484
20. நன்னூல், எழுத்து, நூ. 13
21. முன்னேறுவது எப்படி? அப்துல் ரஹீம், ப. 154
22. மேலது, ப. 146
23. மேலது, ப. 180
24. மேலது, ப. 160
25. மேலது, ப. 184
26. மேலது, ப. 192
27. வெற்றியின் விதைகள், மனோசக்தி மாசிலாமணி, ப. 39
28. மேலது, ப. 53

யுனிவர்ஸல் பப்ளிஷர்ஸ்

இஸ்லாமிய இலக்கியக் கழகம்

ஜமால் முகமது கல்லூரி முதுகலைத் தமிழாய்வுத் துறை

யுனிவர்ஸல் பப்ளிஷர்ஸ்

பன்னூலாசிரியர் எம்.ஆர்.எம். அப்துற்-றஹீம்

நூற்றாண்டு விழா - பன்னாட்டு ஆய்வரங்கம்

திருச்சி ஜமால் முகமது கல்லூரியில் 26.03.2022 அன்று

எம். ஆர்.எம். அப்துற்-றஹீம் படைப்புலகம்

என்ற தலைப்பில் நடைபெற்ற பன்னாட்டு ஆய்வரங்கில்

திரு. ~~திருமதி~~ மு. அப்துல் சமது, உதவிப் பேராசிரியர், ...அவர்கள்

தமிழாய்வுத்துறை, ஜமால் முகமது கல்லூரி, திருச்சி.....

பங்கேற்று ஆய்வுக் கட்டுரை வழங்கியமையைப் பாராட்டிச்
சான்றளிக்கப்படுகிறது

தலைவர்
முதுகலைத் தமிழாய்வுத் துறை
ஜமால் முகமது கல்லூரி

மேலாண்மை இயக்குநர்
யுனிவர்ஸல் பப்ளிஷர்ஸ்

தலைவர்
இஸ்லாமிய இலக்கியக் கழகம்

அப்துற்-றஹீம்

ஆய்வுச் சரம்



யுனிவர்ஸல்
பபளிஷர்ஸ்

பொருளடக்கம்

பக்கம்

1. கருத்துப் புலப்பாட்டில் முன்னுரை 11
மு.இ. அகமது மரைக்காயர்

2. இரண்டாம் ஆமினா அன்னை 24
கவியருவி அப்துல் காதர்

3. மனிதப் புனிதன் ஆப்ரஹாம் லிங்கன் 34
மு. அப்துல் சமது

4. 'முஸ்லிம் தமிழ்ப் புலவர்கள்' நூலில்
எம்.ஆர்.எம். அப்துற்றஹீமின் நடைநலம் 53
பேரா. முனைவர் அப்துல் ஹமீது சாதிக்

5. எண்ணமே வாழ்வு தரும் - சிந்தனைகள் 77
நி. அமிருதீன்

6. சாதனையாளர் அறிஞர் அப்துற் றஹீம் 88
முனைவர் ஒ.மு.சே. அமீர் அம்சா பீவி

7. அறிவு மற்றும் நினைவாற்றலுக்கு அனுகூலம் அளித்த
அல்லாமா அப்துற் றஹீம் 96
A.M. அலி இப்ராஹீம் ஜமாலி

8. காஜா முயீனுத்தீன் சிஷ்தி (ரஹ்) - பன்முக ஆளுமை 107
முனைவர் சை.ஆசிக் ஹமீது

9. அப்துற் றஹீம் எழுதியுள்ள தன்னம்பிக்கை நூல்கள் அனைவர்
வாழ்வுக்கும் வழிகாட்டும் ஒளிவிளக்குகள் 118
ரஷீத் எம். இம்தியாஸ்

10. அப்துற் றஹீம் - விளக்கேற்றும் விளக்கு ஓர் ஆய்வு 129
முனைவர் கு. இளவரசி

11. வாழ்வைத் துவக்க வழி காட்டும் எம்.ஆர்.எம். அப்துற் றஹீம் 138
முனைவர் ப. உசேன்கான்

12. அப்துற் றஹீம் ஐயாவின் இலக்கியச் சிந்தனைகள் 144
முனைவர் ம. கண்ணன்

13. வலிமார்கள் வரலாறு நூலாய்வு 154
கலீஃபர் ரஹ்மான் மன்பயீ

14. வாழ்க்கைக்கு வழிகாட்டும் ஆசிரியர் அப்துற் றஹீம் 167
முனைவர் நா. குமாரி

மனிதப் புனிதன் ஆப்ரஹாம் லிங்கன்

மு. அப்துல் சமது

உதவிப்பேராசிரியர்,
தமிழாய்வுத்துறை
ஜமால் முகமது கல்லூரி [தன்னாட்சி]
திருச்சிராப்பள்ளி – 620020

உலகில் மிகவும் பலம் வாய்ந்த மனிதர்களாக கடந்த இரண்டு நூற்றாண்டுகளில் காணப்பட்டவர்களில் பெரும்பாலானோர் அமெரிக்க அதிபர்களையே குறிப்பிடுகின்றனர். ராணுவ பலமும், பொருளாதார வளமும் கொண்டதனால் அமெரிக்க அதிபர்களுக்கு அப்படியொரு தகுதியைப் பெற்றுத் தருகின்றன. அமெரிக்கா இதுவரை கண்டிருக்கும் 46 அதிபர்களும் வெவ்வேறு விதங்களில் தங்களது முத்திரையைப் பதிவு செய்துள்ளனர். அவர்களுள் சிலர் மட்டுமே உலகிற்குத் தேவையான முக்கியமான மாற்றங்களைக் கொண்டு வந்துள்ளனர். மனித குலத்திற்கு மகிமையைத் தேடிதந்தவருள் ஆப்ரஹாம் லிங்கன் குறிப்பிடத்தக்கவராவார். எம்.ஆர்.எம். அப்துற் றஹீம் தனது நூல்களில் பதிவு செய்துள்ளபடி லிங்கனின் வாழ்க்கையில் ஏற்பட்ட சில நிகழ்வுகளும், மாற்றங்களும் பற்றி ஆய்வதே இக்கட்டுரையாகும்.

இளமைக் காலம்

ஆப்ரஹாம் லிங்கன் 1809ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 12ஆம் தேதி தாமஸ் லிங்கன் மற்றும் நான்ஸி என்பவருக்கு மகனாக பிறந்தார். செருப்பு தைக்கும் தொழிலை மேற்கொண்ட ஏழைக் குடும்பத்தைச் சார்ந்தவர். லிங்கனின்

தாய் வாழ்வில் உண்மையையும், நேர்மையையும் கடைப் பிடித்து வாழ வேண்டும் என்றும் இறைவனுக்கு அஞ்சி வாழ வேண்டும் என்றும் தன் மகனுக்கு அறிவுரை வழங்கினார். அவரின் அறிவுரையை மதித்து நடக்கும் மனிதனாக லிங்கன் திகழ்ந்தார். இவர் சிறுவயதிலேயே தன் தாயை இழந்து ஏழ்மை நிலையின் காரணமாக கல்வி பயில இயலவில்லை. எனினும் சிறுவயதில் படிப்பதில் அதிக ஆர்வம் கொண்டவராகவே காணப்பட்டார். அக்காலத்தில் காகிதம் கிடைப்பது மிகவும் அரிது. எனவே ஒரு பெட்டியின் மூடியில் கரித்துண்டினால் எழுதி படித்து வந்தார். பல மைல்கள் நடந்து சென்று ராபின்சன் க்ரூசோ, பில்கிரிம்ஸ் ப்ராக்ரஸ், ஈசாப் போன்றவர்களின் புத்தகங்களை இரவல் வாங்கிப் படித்தார். அதன் மூலம் ஏழை மாணவனாக தம் கல்வி அறிவை விரிவு செய்து கொண்டார். அதுவே அவருக்குப் பின்னாளில் ஆட்சி செய்யத் துணை புரிந்தன.

இரக்க குணம்

சிறு வயதிலிருந்தே ஆப்ரஹாம் லிங்கன் இரக்க குணமுடையவராக காணப்பட்டார். ஒரு முறை லிங்கனின் தந்தை சில கைதிகளைக் காவல் காத்துவர வேண்டியதாயிற்று. அப்போது அவர்களைப் பார்த்த லிங்கன் தன் தந்தையிடம்,

"இவர்கள் யார் அப்பா? என்றான் ஆப்ரஹாம். இவர்கள் கெட்ட மனிதர்கள் என்றார் தாமஸ். அவர்களின் முகத்தைப் பார்ப்பதற்கே ஆப்ரஹாமுக்கு அச்சமாக இருந்தது. எனினும் அவர்கள் மீது சிறுவன் இரக்கப்பட்டான்"[1] என்று அப்துற் றஹீம் குறிப்பிடுவதன் மூலம் சிறுவயதிலேயே லிங்கன் தவறு செய்து தண்டனைப் பெற்ற மனிதர்கள் மீது இரக்கம் கொண்டதனை அறியமுடிகிறது.

மேலும், விலங்குகள் மீதும் இரக்கம் கொண்டவராக இருந்தார். அக்காலத்தில் சிறு பையன்கள் ஆமைகளைப் பிடித்து அவற்றின் முதுகின் மீது தீ மூட்டி வேடிக்கைப் பார்ப்பதைக் கண்டு மனம் கலங்கினார். இதனால் விலங்கு களுக்குச் செய்யப்படும் கொடுமைகளைப் பற்றி சிறு சிறு

வாக்கியங்களில் கட்டுரையாக எழுதினார். ஒரு முறை லிங்கன் வேறு ஊருக்குச் செல்லும் போது அவர்கள் வளர்த்த நாயும் அவர்கள் பின்னே வந்து கொண்டிருந்தது. அவர்கள் ஆற்றைக்கடந்து செல்லும் போது அதனால் ஆற்றில் இறங்க இயலாமல் தயங்கிக் கொண்டிருந்தது. ஒரு நாய்க்காக தங்களுடைய வண்டியை திருப்பி ஓட்டிச் செல்ல பெரும்பாலானோர்க்கு விருப்பம் இல்லை. ஆனால் லிங்கன் இரக்கப்பட்டு தன் கால் உறையையும், உடையையும் கழற்றி எறிந்து விட்டு ஆற்றில் இறங்கி நடந்து சென்று நடுங்கிக் கொண்டிருந்த அந்த நாயை தன்னுடைய புயத்திலே அணைத்துக் கொண்டார். இதனால் மகிழ்ச்சியடைந்த நாய் துள்ளிக் குதித்தது லிங்கனுக்கு நன்றி தெரிவித்தது போல இருந்ததாக லிங்கன் பிற்காலத்தில் குறிப்பிட்டுள்ளார்.

அடிமை முறை எதிர்ப்பு

ஆங்கிலேயர்களால் அமெரிக்காவில் அடிமை முறை பரவியது. அக்காலத்தில் ஆப்ரிக்காவில் உள்ள நீக்ரோக்கள் சந்தைகளில் ஏலம் விடப்பட்டனர். செல்வந்தர்கள் தங்களது பண்ணைகளில் வேலை செய்ய அவர்களை விலைக்கு வாங்கினர். இதன் காரணமாக அடிமை வாணிகம் மிகுதியாக நடைபெற்றது. அடிமைகளை மனிதர்களாக கருதவில்லை. அடிமைகளுக்கு ஏற்படக்கூடிய கொடுமைகளைக் கண்டு லிங்கன் மிகுந்த மனவேதனை அடைந்தார். இதனை,

"நியூ ஆர்லியன்சுக்குச் செல்ல லிங்கனுக்கு ஒரு வாய்ப்புக் கிடைத்தது. பொருள்களை ஏற்றிக் கொண்டு படகோட்டி னான் லிங்கன். இந்தப் பிரயாணத்தின் போது நியூ ஆர்லியன்சில் முதல் முறையாக லிங்கன் அடிமை முறையின் கொடுமை களைக் கண்ணால் கண்டு கண்ணீர் வடித்தான். நீக்ரோக்கள் விலங்கிடப்பட்டுச் சவுக்கால் அடிக்கப்படுவதைக் கண்டதும் அவனுடைய இருதயத்தில் இரத்தம் கொதித்துப் பொங்கியது. மனிதத்தன்மையற்ற இந்தச் செயலை எதிர்த்து அவனுடைய நியாய உணர்வு, நேர்மை உள்ளம் ஆகியவையெல்லாம் புரட்சி செய்தன"[2] என்று கூறுவதன் மூலம் அடிமை முறைக் கெதிரான

அவரது மனநிலையை அறிந்து கொள்ள முடிகிறது. மேலும், அவருக்கு வாய்ப்புக் கிடைத்தால் அடிமை முறையை ஒழித்தே தீருவேன் என்று சபதம் ஏற்று பின்னாளில் அதனை நிறைவேற்றிக் காட்டியவர் லிங்கன்.

நற்குணம்

ஆப்ரஹாம் லிங்கனுக்கு நல்ல உடல் வலிமை இருப்பினும் அதை தவறான வழிகளில் பயன்படுத்தவில்லை. அவரது உள்ளத்தில் அளவற்ற பொறுமை குணம் கொண்டவனாக திகழ்ந்தார். லிங்கன் உலகில் யாருக்கும் அஞ்சாமல் தன்னிகரில்லாத தலைவனாக விளங்கினார். ஆனால் இறைவன் மீது கொண்ட பற்றின் காரணமாக, தவறுகள் செய்வதற்கு அஞ்சி வாழ்ந்தார். ஒருமுறை கடையில் இரண்டு மூன்று பெண்களுக்கு பொருள்களை லிங்கன் கட்டிக்கொடுத்துக் கொண்டிருந்த போது, ஒருவன் லிங்கனைத் தகாத வார்த்தைகளைக் கூறி சண்டைக்கு இழுத்தான். அவனைப் பெண்கள் முன் அவ்வாறு நடக்க வேண்டாமென்று லிங்கன் கூறியும் அவனுடைய செயலை நிறுத்திக்கொள்ளவில்லை. பொறுமையிழந்த லிங்கன் அவனைத் தரையில் வீழ்த்தி அங்கிருந்த ஒரு செடியை அவன் முகத்திலும் கண்களிலும் தேய்த்தான். இதனால் அவனுக்கு வலி ஏற்பட்டதனால் வலி தாங்க முடியாமல் அலறினான். லிங்கன் அவனை இழுத்துச்சென்று தண்ணீரில் முகத்தைக் கழுவி மருந்து தடவினான். அதுமுதல் லிங்கனுடைய உயிருக்குயிரான நண்பர்களில் ஒருவனை ஆகிவிட்டான். இவ்வாறு தன்னை எதிர்த்தவனையும் தன் நற்குணத்தால் நண்பனாக்கி கொண்ட நல்லுள்ளம் கொண்டவனாக லிங்கன் விளங்கினார்.

முதல் அரசியல் பயணம்

லிங்கன் அரசியலில் காலடிதிக்க எண்ணினார். லிங்கன் பல வாரங்களாக உழைத்துத் தன்னுடைய முதல் தேர்தல் சொற்பொழிவை எழுதினார். அதில்,

"நான் பிறந்ததும் வாழ்ந்து வருவதும் மிகவும் எளிமையான சூழ்நிலையில்தான். என்னிடம் பணமோ அல்லது என்னைச்

சிபாரிசு செய்யச் செல்வாக்குள்ள உறவினர்களோ நண்பர்களோ இல்லை. என்னை நீங்கள் தேர்ந்தெடுப்பின் நான் உங்களுக்காக உழைப்பேன். ஆனால் நல்ல மனிதர்களின் அறிவுக்கு நான் பின்னணியில் தள்ளப்படுவதே நல்லது என்று தென்படின் அதனால் ஏற்படும் ஏமாற்றத்தினால் கவலை கொள்ள மாட்டேன். ஏனெனில் கவலைக்கும் எனக்கும் எந்த தொடர்புண்டு"[3] என்ற குறிப்பிடுவதன் மூலம் தன் முதல் தேர்தலில் எந்தவித பண உதவியோ, சிபாரிசு உதவியோ இல்லாமல் கர்ப்பாட்ரிக் எனும் தன்னுடைய முதலாளியை எதிர்த்து போட்டியிட்டார். லிங்கன் வீடு வீடாகச் சென்று ஒவ்வொரிடமும் கைக்குலுக்கி வாக்குகளை வேண்டினார். கதைச்சொல்லி சொற்பொழிவாற்றினார். ஆனால் தன்னுடைய முதல் தேர்தலில் தோற்கடிப்பட்டார்.

தேர்தலில் தோற்கடிக்கப்பட்ட லிங்கன் வசதியில்லாமல் விறகு வெட்டியும், வயலில் உழவுத் தொழில் செய்தும் பிழைப்புக்கு வழி செய்து கொண்டார். பிறகு கடைகளிலும், சில காலங்கள் தபால் அதிகாரியாகவும் தொழில் செய்தார். பின்னர் ஸ்டுவர்ட் என்ற வழக்கறிஞருடன் சேர்ந்து தொழில் துவங்கி வழக்குகளை விசாரித்து வந்தார்.

லிங்கன் இரண்டாவதாக தேர்தலில் சங்கமன் தொகுதியில் போட்டியிட்டார். தேர்தல் சொற்பொழிவில்,

"நான் தேர்ந்தெடுக்கப்படுவேனாயின் சங்கமன் தொகுதியின் எல்லா மக்களையும் என்னை ஆதரிப்பவர்களையும் என்னை எதிர்ப்பவர்களையும் ஒரே கண் கொண்டு தான் நோக்குவேன். மக்களின் கருத்தை அறிந்து அதன்படி செயலாற்றுவேன். என்னுடைய சொந்த அறிவைப் பயன்படுத்தி அவர்களின் நலனுக்குகந்த முறையில் செயலாற்றுவேன்" என்று தேர்தல் கூட்டங்களில் கூறினார்"[4]

அத்தேர்தலில் லிங்கன் வெற்றி பெற்று இருப்பதைந்து வயது முதல் முப்பத்திரண்டு வயது வரை தொடர்ச்சியாக சட்டசபையில் சங்கமன் தொகுதியின் பிரதிநிதியாக பணியாற்றினார். மக்களுக்கு தேர்தல் வாக்குறுதிகளையும் நிறைவேற்றினார்.

இல்லற வாழ்க்கை

லிங்கனுக்கு பெண்கள் மீது பெருமதிப்பு உண்டு. அவர் அகமும் புறமும் தூய்மையாக இருக்குமாறு வாழ்ந்தார். மேரி டாடு என்ற பெண்மணி லிங்கனை மணந்து கொள்ள விரும்பினாள். அச்சூழலில் லிங்கனுக்கு சட்டசபையிலும், நீதிமன்றத்திலும் மிகுந்த வேலையாக இருந்ததால் பெண்கள் மீது அக்கறை செலுத்தவில்லை. மேலும் பெண்கள் அவன் மீது அக்கறை கொள்ளும் அளவிற்கு நற்பண்புகளும் அவரிடம் இல்லை.

லிங்கன் அமெரிக்க நாட்டின் தலைவனாக வரக்கூடிய தகுதியுடையவன் என்பதை அறிந்த மேரி அவனிடம் காதலைச் சொன்னான். லிங்கனும் ஏற்றுக் கொண்டு, "மேரி நீ என்னை மணமுடிக்க ஒப்புக் கொண்டது தவறு என்று எப்பொழுது உணர்கிறாயோ அக்கணமே என்னிடம் உன் எண்ணத்தைக் கூறிவிட வேண்டும். அவ்விதம் செய்தவாக உறுதி கூறு. என்று வேண்டினார். சரி அவ்விதமே செய்கிறேன் என்று உறுதி கூறினாள் மேரி"[5]

இதன் மூலம் லிங்கனுக்கு திருமண வாழ்க்கையில் முழு நம்பிக்கை இல்லாமலே அப்பெண்ணின் விருப்பத்திற்காக ஏற்றுக் கொண்டமையை அறிய முடிகிறது. ஒத்துக் கொண்டது அறியலாம். மேலும் லிங்கனின் நடை, உடை, ஒழுக்கங்களெல்லாம் மேரிக்கு பிடிக்கவில்லை. இதனை அவள் திருத்த முற்பட்டதால் இருவருக்கும் மனக்கசப்பே ஏற்பட்டது.

அதன்பின் நீண்ட நாட்களுக்குப் பிறகு 1841ஆம் ஆண்டு மேரி டாடின் வீட்டில் திருமண ஏற்பாடுகள் செய்யப்பட்டன. மேரி திருமணத்திற்காக ஆடம்பரமாக உடையணிந்து தன் காதலனுக்காக காத்துக் கொண்டிருந்தாள். ஆனால் நீண்ட நேரமாகியும் லிங்கன் அன்று வரவில்லை. அதன் பின் இரண்டு ஆண்டுகளாக லிங்கனும், மேரியும் சந்திக்கவே இல்லை. மேரியை மறந்துவிட வேண்டும் என்ற தன் ஆழ்மனதிற்குள் எண்ணிக் கொண்டிருந்தார் லிங்கன்.

பிறகு ஒரு நாள் லிங்கனுடைய ஆசிரியர் மனைவியின் வீட்டில் மேரியும், லிங்கனும் சந்திக்கக் கூடிய வாய்ப்பு கிடைத்தது. லிங்கன் தன்னுடைய தவறை எண்ணி மிகவும் வருந்தி மேரியிடம் மன்னிப்புக் கேட்டார். பிறகு இருவரும் மனம் ஒத்து நவம்பர் 4ஆம் தேதி திருமணம் நடைபெற்றது. எனினும் லிங்கன் தனக்கு இழைத்த இழிவை மேரி மறக்காமல் இருந்தாள். திருமணத்திற்கு பிறகு அதற்கு வஞ்சம் தீட்டத் தொடங்கினாள். ஒருமுறை விடுதி ஒன்றில் தங்கியிருந்த போது லிங்கன் ஏதோ சொன்னதற்காக கொதிக்கும் காபியை மேரி லிங்கன் மீது வீசி எறிந்தாள் லிங்கன் பொறுமையாக இருந்தார். அவர்களுக்கு முதலில் பிறந்த ஆண் மகனுக்கு தனக்கு உதவி செய்த நண்பனின் பெயரைச் சூட்ட வேண்டும் என்று ஆசைப்பட்டார் லிங்கன். இதைக் கேட்டதும் கடும் கோபங் கொண்டு,

"இது என்னுடைய மகவு, இதற்கு என் தந்தையின் பெயராகிய ராபர்ட் என்பதனையே இடுவேன் என்று கூறி அப்பெயரையே சூட்டினாள்"[6]

பிறகு அவர்களுக்கு பிறந்த நான்காவது ஆண் மகனுக்குத் தான் லிங்கனின் விருப்பப்படி அவருடைய தந்தையின் பெய ராகிய தாமஸ் என்பதைச் சூட்ட மேரி அனுமதியளித்தாள்.

மேரி வீட்டில் படுத்தும் கொடுமை தாங்கமுடியாமல் அவனுடைய செயலகத்துக்கு விடியும் முன்பே செல்லும் வழக்கத்தையும், அங்கேயே இரவு உணவை அருந்தி இரவில் நெடுநேரம் செயலகத்திலேயே விழித்திருந்து பின்னரே இல்லம் திரும்புவார்.

இவ்வாறு லிங்கனின் இல்லற வாழ்க்கையானது சமூகத்திற்காக மட்டுமே வாழும் வாழ்க்கையாகவும் மன நிம்மதி இல்லாமல் இருந்துள்ளமையை அறிய முடிகிறது.

கட்டத்துறை

ஸ்பிரிங்பீல்டில், ஸ்டூவர்டு என்ற நண்பனுடன் இணைந்து வக்கீல் தொழிலை மேற்கொண்டார். லிங்கன் தன்னுடைய

வழக்குகளுக்காக மிக குறைந்த கட்டணத்தையே வாங்கினார். இதனால் வழக்கறிஞர் தொழிலே பாழ்படும் என்று அவருடைய நண்பர்கள் வேதனையடைந்தனர்.

ஒருமுறை ஒரு ஏழைப்பெண்ணின் வழக்கில் வாதாடி வெற்றி பெற்றார். அதற்கு கட்டணமாக அப்பெண்ணின் சகோதரன் மனநிறைவுடன் இருநூற்று ஐம்பது டாலரைக் கொடுத்தான். ஆனால் அத்தொகை அதிகமென்று அதனை வாங்கிக் கொண்டு வந்த லேமனிடம்,

"அவனுக்கு மனநிறைவு ஏற்பட்டிருக்கலாம். ஆனால் அதனைப் பெறுவதில் எனக்கு மன நிறைவு இல்லை. ஏழைகளைச் சுரண்டி உயிர் வாழ்வதைவிடப் பட்டினி கிடந்து சாவது மேலானதாகும். திரும்பிச் சென்று அதில் பாதித் தொகையை அவளிடம் கெடுத்துவிட்டுவா, இல்லையேல் அதில் ஒரு காசுகூடத் தேவையில்லை" என்று கூறி அப்பணத் தினைத் திருப்பி அனுப்பினார் லிங்கன்"[7]

லிங்கன் வழக்கறிஞர் தொழிலை மக்களுக்கு நீதி வழங்க வேண்டும் என்ற கண்ணோட்டத்துடனே மேற்கொண்டு வந்தார். நீதி, நேர்மை ஆகியவற்றை இளமையிலிருந்தே விரும்பி வந்த அவருக்கு அதுவே ஏற்றத் தொழிலாக அமைந்தது. மேலும்,

"ஒருபோதும் ஒருவரைப் பிறர்மீது வழக்குத் தொடரும்படி தூண்டிவிடாதே. அவ்விதம் செய்பவனைப் போன்ற இழிந்த மனிதன் இந்த உலகத்திலே எவனும் இல்லை. முழுத் தொகையும் முன் பணமாக வாங்கி விடாதே. அவ்விதம் வாங்குவாயாயின் பணம் வரவேண்டிய வழக்குக்கு நீ எடுத்துக் கொள்வது போன்ற அவ்வளவு அக்கறையை அந்த வழக்கு பற்றி உன்னால் எடுத்துக் கொள்ள இயலாது போய்விடும்"[8] என்று வழக்கறிஞர்களுக்கு லிங்கன் அறிவுரை வழங்குவார்.

உண்மையான வழக்குகளை எடுத்து வாதாடி அதில் வெற்றி பெற வேண்டும் என்ற நம்பிக்கையும் அந்த வெற்றிக்காக உண்மைத் தன்மையை வெளிக் கொண்டுவர ஆகும் நேரம் இரண்டும் லிங்கனுக்குத் தேவையாக இருந்தது.

லிங்கனுக்கு தன் வழக்கில் வெற்றி பெறுவதற்கு நேரம் மற்றும் உண்மையான வழக்கை எடுத்து வாதாடுவதாக உள்ள நம்பிக்கை இந்த இரண்டும் தேவையாக இருந்தது. லிங்கன் ஒரு முறை நிதானமாக வாதாடுவதைக் கண்ட எதிர்தரப்பு வக்கீல் அவரை விரைவாக வாதாடுமாறு கூற அதற்கு,

"சிறு கத்தி வேகமாகப் பாயும். ஆனால் சிறிது தொலைவே பாயும். பெரிய கத்தி நிதானமாக பாயும். அது போன்று என்னால் மற்றவர்களைப் போன்று விரைவாக எண்ணங்களை வெளியே கொண்டு வந்து கொட்டிவிட முடியாது. அது என்னுடைய இயற்கை. ஆனால் என்னுடைய எண்ணங்களை நான் முயன்று வெளிக்கொணர்ந்த போதினும், அவை நெடுந்தொலைவு செல்லக்கூடிய ஆற்றல் வாய்ந்தவைகளாக இருக்கின்றன. என்னுடைய மூளையில் எதையும் பதிப்பது கடினம். ஆனால் பதித்துவிட்டாலோ அதனை அழிப்பது கடினம் என்று கூறினான்"[9]

இவ்வாறு லிங்கன் நிதானத்துடனும், நேர்மையான முறையிலும், ஏழை எளிய மக்களுக்காக தன்னுடைய வழக்கறிஞர் தொழிலை மேற்கொண்டிருந்தார். மேலும் நகைச்சுவை உணர்வோடும் வாதாடக்கூடிய திறமை இயல்பாகவே அவரிடம் இருந்தது.

அரசியலில் வளர்ச்சி

வெள்ளை மாளிகையில் குடியேற வேண்டுமென்று மேரிக்கு ஆசை. எனவே அவள் லிங்கனை அமெரிக்க அதிபராக அமர வைக்க அனைத்து விதமான முயற்சிகளையும் செய்தாள். அந்த முயற்சியின் தொடர்ச்சியாக லிங்கன் காங்கிரஸில் சேரும் எண்ணத்தினை வெளிப்படுத்தும் விதமாக ஒரு நிகழ்வு நடந்தது. அதில், லிங்கனுக்கு கடவுள் நம்பிக்கையும், மதப்பற்றும் இல்லை என்று நிருபிக்க வேண்டுமென்று கார்ட்னார்ட் நினைத்தார். அவையில் கூடியிருந்தவர்களிடம் உங்களிலே சொர்க்கத்தை அடைய விரும்புவோர் எழுந்து நில்லுங்கள் என்று கார்னார்ட் கூற சிலர் எழுந்தனர். லிங்கன் எழவில்லை. நரகத்திற்கு செல்ல விரும்பாதவர்கள் எழுந்து

நில்லுங்கள் என்று மீண்டும் கேட்டார். லிங்கனைத் தவிர அனைவரும் எழுந்து நின்றனர். அப்பொழுது இரண்டிற்கும் இல்லை என்றால் எங்கு தான் செல்ல விரும்புகிறீர்கள் என்று கேட்க,

"நீங்கள் போக முடியாத இடத்திற்கு போக விரும்புகிறேன். என்றான் லிங்கன்.

அது என்ன இடம் என்று கார்னார்ட் ஆச்சரியத்துடன் வினவினார்.

ஆபிரகாம் லிங்கன் நிதானமான குரலில் 'நான் காங்கிரசுக்கு தேர்ந்தெடுத்துச் செல்ல விரும்புகிறேன் என்றார்"[10]

இதன் வழி அவரது எண்ணம் வெளிப்பட்டு காங்கிரஸில் சேர்ந்ததை,

"நான் தேர்ந்தெடுக்கப்பட்டுக் காங்கிரசுக்குப் போக வேண்டுமென்று விரும்புகிறேன். நேர்மையான முறையில் நான் அங்குச் செல்ல இயலவில்லையாயின் வீட்டிலே இருந்து விடுவதையே மேலானதாகக் கருதுகின்றேன்" என்று தனது பரப்புரையில் லிங்கன் கூறினான்"[11]

மேலும், விக் கட்சியினரால் தேர்தல் செலவிற்காக கொடுக்கப்பட்ட பணத்தில் குறைந்த அளவே செலவு செய்து மீதியை அவர்களிடமே திருப்பிக் கொடுத்தார். இவ்வாறு நேர்மையான முறையில் லிங்கன் தேர்தலைச் சந்தித்து தோல்வியுற்றார்.

முன்னோர்கள் வழியை பின்பற்றாது தனக்கென ஒரு புது வழியை உருவாக்குபவனே சிறந்த தலைவனாகின்றான். அப்படிப்பட்ட தலைவனை,

"கற்பனை எழுச்சி மிக்க நல்ல தலைவர்கள் மரபு சார்ந்த வழிமுறையில் இருந்து மாறுபட்டு சிந்திப்பவர்கள். அவர்கள் தான் புதிய தலைவர்களை உருவாக்க முடியும் அப்படிப்பட்ட தலைவர்கள் எப்படிப்பட்டவர்களாக இருப்பார்கள். ஆணை யிட்டு காரியமாற்றுவதை விட பயிற்றுவிப்பவர்கள் மேலாண் மையைவிட நல்வழி காட்டியாக செயலாற்றுபவர்கள்.

மதிப்பையும், மரியாதையையும் நாடாமல் சுயமரியாதையை செயலில் காட்டுபவராக இருப்பவரே எழுச்சிமிக்க கற்பனை வளம் மிக்க நல்வழி நடத்தும் தலைவராவார்"[12]

அப்துல் கலாம் கூறும் ஒரு சிறந்த தலைவராக விங்கன் வாழ்ந்து வந்தமையை அறியமுடிகிறது.

பிறகு ஓரிகான் மாகாணத்து கவர்னர் பதவி கொடுக்கப் பட்டபோது அதனை ஏற்றுக்கொள்ள வேண்டாம் என்று மேரி லிங்கனைத் தடுத்துவிட்டாள். அதுவே பிற்நாளில் விங்கன் அமெரிக்க அதிபராக காரணமாக அமைந்தது. இதனை,

"தன்னுடைய ஆலோசனையைக் கேட்டதனால் தான் அவர் ஜனாதிபதியாக முடிந்தது"[13] என்று மேரி அடிக்கடிக் கூறிக்கொள்வாள்.

1856ஆம் ஆண்டு மீண்டும் ஜனாதிபதி தேர்தல் தொடங்கியது. 1948இல் தான் இழந்த செல்வாக்கைத் திரும்பப் பெறுவதற்கான சரியான வாய்ப்பு இதுதான் என்று விங்கன் நம்பினார். அவரை எதிர்த்து டக்லஸ் என்பவர் போட்டியிட்டார். விங்கன் தனது வாழ்நாள் கொள்கைகளாக,

"உதவி செய், சண்டை போடாதே, ஒன்று படுத்து, அழிக்காதே, வாழ்க்கையில் சமரசமும் சாந்தமும் வேண்டும் வேறுபாடு வேண்டாம்"[14]

மேற்கூறியவற்றைப் பின்பற்றி வாழ்ந்தார். அதனை நிருபிக்கும் வகையில் தன்னை எதிர்த்துப் போட்டியிட்ட டக்ளைடன், ஒரே மேடையில் வாதப்போர் புரிய வேண்டுமே என விரும்பினார் விங்கன். ஒரே மேடையில் இருவரும் தோன்றினர். அம்மேடையில்

"விங்கன் நீக்ரோக்களுக்கும் சரிநிகர் சமமான உரிமை வழங்கப்பட வேண்டுமென்றும் கூறுகின்றார். என்று விங்கன் மீது குறைகூறினார் டக்ளஸ்."[15]

ஆனால் விங்கனோ நீக்ரோக்கள் மீது இரக்கம் காட்டினார். அமெரிக்கர்களால் அவர்களுக்கு கொடுமை நிகழக் கூடாது

என்ற கோரிக்கையை முன்வைத்தாரே தவிர அமெரிக்கர்களுக்கு நிகரான உரிமை வழங்க வேண்டும் என்று கூறவில்லை. ஆனால் டக்ளஸ் தன் உரையில்,

"பலரைச் சிலகாலம் ஏமாற்றலாம், சிலரைப் பலகாலம் ஏமாற்றலாம், எல்லோரையும் எல்லாக் காலங்களிலும் ஏமாற்ற முடியாது என்று கூறினார்."

டக்ளசின் பேச்சு வெகு விரைவில் மக்களை வயப்படுத்தி வெகுவிரைவில் மங்கிவிட்டது. ஆனால் லிங்கனுடைய பேச்சு மெதுவாக மக்களின் மனதைக் கவர்ந்த போதிலும் நிலையாகக் கவர்ந்து நின்றது"[16] எனினும் லிங்கன் அத்தேர்தலிலும் தோல்வியைத் தழுவ நேரிட்டது. ஆனால் அவர் மனம் தளராது இருந்தார்.

அமெரிக்க ஜனாதிபதி

1860ஆம் ஆண்டு சிறுகட்சிகள் எல்லாம் ஒன்று சேர்த்து ஒரு மாநாட்டை ஹெர்ன்டன் என்பவன் சிகாகோவில் கூட்டினான். அக்கட்சிகளை ஒன்றிணைக்கும் பொறுப்பில் லிங்கனும் இருந்தார். அம்மாநாட்டில் தங்களுடைய குறிக்கோள் களையும், திட்டங்களையும் வரையறுத்து குடியரசுக் கட்சியாக அமெரிக்காவில் தோன்றியது. அக்கூட்டத்தில் லிங்கன் ஆற்றிய சொற்பொழிவானது அவரை ஜனாதிபதி தேர்தலுக்கு தங்கள் கட்சியின் சார்பாக நிற்க வைக்க தகுதியானவர் என்பதை எல்லோரையும் உணர்ந்திருந்தனர். அதன் விளைவாகவே மீண்டும் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட்டார்.

இம்முறை ஜனாதிபதி தேர்தலில் குடியரசுக் கட்சியின் சார்பில் நிற்க லிங்கன் மற்றும் சிவர்ட் ஆகியோர் போட்டி யிட்டனர். சிவர்ட்டால் பாதிக்கப்பட்ட ஹொரேஸ் கிரீலி என்பவர் அவரைப் பற்றி தன்னுடைய இதழில் தாக்கி எழுதியதோடு, மாநாடு ஒத்திவைக்கப்பட்டவுடன் பல்வேறு பிரதிநிதிகளைச் சந்தித்து தன்னுடைய வாதத்திறமையால் லிங்கனையே தேர்ந்தெடுக்குமாறு கேட்டுக்கொண்டார். அவருடைய இம்முயற்சி பயனளித்தது. லிங்கனே அமெரிக்க

ஜனாதிபதி தேர்தலில் தேர்வு செய்யப்பட்டார். அச்சமயம் லிங்கன் ஸ்பிரிங்பீல்டில் இருந்தபோது தான் வெற்றிபெற்ற செய்தியை அறிந்து அவர் மனம் நிலைகொள்ளவில்லை. மக்கள் வெள்ளம் அவரைச் சூழ்ந்து மகிழ்ச்சி ஒலி எழுப்பத் துவங்கிய போது மக்களைப் பார்த்து,

"'எட்டாவது தெருவில் இச்செய்தியைக் கேட்கப் பெரிதும் விரும்பிய ஒரு சிறு பெண் இருக்கிறாள். அவளிடம் போய்க் கூறுங்கள்" என்று கூறினார்."[17]

மேலும், தன் வீட்டிற்குச் சென்று தன் மனைவி மேரியிடம்,

"உனக்கு ஏமாற்றம் ஏற்படாமல் இருந்ததற்காக மகிழ்ச்சியடைகிறேன்"[18]

இவ்வாறு தன் மகிழ்ச்சியை அவர் பரிமாறிக்கொண்டான்.

குடியரசுக்கட்சி சார்பில் லிங்கன் நிறுத்தப்பட்டதை அறியாத ஜனநாயக் கட்சியினர் அவன் மீது பல அவதூறுகளைப் பரப்பினர். அமெரிக்காவின் ஒற்றுமையையே சீர்குலைந்து விடும் என்றும் பரப்புரைச் செய்தனர். ஆனால் ஜனநாயக் கட்சியில் ஒற்றுமையில்லாமல் மூன்று பிரிவாக பிரிந்திருந்தனர். ஆதலால் இம்முறை தனக்கு வெற்றி நிச்சயம் என்று லிங்கன் உறுதி கொண்டார். இறுதியாக அமெரிக்க ஜனாதிபதியாக தம் கனவில் வெற்றியும் கண்டார்.

லிங்கன் ஜனாதிபதியாக பொறுப்பேற்பதற்கு முன்பே தெற்கு மாகாணங்கள் யூனியனிலிருந்து பிரிந்து 'அடிமை முறை நீக்ரோக்களின் பிறப்புரிமை' என்ற அடிப்படையில் ஒரு அரசாங்கத்தை நிறுவி ஜெபர்ஸன் டேவிஸ் என்பவரை ஜனாதிபதியாக்கியது. இவ்வாறு நாட்டின் ஒற்றுமை சீர்குலைக்கப்படுவதை எண்ணி லிங்கன் மனம் கலங்கினார்.

லிங்கன் பதவியேற்க வாஷிங்டன் வருவதற்கு முன்னரே பால்டிமர் எனும் இடத்தில் அவரைக் கொலைச் செய்ய எதிரிகள் திட்டம் தீட்டினர். லிங்கன் உயிரோடு வரமாட்டார் ஜெபர்ஸன் டேவிஸே அடுத்த ஜனாதிபதி என்ற எதிரிகளின் எண்ணத்தை உடைத்து வாஷிங்டன் வந்து சேர்ந்தார் லிங்கன்.

இதைக்கண்டு பலர் வியப்பில் ஆழ்ந்தனர். பிறகு இராணுவப் படையுடன் ஊர்வலம் சென்று அரசாங்க மன்றத்தில் பதவியேற்று தன்னுடைய சொற்பொழிவைப் பெருமிதத்துடன் நிகழ்த்தினார்.

உள்நாட்டுப் போர்

லிங்கன் பதவியேற்றவுடன் அவருக்குப் பல தொல்லைகள் காத்திருந்தன. அரசாங்கத்தின் கருவூலம் காலியாக இருந்தது. போர்க்குத் தேவையான கருவிகளோ, வெடிமருந்தோ, சண்டைக் கப்பல்களோ இல்லை. எதிரிகள் வாஷிங்டனைத் தாக்குதல் நடத்த தயாராகிக் கொண்டிருந்தனர். லிங்கனின் படையில் ஒரு லட்சத்துத் தொண்ணூறாயிரம் போர் இருந்தாலும் படையை வழி நடத்திச் செல்ல சிறப்பான தளபதி இல்லை. அவர்களை வழி நடத்த ஸ்காட் என்ற வயது முதிர்ந்த நோயுற்றவனே நியமிக்கப்பட்டான். அவனால் லிங்கனுக்கு முதலில் தோல்வியே ஏற்பட்டது. பிறகு அமெரிக்கப்படை மெக்லிலன் என்ற தளபதியிடம் ஒப்படைக்கப்பட்டது. அவனும் துவக்கத்தில் சிறு சிறு வெற்றிகளையே பெற்றான். எனினும் மெக்லீலன் லீ எனும் எதிரியை முன்னேறித் தாக்குதலை ஏற்படுத்தாமல் லிங்கன் தனக்கு போதிய படைப் பலத்தை தரவில்லை என்று குறையாகவே கூறிவந்தான்.

பிறகு போரில் வெற்றி பெற பணவலுவும் ஆயுத வலுவும் இருந்தால் மட்டும் போதாது படையை வழி நடத்த சரியான தளபதி தேவை என்பதை உணர்ந்த லிங்கன் போப் என்பவனை நியமித்து அவனின் உத்தரவுப்படி மெக்லினை செயலாற்ற ஆணை அனுப்பினார். இவ்வாறாக எதிரிகளின் சூழ்ச்சியை லிங்கன் சிறப்பான முறையில் கையாண்டார். எனினும் இராணுவத் துறையில் லிங்கன் பல்வேறு துன்பங்களுக்கு உள்ளானார் அதிலும் வெற்றியடைந்தார்.

அடிமைகளை விடுவித்தல்

அமெரிக்காவில் அடிமை நிலை ஏற்பட்டதற்கு வடக்கு நாடும், தெற்கு நாடுமே மூலகாரணங்களாக இருந்தன எனவும், அடிமைகளை விடுதலைச் செய்வதால் ஏற்படும் இழப்பினை

இரு நாடுகளும் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்றும் முடிவு செய்தார் லிங்கன். அடிமை நிலையினை ஒழிக்க அவர்களை விடுதலைச் செய்ய வேண்டும் என்பதை,

"அடிமைகளை விடுவித்து அவர்களையும் ஆயுதப் பாணிகளாக்க வேண்டும். இல்லையேல் யூனியனைச் சரணடையச் செய்ய வேண்டும். இந்த இரண்டில் ஒன்றைச் செய்வதைவிட எனக்கு வேறு வழியில்லை"[19] என்று கூறினார் லிங்கன். இதேபோன்று,

"ஒவ்வொரு மனிதனும் ஒரு விடியலை எதிர் நோக்கித்தான் வாழ்ந்து கொண்டிருக்கிறான். அந்த விடியல் தனி மனிதனால் வந்துவிடாது. மனிதச் சமுதாயத்தின் ஒத்துழைப்பில் தான் விடியல் இருக்கிறது. அந்த விடியலை உருவாக்க சமுதாயத்தில் அங்கம் வகிக்கும் முதலாளிகள், அதிகாரிகள், வியாபாரிகள், அரசியல்வாதிகள், தனி மனிதர்கள் எல்லோரும் இணைந்து உணர்ந்து செயலாற்ற வேண்டும். மனிதர்களின் உணர்வில் தான் மனித நேயம் பூத்துக் குழுங்க வேண்டும்"[20]

கருப்பர் இன மக்களுக்காக ஒன்று கூடி போராடினால் வெற்றி கிடைக்கும் என்பதை வழியுறுத்துவதாக மேற்கூறிய கூற்று அமைகிறது. 1863ஆம் ஆண்டு அமெரிக்காவில் வெள்ளை மாளிகையில் லிங்கன் விடுதலை அறிக்கையில் கையெழுத்திட்டதும்,

"அந்த விநாடியிலிருந்து முப்பத்தைந்து லட்சம் அடிமைகள் ஆடுவோமே பள்ளுப்பாடுவோமே ஆனந்த சுதந்திரம் அடைந்துவிட்டோம் என்று ஆடத்துவங்கி விட்டனர். அமெரிக்காவில் மட்டுமல்ல, உலகிலேயே ஒரு பொற்காலம் தொங்கிவிட்டது"[21]

இதன்மூலம் அமெரிக்காவில் பல வருடங்கள் அடிமை களாக இருந்த நீக்ரோக்கள் விடுதலையடைந்தனர். அவர்களின் விடுதலைக்கு முக்கிய காரணமாக விளங்கினார் லிங்கன்.

பிறகு தன்னுடைய படைத்தளபதியாக யூலியஸ் கிராண்ட் என்பவனை நியமித்தார். அவரால் இராணுவத்தில் இருந்த

வழல்கள் மறைந்தன. டோனல்ஸன் என்பவனின் கோட்டை மீது படையெடுத்து பதினையாயிரம் வீரர்களைச் சிறைப் பிடித்து, நிபந்தனையின்றி சரணாகதி அடைய வேண்டும் எனக் கூறி உலகத்தையே அதிர்ச்சிகுள்ளாக்கினார். இதனால் லிங்கனுடைய புகழ் விண்ணை நோக்கி உயர்ந்தது.

ஜனாதிபதித் தேர்தல் நெருங்கியது குடியரசுக் கட்சியின் சார்பாக இரண்டாவது முறையாக லிங்கனே போட்டியிட்டு மீண்டும் அமரிக்க ஜனாதிபதியாக தேர்ந்தெடுக்கப்பட்டார். அவருடைய பதவியேற்பு விழாவில் அவரால் விடுதலை செய்யப்பட்ட நீக்ரோப் படையினரும் இராணுவத்துடன் அணிவகுத்து வந்தனர். அந்நிகழ்வில் அவர் மேற்கொண்ட சொற்பொழிவை 'தெய்வீகச் சண்டாமாருதம்' என்று ஆக்ஸ் போர்ட் பல்கலைக்கழக அதிபர் கர்சன் பிரபு வர்ணிக்கிறார்.

இறுதி கால கட்டம்

1864ஆம் ஆண்டின் இலையுதிர்காலத்தில் தெற்கு நாட்டுப் படைகளை வெற்றிக் கண்டு அவர்களைச் சிறை செய்தது. லிங்கனின் போர்படை தெற்கு நாட்டுத் தலைவர்களை தூக்கிடவேண்டும் என்று மக்கள் கூக்குரலிட்டனர். அப்போது,

"இதுவரை பலியான உயிர்கள் போதாவென்று இன்னுமா உயிர்களைப் பலியிடச் சொல்கிறீர்கள்? நீங்கள் ஒற்றுமையையும் உறவையும் விரும்புவீர்களாயின் உங்களின் சினத்தீயை அழித்தொழியுங்கள்"[22]

என்று கூறி சரணடைந்த லீயின் படைகளை நிபந்தனையின்றி விடுவித்து அவர்களை நலமாக ஊருக்கு அனுப்பினான். இதன்மூலம் லிங்கன் அடிமைப் படுத்துதலை விரும்பாமல் அனைவரும் ஒற்றுமையாக வாழ வேண்டும் என்ற எண்ணத்துடனே நல்லாட்சி புரிந்தார்.

சம்டர் கோட்டையில் ஏப்ரல் 14ஆம் நாள் வெற்றித் திருவிழா கொண்டாடப்பட்டது. அன்றைய நாள் போர்ட் தியேட்டரில் கோலகலமாக இருந்தது. அங்கு நிகழும் நாடகத்தை கண்டுகளிக்க லிங்கன் வருகைப் புரிந்தார் ஆனால், கிராண்ட் அங்கு வரவில்லை. அவ்விழாவில் தெற்கு நாட்டுக்

கைதி ஒருவன் தனக்கு விடுதலை அளிக்குமாறு விண்ணப்பம் ஒன்றினை லிங்கனிடம் கொடுத்தான். அதை வாங்கிய லிங்கன் 'அப்படியே ஆகுக! என்று ஒப்புதல் அளித்தார். இவ்வாறு அவர் செய்த இறுதி செயலும் தெற்கு நாட்டினர் மீது இரக்கம் காட்டுவதாகவே அமைந்தது. அதன்பின்னர் பூத் என்பவன் லிங்கன் தன்னைப் பார்க்க விரும்புவதாகக் கூறி அனுமதியில் லாமல் உள்ளே நுழைந்து தான் மறைத்து வைத்திருந்த துப்பாக்கியால் லிங்கனைச் சுட்டான். சுடப்பட்ட லிங்கன் தரையில் சாய்ந்து அவர் உடல் குருதி வெள்ளத்தில் கிடந்தது. மருத்துவர்கள் அவருக்கு சிகிச்சை செய்ய விரைந்தனர். பூத் சுட்ட குண்டானது தலையில் பாய்ந்து மூளையையும் தாக்கியிருந்தது. ஒன்பது மணி நேரம் மூச்சற்ற நிலையில் இருந்து பிறகு உயிர்த்துறந்தார். அதன்பின் ஒருவாரம் கழித்து பூத் சுட்டுக்கொல்லப்பட்டான்.

லிங்கனுடைய உடலானது ஸ்பிரிங்பீல்டுக்கு கொண்டு செல்லப்பட்டு மரியாதையுடன் அடக்கம் செய்யப்பட்டது. பிறகு அரசாங்கத்தின் சதி வேலைகளால் பதினேழு முறை அவர் உடல் தோண்டி எடுக்கப்பட்டு வெவ்வேறு இடங்களில் அடக்கம் செய்யப்பட்டது. இறுதியாக 1901 ஆம் ஆண்டு செப்டம்பர் 6ஆம் நாள் அவருடைய உடல் உருக்கினால் வார்க்கப்பட்டு காங்கீரிட்டினால் ஆன புதைகுழியில் அடக்கம் செய்யப்பட்டது. அவர் இறந்து முப்பத்து ஆறு ஆண்டுகளான போதிலும் உயிரோடிருப்பவன் போன்றே தோற்றமளித்தான் என்று பலர் கூறுவர்.

அவருடைய பூத உடல் மறைந்தாலும் புகழுடல் என்றும் மறையாது. அது என்றென்றும் இருந்து அமெரிக்க மக்களுக்கு மட்டுமல்ல அகில உலக மக்களுக்கே வழிகாட்டிக் கொண்டிருக்கும் என்பதை இன்றளவும் அறிய முடிகிறது.

முடிவுரை

ஆபிரகாம் லிங்கன் என்ற தனி மனிதன் தன் வாழ்க்கையில் பெற்ற வெற்றிகளைக் காட்டிலும் தோல்விகளே அதிகம். குடும்பம், வாழ்க்கை, தொழில், அரசியல் என அனைத்திலும்

தோல்விகளையே சந்தித்த லிங்கன் தன் வாழ்க்கை முழுவதும் சிரித்துக் கொண்டே அமெரிக்க நாட்டிற்காக உழைத்ததின் அவரின் வலிமை மிக்க எண்ணங்களும், மன உறுதியுமே காரணமாகும். வெற்றியானது பல முறை அவரைத் தழுவிடாலும் அவர் ஒருபோதும் தன்னுடைய முயற்சியை கைவிட்டதில்லை. உலகத்தில் உள்ள மனிதர்களின் உறுதியான நிலையான அடிமைத் தனத்தை அகற்றுவதில் லிங்கனின் பங்கு மிகப்பெரியது.

தோல்விகள் துரத்திய போதும் அதைப் பற்றிக் கவலைகள் கொள்ளாது தன் கடமையைத் தொடர்ந்து செய்து கொண்டிருந்த லிங்கன் இல்லாமல் போயிருந்தால் அங்கு வாழ்ந்த கருப்பினத்தவர்கள் சுயமரியாதையைப் பெற்றிருக்க முடியாது. மேலும் அமெரிக்கா ஒரு சுதந்திர தேசம் என்ற மாபெரும் சிறப்பை இழந்திருக்கும் என்றால் அது மிகையாகாது. அதற்கு வித்திட்ட விடுதலை நாயகன் ஆப்ரஹாம் லிங்கனின் வாழ்வாற்றுச் சிறப்புகளை நினைத்து பார்த்துக் கொள்வோம்.

சான்றெண் விளக்கம்

1. அப்துர் ரஹீம், மனிதப் புனிதன் ஆப்ரஹாம் லிங்கன், பக்.7
2. மேலது, பக்.31
3. மேலது, பக்.38
4. மேலது, பக்.49
5. மேலது, பக்.51-52
6. மேலது, பக்.59
7. மேலது, பக்.67
8. மேலது, பக்.69
9. மேலது, பக்.71
10. விக்டோரானி, போற்றுதற்குரிய வாழ்க்கையிலே கலையான நிகழ்ச்சிகள், பக். 20
11. அப்துர் ரஹீம், மனிதப் புனிதன், ஆப்ரஹாம் லிங்கன், பக்.82
12. எபிதே, அப்துல் கலாம், எழுச்சி கூட்டும் எண்ணங்கள், பக். 15

13. அப்துற் றஹீம், மனிதப் புனிதன், ஆப்ரஹாம் லிங்கன், ப.85
14. எஸ். குமார், சுவாமி விவேகாந்தரின் பொன்மொழிகள், ப. 86
15. அப்துற் றஹீம், மனிதப்புனிதன் ஆப்ரஹாம் லிங்கன், ப. 96
16. மேலது, ப. 97
17. மேலது, ப. 104
18. மேலது, பக். 104-105
19. மேலது, ப. 126
20. உழைப்பின் உயர்வும் மனிதநேய மாண்பும், பக். 68-69
21. அப்துற் றஹீம், மனிதப் புனிதன் ஆப்ரஹாம் லிங்கன், ப. 126-127
22. மேலது, ப. 130

அப்துற்-றஹீம்

ஆய்வுச் சரம்



யுனிவர்ஸல்
பபளிஷர்ஸ்

அப்துற்-றஹீம் ஆய்வுச் சரம்

முனைவர் சேமுமு முஹமதலி,
முனைவர் மு.அப்துல் சமது,
முனைவர் மு.இ. அகமது மரைக்காயர்,
எஸ்.எஸ். ஷாஜஹான்

பதிப்பு விவரம்

முதற் பதிப்பு மார்ச், 2022

உரிமை © பதிப்பகத்திற்கு

வெளியிடுபவர்

பாத்திமா ஷாஜஹான்

யுனிவர்ஸல் பப்ளிஷர்ஸ்

2, வடக்கு உஸ்மான் சாலை,
(கோடம்பாக்கம் மேம்பாலம் அருகில்)
முதல் மாடி, தியாகராயர் நகர்,
சென்னை - 600 017.
✆ : 044-2834 3385, 94440 47786

ஒளி அச்சு : சு. அசோக்குமார், 94877 31019
அட்டை வடிவமைப்பு : ஜானி, 98414 96549
அச்சு : கிளிக்டுபிரிண்ட், சென்னை - 600 018.
பக்கங்கள் : 512 (⅛ டெமி)
விலை : ₹ **450/-**

ISBN: 978-93-92346-30-9

Title of the Book : **ABDUR-RAHEEM AAIVUCH CHARAM**

Dr. SeMuMu MUHAMMAD ALI,
Dr. M. ABDUL SAMAD,
Dr. M.E. AHAMED MARAICKAYAR,
Alhaj S.S. SAJAHAN

© Publisher

Language : **Tamil**
Edition : **First - March, 2022**
Publisher
Fatima Sajahan
Universal Publishers
2, North Usman Road,
(Near Kodambakkam Overbridge)
T. Nagar, Chennai - 600 017.
✆ : 044-2834 3385, 94440 47786
Typeset : **S. Asokkumar,** 94877 31019
Wrapper design : **Johny,** 98414 96549
Printed at: clictoprint | *Chennai-600 018.*
No.of Pages : **512** (⅛ Demy)
Price : ₹ **450/-**

பக்கம்

30. அப்துற் றஹீம் 'கவலைப்படாதே' நூல் உணர்த்தும் வாழ்வியல் விழுமியங்கள் 328
முனைவர் ச. பொன்ஜெயந்தி

31. விழித்துக் கொள் மனமே! 341
முனைவர் சி.ஆர். மஞ்சுளா

32. அன்பு வாழ்வோ! அருள் வாழ்வோ! 354
சேமுமு. முகமதலி

33. திருக்குர்ஆன் ஒளியில் நபிகள் நாயகக் காவியம் 366
முனைவர் பீ. முகம்மது யூசுப்

34. அப்துற் றஹீம் காட்டும் இல்லற வாழ்க்கைக்கான வழி முறைகள் ... 375
அ. முஹம்மது யாசிர்

35. நபிகள் நாயகக் காவியம் (எம்.ஆர்.எம். அப்துற் றஹீம்) 396
பா. மொய்தீன் ஆரிப்

36. எம்.ஆர்.எம். அப்துற் றஹீமின் இஸ்லாமியக் கலைக் களஞ்சியம் - ஓர் அறிவுப் பெட்டகம் 408
டாக்டர் ஜெ.ராஜா முகமது

37. விடாமுயற்சி வெற்றிக்கு வழி - ஒரு ஆய்வு 423
முனைவர் ஆ. லட்சுமி

38. உன்னை வெல்க எனும் நூலும்; வாழ்வியல் செய்திகளும் 431
முனைவர் சு. விஜயலெட்சுமி

39. இறைநேசச் செல்வர் மு.றா.மு. அப்துற் றஹீம் 441
ஆ.மு. ஜமால் முஹம்மது

40. இஸ்லாமியப் பெரியார்களின் சமூகத் தொண்டு 450
முனைவர் அ. ஜனார்த்தலி பேகம்

41. நபிகள் நாயகக் காவியத்தில் தமிழ்ப் பண்பாட்டு மரபுகள் 471
முனைவர் மு. ஜாபர் சாதிக் அலி

42. கவலையினால் ஏற்படும் மனத்துயரங்களும் அதற்கானத் தீர்வுகளும் 480
முனைவர் ஷிஃபா

43. எம்.ஆர்.எம்.அப்துற் றஹீமின் 'வாழ்வைத் துவங்கு' நூலில் வரலாற்றுப் பதிவுகள் 492
முனைவர் ச. ஹாஜிரா ஃபர்சானா

44. எம்.ஆர்.எம். வெளிப்படுத்தும் சமூக மேம்பாட்டுச் சிந்தனை 497
முனைவர் ஹா. ஹிதாயத்துல்லா

45. அப்துற் றஹீம் கூறும் எண்ணம் போல் வாழ்க்கை 503
முனைவர் நா. ஹேமமாலினி

அப்துற் றஹீம் காட்டும் இல்லற வாழ்க்கைக்கான வழி முறைகள்

அ. முஹம்மது யாசிர்
உதவிப்பேராசிரியர் – சுயநிதிப்பிரிவு,
தமிழாய்வுத்துறை,
ஜமால் முகமது கல்லூரி,
திருச்சிராப்பள்ளி –20.

அனைத்து படைப்புகளையும் படைத்த இறைவன் முதல் மனிதனாம் ஆதம் நபியையும் படைத்து சொர்க்கத்தில் வாழ்வதற்கு வழி வகைச்செய்தான். ஆனால் பல சுகங்கள் நிறைந்த சொர்க்கத்தை அனுபவித்தும் மனதில் நீங்காத குறையுடன் இருந்தார். அதனை உணர்ந்த இறைவன் அவரது மனக்குறையை போக்க அவரது விலா எலும்பிலிருந்து அவரது மனைவி அவ்வா(அலை) அவர்களைப்படைத்து கணவன், மனைவியாக வாழ செய்தான். இவ்வாறு இறைவன் முதல் முதலாக படைத்த அற்புத உறவுமுறை கணவன், மனைவி உறவாகும். இதுவே இல்லறமாக திகழ்கிறது.

இதனால்தான் என்னவோ "திருமணம் என்பது சொர்க்கத்தில் நிச்சயிக்கப்படுகிறது" என்று சொல்கின்றார்கள் போல. அதுமட்டுமின்றி மனிதன் இறந்தபின் மறுமை உலகமாகிய சொர்க்கத்தில் கூட கணவன் மனைவி உறவு முறை தான் தொடரும் என்பது இஸ்லாமிய மார்க்கத்தின் கருத்தாகும். உலகிலுள்ள வேறு எந்த உறவு முறையும் இப்படிப்பட்ட உயர்ந்த நிலையில் இருப்பதாக தெரியவில்லை. இறைவன் அனுமதிக்கப்பட்ட வழியில் தனது உள்ளத்தையும்,

உடலையும் இணைத்து வாழ்க்கை நடத்தக்கூடிய முறை கணவன், மனைவி உறவு முறையே தவிர வேறு இல்லை. கணவன், மனைவி இருவரும் சேர்ந்து வாழ்வதற்கு பெயர்தான் குடும்பம் என்று அழைக்கப்படுகிறது. இவர்கள்தான் ஒரு சமுதாயத்தை உருவாக்க முடியும். இவர்களுடைய இல்லற வாழ்க்கை வெற்றிகரமாக இருந்தால்தான் நாடு நலம் பெறும்.

இவ்வாறு சமுதாய வளர்ச்சிக்கு முக்கிய காரணமான இல்லற வாழ்க்கையை எவ்வாறு வாழ்ந்தால் வாழ்க்கை வெற்றி பெறும் என்பதை எம்.ஆர்.எம். அப்துற் றஹீம் அவர்கள் ஆண்களுக்கும், பெண்களுக்கும் உபதேசம் செய்யும் வகையில் இல்லறம் என்ற நூலை தனது படித்த அறிவையும், பட்டறிவையும்பயன்படுத்தி எழுதியுள்ளார். இந்நூல் இல்லறம் புகும் மணமக்களுக்கு பெரிதும் பயன்படும் .இல்லறத்தை நல்லறமாக்கி இன்ப வாழ்வு வாழ்வதே மிக முக்கிய நோக்கமாக இந்நூல் கொண்டுள்ளது.

இந்த நூலில் இல்லற செய்திகளை அவர் கொடுத்துள்ள ஏழு தலைப்பின் கீழ் விளக்குவதே சிறப்பாக இருக்கும் என்று நான் கருதுகிறேன்.

1. இல்லறம் இயற்கை வழி

இறைவனால் படைக்கப்பட்ட ஆணும், பெண்ணும் தனித்தனியாக இருந்தாலும் ஒருவர் மற்றவரை சார்ந்து வாழக்கூடிய நிலையை ஏற்படுத்தி உள்ளான். பெண் மீது ஆணுக்கும், ஆண் மீது பெண்ணுக்கும் ஒருவகை ஈர்ப்பை உண்டாக்கியுள்ளது இது இயற்கையாகும். எனவே இறைவன் இந்த இருவரையும் படைத்தது இணைந்து வாழ்வதற்காக தான். இல்லத்தில் அறத்தைக் கடைப்பிடித்து வாழ்க்கை நடத்த வேண்டும் அதற்கு பெயர் தான் இல்லறம் என்று சொல்லப் படுகிறது. ஆனால் இல்லற வாழ்க்கைக்கு ஆணைவிட பெண்ணே அதிக நல்லொழுக்கங்களை கடைபிடிக்க வேண்டும் இதனை ஆசிரியர் பின்வருமாறு கூறுகிறார்.

உலகில் உள்ள அனைத்து வேத நூல்களும் திருமணத்தை ஆதரிக்கவே செய்கிறது. உதாரணமாக திருக்குர்ஆனில்

இறைவன் 'மனைவிமார்கள் உங்களுக்கு ஆடை போன்றவர்கள், நீங்கள் அவர்களுக்கு ஆடை போன்றவர்கள்', 'இன்னும் உங்களை ஜோடி ஜோடியாக படைத்தோம்' என்றும் கூறுகின்றான். அதுமட்டுமின்றி 'நீங்கள் அமைதி பெற உங்களிலிருந்தே துணைவியரை உங்களுக்காகப் படைத்து உங்களுக்கிடையே அன்பையும், இரக்கத்தையும் ஏற்படுத்தி யிருப்பது அவனது சான்றுகளில் ஒன்றாகும். சிந்திக்கின்ற சமுதாயத்திற்கு இதில் பல சான்றுகள் உள்ளன' என்றும் கூறுகின்றான்.

"மனிதனுடைய நலனிற்காக, மனிதகுலத்தை வாழ்விப் பதற்காக, அவனுடைய இன்பதுன்பங்களில் பங்கு பெறு வதற்காக அவனுக்குத் துணை நிற்பதற்காகப் பெண்ணையும் தோற்றுவித்தான். அவ்வாறு தோற்றுவிக்கும் பொழுது பெண் ணினத்தை அழகின் திருவுருவாக, அன்பின் இருப்பிடமாக, தன் படைப்புகளிலெல்லாம் மேலானதாகத் தோற்றுவித்தான்"

"ஆனால் பிற்கால ஆசிரியர்களோ பெண்ணைப் பேயென்றும், மாய்கையென்றும், வெறுக்கத்தக்க மூவாசைகளில் ஒன்றென்றும், வீடுபெறுவதற்குத் தடை கல்லாக நிற்பதென்றும் இன்னும் என்னவென்னவோ பிதற்றிப் போந்தனர்"

"ஓர் ஆண், பல பெண்களைப் பார்த்து மருவ விரும்புவதையும் ஒரு பெண், பல ஆண்களைப் பார்த்து மருவ விரும்புவதையும் காமம் என்றும். ஓர் ஆண், ஒரு பெண்ணைப் பார்த்து அவளையே மருவ விரும்புவதையும், ஒரு பெண், ஓர் ஆணைப் பார்த்து அவனையே மருவ விரும்புவதையும் காதல் என்றும் கட்டுரைத்தனர் தமிழர்".

"காமம் இல்லையேல் தீமை என்ற பெயரே ஏற்பட்டிராது. நரகமே ஏற்பட்டிராது என்று அவன் எடுத்துரைக்கின்றான். இந்த உணர்வு ஏற்படுவதற்கு மூலகாரணமே பார்வை".

"ஒரு மனிதனின் கண்களுக்கு இனிமையாகத் தோற்றக் கூடியது மற்றொருவரின் கண்களுக்கு இனிமையாகத்

தோற்றுவதில்லை. எனவே அழகு என்பது காண்பவர்களின் கண்களைப் பொறுத்ததாகவே இருக்கின்றது."

கற்பு என்பது ஆண், பெண் இருபாலருக்கும் உரியது. ஆனால் பெண் தனது கற்பை பாதுகாப்பது மிக அவசியமான ஒன்று. கற்பை இழந்த பெண் சமுதாயத்தில் தாழ்வாக கருதப்படுவதும், அவளை தவறான பாதைக்கும் கொண்டு செல்கிறது. ஆணும், பெண்ணும் எவ்வாறு கற்பு நெறியை பாதுகாப்பது என்பது பற்றியும், உலக வாழ்வை வெறுத்து துறவறத்தில் வாழ்வதைவிட இல்லறமே சிறப்புடையது என்பதையும் பின் வருமாறு விளக்குகிறார்.

"நபிகள் நாயகம் அவர்களும் "ஒரு பெண்ணும் ஓர் ஆணும் தனித்திருப்பார்களாயின் அவர்கள் இருவர் மட்டும் ஆங்கு இருக்கவில்லை, அவர்களின் ஊடே சாத்தானும் இருக்கின்றான்" என்று கூறினர். சாத்தான் இருக்கும் பொழுது கற்பு என்னாவது?

"பெண்களின் கற்பைப் போற்றாதார் இவ்வுலகில் எவருமில்லை. "கற்புடைய பெண் இரத்தினத்தைவிட மேலான மதிப்புடையவள்" என்று பைபிள் மறை முழக்குகின்றது. கற்பை இழந்தவள் வேறு எந்த இழிசெயலையும் செய்யத் தயங்க மாட்டாள்" என்று மற்றோர் அறிஞன் எடுத்துரைக்கின்றான்.

"ஆணினத்திடம் பெண் எச்சரிக்கையாக நடந்து கொள்ள வேண்டும். இதற்கு அவளிடம் இருக்க வேண்டியது மன அடக்கம் தான்."

"கற்பை இழந்த பெண் மீண்டும் கற்பைப் பெற்றாள் என்று நாம் கண்டு அறியோம், கேட்டும் அறியோம்."

"அவளுடைய அவமானத்தை மறைப்பதற்கான அழகிய திரை என்னவென்றால் இறப்புத்தான்"

"கற்பை இழந்தவள் போன்று கற்பை இழந்தவனும் அவன் எவ்வளவு செல்வமும் சேகரமும் உள்ளவனாக இருந்த போதிலும் 'தலையின் இழிந்த மயிர்' போன்று சமூகத்தால் ஒதுக்கித் தள்ளப்பட வேண்டும்".

"புலனடக்கம் என்றால் நீய வழியில் செல்லாது அறிவு வழியில் அளவோடு சென்று அடக்கமாக இருப்பதைக் குறிக்குமேயன்றித் திருமணம் முடிக்காது இருப்பது என்று பொருள்படாது ஒவ்வோர் உறுப்பையும் ஒவ்வோர் அலுவல் செய்வதற்காக படைத்திருக்கும் இறைவன் இன உறுப்பையும் அதற்குரிய அலுவலை ஆற்றுவதற்காகவே படைத்துள்ளான். அதனுடைய அலுவல் இன்பம் நுகர்வதும் மக்களை உற்பத்தி செய்வதுமாகும். இதை உணராது தம்முடைய வேட்கையைத் துணிப்பதற்கு மருந்துண்பதோ, மணமுடிக்காதிருப்பதோ பெரிதும் தவறுடையது என்பதில் ஐயமில்லை எனவே தவறான புலனடக்கத்தைக் கடிந்தும் தாம் அத்தவற்றினைச் செய்யாதற்காகத் தம்மைப் புகழ்ந்தும் திருமூலர், 'அஞ்சும் அடக்கா அறிவறிந்தேனே' என்று கூறியுள்ளார். மேலும் அவ்விதம், 'அஞ்சும் அடக்கில் அசேதனமாம்' என்றும் மக்களுக்கு அறிவுறுத்துகின்றார்."

"காட்டில் கடும் தவம் செய்யும் துறவி தனக்கேதான் நன்மை செய்து கொள்ளப் பாடுபடும்பொழுது இல்வாழ்க்கை நடத்துகின்றவனோ தனக்காகவும் தன் குடும்பத்திற்காகவும் உலக மக்களின் நன்மைக்காகவும் பாடுபடுவதற்கான வாய்ப்பைப் பெறுகிறான். எனவேதான் துறவறத்தை விட இல்லறம் எவ்வளவோ மேலானது என்பதை வலியுறுத்துகிறது. அது இறைவனால் ஏற்படுத்தப்பட்ட இன்ப வாழ்வாகும்."

2. இல்லறம் புகும் முன்

இன்றைய காலத்தில் பொருளாதாரம் நிலையை நினைத்து பார்க்கும் இளைஞர்கள் திருமணம் என்று சொன்னாலே வெறுத்து ஓடுகின்றனர். ஏனெனில் குறைந்த வருமானத்தில் குடும்பத்தையும், மனைவி, குழந்தைகளை எவ்வாறு வளர்த்து பாதுகாப்பது என்ற அச்சம் நிலவுகிறது. ஆனால், நபிகள் நாயகமோ 'திருமணம் செய்யுங்கள் உங்கள் பொருளாதாரம் பெருகும்' என்று கூறுகின்றார்கள். திருமணம் செய்யாதவன் அரை மனிதனே, திருமணத்திற்குப் பிறகுதான் மனிதன் முழுமை அடைகிறான். மனிதன் தன் உணர்வுகளையும்,

ஆசையையும் சரியான முறையில் பூர்த்திச் செய்வதற்கு திருமணமே சிறந்த வழி. ஆதலில், ஆணும் பெண்ணும் விரைவில் மணமுடித்துக் கொள்வது நல்லதாகும்.

ஆனால், இன்று சிலர் காதல் வலையில் விழுந்து ஆரம்பத்தில் பிறரைப் பற்றி தெரியாத பல தீய குணங்கள் திருமணத்திற்குப் பின் தெரிந்து மனம் முறிவில் முடிந்து விடுகிறது. எனவே திருமணம் செய்யும்போது ஒரு ஆண் தனக்கான மனைவியைத் தேர்ந்தெடுக்கும் போதும், தந்தை தன் மகளை திருமணம் செய்துகொள்ளும் ஆணை தேர்ந்தெடுக்கும் போதும் கவனிக்க வேண்டிய முக்கியமான பண்பு நலன்களை மிக அழகாக விவரிக்கின்றார்.

"பெண் அழகை விரும்புகிறாள்; தாய், பணத்தை விரும்புகிறாள்; தந்தை, கல்வியைக் கவனிக்கிறார்; உறவினர், குலத்தை நோக்குகின்றார்கள். ஏனையோர், விருந்தில் நாட்டம் செலுத்துகிறார்கள். அவளோடு ஒத்த பண்பும், ஒத்த நலனும், ஒத்த அன்பும், ஒத்த செல்வமும், ஒத்த கல்வியும் உடையவனாய் இருக்கின்றானோ என்று ஒவ்வொரு தந்தையும் கவனிக்க வேண்டும். பெண் ஆணை விட விரைவில் பருவம் எய்தி விடுவதால் ஆணைவிடப் பெண் சற்று வயது குறைந்திருப்பதே இன்பம் நல்கும்."

"அழகு என்பது எல்லாரும் விரும்பக்கூடியதுதான். அழகைப் பெற்றிருந்ததனால் எத்தனையோ பெண்கள் சீரழிந்து போய்விட்டார்கள். அழகைப் பார்த்ததனால் எத்தனையோ ஆண்கள் நாசமாகிப் போய்விட்டனர். ஆதலில் ஒவ்வோர் ஆணும் பெண்ணும் தன்னுடைய அழகுக்கேற்றவரை மணந்து கொள்வாராக! அழகுக்கேற்றவர் என்று நான் இங்குக் குறிப்பிடும் பொழுது தனக்கு ஒத்த அழகுடையவர் என்பதையே குறிப்பிடுகிறேன்."

"சில தாய் தந்தையர் தங்களின் மகள் நல் முறையில் வாழவேண்டும் என்னும் நன்னோக்கத்துடன் அவளுக்குச் செல்வம் படைத்த கணவனைத் தேடித் திரிகின்றனர். இது தவறினும் தவறு என்பதை அவர்கள் உணர வேண்டும்.

எனவேதான் ஓர் அறிஞனும், 'நீ அறிவோடு மணமுடிக்க விரும்பினால் உன்னுடன் சம்மானவர்களுடன் மணமுடிப் பாயாக!' என்று கூறிச் சென்றான். செல்வர்கள் தங்களுடைய தரத்திற்குக் கீழாக உள்ள பெண்ணை மணமுடித்து அப்பெண்ணின் குடும்பத்திற்கு நல்வாழ்வு அளிக்க முன் வருகின்றார்களில்லை. அதற்கு மாறாகத் தங்களைவிடப் பொருளாதாரத் தகுதியில் உயர்ந்தவர்களின் குடும்பத்திலேயே மணமுடிக்கத் தவம் கிடக்கிறார்கள்."

"ஆடவர்கள் பெண்ணைப் பெற்றவர்களின் பணப் பையைக் காலி பண்ணுவதற்காக வாய் கூசாது விடுக்கும் கோரிக்கைகள் ஒன்றிரண்டல்ல. எனவே பெண்ணைப் பெற்றவர்களுக்கும் ஒரு பெண்ணை மணமுடித்துக் கொடுப்பதற்குள் போதும் போதும் என்று ஆகிவிடுகிறது. ஐந்து பெண்களைப் பெற்றுவிட்டாலோ அரசனும், ஆண்டியாகி விடுகிறான்."

"பணமே பெரிதெனக் கருதிப் பெண் தேடி மண முடிக்கும் ஆண்களின் கதியும் இரங்கத்தக்கதாகவே இருக்கிறது. செல்வ மகள் ஒருத்தியை மணமுடித்துக் கொள்ளும் ஓர் ஏழை, 'மனைவியைப் பெறவில்லை, தன் மீது ஆதிக்கம் செலுத்தக் கூடிய ஓர் இராணியைப் பெறுகின்றான்' என்னும் கிரேக்கப் பழமொழியையும், 'ஒரு பெண்ணை அவளுடைய பணத்திற்காக மணமுடிப்பவன் தன்னுடைய சுதந்திரத்தையே விற்று விடுகின்றான். ஆதலின் மனைவி என்வள் கண்ணால் மட்டும் பார்த்துத் தேர்ந்தெடுக்கப்பட வேண்டியவளல்லள், காதால் கேட்டும் தேர்ந்தெடுக்கப்பட வேண்டியவள் என்பதை அவர்கள் உணர்வார்களாக!"

"தனக்கு சமமான நாகரிகப் பழக்க வழக்கங்களும் படிப்பும் உள்ள பெண்ணை மண முடிக்கவோ செய்யலாமே யன்றி ஒரு போதும் தனக்கு மேலான பழக்க வழக்கங்களும் படிப்பும் உள்ள பெண்ணை மணமுடித்துக்கொள்ளக் கூடாது. ஆதலின் மனமொத்த திருமணமே இன்பத் திருமணமாகும். மனமொவ்வாத திருமணம் துன்பத் திருமணமேயன்றி வேறில்லை."

இவ்வாறு ஆணையும், பெண்ணையும் தேர்ந்தெடுத்து திருமணம் செய்து வைத்தால் அவர்கள் வாழ்க்கை இன்பகர மானதாக அமையும்.

3. புக்ககத்தில் மணப்பெண்

திருமணத்தை நிகழ்த்துபவர்கள் சில மனிதர்களை சாட்சியாக வைத்து இல்லறம் நடத்த ஒப்பந்தம் செய்வதே போதுமானது. ஆனால் இன்று சிலரோ தனது செல்வச் செழிப்பை வெளியில் காட்ட வேண்டும் என்பதற்காக ஆடம்பரம் முறையில் செல்வந்தர்களை மட்டும் அழைத்து ஏழைகளை வெறுத்து ஒதுக்குகிறார்கள். இதனால் இறைவன் கோபத்திற்கு ஆளாகின்றார்கள். எனவே புதிய தம்பதிகள் வாழ்க்கை பாதிக்கப்படுகிறது. திருமணமாகி கணவன் வீட்டிற்குச் செல்லும் பெண் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்று பின்வருமாறு கூறுகின்றார்.

"தாயே உன்மகள் தன் கணவனோடு சென்று விட்டாளே என்று கவலையுறாதே! பெண் என்பவள் முத்தைப் போன்றவள். அது கடலில் பிறந்த போதினும் அது கடலில் இருப்பின் கடலுக்குத்தான் என்ன பயன்? அதற்குத்தான் என்ன பெருமை? மாலையாகக் கோத்து அணியப் பெற்றால் தான் அதற்கும் பெருமை அது பிறந்த கடலுக்கும் பெருமை. அவள் இன்னிசைக்கு நிகரானவள். அது யாழிலே பிறப்பினும் யாழுக்கு அதனால் என்ன பயன்? அதைப் போன்றே பெண்களும் பிறந்தகத்தில் இருந்தால் அவர்களுக்கு பெருமை இல்லை; பிறந்தகத்திற்கும் பயன் இல்லை. மணமுடித்துக் கணவன் வீடு சென்றால் தான் அவளுக்கும் பயன்! பிறந்தகத்திற்கும் பெருமை".

"இவ்வாறு பிரியாவிடை பெற்றுப் புக்ககம் வரும் மணப் பெண்ணுக்கு அங்குள்ள மனிதர்கள், சூழ்நிலை ஆகியவை யெல்லாம் புதிதாக இருக்கின்றன. எனவே அவள் சற்று மயக்க முறுகிறாள். எனினும் கணவனின் அன்பும் மாமியார், ஆகியோர் துவக்கத்தில் காட்டும் பரிவும் பாசமும் அவளை இன்புறச் செய்கின்றன."

"புக்கத்தில் அவள் கணவனை மட்டுமன்று, மாமனார், மாமியார், நாத்துணார், அவர்களின் உறவினர்கள் ஆகிய அனைவரையும் திருப்திபடுத்த வேண்டும். அவர்கள் எல்லாருக்கும் அவள் நல்லவளாக நடந்துகொள்ள வேண்டும்."

"உலகில் தவறு செய்யாதவர்கள் ஒருவருமில்லை. எல்லாருமே தவறு செய்கிறார்கள் தாம். மாமியார் உடைத்தால் மண் சட்டி; மருமகள் உடைத்தால் பொன் சட்டி" என்று பழமொழியும் வழங்கி வருகிறது."

"இந்த மாமியார்-மருமகள் சண்டை இன்று நேற்று ஏற்படவில்லை. உலகம் தோன்றியது முதல் இதுவரை நடந்து வருகிறது. நம் நாட்டில் மட்டுமல்ல. உலகின் ஒவ்வொரு பாகத்திலும் நடந்து வந்திருக்கிறது."

"மருமகள் என்பவள் தன் மகனுக்கும் தனக்கும் தன் பெண் மக்களுக்கும் ஊழியம் புரிவதற்காகக் கொண்டுவரப்பட்ட அடிமை என்றே கருதிக் கொண்டு அவளை அற்ப விஷயங்களுக்கெல்லாம் அடாது பேசி, அவளுடைய குலம், குடும்பம் ஆகியவற்றையெல்லாம் இழித்துரைத்துப் படாத பாடுபடுத்தி விடுகிறாள்."

"ஒரு பெண் அழும் பொழுது அவளை நம்பிவிடாதே! ஏனெனில் தன் எண்ணத்தை நிறைவேற்றிக் கொள்ள அவள் விரும்பும் பொழுது அவள் தன்னுடைய கண்ணீர்ப்பையைத் திறந்துவிடுவது அவளுடைய இயல்பு."

"பெண்களின் மற்றோர் இயல்பு என்னவெனில் அவர்களின் ஒற்றுமைக் குறைவு. இரண்டு பெண்கள் ஒரு வீட்டில் ஒற்றுமையாக இருக்கமாட்டார்கள்."

"பெண்ணின் தலையை அவளுடைய இதயம் எப்பொ ழுதும் ஆட்சி செய்கிறது. ஆனால் ஓர் ஆணின் இதயத்தை அவனுடைய தலைதான் எப்பொழுதும் ஆள்கின்றது. பெண்களும் தங்களுடைய இதயத்தைத் தங்களின் தலை ஆளும்படியாகச் சிறிது அனுமதித்தால் கூட மாமியார் மருமகள் சண்டையோ, ஓரகத்தியார்களிடையே பூசலோ ஏற்படாமல் தவிர்க்கலாம்."

"மாமியாரும், 'சிறு பெண்; அறியாத்தனமாகச் செய்து விட்டாள். நம்முடைய மகள் இவ்விதம் செய்வதில்லையா?' என்று பரந்த மனப்பான்மையுடன் தவறுகளைப் பார்த்தும் பாராதது போல் இருந்து விடவும், மருமகளும் 'கணவரின் தாயாயிருந்தாலென்ன, என்னுடைய தாயாயிருந்தாலென்ன, கணவனுடைய தாய் என்னுடைய தாய்தான். என்னுடைய தாய் தவறு செய்துவிட்டால் என்னைக் கண்டிப்பதில்லையா? அதுபோல் மாமியாரும் கண்டிக்கிறார். அதனால் நமக்கு ஒன்றும் குறைவேற்பட்டுவிடாது. என்னவோ சொல்லிவிட்டுப் போகட்டும்' என்று அவள் சொல்வதைக் காதில் வாங்கியும் வாங்காதது போல் வாயை மூடிக்கொண்டிருந்துவிட்டால் எவ்வளவு நன்மை விளைவிக்கும்!"

"மணாட்டுப் பெண்ணுக்கும் அவளைப் பெற்றவர் களுக்கும் சில அறிவுரைகள் கூற விரும்புகிறேன். மணாட்டுப் பெண் தன் மாமியாருடனோ கணவருடனோ கோபித்துக் கொண்டு அடிக்கடி தன் தாய் வீட்டிற்கு ஓடிக்கொண்டிருக்கக் கூடாது. அவ்விதம் செய்வாளாயின் அவள் ஒருபோதும் வாழ மாட்டாள் என்று நான் கூறுவேன். அவளுடைய சிறப்பு எல்லாம் அவள் தன்னுடைய கணவனுடன் கூடி வாழும் பொழுதேயன்றி வேறில்லை."

"ஆதலின் பெண்கள் அதிகமாகப் பேசாது அளவோடு பேசிப் பொறுமையுடன் இருப்பார்களாயின் சண்டையும் இல்லை. சச்சரவும் இல்லை. எல்லாம் மங்களமாய் விளங்கும். எனவேதான் 'பெண்களுக்கழகு எதிர் பேசாதிருத்தல்' என்று ஔவைப் பாட்டியும், 'பேச்சில் மெதுவாக இருப்பதே பெண்களின் ஒரே நற்குணமாகும்' என்று ஆங்கிலப் பெருங்கவி ஷேக்ஸ்பியரும் கூறினார்கள்."

"பெண்கள் பொறுமையுடனும் ஆண்கள் அறிவுடனும் செயலாற்றினால் இல்லற வாழ்வே இன்ப வாழ்வாக விளங்கும் என்பதில் ஐயமில்லை."

4. சொர்க்கம் எங்கே

சுகம் மட்டும் நிறைந்த இடத்தைதான் சொர்க்கம் என்று சொல்லுவார்கள். ஆனால் அந்த சொர்க்கத்தை இந்த உலகிலேயே கொண்டுவருவது அன்பினால் பிணைக்கப்பட்ட இல்லறத்திற்கு நிகரான இன்ப சுகம் வேறொன்றும் இல்லை என்று கூறலாம். ஒரு மனிதனின் வாழ்க்கை சுவனமா! நரகமா! என்பதை அவனுக்கு கிடைக்கும் மனைவியை பொறுத்தே அமைகிறது. இப்படிப்பட்ட இல்லற வாழ்க்கையை இன்பகரமாக மாற்றுவதற்கு ஆசிரியருடைய அறிவுரைகள் நல்ல வழிகாட்டியாக இருக்கிறது.

"அவனுடைய உண்மையான மிருதுவான நண்பனாக விளங்கி அவனுடைய அல்லல் போக்கி அவனுடைய இன்பத்தின் ஊற்றாக விளங்குபவனே மேலான இல்லாளாவாள்"

"ஒருவர் மற்றவரின் நோக்கமறிந்து செயலாற்றும் பொழுதுதான் இருவரும் இணைந்து இல்லறம் நடத்த இயலும், ஒரு மனைவி, தன்னுடைய கணவனின் குறிக்கோள், நோக்கம் என்ன என்பதை அறிந்து அதனை எய்தப் பெறுவதில் அவனுக்கு உதவி செய்ய வேண்டும்"

"ஒரு கணவனும் தன்னுடைய மனைவியின் நோக்கமறிந்து அதற்கேற்றாற் போல் செயலாற்ற வேண்டும்"

"இருவரின் இல்வாழ்க்கை இன்பகரமாக இருக்க வேண்டுமாயின் அவர்கள் ஒருவரை ஒருவர் மகிழ்விப்பதில் தம் கவனத்தைச் செலுத்த வேண்டும் அதற்காக அவர்கள் சிறுசிறு தியாகங்களைச் செய்யத் தயங்கக் கூடாது"

"கணவனும் மனைவியும் ஒருவர் மற்றவருடைய உணர்ச்சிகளை மதித்து மற்றவருடைய நலன்களைத் தங்களின் மனத்தில் கொண்டு செயலாற்றும் பொழுதுதான் - அதாவது மற்றவருடைய கண், காது, இதயம் ஆகியவற்றால் பார்க்கவும், கேட்கவும் உணரவும் செய்யும் பொழுதுதான் அவர்களுடைய வாழ்வு இன்ப மயமாக இலங்குகிறது"

"ஒருவர் மற்றவருடைய இயல்புகளை நன்கு உணர்ந்து அவற்றிற்கேற்றாற்போலத் தங்களுடைய இயல்புகளை மாற்றிக் கொள்ளவோ பெருநோக்குடன் சகித்துக் கொள்ளவோ செய்யின் வாழ்வு இன்பம் கொழிக்கும்"

"ஷாஜஹானும் மும்தாஜும் வாழ்ந்த காதல் வாழ்வு இறவாப் புகழ் பெற்ற தாஜ்மஹாலாக உருவெடுத்திருப்பதை நாம் காண்கிறோம்"

"கணவன் - மனைவியரிடையே பிணக்கு ஏற்படுவதற்கான முக்கியமான காரணங்கள் உடற்கோளாறு, நீங்கா அயர்வு, அன்புக் குறைவு, உடல் உறவில் ஏமாற்றம், வாழ்க்கையிலே ஒருவித வெறுப்பு ஆகியவைகளேயாகும் என்று மனோதத்துவ நிபுணர்கள் கூறுகிறார்கள்"

"பெண்கள் தங்கள் மீது தங்களின் கணவர்கள் அன்பைச் சொரிய வேண்டுமென்று ஆசைப்படுகிறார்கள், தங்கள் கணவர் தங்களைப் பாராட்ட வேண்டும். தங்கள் மீது தங்களின் வேலை மீது புகழ் மாலை சூட்ட வேண்டும் என்று பெண் மனம் விரும்புகிறது"

"கணவர்கள் தங்கள் மனைவிகள் மீது தங்களுக்குள்ள அன்பை வெளியே காட்டவும் அவர்களுக்குச் சிறுசிறு அன்பளிப்புகள் செய்யவும் அவர்களுடைய சமையலைப் புகழ்ந்து ஓரிரு பாராட்டு மொழிகள் பகரவும் செய்தால் எவ்வளவோ நன்றாயிருக்கும்"

"கணவர்களுக்கு ஊழியம் புரியவும், அவர்களை நேசிக்கவும் அவர்களுக்குக் கீழ்ப்படியவும் கடமைப்பட்டுள்ள பெண் இனமானது அவர்களை அடக்கி ஆளவும் அவர்கள் மீது அதிகாரம் செலுத்தவும் முனைவதைக் கண்டு நான் வெட்கமுறுகிறேன்"

"மனைவியர் தங்களுக்குச் செய்யும் கொடுமைகளில் மிகவும் சகிக்க முடியாததாக கணவர்கள் கருதுவது அவர்கள் தங்களை குறை கூறுவதையும் திட்டுவதையும் தான் என்ற முடிவுக்கு வந்துள்ளார்"

"அவர்கள் வாயை மூடிச் சற்றுப் பொறுமையோடு இருந்தால் எல்லாம் இன்பகரமாக இருக்கும்"

"மனைவியின் வசைமாரியைப் பொறுக்க இயலாது எத்தனை கொலைகள், எத்தனை தற்கொலைகள், எத்தனை மணமுறிவுகள், எத்தனை மூளைக் குழப்பங்கள் எல்லாம் உலகில் ஏற்பட்டுள்ளன"

"மனைவி, தான் கூறுவதற்கு மாறாக நடப்பின் அவளைக் கண்டிக்கவோ, அவளுடன் சிறிது நேரம் பேசாமல் இருக்கவோ, தன்னுடைய வெறுப்பைக் காட்டும் முகத்தான் அவளைத் தன் படுக்கையிலிருந்து பிரித்து வைக்கவோ ஒரு கணவன் செய்ய லாமேயன்றி அவளை மிருகத்தனமாக அடிப்பது ஒருபோதும் சரியாகாது. ஆதலின் கணவனும் மனைவியும் ஒருவர் மற்றவரு டைய குறையை மன்னித்தும் மறந்தும் செயலாற்றுவார் களாயின் இருவரும் இன்பகரமாக இல்வாழ்வு நடத்தலாம்"

"ஒரு மனைவியானவள் தன்னுடைய கணவனை வசப்படுத்தி ஆள்வதற்கான திருமந்திரம் 'கிழ்படிதல்' என்னும் ஒரே ஒரு மொழியில்தான் உள்ளது"

5 மனைவி கணவனின் துணைவி

மனைவியானவள் தன் கணவனின் முன்னேற்றத்திற்கு துணையாக திகழவேண்டும். அதைத்தான் 'காதல் ஒருவனைக் கைப்பிடித்து, அவன் காரியம் யாவினும் கைகொடுத்து' என்று ஒரு கவிஞன் கூறுகிறார். நல்ல மனைவியை பெற்றவர்கள் இவ்வுலகில் பெரும் பேறு பெற்றவர்கள். உலக புகழ்பெற்ற அறிஞர்கள் எல்லாம் முன்னேறுவதற்கு அவர்களது மனைவிதான் காரணமாக இருந்திருக்கிறார்கள். நல்ல மனைவியால் கணவன் அடையும் சிறப்பை எடுத்துரைக்கிறார். கணவனின் முன்னேற்றத்திற்கு மனைவியினுடைய பங்களிப்பு எவ்வாறு இருக்க வேண்டும் என்பதை பின்வருமாறு கூறுகிறார்.

"உலகத்திலேயே ஒருவனுக்கு மிகவும் புனிதமான, மிகவும் இனிமையான ஓர் இடம் இருக்குமாயின் அது அவனுடைய வீடுதான் என்று ஓர் அறிஞன் கூறினான்"

"ஒரு பெண் வீட்டையே ஒரு போர்க்களமாகவும் கணவனுக்கு நரகமாகவும் ஆக்கிவிட்டால் பின்னர் அவன் எங்கு அமைதியை, ஓய்வை, இன்பத்தைப் பெறுவது?. ஆதலின் ஒரு மனைவியின் தலையாய கடமை தன்னுடைய இல்லத்தைக் தன் கணவனுக்கு அன்பின் இருப்பிடமாக ஆக்கிக்கொள்வது"

"தன் கணவனின் கண்களுக்கு அழகாகத் தோற்ற மளிக்குமாறு தன்னை அலங்கரித்துக் கொள்வதுதான். ஆனால் சில பெண்கள் வீட்டு வேலைகளைக் கவனித்துக் கொள்ள வேண்டிய பொறுப்பு வேலைக்காரியைச் சார்ந்தது என்று கருதி எப்பொழுது பார்த்தாலும் கண்ணாடியும் கையுமாக இருப்பார்கள். ஒரு பெண் அதிகமதிகமாக கண்ணாடியைப் பார்க்கப் பார்க்க அவள் அதிகமதிகமாகத் தன்னுடைய இல்லத்தைப் பாழ்படுத்துகிறாள்"

"ஒரு பெண் தன்னை அழகுபடுத்திக் கொள்வது அவளுடைய கணவனுக்காகவே இருக்கவேண்டுமேயன்றி வேறு எவருக்காகவும் இருக்கக் கூடாது"

"பெண்களுக்கு அடக்கம் என்பது வீட்டில் அடங்கி இருப்பதை மட்டுமல்லாது பேச்சு, செயல் ஆகியவற்றிலும் அடங்கி இருப்பதை குறிக்கும். பேசுவது, சிரிப்பது ஆகியவையெல்லாம் அடக்கத்தோடுதான் இருக்க வேண்டும். ஆனால் சில பெண்கள் தங்களைப் பிறர் மெச்ச வேண்டுமென்று உரத்துப் பேசவும், கலகலவென்று சிரிக்கவும் ஊர் சுற்றித் திரியவும் செய்கின்றனர். அவ்விதம் செய்வது அவர்களுக்குப் புகழையல்ல இழிவைத்தான் தேடித்தரும். எனவேதான் ஷேக்ஸ்பியரும், 'அழகு ஒரு பெண்ணைப் பெருமைக்காரியாக ஆக்குகிறது. அடக்கம் அவளைத் தெய்வீகத் தன்மையுள்ள வளாக ஆக்குகிறது' என்று கூறினார்"

"ரோமானியப் பேராசிரியன் புளூட்டார்க் 'மணமகளுக்கு அறிவுரைகள்' என்னும் தன்னுடைய கட்டுரையில் பின்வருமாறு கூறுகின்றான்: 'நல்ல மனைவியானவள் தன்னுடைய கணவனின் முகத்தோற்றத்தையும் உணர்ச்சிகளையும் பிரதிபலிக்கக்கூடிய ஒரு கண்ணாடியாக விளங்க வேண்டும். அவன் மகிழ்வுடன்

இருந்தால் அவளும் மகிழ்வுடன் இருக்க வேண்டும். அவன் சிரித்தால் அவளும் புன்முறுவல் பூக்கவேண்டும். அவன் துக்கத்துடன் காணப்பட்டால் அவளும் அவனுடைய துக்கத்தில் பங்குகொள்ள வேண்டும்"

"தனக்கு அலுவலகத்தில் ஏற்பட்ட துன்பங்கள், துயரங்கள் ஆகியவற்றை யாரிடம் கூறி ஆறுதல் பெறுவது? தன் மனைவியிடம் கூறியே ஆறுதல் பெற வேண்டியுள்ளது"

"ஆனால் ஒரு கணவன் தன்னுடைய துன்பங்களையும் துயரங்களையும் வேறு எவரும் கிடைக்காது தன் மனைவியிடம் கூறும் பொழுது அவள் ஏதோ தலைபோகும் வேலை இருக்கிறது போன்று அதற்குச் செவி சாய்க்காது சென்று விடுவது எவ்வளவு பண்பாட்டுக் குறைவு என்று நான் கேட்கிறேன்"

"அவர்கள் மேலான மனைவியர் அவ்விதம் ஒரு போதும் செய்யவே மாட்டார்கள். தங்களின் கணவனின் துயரங்களைச் செவி தாழ்த்திக் கேட்பதோடு அவனுக்கு ஆறுதலும் அறிவுரைகளும் நல்குவர்"

"ஒரு குடும்பம் வாழ்வதும் வீழ்வதும் பெண்ணாலேயாகும். சில பெண்களோ செட்டாகச் செலவழித்துக் கணவனின் சிறு வருமானத்திற்குள் சிறப்பாகக் குடித்தனம் நடத்துகிறார்கள். பெருவாரியான வருமானம் வந்த போதினும் மனைவியரின் ஊதாரித்தனத்தால் பல குடும்பங்கள் பாழாகிப் போயுள்ளன. வருவாய்க்குமேல் செலவு செய்வது வறுமையைத்தான் உண்டுபண்ணும்"

"பெரும்பாலும் பெண்களே சேலை, நகைப் பைத்தியம் பிடித்தவர்களாக உள்ளனர். சில பெண்கள் தங்களின் கணவர் வாங்கிக் கொடுத்த ஆடை ஆபரணங்களை அணிந்துகொண்டு மன நிறைவுடன் இருந்த போதினும் அவர்களின் இல்லத்திற்கு வரும் சில பெண்கள் அவர்களின் மன அமைதியைக் குலைத்து விடுகின்றார்கள். கணவர் இதுகாறும் செய்த நன்மைகளையும் ஒரு நொடியில் மறந்துவிட்டு, 'உங்களை மணமுடித்து நான் என்ன சுகத்தைக் கண்டேன்? அவர்கள் வீட்டில் பாருங்கள்,

இன்ன இன்ன நகைகள் எல்லாம் செய்துள்ளார்கள், இவர்கள் வீட்டில் பாருங்கள், இன்ன இன்ன பட்டும் பண்படங்களெல்லாம் வாங்கியுள்ளார்கள்' என்று தங்களின் கணவரை நோக்கிக் கடுமொழி வீசி எறிகின்றார்கள்"

"சிலர் வயிற்றைக் கட்டி வாயைக் கட்டிச் சிக்கனம் செய்கின்றனர். இதுவும் வெறுக்கத் தக்கதாகும். பகல் முழுவதும் உழைத்து விட்டு வீடு திரும்பும் கணவனுக்கு நல்ல உணவுகளை, உடலுக்குத் தகுந்த உணவுகளை அவன் விரும்பும் உணவுகளை ருசிகரமாகத் தன் கையால் தயாரித்து அவன் அருகில் அமர்ந்து உண்ணச் செய்வதே மனைவியின் தலை சிறந்த கடமை"

"விருந்தினர்கள் எவராக இருந்த போதினும் அவர்களுக்கு நல்ல மறையில் விருந்தளிப்பது இல்வாழ்வில் ஈடுபட்டிருப் பவர்களின் கடமை"

"ஆங்கில அறிஞன் பிரான்ஸிஸ் பேகன் கூறியது போன்று, 'கணவனுடைய இளமையில் அவனுக்கு இன்பம் தரும் மனைவியாகவும், நடுவயதில் அவனுக்கு ஆலோசனை நல்கும் தோழியாகவும், முதுமையில் அவனுக்குப் பணிவிடை செய்யும் தாதியாகவும், விளங்கி அவனுடைய வாழ்வை வெற்றிகர மானதாக ஆக்க உதவுவார்களாக!"

6. இல்லற இன்பம்

இல்லறம் என்று சொன்னாலே அங்கு உடலுறவு என்பது கட்டாயமாக இருக்க வேண்டிய ஒன்று. ஆனால் முழுவதுமாகச் சொல்லிக் கொடுத்தோ, படிக்கச் செய்தோ உடலுறவு பற்றி விளக்க முடியாது. இந்த உடலுறவு நிறைவு பெறவில்லை என்றால் இல்லறத்தில் இன்பம் நிலைக்காது. எனவே இல்லறத்தில் உடலுறவு எவ்வாறு இருக்க வேண்டும் என்றும், கருவில் இருக்கும் குழந்தை ஆணா அல்லது பெண்ணா என்பதையும் கண்டறிய மருத்துவர், உடல் உறவு கலை வல்லுனர்கள், தமிழ் இலக்கியங்கள், சித்தர்கள் கூறும் செய்தியை அழகாக விவரிக்கின்றார்.

"காதலர் இருவரிடையே எவ்வளவுதான் கருத்தொற்றுமை இருந்த போதினும் அவர்கள் உடலுறவு பற்றிய வரையில் ஒருவரை மற்றொருவர் மன நிறைவு செய்யவில்லையாயின் அவர்களின் வாழ்வு விரைவில் கசந்து, பிணக்கும் பூசலும் மலிந்ததாகி, பின்னர் மணமுறிவில் முடிந்துவிடும் என்பதில் ஐயமில்லை"

"கணவன், மனைவியை மன நிறைவு செய்யத் தவறுவதும் மனைவி அதனால் கொண்ட ஏமாற்றமுமேயாகும் சில பெண்கள் தங்களின் கணவருக்குத் துரோகம் செய்து தவறான வழியில் செல்வதற்கு இதுவும் ஒரு காரணமாகும்"

"உடலுறவு பற்றிய வரையில் மனைவியை மகிழ்வு செய்ய விரும்பும் கணவன் ஆண் தன்மையுள்ளவனாக இருக்க வேண்டும். அவ்விதம் இல்லாதார் மணமுடித்துக் கொள்ளவே கூடாது என்று நான் கூறுவேன். அவ்விதம் உள்ளவர்கள் தங்களின் ஆண் தன்மையை வெங்காயம், தேன், முந்திரிப் பருப்பு, பாதாம் பருப்பு ஆகியவற்றில் ஏதாவதொன்றைத் தொடர்ந்து சில நாட்கள் சாப்பிடுவதன் மூலம் அதிகரித்துக் கொள்ளலாம்."

"ஆண் விரைவில் உணர்ச்சி பெற்று அதன் காரணமாகத் தன் மனைவியுடன் மருவி விரைவில் தன் உணர்ச்சியின் உச்சத்தை எய்திச் சோர்ந்து விடும்பொழுது பெண் அவ்வுணர்ச்சியைத் தாமதமாகவே எய்தப் பெறுகிறாள். இந்த உண்மையைப் பெரும்பாலான ஆண்கள் உணர்வதில்லை"

"ஒரு கணவன் தன் மனைவியுடன் மருவுமுன் அவளுடன் இன்பகரமான கேளிக்கை மொழிகள் பேசி அவளை மகிழ்வித்து அவளுக்குத் தன்னுடன் மருவுவதற்கான மன வெழுச்சியை உண்டுபண்ண வேண்டுமென்று உடல் உறவுக் கலை வல்லுனர்கள் கூறுகின்றனர்"

"கணவன் தனது தாது வெளியாகும் போலிருக்கும் நிலையில் சற்று ஓய்வதும் மூச்சை ஆழமாக உள்ளே இழுப்பதும் எண்ணத்தை வேறு பக்கம் திருப்பிக்கொள்வதும் ஆகும்."

"ஆனால் ஒரு பெண்ணுக்கு மாதவிடாய் சூதகம் ஏற்பட்டுப் பதினைந்து நாட்களுக்குள் அவளின் கருப்பையினுள் புகும் ஆணின் விந்து நீரே அவளுடைய கருமுட்டையுடன் கூடி மனித உற்பத்திக்கு வழிகோலுமேயன்றி அவளோடு மருவும் எல்லாக் காலத்திலும் வெளியாகும் விந்து நீர் அவ்விதம் ஏற்பட வழிகோலாது. அவர்களுக்குச் சூதகம் வெளிப்பட்டுக் கொண்டிருக்கும் பொழுது அவர்களுடன் மருவுதல் பாவம் என்று மத நூல்கள் கூறுகின்றன."

"சூதகம் ஏற்பட்ட நேரத்திலிருந்து இருபத்து நான்கு மணிநேரம் கழிந்த நேரத்தை ஒரு நாளாகக் கணக்கிட்டு அதன் பிரகாரம் வரும் இரட்டைப் பட்ட நாட்களில் மருவிக் கருத்தரிக்கும் குழந்தைகள் ஆணாகப் பிறக்குமென்றும் ஒற்றைப்படை நாட்களாக மருவிக் கருத்தரிக்கும் குழந்தைகள் பெண்ணாகப் பிறக்குமென்றும் மருத்துவக் கலை வல்லுனர் கூறுகின்றனர்"

"மேலும் ஒரு கணவன் தன் மனைவியுடன் மருவும் பொழுது அவள் மலச்சிக்கல் இல்லாத நிலையிலும் சிறுநீர்ப்பை நிரம்பியிராத நிலையிலும் மருவ வேண்டும். அவளுடைய மலப்பை நிரம்பியிருக்கும் நிலையில் அவளை மருவினால் அப்பொழுது தரிக்கும் குழந்தை மந்தனாக இருக்கும். சிறுநீர்ப்பை நிரம்பியுள்ள நிலையில் மருவின் பிறக்கும் குழந்தை ஊமையாக இருக்கும். மலக்குடலும் சிறுநீர்ப்பையும் நிரம்பியிருக்கும் பொழுது தரிக்கும் குழந்தை குருடாக இருக்கும் என்று திருமூலர் கூறுகிறார்."

"கருவிலிருக்கும் குழந்தை ஆணா, பெண்ணா என்பதை அறியச் சூலுற்ற மங்கையின் மூக்கின் வலத்துளையில் மூச்சு எப்பொழுதும் தங்கு தடையற்று வேகமாக ஓடிக்கொண் டிருந்தால் பிறக்கும் குழந்தை ஆணாகப் பிறக்கும் என்றும் இடப்பக்கம் அவ்விதமே ஓடிக் கொண்டிருந்தால் பிறக்கும் குழந்தை பெண்ணாகப் பிறக்கும் என்றும் சித்தர்கள் சிலர் கூறுகின்றார்கள்"

7. குழந்தை வளர்ப்பு

திருமணமாகி உடலுறவு கொள்ளும் எல்லோருக்கும் குழந்தை பாக்கியம் கிடைப்பது இல்லை. குழந்தை என்பது மனிதனுடைய செல்வங்கள் அனைத்தையும் விட உயர்ந்த செல்வமாகும். இவ்வாறு தனக்கு கிடைக்கும் குழந்தைச் செல்வங்களை நல்ல முறையில் வளர்த்து சமுதாயத்திற்கு பயன்தரும் வகையில் உருவாக்குவது ஒவ்வொரு பெற்றோரின் மீதும் கடமையாகும். இதைத்தான் நபிகள் நாயகம் அவர்கள் 'ஒரு தந்தை தன் மகனுக்கு அளிக்கும் சிறந்த அன்பளிப்பு நல்லொழுக்கமாகும்' என்கிறார்கள். குழந்தையை பெற்றெடுத்து அவர்களுக்கு நல்ல பெயரைச் சூட்டி, நல்ல கல்வியைப் போதித்து, நல்ல வாழ்க்கை துணையை ஏற்படுத்துவது பெற்றோரின் கடமையாகும். 'நூலைப் போல சேலை, தாயைப் போல பிள்ளை' என்ற பழமொழிக்கு இணங்க பெற்றோர்களின் வளர்ப்பில் தான் ஒரு குழந்தையின் எதிர்காலமே இருக்கிறது. எனவே அப்படிப்பட்ட குழந்தை வளர்ப்புக்கு தேவையான அரியவகை முறைகளை பின்வருமாறு காண்போம்.

"குழந்தையைப் பற்றி நெப்போலியன் குறிப்பிடும் பொழுது, 'குழந்தைகளின் விதியைத் தீர்மானிப்பவள் அவர்களின் அன்னையே யாகும்' என்று கூறுகிறான்"

"பெற்றோர்களோ தங்களின் குழந்தைகளுடன் அன்புடன் மென்மையாக நடந்து கொள்ள வேண்டுமென்று கருதி அவர்களுக்கு அளவுக்கதிகமான செல்லம் காட்டி அவர்களைக் கெடுத்துவிடுகிறார்கள். அவர்கள் கேட்ட பொருள்களை எல்லாம் வாங்கிக் கொடுத்து அவர்களை வீணாக்கி விடுகிறார்கள். மற்றும் சில பெற்றோர்களோ, தங்களுடைய குழந்தைகளைக் கண்டிப்புடன் வளர்க்க வேண்டுமென்று எண்ணி அவர்கள் மீது அடிக்கடிச் சீறிச் சினக்கவும் அவர்களைக் குறை கூறிக் கண்டிக்கவும் அவர்களின் மீது தங்களின் கருத்துக்களைத் திணிக்கவும் செய்கின்றனர். அதன் காரணமாக அவர்கள் பெரியவர்களானதும் தங்களின் பெற்றோர்களுக்கு

எதிராகப் புரட்சிக் கொடியைத் தூக்கத் தொடங்கி விடுகின்றனர்"

"பெற்றோர்களும் மற்றவர்களும் எவ்வாறு நடந்து கொள்கிறார்களோ அவ்விதமே குழந்தைகளும் நடக்கத் தொடங்குகின்றன. ஆதலின் பெற்றோர்கள் தங்களின் குழந்தைகளின் முன்னிலையில் வைத்துப் பிறரை ஏசவோ, திட்டவோ செய்யின் அதே போன்று குழந்தைகளும் நடக்கவும் அதே மொழிகளால் பிறரை ஏசவும் திட்டவும் செய்கின்றன"

"முடிந்த மட்டும் குழந்தைகளை நல்ல குழந்தைகளுடனும் நல்ல மனிதர்களுடனும் பழக அனுமதிப்பதே நல்லதாகும். ஆனால் அதற்காக அவர்களை மற்றப் பிள்ளைகளுடன் சேர்ந்து பழகுவதைத் தடுத்துத் தாங்கள் பெருமக்கள், மற்றவர்களெல்லாம் இழிமக்கள் என்ற தவறான மனநிலையை அவர்களுக்கு உண்டுபண்ணிவிடக் கூடாது"

"ஆதலின் இளமையிலிருந்தே குழந்தைகளுக்கு நல்ல பழக்க வழக்கங்களைப் பயிற்றுவிக்க வேண்டியது பெற்றோர்களின் கடமை. ஏனெனில் 'தொட்டில் பழக்கம் சுடுகாடு மட்டும்' என்பது பொய்யாமொழி"

"இளமையிலிருந்தே அன்பு, இரக்கம், தயை ஆகிய நற்பண்புகளை நம்முடைய செயல்கள் மூலம் அவர்களுக்குப் போதிக்க வேண்டும்"

"தங்களின் வேலையைக் கூடத் தாங்களே செய்து கொள்ள விடாது பெற்றோர்கள் தடுப்பது அவர்களின் தன்னம்பிக்கையைக் குன்றச் செய்வதோடு அவர்களின் செயலாற்றும் தன்மையையும் குறைப்பதாகும். அவ்விதம் செய்வதற்குப் பதிலாக அவர்களுக்கு அவர்களுடைய வேலைகளை அவர்களே செய்யத் துணை செய்தால் எவ்வளவோ, நற்பலன்கள் ஏற்பட ஏதுவாகும். இதற்கு மாறாக அவர்களை இனிமையுடன் விசாரித்து, தவறு செய்திருப்பின் இதமான முறையில் அவர்களைத் திருத்தின் நற்பயன்கள் விளையும் என்பதில் ஐயமில்லை. சில பெற்றோர்கள் தங்களின் குழந்தைகளை அவர்களின் முன்னிலையில் வைத்து மற்றவர்களுடன் ஒப்பிட்டு உயர்வாகவோ, தாழ்வாகவோ பேசுகின்றார்கள். இரண்டும் தவறுடையது என்பதே நம் கருத்தாகும்"

"தனக்கு இரண்டு மூன்று குழந்தைகள் இருக்குமானால் எல்லாக் குழந்தைகளிடமும் ஒரே வித அன்புடன் நடந்து கொள்ளின் அவர்களிடையே நீங்கா அன்பு ஏற்பட வழி ஏதுவாகும்"

"மற்றோர் அறிஞனும், 'உன்னுடைய குழந்தைகளைப் பயத்தால் உன்னுடன் இணைப்பதைவிட மரியாதையுடனும் மிருதுத் தன்மையுடனும் உன்பால் அரவணைத்துக் கொள்வது எவ்வளவோ மேலானது' என்று கூறுகின்றான்"

"இளம் கொம்புகள் எவ்வாறு வளைக்கப்படுகின்றவோ அவ்வாறு மரம் வளருகிறது என்று ஓர் அறிஞன் கூறிச் சென்றான், ஆதலின் குழந்தைகளை நாம் எவ்வழியில் வளர்க்கின்றோமோ அவ்வழியில் தான் அவர்கள் வளருவார்கள்"

மேலே சொல்லப்பட்ட ஏழு தலைப்பின் கீழ் உள்ள செயல்களை கடைப்பிடித்து வாழ்ந்தால் நம்முடைய இல்லற வாழ்வும், குழந்தை வளர்ப்பும் சிறப்பாக அமையும் என்பதில் எத்தகைய ஐயமும் இல்லை. இத்தகைய வாழ்க்கை முறையையே இறைவன் விரும்புகிறான்.

இஸ்லாமிய இலக்கியக் கழகம்

ஜமால் முகமது கல்லூரி முதுகலைத் தமிழாய்வுத் துறை

யுனிவர்ஸல் பப்ளிஷர்ஸ்

பன்னூலாசிரியர் எம்.ஆர்.எம். அப்துற்-றஹீம்

நூற்றாண்டு விழா - பன்னாட்டு ஆய்வரங்கம்

திருச்சி ஜமால் முகமது கல்லூரியில் 26.03.2022 அன்று

எம். ஆர்.எம். அப்துற்-றஹீம் படைப்புலகம்

என்ற தலைப்பில் நடைபெற்ற பன்னாட்டு ஆய்வரங்கில்

திரு. ~~திருமதி~~ பேரா. நி. அமிருதீன் .....அவர்கள்

உதவிப் பேராசிரியர், தமிழாய்வுத் துறை,

ஜமால் முகமது கல்லூரி (தன்னாட்சி)

திருச்சிராப்பள்ளி. 20

பங்கேற்று ஆய்வுக் கட்டுரை வழங்கியமையைப் பாராட்டிச் சான்றளிக்கப்படுகிறது

தலைவர்
முதுகலைத் தமிழாய்வுத் துறை
ஜமால் முகமது கல்லூரி

மேலாண்மை இயக்குநர்
யுனிவர்ஸல் பப்ளிஷர்ஸ்

தலைவர்
இஸ்லாமிய இலக்கியக் கழகம்

அப்துற்-றஹீம்

ஆய்வுச் சரம்



யுனிவர்ஸல்
பப்ளிஷர்ஸ்

அப்துற்-றஹீம்
ஆய்வுச் சரம்

தொகுப்பாசிரியர்கள்

முனைவர் சேமுமு முஹமதலி,
முனைவர் மு.அப்துல் சமது,
முனைவர் மு.இ. அகமது மரைக்காயர்,
எஸ்.எஸ். ஷாஜஹான்

யுனிவர்ஸல் பப்ளிஷர்ஸ்

2, வடக்கு உஸ்மான் சாலை, முதல் மாடி,
(கோடம்பாக்கம் மேம்பாலம் அருகில்)
தியாகராய நகர், சென்னை - 600 017.
✆ : 2834 3385, 94440 47786
E-mail: universal_pub2002@yahoo.co.in
Website: www.universal publishers.co.in

அப்துற்-றஹீம் ஆய்வுச் சரம்
முனைவர் சேமுமு முஹம்மதலி,
முனைவர் மு.அப்துல் சமது,
முனைவர் மு.இ. அகமது மரைக்காயர்,
எஸ்.எஸ். ஷாஜஹான்
பதிப்பு விவரம்
முதற் பதிப்பு மார்ச், 2022
உரிமை © பதிப்பகத்திற்கு
வெளியிடுபவர்
பாத்திமா ஷாஜஹான்
யுனிவர்ஸல் பப்ளிஷர்ஸ்
2, வடக்கு உஸ்மான் சாலை,
(கோடம்பாக்கம் மேம்பாலம் அருகில்)
முதல் மாடி, தியாகராயர் நகர்,
சென்னை - 600 017.
✆ : 044-2834 3385, 94440 47786
ஒளி அச்சு : சு. அசோக்குமார், 94877 31019
அட்டை வடிவமைப்பு : ஜானி, 98414 96549
அச்சு : கிளிக்டுபிரிண்ட், சென்னை - 600 018.
பக்கங்கள் : 512 (⅛ டெமி)
விலை : ₹ 450/-

ISBN: 978-93-92346-30-9

Title of the Book : **ABDUR-RAHEEM AAIVUCH CHARAM**
Dr. SeMuMu MUHAMMAD ALI,
Dr. M. ABDUL SAMAD,
Dr. M.E. AHAMED MARAICKAYAR,
Alhaj S.S. SAJAHAN
© Publisher
Language : **Tamil**
Edition : **First - March, 2022**
Publisher
Fatima Sajahan
Universal Publishers
2, North Usman Road,
(Near Kodambakkam Overbridge)
T. Nagar, Chennai - 600 017.
✆ : 044-2834 3385, 94440 47786
Typeset : **S. Asokkumar,** 94877 31019
Wrapper design : **Johny,** 98414 96549
Printed at: clictoprint | *Chennai-600 018.*
No.of Pages : **512** (⅛ Demy)
Price : **₹ 450/-**

தோரணவாயில்!

இருபதாம் நூற்றாண்டில் தமிழ்கூறு எழுத்துலகில் இணையற்ற ஆளுமையாகப் புகழ்பெற்று இலங்கியவர் பன்னூல் பேரறிஞர் எம்.ஆர்.எம். அப்துற்-றஹீம். சுய முன்னேற்றத் தன்னம்பிக்கை நூல்களை முதன்முதலாகப் படைத்து முன்னோடி எழுத்தாளராக வெற்றி உலா வந்தவர் எம்.ஆர்.எம். அப்துற்-றஹீம். முப்பதுக்கும் மேற்பட்ட அவரது தன்னம்பிக்கை நூல்கள் ஆயிரக்கணக்கானவர்களின் வாழ்வில் பேரொளியைத் தந்து அவர்கள் புகழ் ஏணியில் உயர்வதற்கு வகை செய்தவையென்றால் அது மிகையன்று.

இஸ்லாமியக் கலைக் களஞ்சியம் (4 பாகங்கள்), அல்ஹதீஸ் - பெருமானாரின் பொன்மொழிப் பேழை (3 பாகங்கள்), நபிமார்கள் வரலாறு (2 பாகங்கள்), வலிமார்கள் வரலாறு (5 பாகங்கள்) முதலிய இஸ்லாமிய நூல்கள் ஒரு பல்கலைக் கழக ஆய்வுத் துறையோ, கல்லூரித் தமிழாய்வுத் துறையோ சாதிக்கமுடியாத சாதனைகளாக அமைந்து பன்னூலாசிரியர் அவர்களை வாழ்நாள் சாதனையாளராக மிளிரச் செய்துள்ளன.

ஆங்கிலத்தில் எழுதியுள்ள 'MUHAMMAD THE PROPHET' எனும் நூல் ஆசிரியரது ஆங்கில மொழிப் புலமையை உணர்த்தும். தமிழில் அவர் எழுதிய 'நபிகள் நாயகம்' வாழ்க்கை வரலாற்று நூல் பல பதிப்புகளைக் கண்டு இலட்சக்கணக்கானோர் உள்ளங்களைக் கொள்ளை கொண்டது. பன்னூலாசிரியர் தன் வாழ்நாளில் இறுதியாக இயற்றிய 'நபிகள் நாயகக் காவியம்' அவரது தேர்ந்த கவிப் புலமையை அவனிக்கு உணர்த்தும். நபிகள் நாயக வரலாற்றைத் தமிழ் உரைநடையாக ஒரு நூல், ஆங்கிலத்தில் ஒரு நூல், சிறந்த காவியமாக ஒரு நூல் எனப்

பொருளடக்கம்

பக்கம்

1. கருத்துப் புலப்பாட்டில் முன்னுரை 11
மு.இ. அகமது மரைக்காயர்

2. இரண்டாம் ஆமினா அன்னை 24
கவியருவி அப்துல் காதர்

3. மனிதப் புனிதன் ஆப்ரஹாம் லிங்கன் 34
மு. அப்துல் சமது

4. 'முஸ்லிம் தமிழ்ப் புலவர்கள்' நூலில்
எம்.ஆர்.எம். அப்துற்றஹீமின் நடைநலம் 53
பேரா. முனைவர் அப்துல் ஹமீது சாதிக்

5. எண்ணமே வாழ்வு தரும் - சிந்தனைகள் 77
நி. அமிருதீன்

6. சாதனையாளர் அறிஞர் அப்துற் றஹீம் 86
முனைவர் ஓ.மு.சே. அமீர் அம்சா பீவி

7. அறிவு மற்றும் நினைவாற்றலுக்கு அனுகூலம் அளித்த
அல்லாமா அப்துற் றஹீம் 96
A.M. அலி இப்ராஹீம் ஜமாலி

8. காஜா முயீனுத்தீன் சிஷ்தி (ரஹ்) - பன்முக ஆளுமை 107
முனைவர் சை.ஆசிக் ஹமீது

9. அப்துற் றஹீம் எழுதியுள்ள தன்னம்பிக்கை நூல்கள் அனைவர்
வாழ்வுக்கும் வழிகாட்டும் ஒளிவிளக்குகள் 118
ரஷீத் எம். இம்தியாஸ்

10. அப்துற் றஹீம் - விளக்கேற்றும் விளக்கு ஓர் ஆய்வு 129
முனைவர் சு. இளவரசி

11. வாழ்வைத் துவக்க வழி காட்டும் எம்.ஆர்.எம். அப்துற் றஹீம் 138
முனைவர் ப. உசேன்கான்

12. அப்துற் றஹீம் ஐயாவின் இலக்கியச் சிந்தனைகள் 144
முனைவர் ம. கண்ணன்

13. வலிமார்கள் வரலாறு நூலாய்வு 154
கலீலுர் ரஹ்மான் மன்பயீ

14. வாழ்க்கைக்கு வழிகாட்டும் ஆசிரியர் அப்துற் றஹீம் 167
முனைவர் நா. குமாரி

எண்ணமே வாழ்வு தரும் - சிந்தனைகள்

நி. அமிருதீன்

உதவிப் பேராசிரியர், தமிழாய்வுத்துறை
ஜமால் முகமது கல்லூரி [தன்னாட்சி]
திருச்சிராப்பள்ளி.

மனிதனுடைய வாழ்வை உருவாக்கும் மிகப்பெரிய கருவி எண்ணம்தான். அவன் எண்ணும் ஒவ்வொரு எண்ணமும் அவனுடைய எண்ணத்தில் எழும் ஒவ்வொரு நினைவும் அவன் உள்ளத்தில் வந்து விழுந்து வேரூன்றி விடும். ஒவ்வொரு செய்தியும் அவன் வாழ்வை ஆக்கவோ அழிக்கவோ செய்கிறது. அவற்றை அலசி ஆராய்ந்து தள்ள வேண்டியதைத் தள்ளி கொள்ள வேண்டியதைக் கொண்டு கொண்டவற்றை அடக்கி யாண்டு திறம்படவும் எச்சரிக்கையுடனும் நிதானத்துடனும் மனிதன் பயன்படுத்தினால் வெற்றி அடைவான். எண்ணத்தின் ஆற்றல் மகத்தானது. அறிஞர் அப்துற் - றஹீம் அவர்கள் எழுதிய 'எண்ணமே வாழ்வு' என்ற நூலின் வாயிலாக எண்ணம் சார்ந்த கருத்துக்களை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

பன்னூல் ஆசிரியரான அறிஞர் அப்துற் - றஹீம் அவர்களின் எழுத்துப்பணி பரந்து விரிந்த ஒன்று. பற்பல நூல்களை எழுதிக் குவித்தவர். நற்கருத்துக்களில் தம் சிந்தனையை வைத்தவர். தம் மனக்குரலை எண்ணமே வாழ்வு என்ற நூலாக வடித்துள்ளார். இந்நூலில் இடம்பெற்றுள்ள பத்து பகுதிகளிலும் எண்ணம் சார்ந்த உலகளாவிய அரும்பெரும் கருத்துக்களும் சிந்தனைகளும் நிகழ்வுகளும் விரவிக் கிடக்கின்றன.

எண்ணமே வாழ்வு. அவ்வெண்ணம் உருவாகும் இடமே இதயம். எனவே உள்ளத்தைக் கொண்டே நூலைத் துவக்கி இருக்கிறார். உங்களின் உடலினுள்ளே ஓர் இறைச்சித் துண்டு உள்ளது. அது நல்ல தாயின் நீங்களும் நல்லவர்களே.. அது தீயதாயின் நீங்களும் தீயவர்களே... என்ற நபிமொழியைக் கூறிப் பொருத்தமாக ஆரம்பிக்கிறார் நூலாசிரியர்.

சிறு இறைச்சித் துண்டு என்று மனிதன் எண்ணிக் கொண்டிருக்கும் அந்த இதயம் ஒரு மாபெரும் உலகம். உடலின் அரசனும் அதுதான். வாழ்க்கைக் கப்பலின் சுக்கானும் அதுதான். வாழ்க்கைக் கப்பலின் நங்கூரமும் அதுதான். ஆனால் இதனை பெரும்பாலோர் அறிவதில்லை. அப்படி அறிந்தாலும் ஒழுங்காக உணர்வதில்லை. உள்ளத்தின் ஆற்றல் எவ்வளவு மகத்தானது. அதனால் ஆக்கவும் அழிக்கவும் எவ்வாறு இயலுகிறது என்பவற்றையும் அதனை எவ்வாறு பயன்படுத்தி பிணியற்ற பெருவாழ்வு வாழ்ந்து பிறருக்கு உதவி செய்வது என்பதையும் ஒரு சிலர் அறியார்கள்.

ஆக மனிதன் படிக்க வேண்டிய பாடங்கள் எல்லாம் மேலான பாடம் இதயத்தைப் பற்றியதுதான். இதை ஒருவன் திறம்பட படித்துவிட்டால் அவனால் ஆகாதது இவ்வுலகில் வேறு எதுவும் இல்லை அவன் தன் அறிவு ஆன்மா குணம் ஒழுக்கம் உடல் வாழ்க்கை ஆகிய அனைத்திலும் பெரும் புரட்சிகளை செய்து அரும்பெரும் சீர்திருத்தங்களை செய்து விடுவான். அவனுடைய காலடியில் உலகம் பணிந்துவிடும் என்கிறார் நூலாசிரியர்.

எண்ணம் எவ்வளவு வன்மையுடன் உடலை ஆட்சி செய்கின்றது என்பதை எண்ணிப் பார்க்கும் பொழுது எனக்கு பெரும் வியப்பு ஏற்படுகிறது என்ற கவிஞன் கதேவின் கருத்தை நூலாசிரியர் மேற்கோள் காட்டுகிறார். மனிதன் தன் இதயத்தில் எதை எண்ணுகின்றானோ அதன் பிரதிபலிப்பை அடுத்த கணமே அவன் உடலில் காணலாம். இதற்கான ஒரு பரிசோதனையையும் நூலாசிரியர் நம்முன் வைக்கிறார்.

எண்ணத்தின் கனத்தை அளவிடுவதற்கான அதாவது எண்ணமானது எவ்வளவு தூரம் உடலை பாதிக்கிறது என்பதை

கவனிப்பதற்காக பல்கலைக்கழக பேராசிரியர் ஒருவர் ஒரு சோதனையை மேற்கொண்டார். அவர் ஒரு மாணவனை ஊஞ்சலின் இரண்டு நுனிகளும் ஒரே நிலையில் நிற்கும் வண்ணம் அதன் மீது படுக்க வைத்தார். அதன் பின் அவனிடம் சிரமமான கணக்கொன்றை கூறி அதற்கு விடை கூறுமாறு சொன்னார். அவன் மூளைக்கு வேலை கொடுத்து அதன் காரணமாக அதிகமான ரத்தம் அவனுடைய மூளையில் பாய்ந்து அவனுடைய தலையின் கனம் அதிகரித்தது. எனவே அவனுடைய தலை பக்கம் கீழே செல்லவும் கால் பக்கம் மேலே செல்லவும் தொடங்கிவிட்டது.

சிறு கணக்குக்குத் தக்கபடி அவனுடைய தலை பக்கம் சற்று தாழவும் பெருங்கணக்குக்குத் தக்கபடி அதிகமாக தாழவும் செய்தது. இவ்வாறு அவர் ஒரு மாணவனை மட்டும் சோதித்துப் பார்க்க வில்லை. பல மாணவர்களையும் சோதித்துப் பார்த்தார். எத்தனை மாணவர்களை அவர் சோதித்த போதும் இதே பலன்தான் கிடைத்தது. இப்பரிசோதனையின் மூலம் மூளையானது உடலின் மீது எவ்வளவு கடுமையாக ஆட்சி செய்கின்றது என்பதை நூலாசிரியர் நமக்கு உள்ளங்கை நெல்லிக்கனி போல் விளக்குகிறார்.

எண்ணங்களே உடலை ஆட்சி செய்கின்றன என்பதற்கு பல்வேறு உதாரணங்களை அடுக்கடுக்காய் கூறிவந்த நூலாசிரியரவர்கள் வன்மையான எண்ணங்களுக்கு மனிதர்கள் மட்டும் இல்லை. மிருகங்களும் பலியாகின்றன என்ற உண்மையை முன்வைக்கிறார். மனோதத்துவக் கலையை நன்குணர்ந்த குதிரை வணிகர் ஒருவர் தம்முடைய குதிரை மீது செய்த ஆய்வு அற்புதமானது.

அவர் உடல் நலத்துடனிருந்த தம் குதிரை மீது மருந்து தடவி தட்டிக் கொடுக்கவும் அதன் முன் வீற்றிருந்து சிணுங்கவும் செய்தார். தான் பிணியுற்றிருப்பதால் தான் தன்னுடைய எசமான் இவ்வாறெல்லாம் செய்கிறார் என்று அந்தக் குதிரை தவறாக நம்பியது. அந்தத் தவறான நம்பிக்கை யின் காரணமாக அதற்கு உண்மையில் உடல்நலம் குன்றியது.

எனவே அது எதனையும் உண்ணவோ அருந்தவோ மறுத்து விட்டது.

அவர் தம்முடைய மற்றொரு குதிரை மீது வேறொரு ஆய்வும் நிகழ்த்தினார். இங்குமங்கும் துள்ளி விளையாடிக் கொண்டிருந்த குதிரைக் குட்டி ஒன்றைப் பிடித்து வந்து தொட்டிலில் கட்டி அதனுடைய பின்னங்கால்களில் ஒன்றைத் தாங்கிப் பிடித்துக் கொண்டிருக்கவும் அதன்மீது மருந்து தடவி ஒத்தடமிட்டு துணியால் கட்டவும் செய்து அதனுடைய பின்னங்கால்களில் ஒன்று ஒடிந்து விட்டதாக அதனை நம்புமாறு செய்தார். அதன்பின் அதனை அவிழ்த்து விட்டார். அவ்வளவு தான். சற்று நேரத்திற்கு முன்பு இங்குமங்கும் ஓடி விளையாடிக் கொண்டிருந்த அக்குதிரைக்குட்டி இப்பொழுது நொண்டி நடக்க ஆரம்பித்து விட்டது. இச்சம்பவத்தைக் கொண்டு வன்மையான எண்ணங்களினால் மிருகங்களும் பாதிக்கப்படுகின்றன என்பதை நூலாசிரியர் புலப்படுத்து கிறார்.

மனிதனின் வாழ்வைப் பாழாக்கி கொண்டிருக்கும் இருபெரும் பிணிகள் கவலையும் அச்சமும் ஆகும். அவற்றால் அதிகமான மக்கள் தங்களின் ஒரே வாழ்க்கையை இவ்வுலகில் வாழ்வாங்கு வாழ்வது வீணாக்கிக் கொண்டுள்ளார்கள். அவர்களுடைய ஆற்றலையெல்லாம் ரசிக்கச் செய்து அவர்களின் திறமைகளை வைத்து அவர்களை உண்மை மனிதனாக அல்லாமல் போலி மனிதர்களாக ஆகிவிடுகிறது. ஒருவனின் மூளை குழப்பமடைந்து இருப்பின் அவனால் திறம்பட வேலை செய்து வாழ்க்கையில் வெற்றி பெற முடியாது. மூளை தன் முழு ஆற்றலையும் பயன்படுத்தி பணியாற்ற வேண்டுமாயின் அது கவலை துன்பம் அச்சம் ஆகியவற்றில் இருந்து முழு விடுதலை பெற்றிருக்க வேண்டியது அவசியம் என நூலாசிரியர் உறுதிபடக் கூறுகின்றார்

கவலையினால் தூக்கமின்மை நரம்புத்தளர்ச்சி பைத்தியம் ஆகியவையெல்லாம் ஏற்படுகின்றன. எடுத்துக்காட்டாய் நாளை காலை நீ தூக்கிலிட படுவாய் என்று ஒரு சிறை அதிகாரி

கைது ஒருவனிடம் கூறியதும் அதனால் ஏற்பட்ட கவலை அச்சத்தால் கைதியின் தலைமயிர் ஒரே இரவுக்குள் வெளுத்து விட்டது. ஒவ்வொரு மனிதனும் கவலையை வெறுத்து ஒதுக்க வேண்டும். இருள்சேர்ந்தஇடத்தில் விளக்கு ஒன்றை கொண்டு சென்றால் எவ்வாறு இருக்குமோ, அதே போன்று நல்ல எண்ணங்களை எண்ணினால் கவலையை இருந்த இடம் தெரியாமல் மறைந்துவிடும்.

ஒரு மனிதனுக்கு நல்ல மருத்துவர் என்பது நல்ல எண்ணம் மகிழ்ச்சிகரமான எண்ணம் ஊக்க மிக்க எண்ணம் ஆகியவை தாம். துணிச்சலும் கோழைத்தனமும் மனிதனின் இருவேறு மனநிலையைக் குறிக்கும் சொற்களே ஆகும் என்று நூலாசிரியர் எடுத்துரைக்கிறார். போரில் வெற்றி பெறுபவன் வீரனல்ல. கோபம் வரும்போது தன்னை அடக்கிக் கொள்பவனே வீரன் என்ற நபி மொழிக் கேட்ப கோபம் வரும் பொழுது தன்னையே அடக்கி ஆளாத மனிதன் அரை மனிதன் ஆவான். ஒருவன் சினம் கொள்ளும் ஒவ்வொரு முறையும் அவன் உடல் மூளை ஆகியவை பெரும் குழப்பத்தை ஏற்படுத்தி அவன் உடலினுள் கலகம் செய்கிறது.

மேலும் சினம் பொறாமை கவலை அச்சம் ஆகியவற்றால் ஒருவன் மனம் குழப்பமடைந்து இருக்கும் நேரம் அவனுடைய உடலில் ஊரக் கூடிய சீரணநீர் நல்லதாக இருப்பதில்லை. அதில் நச்சு நீர் கலப்பதால் அது மட்ட ரகமாக உள்ளதாகவும் மாறிவிடுகிறது. எனவே அதனால் போதிய அளவு உணவுப் பொருளை சரி செய்ய இயலாது போய்விடுகிறது.

சினம் உள்ளவனின் முகம் கொடூரமாகவும் பொறாமை எண்ணங்களையும் தீய எண்ணங்களையும் உடையவனின் முகம் மற்றும் உடல் வளர்ச்சி குன்றி கூனி குருவியும் வளைந்தும் நெளிந்தும் இருப்பதை நாம் பார்க்கலாம். நல்ல எண்ணங் களையும் மகிழ்ச்சி எண்ணங்களையும் எண்ணிக்கொண்டு உள்ளவனின் முகம் செழிப்பாகவும் வளமாகவும் இருப்பதை யும் நாம் பார்க்கலாம் எண்ணங்களே நம் உடலை வடிவமைக் கின்றன.

தவறான எண்ணங்களை திரும்பத் திரும்ப நினைப்பதனால் அவை நம்மை பாதிக்கின்றன அவனுடைய குருட்டுத்தனமான நம்பிக்கைகளும் பழக்க வழக்கங்களும் எந்த அளவு அவருடைய உடல் உயிர் ஆகியவற்றை பாதிக்கின்றன என்பதை பெரும்பாலான மக்கள் உணர்வதில்லை. என் தந்தை அவரின் தந்தை ஐம்பது வயதில் இறந்து விட்டார். ஆகவே நானும் ஐம்பது வயதில் இறந்து விடுவேன் என்று ஒருவன் சதாவும் நினைத்துக்கொண்டே இருந்தால் அவனுக்கு ஐம்பது வயதில் மரணம் வந்து விடுகிறது.

மாறாக ஒரு இளைஞனைப் பார்த்து மக்கள் உங்களுக்கு வயதாகிவிட்டது. முகத்தில் சுருக்கங்கள் வருகின்றன. முடியெல்லாம் நரைத்து வருகிறது என்று கூறிய பொழுது அந்த இளைஞன் கூறுகிறான், நான் இளைஞன் இளமை இரத்தம் என்னுடைய உடலில் ஓடுகிறது. என்னுடைய உடல் தெம்பாக உள்ளது. என்னால் எச்செயலையும் ஆற்ற இயலும். அவ்விளைஞன் நல்லெண்ணத்தை திரும்பத் திரும்ப நினைக்கும் பொழுது அவன் உடல் அவனை அறியாமலேயே இளமையை அடைகிறது.

இதற்கு காந்தியடிகள் பண்டித நேரு ஆகிய இருவரின் வாழ்க்கையும் சிறந்த சான்றுகளாகும். வாழ்நாளில் ஐம்பது வயதைத் தாண்டியதும் முதியவர் என்று கருதத் தொடங்கி விட்டார். எனவே மக்களும் அவரை அப்பொழுதே காந்தி தாத்தா என்று அழைக்கத் தொடங்கிவிட்டார்கள். அவரும் அப்பொழுது பல் எல்லாம் விழப்பெற்று பொக்கை வாயில் புன்னகை மிளிர காட்சி தந்தார்.

ஆனால் பண்டித நேருவோ, தம்முடைய வாழ்க்கைப் பாதையில் எழுபத்துமூன்றாவது மைல்கல்லை நோக்கிச் சென்று கொண்டிருக்கும் பொழுது கூட தம்மை இளைஞர் என்று கருதிக் கொண்டார். தன்னுடைய பிறந்தநாளை மக்கள் கொண்டாடுவதைக் கூட வெறுத்தார். அவ்விதம் செய்வது தமக்கு தம்முடைய வயதை நினைவுறுத்தி கிழவனாக்க முயல்வதாக இருக்கும் என்று வருந்தினார்.

எண்ணம் என்பது எங்கிருந்து உற்பத்தியாகிறது என்பது குறித்தக் கருத்துக்களை நூலாசிரியர் ஆராய்ந்திருக்கிறார். எண்ணம் எந்த இடத்திலிருந்து உற்பத்தியாகிறது என்பது பற்றிப் பலர் பலவிதமாக கூறுகின்றார்கள். அது தலையின் பின்புறத்தில் இருந்து உற்பத்தி ஆகிறது என்று ஒரு சாரார் கூறுவர். அது அடிவயிற்றிலிருந்து உற்பத்தி ஆகிறது என்று மறு சாரார் கூறுவர்.

ஆனால் அது இதயத்தில் இருந்து உற்பத்தியாகிறது என்பதே பெரும்பாலானவர்களின் கொள்கை. இதனையே 1400 ஆண்டுகளுக்கு முன்பு தோன்றிய நபி பெருமானாரின் வாக்கும் உண்மைப்படுத்துகிறது. மனிதனின் உள்ளத்தில் உற்பத்தியாகும் எண்ணங்கள் முதலில் உருவமற்ற பொருட்களாகவே இருக்கின்றன. பின்னர் அவை செயல் உருவில் ஆகும் பொழுது உருவமுள்ள பொருள்களாக ஆகிவிடுகின்றன. அவன் கட்டும் மனக்கோட்டைகள் கோட்டைகளாக மாறிவிடுகின்றன. அவன் காணும் கனவுகள் நனவாகின்றன. எண்ணம் காந்த ஆற்றலை உடையது. ஒருவனுடைய எண்ணமானது தனக்கு உகந்த மனிதர்கள் பொருள்கள் சூழ்நிலைகள் ஆகியவற்றை தன்பால் இழுத்து நிற்கும் ஆற்றல் பெற்றதாக அவற்றின்பால் இழுபட்டுச் செல்லும் இயல்புள்ளதாகவோ இருக்கிறது.

உள்ளத்தில் தோன்றும் ஒவ்வோர் எண்ணமும் தன் இனத்தைச் சேர்ந்த மனிதர்கள் பொருள்கள் சூழ்நிலைகள் ஆகியவற்றைத் தேடி வருகின்றன. காகங்கள் தங்கள் இனத்துடன் சேர்ந்து திரிவதும் காடைகள் தங்கள் இனத்துடன் சேர்ந்து திரிவதும் இதற்கு நல்ல சான்றுகள் ஆகும். ஒருபோதும் காகம் காடையுடன் சேரவோ காடை காகத்துடன் சேரவோ செய்யாது.

ஒரு செயலை முடித்துத்தர இன்னார் இருந்தால் நன்றாக இருக்குமே என்று நாம் எண்ணுவோம். அவரே அடுத்த கணம் நம் முன் வந்து நின்றால் அவரைப் பார்த்துத் தங்களுக்கு நூறு வயது. இப்போது தான் உங்களைப் பற்றி எண்ணினேன். அதற்குள் தாங்கள் வந்துவிட்டீர்கள் என்று நாம் வியப்புடன்

கூறுவோம். இதுவும் ஒருவகை எண்ணத்தின் வெளிப்பாடே ஆகும்.

வெள்ளத் தனைய மலர்நீட்டம் மாந்தர்தம்
உள்ளத் தனைய துயர்வு
உள்ளுவ தெல்லாம் உயர்வுள்ளல் மற்றது
தள்ளினும் தள்ளாமை நீத்து...

என்ற வள்ளுவப் பெருந்தகையின் குறட்பாக்களைச் சான்றாக்கி பெரிய மனிதன் போன்று எண்ணிச் செயலாற்றுபவர்கள் நாளடைவில் பெரிய மனிதர்களாகி விடுகிறார்கள் என்ற கருத்தை உண்மைப்படுத்துகிறார்.

வாழ்க்கையில் வெற்றி பெறுவதற்கு வெற்றி பெற வேண்டும் என்ற ஆசை மட்டும் இருந்தால் போதும் என்று சிலர் எண்ணிக் கொண்டுள்ளார்கள். அவர்களின் அந்த எண்ணம் தவறானது என்பதை நூலாசிரியர் உறுதிபடக் கூறுகிறார். இவ்வாறு உருகுவதற்கு நம் வீட்டின் அடுப்பு நெருப்பில் இயலாதோ, அதற்கு கொல்லனின் உலகில் உள்ள தகிக்கும் தீயே தேவைப்படுமோ அதுபோல் நம்மால் வெற்றியை எடுத்து வருவதற்கு வெறும் போலி ஆசையால் மட்டும் இயலாது என்கிறார்

மனிதனின் மனத்தை இரண்டு வகையாக பிரித்து விவரிக்கிறார் நூலாசிரியர். உள்மனம் என்றும் வெளிமனம் என்றும் இரண்டு வகையாகப் பிரிக்கலாம். உள்மனம் ஒன்றை எண்ணிக் கொண்டிருக்கும் பொழுது வெளிமனம் வேறு ஏதாவது ஒன்றை எண்ணிக் கொண்டிருந்தாலும் அந்த உள்மன எண்ணம் உருவாகி தனக்கு தேவையான பொருள்களையும் சூழ்நிலைகளையும் மனிதர்களையும் தன்பால் இழுத்து நின்று வெற்றி பெற்று விடுமா என்ற கேள்வி நமக்கு எழுகிறது?

எந்த எண்ணம் நம்முடைய உள் மனத்தைத் தொடுகிறதோ எந்த எண்ணம் நம்முடைய உள் மனத்தை தன்பால் கவர்ந்து நிற்கிறதோ எந்த எண்ணத்தை நம்முடைய உள் மனமும் முற்றிலும் நம்பி திரும்பத் திரும்ப நினைக்கிறதோ அந்த எண்ணம் உருப்பெறுமே அன்றி வெளி மனத்தால் மட்டும்

எண்ணப்படும் எண்ணங்களால் அதை எத்தனை கோடி முறை திரும்பத் திரும்ப எண்ணப்பட்ட போதிலும் சரி ஒரு செயலும் உருவாகாது என நூலாசிரியர் ஆய்ந்து கூறுகிறார்.

மேற்காண் பல்வேறு சான்றுகளின் வாயிலாக நூலாசிரியர் அறிஞர் அப்துல் ரஹீம் அவர்கள் தம்முடைய எண்ணமே வாழ்வு என்ற நூலில் எண்ணம் சார்ந்த மிக அதிகமான கருத்துக்களையும் தத்துவங்களையும் நிகழ்ச்சிகளையும் வரலாறுகளையும் ஆய்வுகளையும் விளக்கிக் கூறியிருக்கிறார் என்பது தெளிவாக எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

1922 ஆம் ஆண்டு பிறந்த பன்னூல் ஆசிரியரின் நூற்றாண்டினைப் பயனுறு வகையில் போற்றிட வேண்டுவது தமிழ் கூறு நல்லுலகின் கடமையாகும். அதனை உணர்ந்து இஸ்லாமிய இலக்கியக் கழகம், அவரது நூற்றாண்டு விழாவினைச் சிறப்புற நடத்திட முனைந்தது. ஆசிரியர் எம். ஆர். எம். அப்துற்-றஹீம் நூற்றாண்டு விழாவின் தொடக்க நிகழ்வை அவர் பிறந்த தொண்டியிலும், பன்னாட்டு ஆய்வரங்கை அவர் பங்கு பெற்றுத் தோற்றுவித்த இஸ்லாமிய இலக்கியக் கழகம் உருவான திருச்சி ஜமால் முகமது கல்லூரியிலும் நிறைவு விழாவினை அவர் வாழ்ந்து மறைந்த சென்னையிலும் நடத்திட இஸ்லாமிய இலக்கியக் கழகம் முடிவு செய்தது.

பன்னாட்டு ஆய்வரங்கத்தில் தமிழகமெங்கிலும் உள்ள கல்வியாளர்கள், மார்க்க அறிஞர்கள், படைப்பாளர்கள், ஆய்வாளர்கள் மிகுந்த ஆர்வத்துடன் பங்கேற்றுக் கட்டுரைகள் வழங்கினார்கள். பன்னூல் ஆசிரியரின் தன்னம்பிக்கை. மொழியாக்கம், வரலாறு, சமயம், புதினம், கலைக்களஞ்சியம் உள்ளிட்ட நூல்களைப் பற்றிய ஆய்வாக அக்கட்டுரைகள் அமைந்துள்ளன.

அக்கட்டுரைகளின் தொகுப்பாக 'அப்துற்-றஹீம் ஆய்வுச் சரம்' என்ற தலைப்பில் இந்நூல் வெளிவருகிறது.

யுனிவர்ஸல் பப்ளிஷர்ஸ்

ISBN 978-93-92346-30-9

9 789392 346309

₹450.00

அப்துற்-றஹீம்

ஆய்வுச் சரம்



யுனிவர்ஸல்
பப்ளிஷர்ஸ்

அப்துற்-றஹீம் ஆய்வுச் சரம்
முனைவர் சேமுமு முஹமதலி,
முனைவர் மு.அப்துல் சமது,
முனைவர் மு.இ. அகமது மரைக்காயர்,
எஸ்.எஸ். ஷாஜஹான்

பதிப்பு விவரம்
முதற் பதிப்பு மார்ச், 2022

உரிமை © பதிப்பகத்திற்கு

வெளியிடுபவர்
பாத்திமா ஷாஜஹான்
யுனிவர்ஸல் பப்ளிஷர்ஸ்
2, வடக்கு உஸ்மான் சாலை,
(கோடம்பாக்கம் மேம்பாலம் அருகில்)
முதல் மாடி, தியாகராயர் நகர்,
சென்னை - 600 017.
✆ : 044-2834 3385, 94440 47786

ஒளி அச்சு : சு. அசோக்குமார், 94877 31019
அட்டை வடிவமைப்பு : ஜானி, 98414 96549
அச்சு : கிளிக்டுபிரிண்ட், சென்னை - 600 018.
பக்கங்கள் : 512 (⅛ டெமி)
விலை : ₹ **450/-**

ISBN: 978-93-92346-30-9

Title of the Book : **ABDUR-RAHEEM AAIVUCH CHARAM**
Dr. SeMuMu MUHAMMAD ALI,
Dr. M. ABDUL SAMAD,
Dr. M.E. AHAMED MARAICKAYAR,
Alhaj S.S. SAJAHAN
© Publisher
Language : **Tamil**
Edition : **First - March, 2022**
Publisher
Fatima Sajahan
Universal Publishers
2, North Usman Road,
(Near Kodambakkam Overbridge)
T. Nagar, Chennai - 600 017.
✆ : 044-2834 3385, 94440 47786
Typeset : **S. Asokkumar,** 94877 31019
Wrapper design : **Johny,** 98414 96549
Printed at: clictoprint | *Chennai-600 018.*
No.of Pages : **512** (⅛ Demy)
Price : ₹ **450/-**

பக்கம்

30. அப்துற் றஹீம் 'கவலைப்படாதே' நூல் உணர்த்தும் வாழ்வியல் விழுமியங்கள் 328
முனைவர் ச. பொன்ஜெயந்தி

31. விழித்துக் கொள் மனமே! 341
முனைவர் சி.ஆர். மஞ்சுளா

32. அன்பு வாழ்வோ! அருள் வாழ்வோ! 354
சேமுமு. முகமதலி

33. திருக்குர்ஆன் ஒளியில் நபிகள் நாயகக் காவியம் 366
முனைவர் பீ. முகம்மது யூசுப்

34. அப்துற் றஹீம் காட்டும் இல்லற வாழ்க்கைக்கான வழி முறைகள் ... 375
அ. முஹம்மது யாசிர்

35. நபிகள் நாயகக் காவியம் (எம்.ஆர்.எம். அப்துற் றஹீம்) 396
பா. மொய்தீன் ஆரிப்

36. எம்.ஆர்.எம். அப்துற் றஹீமின் இஸ்லாமியக் கலைக் களஞ்சியம் - ஓர் அறிவுப் பெட்டகம் 408
டாக்டர் ஜெ.ராஜா முகமது

37. விடாமுயற்சி வெற்றிக்கு வழி - ஒரு ஆய்வு 423
முனைவர் ஆ. லட்சுமி

38. உன்னை வெல்க எனும் நூலும்; வாழ்வியல் செய்திகளும் 431
முனைவர் சு. விஜயலெட்சுமி

39. இறைநேசச் செல்வர் மு.றா.மு. அப்துற் றஹீம் 441
ஆ.மு. ஜமால் முஹம்மது

40. இஸ்லாமியப் பெரியார்களின் சமூகத் தொண்டு 450
முனைவர் அ. ஜனார்த்தலி பேகம்

41. நபிகள் நாயகக் காவியத்தில் தமிழ்ப் பண்பாட்டு மரபுகள் 471
முனைவர் மு. ஜாபர் சாதிக் அலி

42. கவலையினால் ஏற்படும் மனத்துயரங்களும் அதற்கானத் தீர்வுகளும் 480
முனைவர் ஷிஃபா

43. எம்.ஆர்.எம்.அப்துற் றஹீமின் 'வாழ்வைத் துவங்கு' நூலில் வரலாற்றுப் பதிவுகள் 492
முனைவர் ச. ஹாஜிரா ஃபர்சானா

44. எம்.ஆர்.எம். வெளிப்படுத்தும் சமூக மேம்பாட்டுச் சிந்தனை 497
முனைவர் ஹா. ஹிதாயத்துல்லா

45. அப்துற் றஹீம் கூறும் எண்ணம் போல் வாழ்க்கை 503
முனைவர் நா. ஹேமமாலினி

உன்னை வெல்க எனும் நூலும்; வாழ்வியல் செய்திகளும்

முனைவர் சு. விஜயலெட்சுமி
உதவிப் பேராசிரியர்,
தமிழாய்வுத் துறை
ஜமால் முகமது கல்லூரி [தன்னாட்சி]
திருச்சிராப்பள்ளி.

தமிழில் சுயமுன்னேற்ற நூல் முன்னோடி என அழைக்கப்படும் அப்துற் றஹீம் அவர்களின் 'உன்னை வெல்க' என்ற நூலில் உள்ள வாழ்வியல் செய்திகளை எடுத்துரைப்பதே இக்கட்டுரையின் நோக்கமாகும். மனிதனின் முதல் எதிரி அவன்தான். தன்னைத்தான் வெற்றி கொள்வதே மிகவும் இன்றியமையாதது என்பதை இந்நூலில் உள்ள பதினைந்து கட்டுரைகளின் வழி தெளிவு படுத்துகின்றார்.

1. தன்னொடு கிளத்தல்

மனிதன் யார் யாருடனோ மணிக்கணக்கில் பேசி நேரத்தை செலவிடுகிறான். தன்னோடு தான் பேசுவதற்கான நேரத்தை சில நிமிடங்களாவது செலவிட வேண்டும். இதனால் குறிக்கோள் வலுப்பெறும், நம் தவறுகளைத் திருத்திக் கொள்ள முடியும், ஆற்றல்கள் மேம்படும், அறிவுத்தெளிவு பெறும், இறைவனுடன் தொடர்பு கொள்வதற்கு வழி ஏற்படும் என்று கூறுகின்றார்.

மேலும் நம் மனதுடன் நாம் பேசின் ஒருகேடும் இல்லை. ஆனால் நாம் ஒருவனுடன் சிறிது அதிகமாகப் பேசினால் அவன் நம்மைச் சிறுமைக்கண் கொண்டு நோக்கத் தொடங்கி

விடுகிறான். அவனுடன் பேச வேண்டியதை மட்டும் பேசிவிட்டு வாய்மூடி இருப்பின் அவன் நமக்கு மரியாதை செய்கிறான். அமெரிக்க அறிஞன் எமர்ஸன் "குறைவாகப் பேசுகிறவனுக்குச் சாதகமாகவே எல்லாம் உள்ளது. அவன் பொதுவாக மேலான மனிதனாகக் கருதப்படுகிறான்" (ப.9) என்று எடுத்துரைத்தான். நெஞ்சோடு கிளத்தலைப் பற்றி உரோம நாட்டை ஆண்ட மாமனிதர் அரேலியஸ், "ஒரு மனிதன் தன்னுடைய ஆன்மாவுக்குள் மிகவும் அமைதியுடனும் சுதந்திரத்துடனும் ஓய்வு கொள்வது போன்று வேறு எங்கும் ஓய்வு கொள்ள இயலாது" என்று (ப.10) குறிப்பிடுகிறார்.;

தன்னுள் ஓய்வு கொள்வதன் பயன்

நான்கே நான்கு நிமிடங்களில் ஒருமைல் தொலைவு ஓடி வெற்றி பெற்ற ஓட்டக்காரர் ஒருவர் தாம் ஓடுவதற்கு முன் சற்றுநேரம் தன்னுள் ஓய்வு கொண்டு அதன்பின்தான் ஓட்டத்தைத் தொடங்குவார். சில பாடகர்களும் நடிகர்களும் பேச்சாளர்களும் மேடையில் தோன்றுவதற்கு முன் சற்றுநேரம் கண்களை மூடிக்கொண்டு தம்முள் ஓய்வு கொள்வதை பார்க்கிறோம். இவ்வாறு அவர்கள் செய்வது பின்னர் தங்களின் பாகத்தைத் திறம்பட செய்வதற்கு வழி வகுக்கிறது.

மனம் ஒன்றாத் தொழுகை

ஓர் அறிஞன், "தியானம் என்பது ஆன்மாவின் கண்ணாடி யாகும். அதன் மூலம் மனிதன் இறைவனைத் தன்னருகில் காண்கிறான்" (ப.13) என்கிறார். பெரும்பாலோர் தொழு கிறார்களேயொழிய தியானம் செய்கிறார்களில்லை. தியானம் என்று நான் இங்குக் கூறும்பொழுது மனஒருமையோடு தொழுவதையே குறிப்பிடுகிறேன். எனவே அவர்களுடைய மனம் ஒன்றாத் தொழுகை ஆன்மாவற்ற உடல் போன்று ஆகிவிடுகிறது.

2. தன்னை அறிதல்

தன்னை அறிதல் தான் உலகத்திலுள்ள அனைவருக்கும் பெரிதும் சிரமமான செயலாக இருக்கிறது. 16ஆம்

நூற்றாண்டில் வாழ்ந்த ஸ்பானியக் கவிஞர் ஸெர்வாண்டிஸும், "உன்னை அறிவதையே உன்னுடைய தொழிலாக வைத்துக் கொள். அகில உலகத்திலும் கடினமான பாடம் ஒன்று இருக்குமானால் அது இதுவேயாகும்" (ப.18) என்று இயம்பிச் சென்றார். இவ்விதக் கடினப் பாடத்தை ஒருவன் கற்றுத் தேர்ந்து விடுவானாயின் அவனே சிறந்த அறிவாளியாக விளங்குவான். மனிதன் தன்னை உணர்ந்தால் தன்னிடமுள்ள குற்றங்களை விடுத்துப் பிறருடைய குற்றங்களை உற்று நோக்க மாட்டான். ஓரறிஞன் "இறைவனே! என்னை என்னுடைய எதிரிகளிட மிருந்து காப்பாற்று! என்று கூறுவதற்கு மாறாக இறைவனே! என்னை என்னிடமிருந்து காப்பாற்று!" (ப.21) என்று கூறினான்.

உன்னை உன்னிடமிருந்து காப்பாற்றிக் கொள்வதற்கு ஒரு வழி உன்னிலிருந்து நீ சற்று விலகி நின்று உன்னை நீ கவனிப்பதாகும். அப்பொழுது நீ உன்னை 'நான்' என்று கருதிக் கொள்ளாது. 'அவன்' என்று கருதிக் கொள்ள வேண்டும் என்கிறார் அப்துற் றஹீம். இதற்கு சான்றாக உரோமானிய அறிஞன் செனேகாவை காட்டுகின்றார். செனேகா ஒவ்வோர் இரவும் நான் என்னுடைய எந்த வலுவற்ற தன்மையை வென்றுள்ளேன்? எந்தத் தீய உணர்ச்சிகளை அடக்கி ஆண்டுள்ளேன்? எந்த நற்பண்புகளை மேற்கொண்டுள்ளேன்? என்று தன்னுள்ளே கேள்விக் கணக்குக் கேட்டுக் கொள்வாராம். இவ்வாறு நாம் ஒவ்வொரு நாளும் செய்து வருவோமாயின் நம்முடைய தீய பண்புகள் நம்மை விட்டும் தாமாகவே அகன்று விடும்" என்றும் கூறுகிறார். மேலும் தன்னைப்பற்றி யாரேனும் குறைகூறினால் தன்னிடம் அக்குறை இருக்கின்றதா என உற்றுநோக்க வேண்டுமே தவிர அவரைத் திட்டித்தீர்க்கக் கூடாது என்றும் குறிப்பிடுகிறார். 3. தான் தனது:

'தான்' என்ற செருக்குப் பிடித்து அரக்க நிலையை எய்தியவர்களுக்குச் சிறந்த சான்றாக ஹிட்லரைக் கூறலாம். ஒருவனை அழிவுப் படுகுழியில் தள்ளுவது 'நான்' என்ற செருக்குத்தான். திருக்குறளும் "யான்என தென்னும் செருக்கறுப்பான் வானோர்க் குயர்ந்த உலகம் புகும்"; (குறள். 346) என்கின்றது.

4. தன்னபிமானம்

ஒருவன் தன்னைத் தான் நேசிப்பதையே 'தன்னபிமானம்' என்கிறோம். தன்னபிமானம் ஒவ்வொருவனுக்கும் வேண்டும். அது ஒருவனை சுறுசுறுப்பாகச் செயலாற்றுமாறு பிடர் பிடித்து உந்துவதாகும் என்று ஆங்கில இலக்கிய மேதை சாமுவேல் ஜான்ஸனும் கூறினார். தன்னபிமானம் மனிதனுக்கு நன்மை யையும் செய்கிறது, தீமையையும் இழைக்கிறது. ஆனால் அது செய்யும் நன்மையைவிட அது இழைக்கும் தீமைகள்தாம் அதிகம். எனவேதான் ரூஸோவும், "தன்னபிமானம் பயன்தரத்தக்க ஆனால் அபாயம் விளைவிக்கக் கூடிய கருவியாகும். அதனைப் பயன்படுத்தும் கையையே அது அறுத்துவிடுகிறது" (ப.45) என்று குறிப்பிடுகிறார்.

5. தன்னலம்

தன்னலமே உலகத்தை ஆட்சி செய்கிறது. உலகத்தில் மனிதனாகப் பிறந்த ஒவ்வொருவனிடமும் தன்னலம் குடிகொண்டிருந்த போதினும் அது அளவுக்கதிகமாக ஒருவனிடம் குடிகொள்ளும்பொழுது அது அவனை ஒரு மிருகமாகவே செய்துவிடுகிறது. காட்டில் வாழும் கொடும் விலங்கைவிட அவன் கொடியவனாக ஆகிவிடுகிறான். எனவேதான் அறிஞர் பெருமக்களெல்லாம் உலகம் தோன்றியது முதல் இதுவரை தன்னலத்தைக் கடிந்தே வந்துள்ளனர்.

6. தன்னல மறுப்பு

உள்ளும் புறமும் ஒத்த ஒரே மனிதனாக நல்ல மனிதனாக இரு. தன்னலத்தைத் தூக்கி எறிந்துவிட்டுப் பொதுநல நோக்குடனேயே செயலாற்று என்கிறார் அப்துற் றஹீம். தன்னல மறுப்பைப் பற்றி பெர்னாட்ஷா கூறும்பொழுது தன்னலம் ஒரு நற்பண்பல்ல, அயோக்கியத் தனத்தின் மீது அறிவு ஆதிக்கம் செலுத்துவதாகும்" (ப.63) என்று குறிப்பிட்டார்.

எல்லாத் தத்துவஞானங்களுடைய நடுப்பகுதியும் 'நிதானம்' என்பதாகவே உள்ளது. நிதானம் தவறிச்

செயலாற்றுவது மனித இனத்தையே இழுக்குடையதாக ஆக்கும் என்பதில் ஐயமில்லை. மனிதனின் மேன்மை ஓர் ஒழுங்கான வரையறைக்குட்பட்டுச் செயலாற்றுவதிலேதான் இருக்கிறதேயொழிய அதனை மீறிச் செயலாற்றுவதில் இல்லை.

7. தன்னடக்கம்

மனிதன் எவ்வளவு பெரிய சாதனையாளனாக இருப்பினும் தன்னடக்கத்துடன் நடந்துகொள்வது மிகவும் இன்றிய மையாததாகும் என்கிறார் அப்துற் றஹீம். மன அடக்கம், நாவடக்கம், சினத்தை அடக்குதல் ஆகியவற்றை சிறப்புற எடுத்துரைக்கிறார். "உலகிலே பலர் தங்களையே தாங்கள் தங்களிடம் ஒப்படைக்கும் தகுதியற்றவர்களாக இருக் கிறார்கள். தங்களுடைய தீய இச்சைகளை எதிர்த்து நிற்பதாகத் தங்களுக்கே தாங்கள் உறுதி கூறிக் கொள்வார்கள். ஆனால் அவர்களுடைய இந்த உறுதியெல்லாம் சில மணி நேரங்களுக்கோ, சில நாட்களுக்கோதான் இருக்கும். அதன்பின் அவர்கள் தாங்களே அறியாமல் தங்களின் இச்சைகளுக்கு அடிமையாகி விடுவர். அவர்களின் சில நொடி இன்பம் நீங்காத் துன்பத்தையும், இழிவையும் நல்கி விடும்" (ப.76) என்கிறார். இதைப்பற்றி ஷேக்ஸ்பியரும், "நீ உன்னை உன்னுடைய கைப்பிடியில் வைத்திருப்பாயாக! (ப.75) என்று அறிவுரை பகர்கிறார்.

சிலர் நாவடக்கமின்றி எதையாவது உளறிக் கொண்டே தனக்கும், பிறருக்கும் நீங்காத் துன்பத்தை ஏற்படுத்தி விடுவர். நாவடக்கத்தின் இன்றியமையாமை குறித்து வள்ளுவரும் "யாகாவா ராயினும் நாகாக்க காவாக்கால் சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு" (குறள்.127) என்று குறிப்பிடுகிறார்.

சினம் குறித்து, "நீராவி ஒழுங்காகப் பயன்படுத்தப்படும் பொழுது எப்படி புகை வண்டியையே இழுத்துச் செல்கின்றதோ அதேபோன்று ஒருவன் சினத்தின் மூலம் வீணாகும் தன்னுடைய ஆற்றலை ஆக்க வேலைகளில் பயன்படுத்துவானாயின் பெரும் செயல்களை ஆற்றிப் பேரும்

புகழும் பெற்று விடுவான் என்பதில் ஐயமில்லை" (ப.87) என்றுரைக்கிறார். மேலும் "சினம் என்பது வலுவில்லாமையின் அடையாளமேயன்றி ஒருபோதும் வலுவின் அடையாளமாகக் கப்பட மாட்டாது" (ப.84) என்றும் பகர்கிறார்.

தன்னடக்கமுள்ளவன் மிகவும் வன்மைவாய்ந்தவனேயன்றி வேறில்லை. அவன் தன்னை அடக்கி ஆள்வதன் காரணமாகப் பிறரையும் அடக்கிஆள வல்லவனாக இருக்கிறான். சிலர் பெரிதும் அடக்கமுள்ளவர்கள் போன்று தோற்றத்துடன் அளவுக்கு மீறிய மரியாதையுடன் நடந்து கொள்வர், இது போன்றவர்களை நம்பி ஏமாறக்கூடாது என்றும் எச்சரிக்கிறார்.

8. தன்னம்பிக்கை

மனிதனின் வாழ்க்கைக்கு இன்றியமையாதது தன்னம் பிக்கை ஆகும். "இன்று எங்கு பார்த்தாலும் ஒவ்வொருவரும் தம்மையே தாம் பார்த்து ஐயுறுவதே வழக்கமாக உள்ளது. அது நம்மால் முடியுமா இது நம்மால் இயலுமா என்று அவர்கள் ஐயுற்று ஐயுற்றுத் தங்களையே தாங்கள் ஒன்றுக்கும் உதவாதவர்களாகவும், ஒன்றையும் ஆற்ற இயலாதவர்களாகவும் ஆக்கி விடுகிறார்கள். எனவே அவர்கள் தங்களை வலுவற்றவர்கள் என எண்ணிக்கொண்டு பிறருடைய உதவியை எதிர்பார்த்து நிற்கின்றனர். இது மிகவும் இழிநிலையாகும்" (ப.96) என்கிறார். அமெரிக்க அறிஞர் எமர்ஸனும், தன்னையே நம்புவதுதான் வெற்றியின் முதல் இரகசியமாகும். அதுவே வீரத்தின் சத்தாகும்" (ப.95) என்றுரைக்கிறார். மனிதர்கள் தன்னம்பிகையாளருடன் பழக வேண்டும், அல்லது தன்னம்பிக்கை அற்றவருக்கு தன்னம்பிக்கையை ஏற்படுத்த வேண்டும். அதற்கு மாற்றாக தன்னம்பிக்கையை குலைப் பவரிடமிருந்து விலகிவிட வேண்டும்.

9. தன்மதிப்பு

தன் மனச்சான்றுக்கு விரோதமில்லாமல் செயலாற்று கின்றவன் தன் மதிப்புள்ளவனாக விளங்குகின்றான். "அயர்லாந்தில் முந்நூறு பவுன் சம்பளத்தில் ஒரு பதவியளிக்கப் பட்ட எட்மண்ட்பர்க், அங்குத் தன்னுடைய உளத்திற்கு

ஒவ்வாத இழிதொழிலைச் செய்ய வேண்டியதைக் கண்டதும் அப்பதவியை உதறித் தள்ளி மீண்டும் வறுமையைத் தழுவிக் கொள்ளச் சிறிதேனும் தயங்கவில்லை. தன்மானத்தை இழப்பதைவிட வறுமையோடு வாழ்வதுமேல் என்று அவன் எண்ணினான்" (ப.110) என தன்மானத்திற்கு ஒவ்வாத வந்த ஒரு வேலையையும் பார்ப்பது தன்மதிப்பாகாதென எடுத்துரைக் கிறார்.

ஆனால், "இப்பொழுது எங்குத் திரும்பினும் அதற்கு நேர் மாற்றமான காட்சியையே காண்கிறோம். மானம் போனாலென்ன, மரியாதை போனாலென்ன, தன் பெட்டியில் பணம் இருந்தால் போதும் என்பதே பெரும்பாலோருடைய கொள்கையாக இருக்கிறது. பணம் வந்துவிட்டால் போதும் எல்லா மதிப்புகளும் தாமாகவே வந்துவிடும் என்று எண்ணுகிறார்கள். எனவே எத்தகைய இழிதொழிலைச் செய்யவும் அவர்கள் தயங்குவதில்லை" (ப.110-111) எனச் சில மனிதர்களின் மனச்சான்றற்ற நிலையை பதிவு செய்கிறார்.

10. தற்பெருமை

தவறான தன்மதிப்பு தற்பெருமையாக மாறி தீமை பயக்கிறது. "இன்று உலகில் பெரும்பாலோர் தங்களையே தாங்கள் அளவுக்கதிகமாக மதிக்கும் இயல்பினராக இருக்கின்றனர். அதன் காரணமாக அவர்கள் தங்களைப் பெரிதாகக் கருதிக் கொண்டு மற்றவர்களையெல்லாம் சிறுமைக் கண்கொண்டு நோக்குகின்றனர். தங்களை அவர்கள் பெரிதாகக் கருதுவதானது பிறரை அவர்கள் சிறிதாகக் கருதுமாறு செய்கிறது. அதனால் அவர்கள் பிறருடைய வெறுப்பையும் விரோதத்தையும் விலைக்கு வாங்கிக் கொள்கின்றனர்" (ப.121) என்கிறார். மேலும் "எந்த இடத்தில் தான் அறிவாளி என்று ஒருவன் கருதுகின்றானோ அந்த இடமே அவனுடைய வலுவற்ற இடமாகும்" (ப.122) என்றும் தற்பெருமையின் பேராபத்தை எச்சரிக்கிறார். "உணவுக்கு உப்பு போன்று, வாழ்வாங்கு வாழ்வதற்கு இந்தப் பெருமை உணர்வு மிகமிக வேண்டற்பாலதாகும். ஆனால் அது உப்பு போன்றுதான் பயன்படுத்தப்பட வேண்டுமேயன்றி அதிகமாகப் பயன்

படுத்தப்படக்கூடாது, பயன்படுத்தினால் கசந்து போய்விடும்" (ப.125) என்றும் அறிவுரை பகர்கிறார்.

11. தற்புகழ்ச்சி

"ஒருவன் எவ்வளவுதான் திறமையாளனாக இருந்த போதினும் அவனுடைய திறமையை அவனுடைய செயல் களேதாம் எடுத்துரைக்க வேண்டுமேயன்றி தாம் எடுத்துரைக்கக் கூடாது. அறிவாளர்கள் அவ்விதமே செய்கிறார்கள். தாங்கள் ஆற்றிய அருஞ்செயல் பற்றி அவர்கள் யாதொன்றும் கூறமாட்டார்கள். எவரும் அவர்களைப் பாராட்டினால் சிறிது நாணத்துடன், 'என்னவோ செய்தேன். எல்லாப் புகழும் இறைவனுக்கே' என்று கூறிவிடுகிறார்கள். இதுதான் பெரியார் இயல்பாக இருக்கின்றது" (ப.129) என்கிறார். இசையமைப் பாளர் ஏ.ஆர். ரஹ்மான் அவர்களுக்கு ஆஸ்கார் விருது வழங்கப்பட்ட போது "எல்லாப் புகழும் இறைவனுக்கே" என்று கூறியது இவ்விடம் நினைவுகூரத்தக்கது.

எனவேதான் கிரேக்க வரலாற்றாசிரியன் எக்ஸினோபனும், "ஒரு மனிதனுடைய புகழ் மற்றவர்களின் வாயிலிருந்து வரும் பொழுது இனிமையாகவும் கவர்ச்சியாகவும் இருக்கிறது. ஆனால் அது, அவனுடைய வாயிலிருந்து வரும்பொழுது இனிமையற்றதாகவும் கொடூரமாகவும் ஆகிவிடுகிறது" (ப.130) என்கிறார்.

12. தன்னை ஏமாற்றுதல்

பிறரால் ஏமாற்றப் படாமல் இருக்கவேண்டும் என்பதில் மிகவும் எச்சரிக்கையுடன் இருக்கும் மனிதன் தன்னையேதான் ஏமாற்றிக் கொள்வதைத் தன்னை அறியாமல் அனுமதித்து விடுகிறான். ஆனால் அறிவாளிகள் ஒருபோதும் அவ்விதம் செய்யமாட்டார்கள். நிலைமையை நன்கு உணர்வார்கள். அதன்பின் அந்த நிலையை எவ்வாறு சமாளிப்பது என்பதைப் பற்றிச் சிந்திப்பார்கள். அதன்பின் செயலாற்றுவார்கள். இரண் டாம் உலகப் போரின்போது சிங்கப்பூரின் பாதுகாவலுக்காக அனுப்பப்பட்ட 'பிரின்ஸ் ஆப் வேல்ஸ்' , 'ரிபில்ஸ்' என்ற இருபெரும் போர் கப்பல்களை ஜப்பானியர் ஒரு நொடியில்

மூழ்கடித்தபொழுது, அப்பொழுது பிரிட்டிஷ் முதல் அமைச்சராக இருந்த சர்ச்சில் அது ஒரு சாதாரண இழப்பு என்று கூறித் தன்னையும் மக்களையும் ஏமாற்றவில்லை. அதற்கு மாற்றாக, அவர் அப்பொழுது பேசும்பொழுது, "நான் இப்பொழுது மாபெரும் தோல்வியிலிருந்து பேசுகிறேன். எனினும் மனம் தளரவில்லை, முன்னைவிடப் பன்மடங்கு வேகத்துடன் செயலாற்ற வேண்டும்" (ப.147) என்று கூறினார் என அப்துற் றஹீம் எடுத்துக்காட்டுகின்றார்.

13. தன்போக்கு

தன்போக்கு என்பது யாருடைய அறிவுரைகளுக்கும் செவி சாய்க்காது தன்மனம் போன போக்கிலே செல்வதுதான். தான் பிடித்த முயலுக்கு மூன்றே கால் என்று சிலர் நிற்பதைப் போன்றது. "பிரச்சினை ஒன்றை அணுகும்பொழுது அதுபற்றி அறிவாளிகளின் அனுபவ உரைகளைக் கேள். அதன்பின் உணர்ச்சி வயப்படாது அறிவுக்கு முக்கியத்துவம் கொடுத்து, பிறர் கூறுவதையும் நன்கு சீர்தூக்கிப் பார்த்து, உன் மனம் கூறுவதையும் நன்கு ஆராய்ந்து அதன்பின் ஒரு முடிவுக்கு வந்து அந்தமுடிவைக் காலம், இடம் அறிந்து நிதானத்துடன் செயல்படுத்த வேண்டும்" (ப.157) என்கிறார்.

14. தற்காப்பு

எதனையும் முன்கூட்டியே உய்த்துணர்ந்து தன்னையே தான் காத்துக்கொள்வதே அறிவின் சிகரமாகும். சிறுசிறு பறவைகள், விலங்கினங்கள்கூட தங்களைப் பாதுகாத்த பொருட்டு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்கின்றன அதேபோன்று மனிதனும் தன்னுடைய வருங்காலத்தை உய்த்துணர்ந்து தன்னையேதான் காத்துக்கொள்ள ஆவன செய்ய வேண்டும். ஸ்பானியக் கவிஞர் செர்வாண்டிஸ், "மு எச்சரிக்கையுடன் இருப்பது முன் தயாரிப்போடு இருப்பதாகு அவ்விதம் இருப்பது அரை அளவு வெற்றி பெற்றதற் நிகராகும்" (ப.163) என்று கூறுகின்றார். தனிமனிதன், வீடு,ந என்று அனைத்துத் தரப்பினரும் முன்னெச்சரிக்கையுடனு முன் தயாரிப்புடனும் இருப்பது மிகவும் இன்றியமைய தாகும் என்கிறார்.

15. தன்அபிவிருத்தி

அபிவிருத்தி செய்து கொள்வதென்பது அறிவு, ஆற்றல், ஆன்மா பற்றிய வரையில் தம்மை மேம்படுத்திக் கொள்வ தாகும். தாம் இன்று இருக்கும் நிலையை விட ஒரு படி முன்னேறுவதற்குத் தன்னால் இயன்ற முயற்சிகளை செய்வதே இதன் பொருளாகும்.

ஒருசிலர் தங்களைத் தாங்களே பெருமையாகவும், முன்மாதிரியாகவும் எடுத்துக்கொண்டு தங்கள் குறைகளை உணராதிருக்கின்றனர், வேறு சிலரோ சோம்பலின் காரணமாகத் தங்கள் வாழ்வை பாழ்படுத்திக் கொள்கின்றனர் என்று தன் வருத்தத்தைப் பதிவு செய்கிறார்.

முடிவுகள்

- "தன்னை அறியத் தனக்கொரு கேடில்லை, தன்னை அறியாமல் தானே கெடுகின்றான்" ஸி என்ற திருமூலர் வாக்கிற்கிணங்க மனிதன் தன்னைத்தான் முதலில் அறிய வேண்டும் என்கிறார் அப்துற் றஹீம்.
- பதினைந்து தலைப்புகளிலும் அதன்பொருளையும், அறிஞர்களின் மேற்கோளையும், மற்றவர்களின் வாழ்க்கை அனுபவங்களையும் பற்றி எடுத்துரைத்து, முத்தாய்ப்பாக தன் கருத்தையும கொண்டு மிகச் சிறப்பாக இந்நூலைப் படைத்துள்ளார். அவருக்கு அவரே அறிவுரை பகர்வது போன்று நூல் முழுதும் பேசிக்கொள்ளும் பாங்கு சிறப்பு.
- மனிதனின் முதல் எதிரி அவன்தான், அவனிடமுள்ள குற்றங்குறைகளைப் பற்றி தன் மனத்துள் பேசி தம்மை ஒழுங்குபடுத்தித் தன்னம்பிக்கையுடனும், அதே நேரத்தில் தலைக்கணமின்றியும் செயல்பட வலியுறுத்துகின்றார்.
- மனிதன் தன்னிடமுள்ள வேண்டத்தகாதவற்றை நீக்கி, தன்னைப் பக்குவப்படுத்தி மனம், மொழி, மெய்களால் தன்னை வெற்றிக்கொள்வதே 'உன்னை வெல்க' நூலின் பொருண்மையாகும்.

அப்துற்-றஹீம்

ஆய்வுச் சரம்



பொருளடக்கம்

1. கருத்துப் புலப்பாட்டில் முன்னுரை ..... பக்கம்
மு.இ. அகமது மைதீன் காக்காயர்

2. இரண்டாம் ஆமினா அன்னை 13
கவிஞர் வலி அப்துல் காதர்

3. மனிதப் புனிதன் ஆப்ரஹாம் லிங்கன் 24
மு. அப்துல் சமது

4. 'முஸ்லிம் தமிழ்ப் புலவர்கள்' நூலில்
எம்.ஆர்.எம். அப்துற்றஹீமின் நடைநலம் 53
பேரா. முனைவர் அப்துல் ஹமீது சாதிக்

5. எண்ணமே வாழ்வு தரும் - சிந்தனைகள் 77
நி. அமிருதீன்

6. சாதனையாளர் அறிஞர் அப்துற் றஹீம் 86
முனைவர் ஓ.மு.சே. அமீர் அம்சா பீவி

7. அறிவு மற்றும் நினைவாற்றலுக்கு அனுகூலம் அளித்த
அல்லாமா அப்துற் றஹீம் 96
A.M. அலி இப்ராஹீம் ஜமாலி

8. காஜா முயீனுத்தீன் சிஷ்தி (ரஹ்) - பன்முக ஆளுமை 107
முனைவர் சை.ஆசிக் ஹமீது

9. அப்துற் றஹீம் எழுதியுள்ள தன்னம்பிக்கை நூல்கள் அனைவர்
வாழ்வுக்கும் வழிகாட்டும் ஒளிவிளக்குகள் 118
ரஷீத் எம். இம்தியாஸ்

10. அப்துற் றஹீம் - விளக்கேற்றும் விளக்கு ஓர் ஆய்வு 129
முனைவர் சு. இளவரசி

11. வாழ்வைத் துவக்க வழி காட்டும் எம்.ஆர்.எம். அப்துற் றஹீம் 138
முனைவர் ப. உசேன்கான்

12. அப்துற் றஹீம் ஐயாவின் இலக்கியச் சிந்தனைகள் 144
முனைவர் ம. கண்ணன்

13. வலிமார்கள் வரலாறு நூலாய்வு 154
கலீலுர் ரஹ்மான் மன்பயீ

14. வாழ்க்கைக்கு வழிகாட்டும் ஆசிரியர் அப்துற் றஹீம் 167
முனைவர் நா. சுபாரி

அப்துற் றஹீம் - விளக்கேற்றும் விளக்கு ஓர் ஆய்வு

முனைவர் சு. இளவரசி
உதவிப்பேராசிரியர்
தமிழாய்வுத்துறை
ஜமால் முகமது கல்லூரி
திருச்சி.

இருபதாம் நூற்றாண்டின் தலைசிறந்த படைப்பாளிகளுள் ஒருவர், தமிழில் முதன்முதலாகச் சுய முன்னேற்ற நூல்களைப் படைத்தவர் அப்துற் றஹீம்-.இவர் 'சுதந்திர நாடு' என்ற பத்திரிகையின் ஆசிரியராக பணியாற்றினார். யுனிவர்ஸல் பப்ளிஷர்ஸ் என்ற பதிப்பகத்தை தொடங்கினார். 1948-ல் 'வாழ்க்கையில் வெற்றி' என்ற இவரது நூல் வெளிவந்தது. இதுவே தமிழின் முதல் வாழ்வியல் நூலாகும். தமிழில் தன்னம்பிக்கை நூல்களின் முன்னோடியாகத் திகழ்ந்தவர் சுயமுன்னேற்ற நூல்களின் ஒன்றான ' விளக்கேற்றும் விளக்கு என்னும் கட்டுரையின் அமைப்பு முறைகளைக் காணப் பெறுகின்றோம்.

விளக்கேற்றும் விளக்கு அமைப்பு நிலைகள்

1. நான் விரும்பும் எழுத்து
2. நான் விரும்பும் நூல்கள்
3. நான் விரும்பும் பெரியார்கள்
4. நான் விரும்பும் உலகம்

நான் விரும்பும் எழுத்து

அப்துற் றஹீம் அவர்கள் இப்பாடலில் தன் உள்ளத்து வெளிப்பாடாக ஒருவருடைய உரையாடலை இக்கட்டுரையின் பகுதி அமைந்திருக்கும். பேச்சுமொழி அடைப்புக்குறிக்குள் காணப்படும். இப்பகுதியில் ஒரு எழுத்தாளர் எப்படி இருக்க வேண்டும் என்பதை ஆராய்ந்துள்ளார். பணத்திற்காக மட்டும் எழுதாமல் படைப்பாளி வாசகர்களுக்கு நல்ல திறன் மிக்கக் கருத்துக்களைக் கொண்டு போய்ச் சேர்க்க வேண்டும் என்ற நோக்கில் ஆய்வைத் தர வேண்டும் என்ற நிலையில்,

பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள்
தமிழ் மொழியில் பெயர்த்தல் வேண்டும்
இறவாத புகழுடைய பெருநூல்கள்
தமிழ் மொழியில் இயற்றல் வேண்டும்.[1]

என்ற பாரதி பாடல்களுக்கு ஏற்ப , ஒரு நாட்டின் முன்னேற்ற வளர்ச்சியை அளக்கும் அளவுகோல் எழுத்தாளர்களின் எண்ணிக்கையில் தான் உள்ளது என்பதை அறிவீர். எழுத்தாளர்களை நான்கு வகையாகப் பிரித்துள்ளார். அவை-

நான்கு நிலைகள்

1. **பொழுது போக்கிற்காக எழுதுகின்றவர்கள்**
2. **பிழைப்பிற்காக எழுதுகின்றவர்கள்**
3. **புகழுக்காக எழுதுகின்றவர்கள்**
4. **புனிதத் தொண்டெனக் கருதி எழுதுகின்றவர்கள்**

இவற்றில் பொழுது போக்கிற்காக எழுதுவதைக் கடமை என கிறுக்கி தள்ளிவிட்டு போவார்கள். இரண்டாவது பணமே குறியாகக் கொண்டு பணத்திற்காக எதை எதையோ எழுதுவார்கள். மூன்றாவது தனக்கு புகழ் சமூகத்தில் வளர வேண்டும் என்பதற்காக எழுதுவார்கள். நான்காவது பிழைப்பிற்காக பணம் தருகிறோம் என்று எழுதிக் கொடுங்கள் என்றும் ஒரு பிரிவினர் இருக்கின்றார்கள். அவர்கள் புகழ் பெயருக்காக இவர்களைப் பயன்படுத்துவார்கள். பலர் திறமை என்று நினைக்கின்றனர். ஆனால் அது 'மடமை ஆகும்

[illegible]

[illegible] என்பதை அறியாமை என்று [illegible]

[illegible] பற்றி வள்ளுவர்

உடைமைஉள் இன்மை விருந்தோம்பல் ஓம்பா
மடமை மடவார்கண் உண்டு"[2]

உயர்ந்த நோக்கில் இக்குறளை வள்ளுவர் குறிப்பிடுகிறார். ஆனால் ஆசிரியர் 'மடமை' என்பதை பற்றவரிடம் எழுதி வருவதை அதனால் அக்கட்டுரை எந்த செறிவும் செம்மையும் இருக்காது நிலைக்கு உட்படுத்துகிறார். ஆயினும் உயர்ந்த நோக்கில் உள்ள மனிதர்கள் இச் செயல்களைப் பயன்படுத்த வேண்டாம் என்பதை இங்ஙனம் விளக்குகிறார்.

கட்டுரையின் நடை

சொற்களைக் குறைப்பதால் அதிகமாக்கினால் அவை சிறந்த கட்டுரை ஆகாது. தேவையானக் கருத்துக்களையும் பொருள் செறிவும் இருக்க வேண்டும். பொருளை மிகவும் விரிவுபடக் கூறின் அதன் கலை அழகு சிதைவுறும் சுருக்கமாகக் கூறின் அதன் பொருள் முழுமையானக் கருத்துக்களை மறைத்து விடும். ஒரு சிறந்த கட்டுரை அளவிலும் வடிவிலும் ஒரு வரையறை உடையதாக இருக்க வேண்டும்.

"ஒரு கட்டுரையில் விளக்கமாகவும் கூற வேண்டிய தில்லை என்பதை மனத்திற் கொள்ளுதல் வேண்டும். எனவே ஒரு கட்டுரை எப்பொருளைப் பற்றியதாயினும் அது சுருக்கமாக இருத்தல் வேண்டும்"[3]

என்பது புலனாகின்றது. அறிஞர் வின்ஸ்டன் சர்ச்சில் அவர்கள் நடை மிகவும் உயர்ந்ததாகக் கருதப்படுகின்றது. எவ்வாறு பாலைக் காய்ச்சக் காய்ச்ச அதனுடைய இனிமை அதிகமாகிறதோ அதே போன்று சொற்களைச் சுருக்க சுருக்க கருத்துகள் ஒளிரத் துவங்கி விடுகின்றது. பூனை எவ்வாறு தன்னுடைய நாவல் தன் உடம்பைத் தொட்டு அதனைத் தூய்மையுறச் செய்கின்றதோ அதே போன்று தான் ஓர் எழுத்தாளனும் தான் கூற விரும்பும் கருத்துக்களைத் திரும்ப திரும்ப எண்ணியும், எழுதியும் அடித்தும், திருத்தியும் செம்மையுறச் செய்ய வேண்டும் என்பதை விளக்குகின்றன.

சிந்தனையாளர்கள்

உலக பெரும் சிந்தனையாளர்களான அறிஞர்கள் பற்றி அவர்களின் எழுத்து நடையைப் பற்றி கூட்டுகின்றார். அவர் சாக்ரடீஸ், பிளேட்டோ, அரிஸ்டாட்டில் தங்களுடை திறமையை உலக முன் வைத்துள்ள நிலையை விளக்குகிறார்

பெருநூலான திருக்குறளை எழுதுவதற்கு எத்தனை சிரமப்படுத்திருப்பார் என்பதை சிந்தியுங்கள். நெசவுதொழி செய்து தறிக்குழியில் நின்று நெய்து கொண்டிருக்கும் பொழுது தன்னுடைய உள்ளக் கருத்தினைச் செம்மையாகச் சென்றடை ஆழ்ந்த பொருள் நிறைந்;து கூறப்பட்டிருப்பதை நாம் உணர வேண்டுமல்லவா?. அதனால்தான் இன்று உலக மகா இலக்கியமாகத் திருக்குறள் கருதப்படுகிறது.

சுருங்க கூறுவதே அறிவின் ஆன்மாவாகும் என்பது ஆங்கிலப் பெருங்கவிஞர் ஷேக்ஸ்பியரின் கருத்து. தன்மை நிறைந்த கருத்துக்களைச் சுருக்கமானச் சொற்களால் மயக்கமின்றித் தெளிவாகக் கூறுவதே அறிவின் திறமையாகும்.

இதனை நன்னூலில்

"சுருங்கச் சொல்லல் விளங்க வைத்தல்"

என்ற நூற்பாவை பவணந்தி முனிவர் விளக்கியுள்ளனர். ஒரு பொருளை புரிய வைப்பதற்கு ஆழ்ந்த சொற்களைப் பயன் படுத்த வேண்டாம்.; ஒரு சொல் பல பொருள் தரலாம். ஆயினும் உணவு என்பதற்காக அதை அதிகம் உண்ண முடியாது. சொற்களை பல இடங்களில் அதிகம் பயன் படுத்தினால் அதன் தன்மை சுவைபட இருக்காது என்பதை அறிய வேண்டும்.

பேனா பிடித்தவர்கள் எல்லாம் எழுத்தாளர்களாக முடியாது. ஒரு செய்திகளை நன்கு படித்து அவற்றை முழுமை யாக அறிந்த பின்னரே ஒரு கட்டுரையை எழுத, வேண்டும். அப்பொழுதுதான் அதன் வடிவம், நடை, சுவை, கருத்துக்கள் செறிவுபட அமைந்திருக்'கும். தங்களுக்கு எத்தனை நூல்கள் வேண்டுமானால் பிடித்திருக்கும். அவற்றில் முழுமையாக

அந்த நூல்களைப் பற்றி கா நிலை எழுதிப் பார்த்தல்தான்
அந்த நூலின் சிறப்பினையும் தெரிவினையும் உணர முடியும்
நான் விரும்பும் எழுத்து என்ற பகுதியில் கா நிலை எழுதும்
முறையும் அவற்றின் ஒழுக்க தன்மை நிலைகளை, அமைப்பு
களையும் விளக்குகின்றது.

நான் விரும்பும் நூல்கள்

இயற்கை ஒத்த சூழலில் இன்பத்தைத் தரக்கூடிய மனத்திற்கு இனிமையாக ஓர் நூலைப் படிக்கும் பொழுது நமக்கு மகிழ்ச்சி பொங்கும். அதன் நிலையைப் பற்றி அறிவீர் நூல்களைப் பொதுவாக இருவகையாகப் பார்க்கலாம்.

1. படிக்க வேண்டிய ஒரு நூல்
2. படிப்பதற்காக ஒரு நூல்

'படிக்க வேண்டிய ஒரு நூல்' இவற்றைப் படிப்பவர்கள் குறைவுதான். நல்ல நூல்களை அதாவது இலக்கியம், சமூகம், கலை, அறிவியல் துறை, மருத்துவம், விஞ்ஞானம், கலாச்சாரம் போன்ற துறைகளில் தேர்ந்தெடுத்துப் படிப்பவர்களின் எண்ணிக்கை குறைவுதான்.

படிப்பதற்காக ஒரு நூல் இவற்றை அனைவரும் எளிதில் வாங்கி படிக்கின்றார்கள். காரணம் எளிமை, வண்ணப் படங்கள், மோகம் போன்ற நிலைகளில் படிக்கின்றார்கள் இன்று மக்கள் நவீனகாலம் என்ற பெயரில் தவறான நிலைக்கு தள்ளப்படுகிறார்கள். நடை, உடை, பழக்கவழக்கங்கள் ஆகிய நிலைகளில் நவீனத்துவத்தைக் கையாளுகின்றார்கள். நல்ல கதைகள் நீதிக்கதைகள், துப்பறியும் கதைகள், அரசியல் போன்ற நூல்களைப் படிப்பதால் நாட்டின் முன்னேற்றத்திற்கு வழிகோலாகும் என்பதை உணர்வீர்.

ஆசிரியர் தன்னுடைய வாழ்வில் படித்த சில கதைகளை விளக்கியுள்ளார். சிவகாமி சபதம், அலைஓசை, ஷேக்ஸ்பியரின் அயாகோ, விக்டர் ஹியூகோ எழுதிய ஏழைபடும் பாட்டு, தாமஸ் ஹார்டி எழுதிய நகரத் தலைவர் ஆகிய நூல்கள் இவரைக் கவர்ந்த நூல்களாகும். ஒரு நூலை ஒரு மணிநேரம்

படித்தாரானால் அந்நூலில் வாசித்தக் கருத்துக்களை அந்த நேரம் சிந்திக்கும் திறன் அளவுக்கு வாசித்தல் அவசியமாகும் ஒன்றாகத் திகழ்கின்றது.

பழமொழி

இனிமை நல்கக் கூடிய பழமொழிகளைப் பற்றி ஆங்கிலக் கவிஞன் டென்னிஸன் கூறும் பொழுது -

"ஐந்து வார்த்தைகளே நீளமுள்ள ஆபரணமாகிய அவை காலத்தின் நீட்டப்பட்ட முன் விரலிலே என்றென்றுமல்லவோ ஒளிர்ந்து கொண்டுள்ளன.[5]

என்று கூறுகின்றார். முற்காலத்தில் அவைகள் சமூகத்தின் எழுதப் படாத சட்டமாக இருந்தது. ஆயிரம் சொற்கள் பொருள்கள், ஆற்றலையும் சிறிய வாக்கியங்களில் அமைந் தவையாகத் திகழ்கின்றது. அனுபவத்தின் வாயிலாக எழுதப் பெற்றவைதான் பழமொழியாகும். அனுபவம், சிந்தனை, கற்பனை இவைதான் பழமொழி உருவாகுவதற்கு காரணமாக அமைகின்றது. இப்பகுதியில் நூல்களின் சிறப்பியல்புகள் அவை கற்கும் முறையினையும் செம்மைப் படுத்தியுள்ளனர்.

நான் விரும்பும் பெரியார்கள்

இன்று உலகில் எங்கும் பார்த்தாலும் கேட்பவர்கள், பேசக் கூடியவர்கள் மலிந்து கிடக்கின்றார்கள். காரணமின்றி பேசு பவர்கள், காரணத்தோடு பேசுவர்கள் எனக் காணப்படு கிறார்கள். நமக்கு அலுப்பு தருமாறு பேசக்கூடியவர்கள் தான் அதிகம் காணப்படுகிறார்கள். நல்லக் கருத்துக்களைப் பேசக்கூடியவர்கள் குறைவுதான். நாம் பேசுவதால் மக்களை ஈர்க்கின்றதா அல்லது வெறுக்கின்றதா என்பதை அறிய வேண்டும்.

பெரியார்கள் யார்?

பெரியார்கள் என்றால் பெரியார்கள் பல்வேறு விதமாகக் கூறியுள்ளனர். பிரஸியப் பேரஸியப் பேரரசின் பிஸ்மார்க் உண்மையான பெரியார்களை மூன்று வித அடையாளங்

கூறுகின்றனர். தங்கள் திட்டங்களின் தாரளத் தன்மை உடையவர்களாக இருப்பார்கள். அவற்றைச் செயல்படுத்தும் பணித் தன்மையுடன் நடந்து கொள்வார்கள். வெற்றியின் நிதானத்துடன் நடந்து கொள்வார்கள் என்று கூறினார். பெரியவர்கள் காலத்தின் நிலைகளை கணித்து செல்லும் திறனை விளக்குகின்றனர்.

யாதும் ஊரே யாவரும் கேளீர்
தீதும் நன்றும் பிறர்தர வாரா[5]

எனப் புறநானூறு பாடலில் கணியன் பூங்குன்றனார் உலகில் உள்ள அனைத்து மக்களும் தமது சகோதர சகோதரிகள் என்று இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே தன் நுண்ணறிவால் உணர்த்தவர். உலகம் பலவிதம் அதிலே நாம் அதிமேதைகளையும் காண்கிறோம். நடுத்தர அறிவு படைத்தவர்களையும் காணலாம். அதிமேதைகள், தாம் கானகத்தின் விடப்பட்ட போதினும் தாங்களாகவே முன்னேறிக் கொள்வார்கள். அறிஞர் ஸிஸரே அவர்கள் விளக்குகின்றார்கள்.

"இயற்கைத் திறனில்லாத படிப்பாளிகளைவிடப் படிப்பில்லாத இயற்கைத் திறனுள்ளவர்கள் பெரும் புகழையும் பண்புகளையும்; பெற்று விடுவார்கள்"[6]

என்ற நிலைகளை ஒவ்வொருவரும் உணர வேண்டும்.

அறிவு மேதைகள்

தன் மனதில் கவர்ந்த அறிவு மேதைகளைப் பற்றி கூறுகின்றனர். மாபெரும் வீரான நெப்போலியன் அரசியல் மேதைதாம் பல்வேறுதிறன் பெற்றவர். புருஷோத்தமன் பெண்கள் மீது அக்கறை கொண்ட பெருந்தன்மையுடையவர் ஜூலியஸ் சீசரின் மறப்போரும் தன்மையை உடையவர் அடிமைநிலையைப் போக்கியவர். உலகமே இன்றும் உலகமாக இருப்பதற்கு காரணமாக இருப்பவர் ஆப்ரகாம் லிங்கன் ஆவார்.

பலரின் அறிவுக் கண்களைத் திறந்த சாக்ரடீஸ் ஓர் அறிவுப்பிரதி ஆவார். அவரின் மாணவனான பிளேட்டோவை

அறிவின் இயல்பு என்று கூறலாம். மகாபாரத விளக்க ஓவியங்களில் தர்மர் என்று பெயரிடப்பட்ட இவரை நற்குணங்களால் தர்மர் என்று அழைக்கப்பட்டார். இவர் அஹிம்சையை ஆயுதமாகக் கொண்டு இந்தியாவுக்கு விடுதலையைப் பெற்றுத் தந்த காந்தியடிகள் பாரதத்தை புகழ்கின்றனர். இத்தகைய அறிவு மேதைகளைப் பற்றி விளக்கப்படுகின்றது. அறிவியல் அறிஞர்கள், தேசத்தலைவர்கள் அனைத்து அறிஞர்களின் உள்ளத்தையும், அவர்களின் நற்பண்புகளையும் எடுத்துரைக்கின்றன.

நான் விரும்பும் உலகம்

இவ்வுலகம் தோன்றியது முதல் இது வரை எத்தனையோ நாகரிகங்கள் தோன்றி மறைந்து விட்டன. பழக்கவழக்கம், பண்பாடு ஆகிய இரண்டையும் மக்கள் புகுத்திவிடுகின்றனர். நாகரிகம் அழிவதற்கும், உருவாகுவதற்கும் மக்களே காரணமாகின்றார்கள். நாகரிக வளர்ச்சி அதிகமானால் அதன் தீங்கும் உண்டாகின்றது. 'மதம்' பெயரில் முதலில் நாகரிகம் வளரத் தொடங்கியது. அதன் பின்னர் அறிவியல் வளர்ச்சியால் நாகரிகத்தைத் தொடங்க ஆரம்பித்தார்கள்.

மக்கள் ஒவ்வொருவரும் தங்களுக்கென ஒரு கொள்கையை ஏற்படுத்தி மக்களை ஏற்றுக் கொள்ள நிபந்தனைகளைச் செய்கின்றனர். உங்களுடைய கொள்கை உங்களுக்கு மேலானதாக இருந்தென்றால் அதனை உங்களுடனேயே வைத்துக் கொள்ளுங்கள். பிறரிடம் கொண்டு போய்த் திணிக்க முயலாதீர்கள் நீங்களும் வாழுங்கள் பிறரையும் அவர்களுடைய போக்கில் வாழ விடுங்கள் என்பதைக் கருத்தில் கொள்க.

போர் அமைதி

போர் முனைகளில் நாடுகள் தங்களுக்கென சில முறைகளை வைத்துள்ளனர். அவற்றில் மக்களைப் பாதிக்காத வண்ணம் இருக்க வேண்டும். ஆனால் இவர்களின் கடமை, கொள்கை வேறுபட்டு காணப்படுவதால் சில இன்னல்கள் ஏற்படுகின்ற நிலை உருவாகின்றது. உலக அமைதிக்காக

அரசாங்கம் செயல்பட வேண்டும். உலக நன்மையைக் கருத்தில் கொண்டு ஒவ்வொரு நாடும் செயல்பட முன்வர வேண்டும். அமைதியின் விரோதிகளான பசியை, நோய், பொறாமை, பிணம், பெருமை ஆகியவற்றை நாம் நீக்கிவிட வேண்டும். அமைதியாக வாழும் நிலை உருவாகும். ஆகவே இந்நூலானது வாழ்க்கையில் படித்த, பிரித்த நூல்களைப் பற்றியும், அறிஞர்களைப் பற்றியும் அழகான நடையில் தெளிவான நடையில் எடுத்துரைத்துள்ளார். ஒவ்வொரு பகுதியிலும் கேள்விக்கு பதில் கூறுவது போல் சொல்லிருக்கும் விதம், அதனுடைய சிறப்பம்சம் ஆகும். எதிர்வரும் எழுத்தாளர்கள் இப்படித்தான் இருக்க வேண்டும் என்ற தன்மையும், வாழ்க்கைக்கும் வழிகாட்டும் தன்மையையும், பல்வேறு அரிய தகவல்களைப் பற்றியும் எடுத்துரைத்துள்ளார்.

வாசிப்போம், வளர்வோம்.

அடிக்குறிப்பு

1. விளக்கேற்றும் விளக்கு- அப்துற் றஹீம்- பக் - 6
2. குறள் எண் 89
3. இலக்கியத் திறனாய்வியல் - டாக்டர் தா. ஏ. ஞானமூர்த்தி- பக் 354
4. நன்னூல் - புலியூர்க்கேசிகள்- நூற்பா எண் 13
5. புறநானூறு பாடல் எண் 192
6. இளமையும் கடமையும் அப்துற் றஹீம்- பக் - 6

Vol - 3 -1&1S May 2022
Online Version : www.jmcjarj.org

ISSN (P) : 0973-0303
ISSN (O) : 2582-5941

JARJ

Jamal Academic Research Journal : an Interdisciplinary



தமிழக முஸ்லிம்களின் வரலாறு, பண்பாடு, இலக்கியம்

HISTORY, CULTURE AND LITERATURE OF MUSLIMS OF TAMIL NADU

பதிப்பாசிரியர்கள்
பேரா. கா. முகமது இஸ்மாயில்
முனைவர் தா. உமர் சாதிக்
முனைவர் ச.அ.சையத் அகமது பிரோசு

ஜமால் முகமது கல்லூரி (தன்னாட்சி)
ஆற்றல் வளத்தனித்தகுதியும்
தேசியத்தர மதிப்பீட்டு மன்றாம் சுற்றில் 'A' தகுதிச் சான்றும்
DBT -நட்சத்திரக் கல்லூரித்திட்டம் மற்றும் DST-FIST நிதிநல்கையும் பெற்றது
பாரதிதாசன் பல்கலைக்கழக இணைவு பெற்றது
திருச்சிராப்பள்ளி- 620 020

Since 1951

தமிழக முஸ்லிம்களின்
வரலாறு, பண்பாடு, இலக்கியம்
History, Culture and Literature of
Muslims of Tamil Nadu

பதிப்பாசிரியர்கள்

பேரா.கா.முகமது இஸ்மாயில்

முனைவர் தா.உமர் சாதிக்

முனைவர் ச.அ.சையத் அகமது பிரோசு

Since 1951

ஜமால் முகமது கல்லூரி (தன்னாட்சி)

ஆற்றல் வளத்தனித்ததகுதியும்

தேசியத் தர மதிப்பீட்டு மன்றம் சுற்றில் 'A' தரச்சான்றும்

DBT- நட்சத்திரக் கல்லூரித் திட்டம் மற்றும் DST-FIST நிதிநல்கையும் பெற்றது

(பாரதிதாசன் பல்கலைக்கழக இணைவு பெற்றது)

திருச்சிராப்பள்ளி - 620 020.

தமிழ்நாடு, இந்தியா

தமிழக முஸ்லிம்களின் வரலாறு, பண்பாடு, இலக்கியம்

பதிப்பாசிரியர்கள் : பேரா.கா.முகமது இஸ்மாயில்
முனைவர் தா.உமர் சாதிக்
முனைவர் ச.அ.சையத் அகமது பிரோஸ

வகை : பன்னாட்டுக் கருத்தரங்க ஆய்வுக் கட்டுரைகளின் தொகுப்பு
(தமிழ் மற்றும் ஆங்கிலம்)

பக்கங்கள் : 378

வெளியீடு : ஜமால் முகமது கல்லூரி (தன்னாட்சி),
திருச்சிராப்பள்ளி - 620 020

அச்சாக்கம் : தி பிரிண்டிங் ஹவுஸ், திருச்சி -23

JARJ

Jamal Academic Research Journal : an Interdisciplinary

ISSN (P) : 0973-0303

ISSN (O) : 2582-5941

Online Version : www.jmcjarj.org

History, Culture and Literature of Muslims of Tamil Nadu

Guest Editors : Prof.K.Mohamed Ismail
Dr.T.Umar Sadiq
Dr.S.A.Syed Ahmed Firoz

Subject : Research Articles of an International Seminar
(English and Tamil)

Pages : 378

Publication : Jamal Mohamed College (Autonomous)
Tiruchirappalli - 620 020

Printing : The Printing House, Trichy -23

CONTENTS

பொருளடக்கம்

Sl. No.	Title and Author's Name	Page No.
1.	Tamil Muslims in the Gulf-A study on Migration **- Dr.J. Raja Mohamad**	1
2.	Impact of sufism on tamil Society, Culture and Literature **- Dr. T. Umar Sadiq**	7
3	Muslims of Coromandel Coast-Society and Economy - A.D.1300-1901 with special reference the South Arcot District **- Dr. K. Kanniah**	17
4	Communal Representation A True Means of Political Representation To Muslims -A Review on Congress Ministry of Madras Presidency (1937-1939) **- Dr. S.Z. Niazudeen**	23
5	Origin and Development of Islamic Education in Tamilnadu: A Historical Perspective **- Dr.S.I.A.Muhammed Yasir**	33
6	A Study of Freedom Struggle in Madras Presidency: Nationalist Muslim Press And Nation-Building - S. Nazeemunnisa Begum	39
7	National Award For Mat Weavers In Pattamadai **- Dr. M.S.A Jafarulla Khan**	41
8	Muslims' Education : Role of Madarsa in Muslims Education in India **- Dr.S.Suganthi**	50
9	Role of Muslims in India's Freedom Struggle **- Mrs.R. Mary Stella**	**58**
10	Land Endowment of Nawab Muhammad Ali Wallajah in Tiruchirappalli region with special reference to Christian Frederick Schwartz - A.Manuneethi & Dr. M. Mohamed Tajdeen	**65**
11	Ma'bar To Malabar: The Relationship Between Kayalpattanam And Northern Kerala - Sabeerali P.K.	**70**
12	Socio-Economic Conditions Of Tirunelveli District With Special Reference To Tamil Muslims -A Study **- Dr. T.Umar Sadiq & M.H.Abdul Gaffoor**	**73**
13	A Case Study of Hobart Muslim Girls School, Royapettah, Chennai (1873-2023) **- R. Abida Begum & Dr. T. Abdul Khadar**	77

JARJ Jamal Academic Research Journal-an Interdisciplinary ISSN(P): 0973-0303
J. Raja Mohamad, JARJ-Vol-3-1-May-2022:1-6 ISSN(O): 2582-5941

Tamil Muslims in the Gulf-A study on Migration

Dr.J. Raja Mohamad
Director, Center for Islamic Tamil Cultural Research, Jamal Mohamed College, Tiruchirappalli

Abstract

The enterprising Muslims of Tamil country were masters of maritime commerce and allied activities right from the inception and spread of Islam from 8-9th Centuries C.E., on the east coast of south India. They had also established trade and social network across the seas. Due to economic reasons many migrated to the south east and west Asian countries in search of better opportunities. Such migration continued for centuries in that they were attracted by the new opportunities in the Gulf Countries during the first quarter of 20th Century.

A number of people right from the labour class to high skilled professionals migrated to these countries. They had brought prosperity to their families and as well to the nations on both sides. There are many successful stories. For achieving this they had been put in to many ordeals, lose, hazards and challenges. But still the migrations continue to the Gulf countries. It is estimated that there are about 3,50,000 migrant (Tamil Muslim) workers in GCC countries. The paper is a discussion on the various aspect on the subject based on authentic data.

Key Words: Gulf Counties, Emigration, Migration, Skilled professionals, Labourers, Home country,Expatriate, Labour camp, Remittance, Exploitation, Wages, Psycho-Socio, problems.

Corresponding author E-mail : jrajamohamad@yahoo.com

The Muslims of Tamil Nadu are enterprising and always mobile. The spread of Islam in the 7th century C.E., paved way for the emergence of this strong trading community in the east coast of the peninsular India. After the birth the Islam, the Arab maritime traders came here as Arab Muslims and spread their influence where they had traditional trade contact. These merchant missionaries took efforts to preach the doctrines Islam to the people here, and many of them willingly embraced Islam. Some of the Arab Muslims who stayed here for a longer period married the local women. The children born from such matrimonial alliance together with the converts from other religions, inaugurated the Tamil Muslim society on the east coast of South India right from the eighth century, C.E. Muslim colonies sprang up. They followed the suit of their progenitors the Arabs, and concentrated in oceanic commerce and other maritime activities. They undertook voyages for long distance places and established trade contact in the port towns in the Persian Gulf as well and carried commodities that were in demand in the western marts and their sojourn continued for centuries till about 1900 and thus the Tamil Muslims by tradition had an affinity towards the Arab lands[1].

The people in the maritime ventures among the Tamil Muslims, were ship owners and maritime traders and were also experts in a number of related maritime activities and they provided employment to thousands of people on the east coast. They lost their economic fortunes to the competitions, economic and technological superiority of the European trading companies in India in the 19th century and went in search of better opportunities for

ஜமால் முகமது கல்லூரி (தன்னாட்சி), திருச்சிராப்பள்ளி

சமூகத்தில் வாழும் அடித்தட்டு மக்கள் குறிப்பாக சிறுபான்மை இஸ்லாமிய சமுதாய மக்கள் பயன்பெறும் வகையில் ஹாஜி எம்.ஜமால் முஹம்மது சாஹிபு மற்றும் ஜனாப் என்.எம். காஜாமியான் ராவுத்தர் ஆகிய வள்ளல் பெருமக்களால் 1951 -ஆம் ஆண்டு தோற்றுவிக்கப்பட்ட அரசு உதவி பெறும் தன்னாட்சிக் கல்லூரி ஆகும். இது பாரதிதாசன் பல்கலைக்கழகத்துடன் இணைவு பெற்றது. இக்கல்லூரியில் 25 இளநிலை மற்றும் 20 முதுநிலைப் பட்டப்படிப்புகள் உள்ளன. 19 துறைகள் ஆய்வுத் துறைகளாகத் திகழ்கின்றன. கல்லூரியில் பயிலும், மொத்த மாணவ, மாணவிகளின் எண்ணிக்கை சுமார் 12,000 ஆகும். மேலும், 145 அரசு ஊதியம் பெறும் பேராசிரியர்கள் உட்பட மொத்தம் 497 பேராசிரியர்கள் இக்கல்லூரியில் பணியாற்றி வருகிறார்கள். இக்கல்லூரி 1976 இல் வெள்ளி விழாவையும், 2001 இல் பொன் விழாவையும் 2011 இல் வைர விழாவையும் கொண்டாடி மகிழ்ந்தது. 2001 இல் **NAAC** குழுவால் ஐந்து நட்சத்திரத் தகுதி வழங்கப் பெற்றது. 2004-2005 கல்வியாண்டு முதல் தன்னாட்சிக் கல்லூரியாக விளங்குகின்றது. இக்கல்லூரி **NAAC** குழுவால் 2009 ஆம் ஆண்டிலும் மீண்டும் 2016 ஆம் ஆண்டிலும் 'A' தகுதிக் கல்லூரியாக அங்கிகரிக்கப் பெற்றது. 2011-2012 கல்வியாண்டு முதல் பல்கலைக்கழக மானியக் குழுவால் ஆற்றல்வளத் தனித்தகுதி பெற்ற கல்லூரியாக அங்கிகாரம் வழங்கப்பட்டுள்ளது. இந்திய அரசு மனிதவள மேம்பாட்டுத் துறையின் கல்லூரித் தரவரிசை பட்டியலில் இக்கல்லூரி 2020-21ஆம் ஆண்டில் இந்திய அளவில் 65ஆம் இடம் பெற்றது. இத்தகு சிறப்புகளைப் பெற்ற ஜமால் முகமது கல்லூரி சமூகத்திற்கு உயர்கல்வியை வழங்கும் தன்மையால் சிறந்த நிர்வாகிகளையும், கல்வியாளர்களையும், அறிவியலாளர்களையும், சமூக ஆர்வலர்களையும், அறிவு மற்றும் ஆளுமைத் திறன்மிக்கோரையும் கணினி வல்லுநர்களையும் உருவாக்கி வருகிறது.

முதுகலைத் தமிழாய்வுத்துறை

கல்லூரித் தொடங்கப் பெற்ற 1951 ஆம் ஆண்டு முதலே தமிழ்த்துறையும் இயங்கி வருகின்றது. 1979 ஆம் ஆண்டு முதுகலை வகுப்பும் 2003-2004 கல்வியாண்டில் ஆய்வுப் படிப்புகளும் தொடங்கப் பெற்று முதுகலைத் தமிழாய்வுத்துறையாக இத்துறை பரிணமித்து வருகிறது. இதுவரை 35 ஆய்வாளர்கள் முனைவர் பட்டத்தையும் 200 ஆய்வாளர்கள் ஆய்வியல் நிறைஞர் பட்டத்தையும் பெற்றுள்ளனர். இளநிலை தமிழிலக்கிய பட்ட வகுப்புகள் தன்னிதிப் பிரிவில் ஆண்கள் மற்றும் மகளிர் பிரிவில் இயங்கி வருவதும் குறிப்பிடத்தக்கது. அறக்கட்டளைப் பொழிவுகள், பல்கலைக்கழக மானியக்குழு உதவியுடன் நடைபெறும் சிறப்புப் பொழிவுகள் மற்றும் பன்னாட்டு அளவிலான தேசியக் கருத்தரங்குகள் மாணவர்களின் அறிவுப் பசியைப் போக்கும் வற்றாத ஊற்றுகளாக விளங்குகின்றன. இறையருட் கவிமணி கா.அப்துல் கபூர், பெரும்புலவர் டாக்டர் சி.நயினார் முகம்மது, முனைவர் பீ.மு.மன்சூர் போன்ற துறையின் முன்னோடிகள் வாயிலாக ஜமால் முகமது கல்லூரி முதுகலைத் தமிழாய்வுத்துறை பன்னாட்டு அளவிலான கவனத்தை ஈர்த்துள்ளது எனில் மிகையாகாது.

முதுகலை வரலாற்று ஆய்வுத்துறை

இஸ்லாமிய வரலாற்றுத்துறை 1951ஆம் ஆண்டு கல்லூரி தொடங்கிய ஆண்டு முதலே இயங்கத் தொடங்கியது. 1967ஆம் ஆண்டு அரசியல் மற்றும் பொது நிர்வாகத்துறை என்ற பெயரில் செயல்படத் தொடங்கி 1976 ஆம் ஆண்டு முதல் வரலாற்றுத்துறை என்ற பரிணாமத்தைப் பெற்றது. 2004 ஆம் ஆண்டு சுற்றுலா மற்றும் பயண மேலாண்மைஎன்ற வேலைவாய்ப்புப் படிப்பு பல்கலைக்கழக மானியக்குழு உதவியுடன் தொடங்கப்பட்டது. முதுகலை வரலாறு பட்டப்படிப்பு 2005 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது. ஆய்வியல் நிறைஞர் படிப்பு 2007ஆம் ஆண்டிலும் 2016-2017 கல்வி ஆண்டு முதல் முனைவர் பட்ட ஆய்வுத்துறையாகவும் இத்துறை பரிமளிக்கிறது.

இஸ்லாமிய தமிழ்ப் பண்பாட்டு ஆய்வு மையம்

தமிழக முஸ்லிம்களின் வரலாறு, பண்பாடு குறித்து ஆய்வு மேற்கொள்ளும் பொருட்டு ஜமால் முகமது கல்லூரியில் இஸ்லாமிய தமிழ்ப் பண்பாட்டு ஆய்வு மையம் என்னும் ஆய்வு இருக்கை 2017 டிசம்பர் மாதத்தில் தொடங்கப்பட்டது. தமிழ்நாடு அரசு அருங்காட்சியகத்துறையின் மேனாள் உதவி இயக்குநரும், தமிழக முஸ்லிம்கள் வரலாறு குறித்த ஆய்வாளருமான முனைவர் ஜெ.ராஜாமுகமது (புதுக்கோட்டை) இந்த ஆய்வு மைய இயக்குநராகப் பொறுப்பேற்றுள்ளார்.

Printed & Published by **Dr. S. Ismail Mohideen,** Principal, Jamal Mohamed College, (Autonomous) and published from Jamal Mohamed College, 7 Race Course Road, Tiruchirapalli-20. and Printed by Mrs. Zeenath Beevi at The Printing House, 6, Khajamalai Main Road, (Near Collectors Bungalow), Kajamalai, Tiruchirappalli - 620023.
Editor-in-Chief : **Dr. S. Ismail Mohideen**

Vol - 3 -1&1S May 2022
Online Version : www.jmcjarj.org

ISSN (P) : 0973-0303
ISSN (O) : 2582-5941

JARJ

Jamal Academic Research Journal : an Interdisciplinary



தமிழக முஸ்லிம்களின் வரலாறு, பண்பாடு, இலக்கியம்

HISTORY, CULTURE AND LITERATURE OF MUSLIMS OF TAMIL NADU

பதிப்பாசிரியர்கள்
பேரா. கா. முகமது இஸ்மாயில்
முனைவர் தா. உமர் சாதிக்
முனைவர் ச.அ.சையத் அகமது பிரோசு

ஜமால் முகமது கல்லூரி (தன்னாட்சி)
ஆற்றல் வளத்தனித்தகுதியும்
தேசியத்தர மதிப்பீட்டு மன்றாம் சுற்றில் 'A' தகுதிச் சான்றும்
DBT -நட்சத்திரக் கல்லூரித்திட்டம் மற்றும் DST-FIST நிதிநல்கையும் பெற்றது
பாரதிதாசன் பல்கலைக்கழக இணைவு பெற்றது
திருச்சிராப்பள்ளி- 620 020

Since 1951

தமிழக முஸ்லிம்களின்
வரலாறு, பண்பாடு, இலக்கியம்
History, Culture and Literature of
Muslims of Tamil Nadu

பதிப்பாசிரியர்கள்

பேரா.கா.முகமது இஸ்மாயில்

முனைவர் தா.உமர் சாதிக்

முனைவர் ச.அ.சையத் அகமது பிரோசு

Since 1951

ஜமால் முகமது கல்லூரி (தன்னாட்சி)

ஆற்றல் வளத்தனித்ததகுதியும்

தேசியத் தர மதிப்பீட்டு மன்றம் சுற்றில் 'A' தரச்சான்றும்

DBT- நட்சத்திரக் கல்லூரித் திட்டம் மற்றும் DST-FIST நிதிநல்கையும் பெற்றது

(பாரதிதாசன் பல்கலைக்கழக இணைவு பெற்றது)

திருச்சிராப்பள்ளி - 620 020.

தமிழ்நாடு, இந்தியா

தமிழக முஸ்லிம்களின் வரலாறு, பண்பாடு, இலக்கியம்

பதிப்பாசிரியர்கள் : பேரா.கா.முகமது இஸ்மாயில்
முனைவர் தா.உமர் சாதிக்
முனைவர் ச.அ.சையத் அகமது பிரோஸ

வகை : பன்னாட்டுக் கருத்தரங்க ஆய்வுக் கட்டுரைகளின் தொகுப்பு
(தமிழ் மற்றும் ஆங்கிலம்)

பக்கங்கள் : 378

வெளியீடு : ஜமால் முகமது கல்லூரி (தன்னாட்சி),
திருச்சிராப்பள்ளி - 620 020

அச்சாக்கம் : தி பிரிண்டிங் ஹவுஸ், திருச்சி -23

JARJ

Jamal Academic Research Journal : an Interdisciplinary

ISSN (P) : 0973-0303

ISSN (O) : 2582-5941

Online Version : www.jmcjarj.org

History, Culture and Literature of Muslims of Tamil Nadu

Guest Editors : Prof.K.Mohamed Ismail
Dr.T.Umar Sadiq
Dr.S.A.Syed Ahmed Firoz

Subject : Research Articles of an International Seminar
(English and Tamil)

Pages : 378

Publication : Jamal Mohamed College (Autonomous)
Tiruchirappalli - 620 020

Printing : The Printing House, Trichy -23

CONTENTS

பொருளடக்கம்

Sl. No.	Title and Author's Name	Page No.
1.	Tamil Muslims in the Gulf-A study on Migration **- Dr.J. Raja Mohamad**	1
2.	Impact of sufism on tamil Society, Culture and Literature **- Dr. T. Umar Sadiq**	7
3	Muslims of Coromandel Coast-Society and Economy - A.D.1300-1901 with special reference the South Arcot District **- Dr. K. Kanniah**	17
4	Communal Representation A True Means of Political Representation To Muslims -A Review on Congress Ministry of Madras Presidency (1937-1939) **- Dr. S.Z. Niazudeen**	23
5	Origin and Development of Islamic Education in Tamilnadu: A Historical Perspective **- Dr.S.I.A.Muhammed Yasir**	33
6	A Study of Freedom Struggle in Madras Presidency: Nationalist Muslim Press And Nation-Building - S. Nazeemunnisa Begum	39
7	National Award For Mat Weavers In Pattamadai **- Dr. M.S.A Jafarulla Khan**	41
8	Muslims' Education : Role of Madarsa in Muslims Education in India **- Dr.S.Suganthi**	50
9	Role of Muslims in India's Freedom Struggle **- Mrs.R. Mary Stella**	**58**
10	Land Endowment of Nawab Muhammad Ali Wallajah in Tiruchirappalli region with special reference to Christian Frederick Schwartz - A.Manuneethi & Dr. M. Mohamed Tajdeen	**65**
11	Ma'bar To Malabar: The Relationship Between Kayalpattanam And Northern Kerala - Sabeerali P.K.	**70**
12	Socio-Economic Conditions Of Tirunelveli District With Special Reference To Tamil Muslims -A Study **- Dr. T.Umar Sadiq & M.H.Abdul Gaffoor**	**73**
13	A Case Study of Hobart Muslim Girls School, Royapettah, Chennai (1873-2023) **- R. Abida Begum & Dr. T. Abdul Khadar**	77

JARJ Jamal Academic Research Journal-an Interdisciplinary ISSN(P): 0973-0303
J. Raja Mohamad, JARJ-Vol-3-1-May-2022:1-6 ISSN(O): 2582-5941

Tamil Muslims in the Gulf-A study on Migration

Dr.J. Raja Mohamad
Director, Center for Islamic Tamil Cultural Research, Jamal Mohamed College, Tiruchirappalli

Abstract

The enterprising Muslims of Tamil country were masters of maritime commerce and allied activities right from the inception and spread of Islam from 8-9th Centuries C.E., on the east coast of south India. They had also established trade and social network across the seas. Due to economic reasons many migrated to the south east and west Asian countries in search of better opportunities. Such migration continued for centuries in that they were attracted by the new opportunities in the Gulf Countries during the first quarter of 20th Century.

A number of people right from the labour class to high skilled professionals migrated to these countries. They had brought prosperity to their families and as well to the nations on both sides. There are many successful stories. For achieving this they had been put in to many ordeals, lose, hazards and challenges. But still the migrations continue to the Gulf countries. It is estimated that there are about 3,50,000 migrant (Tamil Muslim) workers in GCC countries. The paper is a discussion on the various aspect on the subject based on authentic data.

Key Words: Gulf Counties, Emigration, Migration, Skilled professionals, Labourers, Home country,Expatriate, Labour camp, Remittance, Exploitation, Wages, Psycho-Socio, problems.

Corresponding author E-mail : jrajamohamad@yahoo.com

The Muslims of Tamil Nadu are enterprising and always mobile. The spread of Islam in the 7th century C.E., paved way for the emergence of this strong trading community in the east coast of the peninsular India. After the birth the Islam, the Arab maritime traders came here as Arab Muslims and spread their influence where they had traditional trade contact. These merchant missionaries took efforts to preach the doctrines Islam to the people here, and many of them willingly embraced Islam. Some of the Arab Muslims who stayed here for a longer period married the local women. The children born from such matrimonial alliance together with the converts from other religions, inaugurated the Tamil Muslim society on the east coast of South India right from the eighth century, C.E. Muslim colonies sprang up. They followed the suit of their progenitors the Arabs, and concentrated in oceanic commerce and other maritime activities. They undertook voyages for long distance places and established trade contact in the port towns in the Persian Gulf as well and carried commodities that were in demand in the western marts and their sojourn continued for centuries till about 1900 and thus the Tamil Muslims by tradition had an affinity towards the Arab lands[1].

The people in the maritime ventures among the Tamil Muslims, were ship owners and maritime traders and were also experts in a number of related maritime activities and they provided employment to thousands of people on the east coast. They lost their economic fortunes to the competitions, economic and technological superiority of the European trading companies in India in the 19th century and went in search of better opportunities for

ஜமால் முகமது கல்லூரி (தன்னாட்சி), திருச்சிராப்பள்ளி

சமூகத்தில் வாழும் அடித்தட்டு மக்கள் குறிப்பாக சிறுபான்மை இஸ்லாமிய சமுதாய மக்கள் பயன்பெறும் வகையில் ஹாஜி எம்.ஜமால் முஹம்மது சாஹிபு மற்றும் ஜனாப் என்.எம். காஜாமியான் ராவுத்தர் ஆகிய வள்ளல் பெருமக்களால் 1951 -ஆம் ஆண்டு தோற்றுவிக்கப்பட்ட அரசு உதவி பெறும் தன்னாட்சிக் கல்லூரி ஆகும். இது பாரதிதாசன் பல்கலைக்கழகத்துடன் இணைவு பெற்றது. இக்கல்லூரியில் 25 இளநிலை மற்றும் 20 முதுநிலைப் பட்டப்படிப்புகள் உள்ளன. 19 துறைகள் ஆய்வுத் துறைகளாகத் திகழ்கின்றன. கல்லூரியில் பயிலும், மொத்த மாணவ, மாணவிகளின் எண்ணிக்கை சுமார் 12,000 ஆகும். மேலும், 145 அரசு ஊதியம் பெறும் பேராசிரியர்கள் உட்பட மொத்தம் 497 பேராசிரியர்கள் இக்கல்லூரியில் பணியாற்றி வருகிறார்கள். இக்கல்லூரி 1976 இல் வெள்ளி விழாவையும், 2001 இல் பொன் விழாவையும் 2011 இல் வைர விழாவையும் கொண்டாடி மகிழ்ந்தது. 2001 இல் **NAAC** குழுவால் ஐந்து நட்சத்திரத் தகுதி வழங்கப் பெற்றது. 2004-2005 கல்வியாண்டு முதல் தன்னாட்சிக் கல்லூரியாக விளங்குகின்றது. இக்கல்லூரி **NAAC** குழுவால் 2009 ஆம் ஆண்டிலும் மீண்டும் 2016 ஆம் ஆண்டிலும் 'A' தகுதிக் கல்லூரியாக அங்கிகரிக்கப் பெற்றது. 2011-2012 கல்வியாண்டு முதல் பல்கலைக்கழக மானியக் குழுவால் ஆற்றல்வளத் தனித்தகுதி பெற்ற கல்லூரியாக அங்கிகாரம் வழங்கப்பட்டுள்ளது. இந்திய அரசு மனிதவள மேம்பாட்டுத் துறையின் கல்லூரித் தரவரிசை பட்டியலில் இக்கல்லூரி 2020-21ஆம் ஆண்டில் இந்திய அளவில் 65ஆம் இடம் பெற்றது. இத்தகு சிறப்புகளைப் பெற்ற ஜமால் முகமது கல்லூரி சமூகத்திற்கு உயர்கல்வியை வழங்கும் தன்மையால் சிறந்த நிர்வாகிகளையும், கல்வியாளர்களையும், அறிவியலாளர்களையும், சமூக ஆர்வலர்களையும், அறிவு மற்றும் ஆளுமைத் திறன்மிக்கோரையும் கணினி வல்லுநர்களையும் உருவாக்கி வருகிறது.

முதுகலைத் தமிழாய்வுத்துறை

கல்லூரித் தொடங்கப் பெற்ற 1951 ஆம் ஆண்டு முதலே தமிழ்த்துறையும் இயங்கி வருகின்றது. 1979 ஆம் ஆண்டு முதுகலை வகுப்பும் 2003-2004 கல்வியாண்டில் ஆய்வுப் படிப்புகளும் தொடங்கப் பெற்று முதுகலைத் தமிழாய்வுத்துறையாக இத்துறை பரிணமித்து வருகிறது. இதுவரை 35 ஆய்வாளர்கள் முனைவர் பட்டத்தையும் 200 ஆய்வாளர்கள் ஆய்வியல் நிறைஞர் பட்டத்தையும் பெற்றுள்ளனர். இளநிலை தமிழிலக்கிய பட்ட வகுப்புகள் தன்னிதிப் பிரிவில் ஆண்கள் மற்றும் மகளிர் பிரிவில் இயங்கி வருவதும் குறிப்பிடத்தக்கது. அறக்கட்டளைப் பொழிவுகள், பல்கலைக்கழக மானியக்குழு உதவியுடன் நடைபெறும் சிறப்புப் பொழிவுகள் மற்றும் பன்னாட்டு அளவிலான தேசியக் கருத்தரங்குகள் மாணவர்களின் அறிவுப் பசியைப் போக்கும் வற்றாத ஊற்றுகளாக விளங்குகின்றன. இறையருட் கவிமணி கா.அப்துல் கபூர், பெரும்புலவர் டாக்டர் சி.நயினார் முகம்மது, முனைவர் பீ.மு.மன்சூர் போன்ற துறையின் முன்னோடிகள் வாயிலாக ஜமால் முகமது கல்லூரி முதுகலைத் தமிழாய்வுத்துறை பன்னாட்டு அளவிலான கவனத்தை ஈர்த்துள்ளது எனில் மிகையாகாது.

முதுகலை வரலாற்று ஆய்வுத்துறை

இஸ்லாமிய வரலாற்றுத்துறை 1951ஆம் ஆண்டு கல்லூரி தொடங்கிய ஆண்டு முதலே இயங்கத் தொடங்கியது. 1967ஆம் ஆண்டு அரசியல் மற்றும் பொது நிர்வாகத்துறை என்ற பெயரில் செயல்படத் தொடங்கி 1976 ஆம் ஆண்டு முதல் வரலாற்றுத்துறை என்ற பரிணாமத்தைப் பெற்றது. 2004 ஆம் ஆண்டு சுற்றுலா மற்றும் பயண மேலாண்மைஎன்ற வேலைவாய்ப்புப் படிப்பு பல்கலைக்கழக மானியக்குழு உதவியுடன் தொடங்கப்பட்டது. முதுகலை வரலாறு பட்டப்படிப்பு 2005 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது. ஆய்வியல் நிறைஞர் படிப்பு 2007ஆம் ஆண்டிலும் 2016-2017 கல்வி ஆண்டு முதல் முனைவர் பட்ட ஆய்வுத்துறையாகவும் இத்துறை பரிமளிக்கிறது.

இஸ்லாமிய தமிழ்ப் பண்பாட்டு ஆய்வு மையம்

தமிழக முஸ்லிம்களின் வரலாறு, பண்பாடு குறித்து ஆய்வு மேற்கொள்ளும் பொருட்டு ஜமால் முகமது கல்லூரியில் இஸ்லாமிய தமிழ்ப் பண்பாட்டு ஆய்வு மையம் என்னும் ஆய்வு இருக்கை 2017 டிசம்பர் மாதத்தில் தொடங்கப்பட்டது. தமிழ்நாடு அரசு அருங்காட்சியகத்துறையின் மேனாள் உதவி இயக்குநரும், தமிழக முஸ்லிம்கள் வரலாறு குறித்த ஆய்வாளருமான முனைவர் ஜெ.ராஜாமுகமது (புதுக்கோட்டை) இந்த ஆய்வு மைய இயக்குநராகப் பொறுப்பேற்றுள்ளார்.

Printed & Published by **Dr. S. Ismail Mohideen,** Principal, Jamal Mohamed College, (Autonomous) and published from Jamal Mohamed College, 7 Race Course Road, Tiruchirapalli-20. and Printed by Mrs. Zeenath Beevi at The Printing House, 6, Khajamalai Main Road, (Near Collectors Bungalow), Kajamalai, Tiruchirappalli - 620023.
Editor-in-Chief : **Dr. S. Ismail Mohideen**

செம்மொழி இலக்கியங்களில் தமிழ் அறிவியல்

(பன்னாட்டுக் கருத்தரங்க ஆய்வுக் கட்டுரைகள்)














பதிப்பாசிரியர்கள்

முனைவர் சு.சத்தியா

முனைவர் க.ஆனந்தி

முனைவர் க.முத்தழகி

திருமதி பா.அனுராதா

முனைவர் த.அமுதஜோதி

முனைவர் வா.சண்முகப்பிரியா

தமிழ்த்துறை

பான் செக்கர்ஸ் மகளிர் கல்லூரி

தஞ்சாவூர்

மே - 2022

நூல் விபரம்

நூலின் பெயர்	:	**செம்மொழி இலக்கியங்களில் தமிழ் அறிவியல்**
பதிப்பாசிரியர்கள்	:	முனைவர் சு.சத்தியா முனைவர் க.ஆனந்தி முனைவர் க.முத்தழகி திருமதி பா.அனுராதா முனைவர் த.அமுதஜோதி முனைவர் வா.சண்முகப்பிரியா
மொழி	:	தமிழ்
முதற்பதிப்பு	:	மே 2022
நூல் அளவு	:	1x8
பக்கம்	:	494 + xxiv
விலை	:	ரூ. 600
தரக்குறியீட்டு எண் (ISBN)	:	978-93-81429-23-5
பதிப்புரிமை	:	**தமிழ்த்துறை,** பான் செக்கர்ஸ் மகளிர் கல்லூரி, தஞ்சாவூர்.
வெளியீடு	:	**ஸ்ரீ முருகன் பப்ளிகேஷன்ஸ்,** இராஜராஜன் வணிக வளாகம், தஞ்சாவூர்.
நூல் வடிவமைப்பு	:	**கே.பி.எஸ்.அச்சகம்,** புதிய வீட்டுவசதி வாரியம், தஞ்சாவூர்.
அச்சாக்கம்	:	**த.கூ.ஒ.தி., சீகன் பால்கு அச்சகம்** மற்றும் வெளியீட்டகம், திருச்சி.

15. அகநானூற்றில் ஒரெழுத்தொருமொழியும் அறிவியலும்
- முனைவர் இரா.இந்து - 95
16. நற்றிணையில் அறிவியல் செய்திகள்
- முனைவர் இரா.தனலெட்சுமி - 99
17. இலக்கியங்களில் அறிவியல்
- முனைவர் ம.மருதமுத்து - 105
18. சமய அறிவியல் ஒரு பார்வை
- இரா.அன்பழகன் - 109
19. சஞ்சீவி பர்வதத்தின் சாரலில் காப்பிய அமைப்பு
- முனைவர் இரா.ஜெயஸ்ரீ - 116
20. அறிவியல் நோக்கில் திருக்குறள்
- முனைவர் ச.சு.அருள்பிரகாஷ் - 123
21. வானளந்த பத்துப்பாட்டு
- முனைவர் கரு. முருகன் - 128
22. சங்க இலக்கியத்தில் வானிலைச் செய்திகள்
- முனைவர் அ.சையத் ஜாகீர் ஹுசன் - 133
23. பட்டினப்பாலையில் அறிவியல் செய்திகள்
- முனைவர் க.இக்பால் - 139
24. செவ்விலக்கியங்களில் அறிவியல் கூறுகள்
- முனைவர் வே.சிவானந்தம் - 144
25. புறப் பாடல்களில் அறிவியல் செய்திகள்
- முனைவர் செ.சுகவனேஸ்வரன் - 150
26. சங்க இலக்கியப் பாடல்களில் கால கணிப்பு முறைகள்
- மு.அப்துல் சமது - 156
27. அற இலக்கியங்களில் அறிவியல்
- முனைவர் சே.அமீருதீன் - 163
28. சிலப்பதிகாரமும், பிற இலக்கிய அறிவும்
- முனைவர் கு.நாராயணசாமி - 169
29. சங்க இலக்கியங்களில் வானியல் செய்திகள்
- முனைவர் அ.ஜனார்த்தலி பேகம் - 174
30. பழந்தமிழரின் வியத்தகு அறிவியலறிவு
- முனைவர் க.செல்வி - 182
31. செம்மொழி இலக்கியங்களில் தாவரம்
- முனைவர் ம.ப.தமிழ்ச்செல்வி - 187
32. தொல்காப்பியத்தில் முதற்பொருள்
- முனைவர் க.உமாராணி - 192

சங்க இலக்கியத்தில் வானிலைச் செய்திகள்

முனைவர் அ.சையத் ஜாகீர் ஹுசன்
கலைப்புல முதன்மையர்,
இணைப்பேராசிரியர் & தலைவர்
முதுகலைத் தமிழாய்வுத்துறை
ஜமால் முகமது கல்லூரி (தன்னாட்சி)
திருச்சிராப்பள்ளி - 620020

தமிழ் இலக்கியங்களின் பாடுபொருள் காலம் கடந்தும் காலத்திற்கும் பொருந்தும் இயல்பின. அதன் பொருட்டே இன்றும் அதன் தொன்மை வளம் போற்றும் வகையில் அமைந்துள்ளது. சங்க இலக்கிங்கள் அகம், வீரம் என்ற பொருண்மையில் பாடப் பட்டிருந்தாலும் அதில் வரலாறு, பண்பாடு மற்றும் அறிவியல் என பல துறைபட்டச் செய்திகளையும் பதிவுசெய்து தனித்துவமிக்க இலக்கியப் படைப்புகளாக மிளிர்கிறது. அதன் அடிப்படையில் சங்கப் பாடல்களில் காணலாகும் (அகம், புறம்) வானிலை (அறிவியல்) செய்திகளை வெளிக்கொணர்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

வளிமண்டலம்

நாம் இன்றைய அறிவியல் உலகத்தில் வாழ்ந்து வருகிறோம். எண்ணற்ற நாடுகள் எண்ணற்ற ஏவுகணைகளைச் செலுத்தி வானவியலில் பல்வேறு சாதனைகளைச் செய்து வருகின்றன. நவீன உலகில் நவீனக் கருவிகள் பலவற்றின் உதவியுடன் செய்கின்ற செயல்களையே சாதனை என்றால் எந்த நவீனமும் இல்லாமல் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே நம் தமிழ்ப் புலவர்கள் வளிமண்டலம், வெள்ளி மீன்கள், சனிக் கோள்கள், செவ்வாய் மீன்கள், எரி கொள்ளி என்பன போன்ற எண்ணற்ற வானிலைச் செய்திகளைப் பதிவு செய்திருப்பது போற்றத்தக்க உலகம் வியக்கும் சாதனையாகும். அந்த வகையில் வளிமண்டல வெற்றிடம் குறித்து நெடுநல்வாடை நூற்றுப் பாடல் பதிவு செய்கிறது. சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய பெருவிளவனை வெள்ளைக்குடி நாகனார்.

நீர் செறிந்த பெருங்கடல் எல்லையாகக் கொண்டு காற்று இடையே புகுந்த வானத்தைச் சூடிய, மண் அணுக்கள் செறிந்த குளிர்ந்த தமிழ் நிலத்திற்கு உரிமை உடைய, முரசு முழங்கும் படைகளை உடைய அரசர்களின் சிறப்புக்கு உரியவனே! என்று குறிப்பிடுகிறார். இதனை,

"நளியிடு முந்நீர் ஏணியாக,
வளியிடை வழங்கா வானம் சூடிய
மண்திணி கிடக்கைத் தண்தமிழ்க் கிழவர்
முரசுமுழங்கும் தானை மூவருள்ளும்
அரசெனப் படுவது நினதே, பெரும!"

(புறம்-3

என்ற அடிகள் விவரிக்கிறது. இப்பாடலில் 'வளியிடை வழங்கா வான என்பது வளிமண்டலத்தை குறித்தது. நிலவுலகில் பல கிரகங்களை சுற்றிக் குறிப்பிட்ட எல்லைவரை அமைந்திருக்கும் காற்று நிறைந்த வெளி வளிமண்டலம் என்று கூறுவர். 'தமிழ் இலக்கியங்களில் அறிவிய கோட்பாடுகள்' என்னும் நூலின் ஆசிரியர்.

"வானத்தில் குறிப்பிட்ட தூரத்திற்குக் காற்று நிலவும்,
அதற்கு அப்பால் வானமானது வெற்றிடமாகக் காணப்படும்"
(க.இளஞ்செழியன், த.இ.வு. கோட்பாடுகள், ப.11

என்று தெளிவுப்படுத்துகிறார். இப்பேருண்மையை இரண்டாயிர ஆண்டுகளுக்கு முன்பே சங்கத்தமிழ்ப் புலவர்கள் சொல்லியிருப்ப வியப்புக்குரிய சாதனையாகும். மேலும் மேற்கூறிய புறநானூற்றுப் பாடலை போலவே மற்றொரு புறப்பாடலும் (புறம்-30) காற்றுபுகா வெற்றிடத்தை குறித்து அமைகிறது.

நீர் ஆவியும் - மேகமும்

நீர் ஆவியாகி மேல் எழுந்து அவை மீண்டும் மழையாகப் பெய்யும் என்பது அறிவியல் உண்மை. இதனை,

"குணகடல் முகந்த கொள்ளை வானம்
பணைகெழு ..... முற்றினை வாயின்
.....
வானிலங் கருவி தாஅய் நாளை
நனிபெயரும் பரப்பின் நம்மூர் முன்னுறை"

(அகம்-27

என்ற அகநானூற்று அடிகள் வெளிப்படுத்துகின்றன. மேகமாக எழுந்த நீராவி மீண்டும் மழைநீர் அருவியாகி நீர்த்துறையை அடைகின்றது என்ற கருத்தைப் போல திருப்பாவையில் ஆண்டாளும் பின்வருமாறு பதிவ செய்கிறார்.

"ஆழிமழைக் கண்ணா ஒன்றுநீ கைகரவேல்
ஆழியுள் புக்கு முகந்துகொடு ஆர்த்தேறி
ஊழி முதல்வன் உருவம்போல் மெய்கறுத்துப்
பாழியம் தோள் உடை பத்மனாபன் கையில்
ஆழிபோல் மின்னி வலம்புரிபோல் நின்றதிர்ந்து
தாழாதே சார்ங்கம் உதைத்த சரமழைபோல்"

(ஆண்டாள், திருப்பாவை, பா.4)

விண்மீன்

புறநானூற்றுப் பாடல்களில் விண்மீன் குறித்த செய்தி இடம்பெறுகிறது. உலகியல் மட்டும் அல்லாது வானியல் நிகழ்வுகளும் நமக்கு இன்றியமையாதது எனக் கருதி சங்கப்புலவர்கள் வானியல் செய்திகளையும் சிறப்புடன் பதிவு செய்திருக்கின்றனர்.

"வேலின் அட்ட களிறு பெயர்த்து எண்ணின்
விண்ணிவர் விசும்பின் மீனும்
தண்பெயில் உறையும், உறையாற் றாவே"

(புறம், 302:9-11)

என்ற புறநானூற்று 302வது பாடலில் அரசனின் போர்ப் பெருமையைப் பாடும்போது போரில் கொன்ற களிறுகளின் எண்ணிக்கை, விண்மீன்களை விட மழைத்துளிகளை விட அதிகம் என அறிவியலைப் பாடினார் காமக் கண்ணியார் என்னும் புலவர்.

கருவி வானம் போல

"விசும்பின்
கருவி வானம் போல
வரையாது சுரக்கும் வள்ளியோய் நின்னே!"

(புறம்.204)

இப்பாடல் வரிகள் புறநானூற்றில் கழைதின் யானையார் என்னும் புலவர் பாடிய பாடலாகும். வல்வில் ஓரி என்னும் அரசனின் ஈகைத்திறத்தை இன்ன மழைக்கு ஒப்புமையாக கூறுகிறார். வல்வில் ஓரி என்னும் மன்னன் இன்ன மழைபோல வரையாது கொடுப்பவன் என்றுரைக்கிறது. இப்பாடலில் வரும் 'கருவி வானம் போல' என்ற தொடர் இடி, மின்னல், மழை முதலியவற்றை உள்ளடக்கிய வானத்தைக் குறிக்கும் என்பர். மேலும்,

"வரையா மரபின் மாரி போல"

(புறம்.142)

என்று பேகனின் ஈகைக் குணத்தை மழைக்கு உவமையாகக் கூறி
பரணரின் பாடலும் இங்கு ஒப்பு நோக்கத்தக்கது.

சூரியனின் செலவு

ஞாயிறு நாள்தோறும் செல்லுகின்ற வானவீதியும், அந்த ஞாயிறு
வேகமும், அதனால் சூழப்படும் நிலவுலக வட்டமும், காற்று வீசுகின்ற
திசையும், ஓர் ஆதாரமின்றித் தானே நிற்கின்ற ஆகாயமும் (விசும்பு)
என்று இவற்றையெல்லாம் அறிந்து வந்தவர் போல என்று முதுகண்ணன்
சாத்தனார் சோழன் நலங்கிள்ளியை விளிக்கிறார். இதனை,

"செஞ்ஞாயிற்றுச் செலவும்
அஞ்ஞாயிற்றுப் பரிப்பும்
பரிப்புச்சூழ்ந்த மண்புலமும்
வளிதிரிதரு திசையும்
வறிகு நிலைஇய காயமும், என்றுஇவை
சென்று அளந்து அறிந்தார் போல....."

(புறம்.

என்ற பாடல் வரிகள் சொல்லும் மேற்கூறிய அடிகளால் சூரியனின் பயண
குறிக்கப்படுகிறது. சூரியன் அது அமைந்துள்ள அண்டத்தில் மைய அச்சை
பற்றி சுற்றி வருவதற்குச் சுமார் 225 மில்லியன் ஆண்டுகளாகும் என
கணக்கிட்டுள்ளனர். இக்கால அளவுக்கு 'காஸ்மிக் ஆண்டு' என்கிறது
சமகால அறிவியல் உலகம். ஆனால் பன்னெடுங் காலத்திற்கு முன்
தமிழ்ப்புலவர்கள். சூரியனின் இயக்கம், வளிமண்டத்தின் செயல்
ஆகியவற்றை சிறப்புற வெளிப்படுத்தி பிற்கால அறிவியல் உலகிற்கு
முன்னோடிகளாய் விளங்குகிறார்கள். மேலும், சூரியன் ஒரு நெடுங்
கோளம் என்பதை புறநானூறு பல இடங்களில் பதிவு செய்கிறது.

"செல்சுடர் ஞாயிற்றுச் செக்கரின் தோன்ற"
(புறம்.16)
"உருகெழு ஞாயிற்று ஒண்கதிர்"
(புறம்.160)
"தெரு கதிர்க் கனலி"

(புறம்.397)

என்ற புறநானூற்றுப் பாடல்களில் சூரியக்கோள் குறித்து சங்கச் சான்றோர்
பதிவுசெய்துள்ளனர்.

ணல்லிக்கோள்

பதிற்றுப்பத்து புறநூலில் வானிலை சார்ந்த செய்திகள் பல திகளில் காணப்படுகின்றன. அதில் 13வது பாடலில் செய்வாய் மற்றும் ல்லிக் கோள்கள் பற்றிய செய்தி இடம்பெறுகின்றது. இப்பாடல் குமட்டூர் ணனாரால் பாடப்பட்டதாகும். செய்வாய்க் கிரகத்தோடு வெள்ளிக்கிரகம் றால் இருப்பதால் மழை பொழியும் வளம் மிகுந்த நாடு உன்னுடையது று இயலரம்பன் நெடுஞ்சேரலாதனைப் புலவர் பாடுகிறார். இதனை,

"ஆல சென்ற மருங்கின் வெள்ளி ஓடாது
மழைவேண்டு புலத்து மாரி நிற்ப
தோடு பசிஇகந்து ஓரிப்
த்தன்று பெரும! நீ காத்த நாடே!" *(பதிற்.13)*

ன பாடல் வரிகள் விளக்குகின்றன. புலவர்கள் மன்னனை புகழ்வதற்காகப் டல்கள் பாடினர் என்ற கூற்று பொய்த்துள்ளது. இப்பாடலில் புலவர்கள் னனின் ஆட்சித்திறத்தால் மாதம் மும்மாரி பெய்தது என நம்பிக்கைச் ந்துக் கூறாமல் கோள்கள் திசைமாறி நின்றதால் மழை பொழிந்தது ன அறிவியல் சார்ந்தப் பகுத்தறிவுடன் பாடியிருப்பது தமிழ் இலக்கியங்களின் உண்மைக்கு உயிர்கொடுத்தாற் போன்று உள்ளது.

மம்மீன் - சனிக்கோள்

மம்மீன் என்பது சனிக்கோள் ஆகும். இச்செய்தி புறநானூறு ரு பாடல் குறிப்பிடுகிறது. மேலும், இப்பாடல் தூமகேது என்னும், ம நட்சத்திரம், வெள்ளிக் கோள்கள் பற்றியும் கூறுகிறது. இதனை,

"மம்மீன் புகையினும், தூமம் தோன்றினும்
தென்திசை மருங்கின் வெள்ளி ஓடினும்
யலகம் நிறைய, புதல்பூ மலர,"

(புறம்.117)

ற வரிகளில் காணலாம்.

"சங்கால இலக்கியத்தின் மற்றொரு தனித்தன்மை அறிவியல் ருத்துகளை உள்ளடக்கிய அருந்தமிழ்ப் பாக்களை இயற்றியிருப்பதுதான்"
(மணவை முஸ்தபா, செம்மொழி உள்ளும் புறமும், ப.14)

ர் மணவை முஸ்தபாவின் கருத்து செம்மொழி இலக்கியங்கள் ிவுத்திறமை' என்னும் செம்மொழிப் பண்பிற்கு ஏற்ற சான்றாக அமைகிறது ாம் உறுதிப்படுத்துகிறது.

எனவே, பழந்தமிழர்கள் சிறந்த அறிவியல் அறிஞர்களாக வாழ்ந்துவந்தனர். எதையெல்லாம் இன்றைய அறிவியல் உலகம் கண்டுபிடித்ததாக பெருமைப்படுகிறதோ அதையெல்லாம் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே தமிழன் கண்டுபிடித்துவிட்டான். இது செம்மொழி இலக்கியங்கள் மூலம் நமக்குப் புலப்படுகிறது.

தமிழ் இலக்கியங்கள் காலத்திற்கு ஏற்றார் போன்ற படைப்புகளை கொண்டுள்ளது என்றும் கூறலாம். தமிழ் இலக்கியங்கள் காலத்திற்கு ஏற்ற படைப்புக்களை கொண்டுள்ளது என்றும் கூறலாம். இதற்கு சான்று அன்று பாடிய அறிவியல் செய்திகள் இன்றைய அறிவியல் உலகத்திற்கு ஒத்துப் போவதைக் காணலாம் அதனாலன்றோ! மனோன்மணீயம் சுந்தரனாரும் சிதையா உன் சீரிளமைத் திறம் வியந்து செயல் மறந்து வாழ்த்துதுமே! என்றார்.

பார்வை நூல்கள்

1. புறநானூறு, கழக வெளியீடு
2. இளஞ்செழியன்.த, தமிழ் இலக்கியங்களில் அறிவியல் கோட்பாடு
3. அகநானூறு, கழக வெளியீடு
4. ஆண்டாள், திருப்பாவை, கௌரா புத்தக நிலையம், திருச்சி-620001
5. பதிற்றுப்பத்து, கழக வெளியீடு
6. குருநாதன்.வ (உ.ஆ.), பு.மு.உ.
7. மணவை முஸ்தபா, செம்மொழி உள்ளும் புறமும், சீதை பதிப்பகம், சென்னை-600005
8. ஆறுமுகம்.ப, செம்மொழி, தி பார்க்கர், இராயப்பேட்டை, சென்னை-600014
9. அறிவரசன்.ந, உலகச் செம்மொழிகள் பதிவும் பார்வையும், கௌரா புத்தக நிலையம், திருச்சி-620001
10. பாரதிதாசன் கவிதைகள், மணிவாசகர் பதிப்பகம், சென்னை-600

செம்மொழி இலக்கியங்களில் தமிழ் அறிவியல்

(பன்னாட்டுக் கருத்தரங்க ஆய்வுக் கட்டுரைகள்)














பதிப்பாசிரியர்கள்

முனைவர் சு.சத்தியா

முனைவர் க.ஆனந்தி

முனைவர் க.முத்தழகி

திருமதி பா.அனுராதா

முனைவர் த.அமுதஜோதி

முனைவர் வா.சண்முகப்பிரியா

தமிழ்த்துறை

பான் செக்கர்ஸ் மகளிர் கல்லூரி

தஞ்சாவூர்

மே - 2022

நூல் விபரம்

நூலின் பெயர்	:	**செம்மொழி இலக்கியங்களில் தமிழ் அறிவியல்**
பதிப்பாசிரியர்கள்	:	முனைவர் சு.சத்தியா முனைவர் க.ஆனந்தி முனைவர் க.முத்தழகி திருமதி பா.அனுராதா முனைவர் த.அமுதஜோதி முனைவர் வா.சண்முகப்பிரியா
மொழி	:	தமிழ்
முதற்பதிப்பு	:	மே 2022
நூல் அளவு	:	1x8
பக்கம்	:	494 + xxiv
விலை	:	ரூ. 600
தரக்குறியீட்டு எண் (ISBN)	:	978-93-81429-23-5
பதிப்புரிமை	:	**தமிழ்த்துறை,** பான் செக்கர்ஸ் மகளிர் கல்லூரி, தஞ்சாவூர்.
வெளியீடு	:	**ஸ்ரீ முருகன் பப்ளிகேஷன்ஸ்,** இராஜராஜன் வணிக வளாகம், தஞ்சாவூர்.
நூல் வடிவமைப்பு	:	**கே.பி.எஸ்.அச்சகம்,** புதிய வீட்டுவசதி வாரியம், தஞ்சாவூர்.
அச்சாக்கம்	:	**த.கூ.ஒ.தி., சீகன் பால்கு அச்சகம்** மற்றும் வெளியீட்டகம், திருச்சி.

15. அகநானூற்றில் ஒரெழுத்தொருமொழியும் அறிவியலும்
- முனைவர் இரா.இந்து - 95
16. நற்றிணையில் அறிவியல் செய்திகள்
- முனைவர் இரா.தனலெட்சுமி - 99
17. இலக்கியங்களில் அறிவியல்
- முனைவர் ம.மருதமுத்து - 105
18. சமய அறிவியல் ஒரு பார்வை
- இரா.அன்பழகன் - 109
19. சஞ்சீவி பர்வதத்தின் சாரலில் காப்பிய அமைப்பு
- முனைவர் இரா.ஜெயஸ்ரீ - 116
20. அறிவியல் நோக்கில் திருக்குறள்
- முனைவர் ச.சு.அருள்பிரகாஷ் - 123
21. வானளந்த பத்துப்பாட்டு
- முனைவர் கரு. முருகன் - 128
22. சங்க இலக்கியத்தில் வானிலைச் செய்திகள்
- முனைவர் அ.சையத் ஜாகீர் ஹுசன் - 133
23. பட்டினப்பாலையில் அறிவியல் செய்திகள்
- முனைவர் க.இக்பால் - 139
24. செவ்விலக்கியங்களில் அறிவியல் கூறுகள்
- முனைவர் வே.சிவானந்தம் - 144
25. புறப் பாடல்களில் அறிவியல் செய்திகள்
- முனைவர் செ.சுகவனேஸ்வரன் - 150
26. சங்க இலக்கியப் பாடல்களில் கால கணிப்பு முறைகள்
- மு.அப்துல் சமது - 156
27. அற இலக்கியங்களில் அறிவியல்
- முனைவர் சே.அமீருதீன் - 163
28. சிலப்பதிகாரமும், பிற இலக்கிய அறிவும்
- முனைவர் கு.நாராயணசாமி - 169
29. சங்க இலக்கியங்களில் வானியல் செய்திகள்
- முனைவர் அ.ஜனார்த்தலி பேகம் - 174
30. பழந்தமிழரின் வியத்தகு அறிவியலறிவு
- முனைவர் க.செல்வி - 182
31. செம்மொழி இலக்கியங்களில் தாவரம்
- முனைவர் ம.ப.தமிழ்ச்செல்வி - 187
32. தொல்காப்பியத்தில் முதற்பொருள்
- முனைவர் க.உமாராணி - 192

பட்டினப்பாலையில் அறிவியல் செய்திகள்

முனைவர் க. இக்பால்
இணைப்பேராசிரியர்
தமிழாய்வுத்துறை
ஜமால் முகம்மது கல்லூரி (தன்னாட்சி)
திருச்சிராப்பள்ளி - 620 020.

ஆய்வுச்சுருக்கம்

பழந்தமிழ் மக்கள் பல்வேறு விதமான அறிவில் சிறந்து விளங்கினர். அதைத் தடுத்து நிறுத்தினாலும் தடுத்து நிறுத்த இயலாதது காலம். அதனடிப்படையில் அறிவியல் தொழில்நுட்பங்கள் நன்கு வளர்ச்சியடைந்த இன்றைய நவீன காலத்தில் அறிவியல் சார்ந்த ஆய்வுகள் வளர்ந்து கொண்டே செல்கின்றது.

ஆனால் எத்தகைய தொழில்நுட்பமும் அறிந்திராத நிலையில் பழந்தமிழர்கள் அறிவியலைத் தெரிந்து வைத்துள்ளனர் என்பது ஆச்சரியத்திற்குரிதாகும். இதற்கு ஆதாரமாகப் பதினென்மேற்கணக்கு நூல்களுள் ஒன்றான பட்டினப்பாலையில் குறிப்பிடப்பட்டிருக்கும் அறிவியல் செய்திகள் குறித்து இங்கு ஆராய்ந்து காண்போம்.

திறவுச்சொற்கள்: வானியல் - வெள்ளிக்கோள் - சுற்றுச்சூழல் - பொழுதறிதல் - நட்சத்திரங்கள் - கோள்கள் - கழிமுகம்.

முன்னுரை

தமிழ்மொழியைச் செம்மொழியாக நடுவணரசு அறிவித்துள்ளது. தமிழ்மொழியானது செம்மொழிக்கான தகுதியைப் பெறுவதற்கு இன்றியமையாத காரணங்களாக விளங்கியவை சங்க இலக்கியம் ஆகும்.

பத்துப்பாட்டு நூல்களுள் ஒன்றான பட்டினப்பாலை ஒன்பதாவது பாட்டாக இடம்பெற்றுள்ளது. இந்த நூலை இயற்றியவர் கடியலூர் உருத்திரங்கண்ணனார். இந்த நூலில் வரும் அறிவியல் செய்திகளான வானியல், வெள்ளிக்கோள், சுற்றுச்சூழல் பற்றிய விழிப்புணர்வு மற்றும் கடல் நீரின் உப்புத்தன்மை போன்றவைகளை இவ்வாய்வுக் கட்டுரையில் காண்போம்.

அறிவியல்

அறிவியல் என்பது எத்தனைமுறை சோதித்துப் பார்த்தாலும் ஒரு முடிவைத் தரக் கூடியதாகும். முடிவு என்பது எத்தகைய மாற்றத்திற்கும் உட்படாத ஒரு வரையறையைப் பெற்றுள்ளது. இத்தகைய அறிவியல் குறித்த வரையறையைப் பல்வேறு அறிஞர்கள் தந்துள்ளனர்.

அறிவுக்குப் பொருந்தும் வகையில் கருத்துகளைக் காரணகாரியத் தொடர்புடன் விளக்குவது அறிவியல் ஆகும். அறிவியலின் பங்கு வாழ்க்கையை எளிமைப் படுத்துவதுடன் ஆளுமையையும் உருவாக்கும் என்று த.சிவசங்கரி அறிவியல் என்பதற்கு விளக்கம் தந்துள்ளார்.

சங்க கால மக்கள் இயற்கையைச் சுவாசித்து, உணர்ந்து காலநிலையை கணக்கிட்டு அறிந்துள்ளனர். காடுகளில் உறைவோர் மல்லிகை மலர்ந்து மணம் வீசுவது கொண்டு பொழுதினை அறிதல், முல்லை மலர்வதை வைத்துக் காலத்தினை அறிந்து உள்ளனர்.

"தாழ்வின் நொச்சி சூழ்வன மலரும்
மௌவல், மாச் சினை காட்டி"

(அகநானூறு பாடல் 23: வரி : 11-12)

கதிரவனைக் காண இயலாதவாறு இருண்டு மழை பெய்யும் காலங்களில் நாழிகை வட்டில் கொண்டு நேரத்தைக் கணக்கிடுதல் முறை இருந்துள்ளது

'குறுநீர்க் கன்னல் எண்ணுநர்'

(அகநானூறு பாடல் 43: வரி : 6)

இன்றைய அறிவியல் கருத்துக்கள், சிந்தனைகள் உருபெறுவதற்கு முந்தைய காலத் தமிழர்களின் அறிவியல் சிந்தனைகளே மூலாதாரம் மறுக்க முடியாத உண்மை.

'மண்டினிந்த நிலனும் நிலனேந்திய விசும்பும்'

என்ற புறநானூற்றுப் பாடல் வரியும்,

'அணுவைத் துளைத்து ஏழ்கடலைப் புகட்டிக்
குறுகத் தறித்த குறள்'

என்ற ஔவையார் பாடல் வரிகளும் தமிழர்களின் அறிவியல் சிந்தனைக்குச் சான்றாகும்.

...னில் (Astronomy)

...விண்வெளிப் பொருட்களைப் பற்றி ஆராய்ந்தறியும் அறிவியல்துறை ...னில் (Astronomy) எனப்படுகிறது. பரந்துவிரிந்த வான்வெளியில் ...டங்கள் பால்வழிப்பகுதிகள், விண்மீன்கள், ஞாயிறு, திங்கள் மற்றும் ...தும் புலப்படாத பல புதுமைகள் காணப்படுகின்றன.

...ளாண்மைத் தொழில் செம்மையாக நிகழ வேண்டுமாயின் ஏற்ற ...லங்களைக் கணிக்க வானியல் நூட்பம் மிகவும் தேவை. இரவு, ...கோடை, குளிர், இளவேனில், முதுவேனில் முதலான பருவங்கள் ...ல் அவசியம் ஆகிறது. இதில் பருவக்கால மாற்றத்திற்கு கோள்களின் ...களே காரணம் ஆகும்.

...காவிரிப்பூம்பட்டினத்தில் அக்கால மக்கள் நட்சத்திரங்களுக்கும், ...களுக்கும் இடையிலான வேறுபாட்டையும் அவற்றின் இயக்கங்கள் ...ற அறிவினையும் உடையவராய்த் திகழ்ந்தமையை பின்வருமாறு ...ய முடிகிறது.

"நீணிற விசும்பின் வலனேர்பு திரிதரும்
நாண்மீன் விராய கோள்மீன் போல்..."

(பட்டினப்பாலை அடிகள் : 67-68)

...மீன் கூட்டமைப்பின் இயல்புகளை இன்றைய அறிவியல் ...கருவிகளின் உதவியுடன் ஆராய்ந்து கூறியவைகள் அனைத்தும் ...காலத் தமிழர்கள் தமது அறிவுக்கண்ணால் உற்றுநோக்கி ...துள்ளனர். இன்றைய உலகில் செயற்கைக்கோள்கள் பல விண்ணில் ...ட்டி அதன் மூலம் பல புதிய தகவல்கள் கிடைக்கின்றன. ஆனால் ...யல் தொழில்நுட்ப வளர்ச்சி அடையாத அக்காலத்தில் ஞாயிறு ...லை தரும் என்றும் திங்கள் குளிர்ச்சியைத் தரும் என்பதையும் ...கள் அறிந்து வைத்திருந்தனர்.

...க்கோள்

...வெள்ளை நிறமுடைய கோள் வெள்ளிக்கோள் எனப்படும். மாலை ...து காலையில்தான் வானில் தோன்றும் சூரியக்குடும்பத்தில் அதிக ...ள்ள கோள் வெள்ளிக்கோள் ஆகும். இதனை,

"பயங்கெழு வெள்ளி யாநிய நிற்ப" (பதி. ப. 69: 4)

கோள்களின் மாற்றம், இயக்கம், விளங்கும் திசை ஆகியவற்றைக் கொண்
மழைபொழிதல் காலநிலை மாறுதல்களை முன்னதாகவே அறியும்
திறனுடையவர்களாக சங்க கால மக்கள் இருந்துள்ளனர்
பட்டினப்பாலையால் துவக்க அடிகளே வானியல் கருத்துகளை
உள்ளடக்கியதாக அமைந்துள்ளது. இதனை,

"வசையில் புகழ் வயங்குவெண் மீன்
திசைதிரிந்து தெற்கேகினும்
தற்பாடிய தனியுணவிற்
புட்டேம்பப் புயன்மாறி
வான் பொய்ப்பினும் தான்பொய்யா
மலைத் தலைய கடற்காவிரி" (பட்டினப் பாலை 1-6)

இவ்வடிகள் குற்றமில்லாத புகழை உடைய வெற்றி என்னும் கோள்
தான் நிற்றற்குரிய வடதிசையின்கண் நில்லாது தென்திசையின் கண்ணே
போகினும், மழை பொழிவது நின்றாலும் காவிரி பொய்க்காது என்னும்
வரிகள் மூலம் அறியலாம்.

சுற்றுச்சூழல் பற்றிய விழிப்புணர்வு

அறிவியல் துறையின் வளர்ச்சியால் உருவான துறை சுற்றுச்சூழ
துறையாகும். நாம் வாழும் பூமியைக் காப்பாற்றுவது நமது கட
இத்தகைய சிந்தனையைப் பட்டினப் பாலையின் பாடலடிக
உணர்த்துகின்றன.

"விளைவறா வியன் கழனி
கார்க்கரும்பின் கழாலைத்
நீத்தொறுவின் கவின் பாடி
நீர்செறுவின் நீள்தெய்தல்
பூச் சாம்பும் புலத்து ஆங்கள்" (பட்டினப்பாலை : 10-14)

என்னும் வரிகளில் கரும்பாலைகளிலிருந்து வெளியேறும் புகையால் ஆம்
வாடுகின்றன என்பதை ஆசிரியர் பதிவு செய்துள்ளார்.

உப்புநீர்

கடலுடன் காவிரி கலக்கும் கழிமுகத்தில் (Estvary) தங்கள்
வினை நீங்கக் குளித்துப் பின்னர் கடல் நீரின் பிசுக்கு போக நல்ல நீ
தூய்மை செய்துகொள்வார்கள் என்பதனை,

"தீது நீங்குக் கடலாடியும்
ளகமோகப் புனல் ஆடியும்
லவள ஆட்டியும் உரத்திரை உழக்கியும்
பலை சூழ்ந்தும் பல்பொறி மருண்டும்
(பட்டினப்பாலை 99-102)

லைகள் புலப்படுத்துகின்றன.

ரை

காவிரிப்பூம்பட்டினத்தில் அக்கால மக்கள் நட்சத்திரங்களுக்கும், கோள்களுக்கும் இடையிலான வேறுபாட்டையும் அவற்றின் இயக்கங்கள் பற்றிய அறிவினையும் உடையவராய்த் திகழ்ந்தமையையும் பட்டினப்பாலை வழி அறியமுடிகின்றது.

சூரியக்குடும்பத்தில் உள்ள கோள்களிலேயே மிகவும் ஒளி மிக்கது வெள்ளிக்கோள் ஆகும் என்ற செய்தி வெளிப்படுத்தப்படுகின்றது.

கடும்பாலைகளிலிருந்து வெளியேறும் புகையால் ஆலையைச் சுற்றுப்புறங்களில் பூத்திருக்கும் ஆம்பல்கள் வாடுகின்றன என்று சொல்வதன் மூலம் சுற்றுச்சூழல் குறித்த விழிப்புணர்வு இருந்தமையை அறியமுடிகின்றது.

தமிழர்கள் தங்களின் நம்பிக்கையின் பொருட்டுத் தீவினை நீங்குவதற்குக் காவிரி கடலில் கலக்கும் கழிமுகத்தில் குளித்துவிட்டுப் பின்பு கடல்நீரின் பிசுக்குத்தன்மை நீங்குவதற்குக் காவிரியில் தூய்மை செய்துகொண்ட செய்திகள் புலப்படுத்தப்படுகின்றன.

ரை

பழந்தமிழர்கள் அறிவிற் சிறந்து விளங்கினர் என்பது பழந்தமிழ் லியங்கள் வாயிலாகவே அறியப்படுகின்றது. இதில் மேற்கணக்கில் ஒன்றான பட்டினப்பாலையின் வழியாக மேற்காணும் கள் அறியப்படுகின்றன.

செம்மொழி இலக்கியங்களில் தமிழ் அறிவியல்

(பன்னாட்டுக் கருத்தரங்க ஆய்வுக் கட்டுரைகள்)














பதிப்பாசிரியர்கள்

முனைவர் சு.சத்தியா

முனைவர் க.ஆனந்தி

முனைவர் க.முத்தழகி

திருமதி பா.அனுராதா

முனைவர் த.அமுதஜோதி

முனைவர் வா.சண்முகப்பிரியா

தமிழ்த்துறை

பான் செக்கர்ஸ் மகளிர் கல்லூரி

தஞ்சாவூர்

மே - 2022

நூல் விபரம்

நூலின் பெயர்	:	**செம்மொழி இலக்கியங்களில் தமிழ் அறிவியல்**
பதிப்பாசிரியர்கள்	:	முனைவர் சு.சத்தியா முனைவர் க.ஆனந்தி முனைவர் க.முத்தழகி திருமதி பா.அனுராதா முனைவர் த.அமுதஜோதி முனைவர் வா.சண்முகப்பிரியா
மொழி	:	தமிழ்
முதற்பதிப்பு	:	மே 2022
நூல் அளவு	:	1x8
பக்கம்	:	494 + xxiv
விலை	:	ரூ. 600
தரக்குறியீட்டு எண் (ISBN)	:	978-93-81429-23-5
பதிப்புரிமை	:	**தமிழ்த்துறை,** பான் செக்கர்ஸ் மகளிர் கல்லூரி, தஞ்சாவூர்.
வெளியீடு	:	**ஸ்ரீ முருகன் பப்ளிகேஷன்ஸ்,** இராஜராஜன் வணிக வளாகம், தஞ்சாவூர்.
நூல் வடிவமைப்பு	:	**கே.பி.எஸ்.அச்சகம்,** புதிய வீட்டுவசதி வாரியம், தஞ்சாவூர்.
அச்சாக்கம்	:	**த.கூ.ஒ.தி., சீகன் பால்கு அச்சகம்** மற்றும் வெளியீட்டகம், திருச்சி.

15. அகநானூற்றில் ஒரெழுத்தொருமொழியும் அறிவியலும்
- முனைவர் இரா.இந்து - 95
16. நற்றிணையில் அறிவியல் செய்திகள்
- முனைவர் இரா.தனலெட்சுமி - 99
17. இலக்கியங்களில் அறிவியல்
- முனைவர் ம.மருதமுத்து - 105
18. சமய அறிவியல் ஒரு பார்வை
- இரா.அன்பழகன் - 109
19. சஞ்சீவி பர்வதத்தின் சாரலில் காப்பிய அமைப்பு
- முனைவர் இரா.ஜெயஸ்ரீ - 116
20. அறிவியல் நோக்கில் திருக்குறள்
- முனைவர் ச.சு.அருள்பிரகாஷ் - 123
21. வானளந்த பத்துப்பாட்டு
- முனைவர் கரு. முருகன் - 128
22. சங்க இலக்கியத்தில் வானிலைச் செய்திகள்
- முனைவர் அ.சையத் ஜாகீர் ஹுசன் - 133
23. பட்டினப்பாலையில் அறிவியல் செய்திகள்
- முனைவர் க.இக்பால் - 139
24. செவ்விலக்கியங்களில் அறிவியல் கூறுகள்
- முனைவர் வே.சிவானந்தம் - 144
25. புறப் பாடல்களில் அறிவியல் செய்திகள்
- முனைவர் செ.சுகவனேஸ்வரன் - 150
26. சங்க இலக்கியப் பாடல்களில் கால கணிப்பு முறைகள்
- மு.அப்துல் சமது - 156
27. அற இலக்கியங்களில் அறிவியல்
- முனைவர் சே.அமீருதீன் - 163
28. சிலப்பதிகாரமும், பிற இலக்கிய அறிவும்
- முனைவர் கு.நாராயணசாமி - 169
29. சங்க இலக்கியங்களில் வானியல் செய்திகள்
- முனைவர் அ.ஜனார்த்தலி பேகம் - 174
30. பழந்தமிழரின் வியத்தகு அறிவியலறிவு
- முனைவர் க.செல்வி - 182
31. செம்மொழி இலக்கியங்களில் தாவரம்
- முனைவர் ம.ப.தமிழ்ச்செல்வி - 187
32. தொல்காப்பியத்தில் முதற்பொருள்
- முனைவர் க.உமாராணி - 192

சிலப்பதிகாரமும், பிற இலக்கிய அறிவும்

முனைவர் கு.நாராயணசாமி
உதவிப்பேராசிரியர்
தமிழாய்வுத்துறை
ஜமால் முகமது கல்லூரி (தன்னாட்சி)
திருச்சிராப்பள்ளி – 620 020

தமிழின் பண்பாட்டிற்கும் வாழ்விற்கும் மணி மகுடம் வைத்தாற்போல் நூல்களும், காப்பியங்களும் இலக்கணங்களும் செம்மார்ந்த வாழ்வை படம் பிடித்துக் காட்டுகின்றன. தமிழரின் மரபுகளையும் தொழில் நுட்பத்தினையும் புரிந்து கொள்வது என்பது சிறப்பு மிக்க சங்ககால வாழ்க்கை இயற்கையோடு இயைந்த வாழ்க்கையாகும். அவை அறிவியலை அடிப்படையாகக் கொண்டவையே. பக்தி இலக்கியங்களும் அறிவியலை அடிப்படையாகக் கொண்டவையே என்பதில் ஐயமில்லை. சிலப்பதிகாரம் சமதர்மத்திற்கும், நீதிக்கும் எல்லைகளுக்கும், முத்தமிழுக்கும் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் வித்திட்டது என்பதும் ஓர் அறிவியலே.

மனமும் அறிவியலும்

"மனம் ஒரு குரங்கு" மனதை ஒருநிலைப்படுத்துதல் என்பது பெரியோர் சான்றோர்கள் கூறுவது ,"மனம் இருந்தால் மார்க்கம் உண்டு', 'மனமே வாழ்வு', 'மனமே சாட்சி' என்று கூறப்படுகிறது. மனமது செம்மையால் மந்திரமதை செபிக்க வேண்டாம் என்பது திருமூலர் 'மனமே பெருங்கோயில்', 'ஊன் உடம்பு ஆலயம்', 'தெள்ளத் தெளிந்த சீவன் சிவலிங்கம்', மேலும் இவர் உணர்த்துகிறார்.

அந்தக்கண் மாசிலன் (குறள்.34) என்று மனம் மாசில்லாமல் இருப்பதே அறிவுடைமை என்று வள்ளுவர். மனத்தின் செயல் பற்றி அறிவியலாக தோன்றி பல்வேறு பிரிவுகளையே கொண்டுள்ளது. இதனையே 'மனிதனின் நடத்தையை அறியும் ஒரு அறிவியல் ஆதம்' என்று உளவியல் அறிஞர் தா.ஏ.ச. சண்முகம் குறிப்பிடுவார்.

ஆடல் கலைகளும் அறிவியல் நோக்கும்

தியானம் செய்கிற பொழுது மனதை ஒருநிலைப்படுத்துவது போல ஆடல் கலையை நிகழ்த்தும் போதும் மனதையும் செயலை ஒருநிலைப்படுத்தி எண்ணத்தையும் உடல் இயக்கத்தையும் சமூகத்தின காணப்படும், இவை வாழ்வியலுக்கு வழிகாட்டும்.

பேசத் தலைப்படும் முன்பே முகக் குறிகளாலும், உ அசைவுகளாலும், தன் உணர்ச்சியாலும் கருத்தையும் வெளிப்படுத்தி மொழி பேசுவதற்கு முன்பேயும், இசை இசைப்பதற்கு முன்பயும் நட இருந்தது என்று கூறலாம். மொழி, இசை இரண்டும் நடனக்கலைக்கு வடிவத்தைக் கொடுத்தன. கைஅசைவு, கண்நோக்கல், சொல், இ ராகம், தாளம் இவை அனைத்தும் சேர்ந்து அழகிய வடிவமாயின.

'சித்தரமும் கைப்பழக்கம் செந்தமிழும் நாப்பழக்கம்' என்று மு மொழிக்கேற்ப, மேலும் பல இசைக் கருவிகளும், நடன முறைகளு தோன்றலாயின.

ஆடற்கலையில் இயல்பு

சிவன் திரிபுரம் எரித்து பார்வதியோடு ஆடிய ஆட்டத்தை 'கொ கொட்டி' எனப்பட்டது. கோட்டையை அழித்து சாம்பல் மீது நின்று ஆ ஆட்டத்தை தாண்டவ நடனம் என குறிப்பிடுவது. பிரமன் காண தேரு ஆடியது 'பாண்டரங்கம்' எனப்பட்டது. கம்சனை கண்ணன் அழித்த நிகழ் 'அல்லியத் தொகுதி' எனப்பட்டது.

கடலின் நடுவே சூரபதுமனை அழித்த காட்சி 'துடிக்கூத்து' எனப்பட்டது. அவுணரோடு போர்செய்து முருகன் வெற்றிகண்டு குடைபிடித்து ஆடியது 'குடைக்கூத்து' எனப்பட்டது. நீள் நிலம அளந்த திருமால் ஆ கூத்து 'குடக்கூத்து' எனப்பட்டது. ஆண்மை திரிந்து பெண்மைக் கோலத்தி மன்மதன் ஆடிய கூத்து 'பேடிக்கூத்து' எனப்பட்டது.

அசுரர்கள் தம்போர்க் கோலத்தைத் தவிர்த்து ஓடத் துர்க்கை வெற்றி செய்தி கொண்ட செய்தி 'மரக்கால் ஆடல்' எனப்பட்டது.

அவுணரை எதிர்த்து திருமால் வெற்றி கொண்ட செய்தியை கூறுவது 'பாவைக் கூத்து' எனப்பட்டது. வடக்கு வாயிலில் (வானை இந்திராணி வெற்றி கொண்ட செய்தி 'கடையம்' எனப்பட்டது.

திற்கினோரு வகை ஆடல்களையும் மரபு வழுவாமல் மாதவி
னைத் தாங்கி நடித்தும் ஆடியும் சமுகத்தினரை மகிழ்வித்தாள்
திறப்புக்குரியது.

மாதவியும்
ாதவி, பரதம், சாத்திரம், நாட்டியம், பாடல் போன்ற கலைகளில்
ல் பயிற்சி பெறுகிறாள். கற்பனை கலை உலகில் வாழ்கிறாள்.
தவிக் அபிநயம் கொடுக்க வல்லவள். மண்ணுலகிற்கு கலைகளை
சால்ல ஒரு கருவியாகிறாள்.

ளின் பிறப்பு கணிகையர் குலம் என்பதால் பிறரை மகிழ்வித்தே
ண்டும் என்பது நியதி சிலர் உடலுறவால் மகிழ்விப்பவரும் உளர்
ாதவி பிறர் மனம் மகிழும்படி கலையின் மூலம் மகிழ்விப்பவள்.

கலையினால் மாதவி பண்பட்டாள் என்பதைவிட இவளாள் கலை
து எனலாம். பதினோரு வகை ஆடல் கலைகளின் வாயிலாக
ன் உடலசைவுகளும், ஒன்பான் சுவைகளும் அறியமுடிகிறது.
லம் அவள் ஆளுமைத் தன்மை வெளிப்படுகிறது.

கண், வாய், கைகளை விரிவடையச் செய்தல், அங்காத்தல், கை
முகவாய்க் கட்டையில் வைத்தல் போன்றவை வியப்புச்
ன்றன.

கண் சிவத்தல், மூக்கு விரிதல், உருட்டி, விழித்தல், கண்ணில்
ர் படும்படி செய்தல், புருவங்குவித்தல், தலையை ஆட்டல்,
தல், பற்கடித்தல் போன்றவை சினத்தை உணர வைக்கின்றன.

வெடிப்பான குரல், ஆத்திரம், சினம், முகச்சுளிப்பு போன்ற
வைகள் வெறுப்புணர்வை உணர வைக்கின்றன.

வேற்றை பேசல், முகவாட்டம், வயிற்றைத்தடவல், புற்கடித்தல்,
ல உருட்டிப்பார்த்தல், அழுதல் மார்பில் அடித்துக் கொள்ளல்
வை பொறாமை உணர்வை வெளிப்படுத்துகின்றன.

ஊக்கம், அன்பு, அருள், மலர்ந்த முகம், இன்சொல் போன்ற
ன் நல்ல உணர்வை வெளிப்படுத்துகின்றன.

கையை உதறல், முகம் சுழித்தல் எரிந்து விழல், பேசுதல் போன்ற செயல்கள் இழிவுச் சுவையை எடுத்துக்காட்டுகின்றன.

சுகமாயிருத்தல், விகாரமின்மை, தியான காட்சி உதடுகளும் கண்களும் சாதாரணமான பாவனை, சாந்தம் அல்லது அமைதி போற்றப்படும்.

கடவுளின்பம், வெற்றியின்பம், காதலின்பம், அழகின்பம், புன்சிரிப்பு இனிய புணர்முறுவல், நாணப்பார்வை போன்றவை காதலின் வெளிப்பாடாகத் தோன்றும். அச்சம், பயம் காரணமாக புருவம் சுருங்கல், கை உயர்த்தல், உடல் நடுக்கம், மார்புத்துடிப்பு, பெருமூச்சு, மெல்லிய குரல் போன்றவை அச்ச உணர்வை வெளிப்படுத்தும்.

அழுகை, அலமரல், காலை அழுத்தி மிதித்தல், தலையில் கை வைத்தல், கண்களை மேலே பார்த்தல் தலையைத் தொங்கப்போடல், விம்மல் போன்றவை சோகரசம் வெளிப்படும்.

உவகை பெருநகை, சிரிப்பு வஞ்சப்புன்னகை, செருக்கு, கண் நகுதல், போன்றவை நகைச்சுவை வெளிப்படுத்தும்.

சபதம் கூறல், கையால் முன்னேதாக்குதல், வீரம், தலை நிமிர்ந்து விழியை அகற்றல் போன்றவை கலைப்பாச்சல் எனப்படும். இவைகள் யாவும் சுவையின் வெளிப்பாடாகும்.

பழமையும் புதுமையும்

"தோரண வீதியும் தோமறு கோட்டியும்
பூரண கும்பமும் பொலம் பாலிகைகளும்"

எனும் வரிகள் (விழாவரைகாதை மணிமேகலை) என்று இந்திரனுக்கு விழா வெழுத்த நிகழ்வு இன்று சுகாதார முறையாக பின்பற்றப்படுகிறது.

அன்று தேர் ஓட்டினர் இன்று சைக்கிள், கார், ரயில் உருவெடுத்துள்ளது. கரிகாற் சோழன் காவிரியின் குறுக்கே கல்லணையைக் கட்டினான். அவன் அறிவும் கட்டிடக் கலைத்திறமையும் இன்று உலகம் வியக்கின்றது.

புகார் நகரத்திலிருந்து புறப்பட்ட கலங்கள்,

நிலத்திலிருந்து நீரேற்றமும், நீரினின்று
நிலத்தேற்றமும் அளந்தறியாப் பல
ண்டம் வரம்பறியாமை வந்தீண்டி"

கூறுகிறது. அறிவு இன்று கடல்போக்கு வரத்திற்கு
. கண்ணகி வஞ்சிமாநகரத்தில் மலைவாழ் மக்கள் கண்
யத்தில் சென்ற காட்சி,

'மலை ஏவா வானவூர்தி"

இன்று நாம் வானவூர்தி செலுத்த ஏதுவாகின.

லை இலையில் உணவு உண்டாள் எந்த அளவிற்கு மருத்துவக்
யது என்பதை உணர்ந்த தமிழர்கள் அறிவியில் கோட்பாட்டினை
ண்டுகளுக்கு முன்னரே சிலப்பதிகாரம் உணர்த்துகிறது.

'தூநீர் வாழையின் குறுத்தகம் விரித்தீங்கு
றுதம் உண்க அடிகள் சுங்கென"

ரித்துரைக்கிறது.

னவே மருந்து என்பதை உணர்ந்த தமிழர்கள் உணவின்
ந்ததும் அவ்வுணவை எவற்றின் மூலம் உண்டால் அது மருத்துவப்
டையதாகும் என்பதையும் அறிந்ததே அறிவியலாகும்.

ரியாசன் எழுதிய சிறுபஞ்சமூலம் பாடல் ஒவ்வொன்றிலும் ஐந்து
ருந்துக்களை உள்ளடக்கி மன நோயைப் போக்க வல்ல பாடலாகும்.
நமிழரின் அறிவுத்திறம் நீண்டு கொண்டேபோகும்.

சிலம்பும் மாதவியின் ஆடற்கலைகளும், இக்கலைகளின் மூலம்
ள் உண்மைகளை தமிழர்களின் பெருமையை உலகிற்கு
ட்டியிருக்கின்றார். நுட்பமான மனத்தின் மூலம் அறிவால் உணர்ந்து
தோழுயும் அனிச்சம்' எனும் சொல்லிற்கு ஏற்ப நுட்பத்தாலும்
மேம்பட்டுள்ளனர் என்பது சாலச் சிறந்ததாகும்.

செம்மொழி இலக்கியங்களில் தமிழ் அறிவியல்

(பன்னாட்டுக் கருத்தரங்க ஆய்வுக் கட்டுரைகள்)














பதிப்பாசிரியர்கள்

முனைவர் சு.சத்தியா

முனைவர் க.ஆனந்தி

முனைவர் க.முத்தழகி

திருமதி பா.அனுராதா

முனைவர் த.அமுதஜோதி

முனைவர் வா.சண்முகப்பிரியா

தமிழ்த்துறை

பான் செக்கர்ஸ் மகளிர் கல்லூரி

தஞ்சாவூர்

மே - 2022

நூல் விபரம்

நூலின் பெயர்	:	**செம்மொழி இலக்கியங்களில் தமிழ் அறிவியல்**
பதிப்பாசிரியர்கள்	:	முனைவர் சு.சத்தியா முனைவர் க.ஆனந்தி முனைவர் க.முத்தழகி திருமதி பா.அனுராதா முனைவர் த.அமுதஜோதி முனைவர் வா.சண்முகப்பிரியா
மொழி	:	தமிழ்
முதற்பதிப்பு	:	மே 2022
நூல் அளவு	:	1x8
பக்கம்	:	494 + xxiv
விலை	:	ரூ. 600
தரக்குறியீட்டு எண் (ISBN)	:	978-93-81429-23-5
பதிப்புரிமை	:	**தமிழ்த்துறை,** பான் செக்கர்ஸ் மகளிர் கல்லூரி, தஞ்சாவூர்.
வெளியீடு	:	**ஸ்ரீ முருகன் பப்ளிகேஷன்ஸ்,** இராஜராஜன் வணிக வளாகம், தஞ்சாவூர்.
நூல் வடிவமைப்பு	:	**கே.பி.எஸ்.அச்சகம்,** புதிய வீட்டுவசதி வாரியம், தஞ்சாவூர்.
அச்சாக்கம்	:	**த.கூ.ஒ.தி., சீகன் பால்கு அச்சகம்** மற்றும் வெளியீட்டகம், திருச்சி.

15. அகநானூற்றில் ஒரெழுத்தொருமொழியும் அறிவியலும்
- முனைவர் இரா.இந்து - 95
16. நற்றிணையில் அறிவியல் செய்திகள்
- முனைவர் இரா.தனலெட்சுமி - 99
17. இலக்கியங்களில் அறிவியல்
- முனைவர் ம.மருதமுத்து - 105
18. சமய அறிவியல் ஒரு பார்வை
- இரா.அன்பழகன் - 109
19. சஞ்சீவி பர்வதத்தின் சாரலில் காப்பிய அமைப்பு
- முனைவர் இரா.ஜெயஸ்ரீ - 116
20. அறிவியல் நோக்கில் திருக்குறள்
- முனைவர் ச.சு.அருள்பிரகாஷ் - 123
21. வானளந்த பத்துப்பாட்டு
- முனைவர் கரு. முருகன் - 128
22. சங்க இலக்கியத்தில் வானிலைச் செய்திகள்
- முனைவர் அ.சையத் ஜாகீர் ஹுசன் - 133
23. பட்டினப்பாலையில் அறிவியல் செய்திகள்
- முனைவர் க.இக்பால் - 139
24. செவ்விலக்கியங்களில் அறிவியல் கூறுகள்
- முனைவர் வே.சிவானந்தம் - 144
25. புறப் பாடல்களில் அறிவியல் செய்திகள்
- முனைவர் செ.சுகவனேஸ்வரன் - 150
26. சங்க இலக்கியப் பாடல்களில் கால கணிப்பு முறைகள்
- மு.அப்துல் சமது - 156
27. அற இலக்கியங்களில் அறிவியல்
- முனைவர் சே.அமீருதீன் - 163
28. சிலப்பதிகாரமும், பிற இலக்கிய அறிவும்
- முனைவர் கு.நாராயணசாமி - 169
29. சங்க இலக்கியங்களில் வானியல் செய்திகள்
- முனைவர் அ.ஜனார்த்தலி பேகம் - 174
30. பழந்தமிழரின் வியத்தகு அறிவியலறிவு
- முனைவர் க.செல்வி - 182
31. செம்மொழி இலக்கியங்களில் தாவரம்
- முனைவர் ம.ப.தமிழ்ச்செல்வி - 187
32. தொல்காப்பியத்தில் முதற்பொருள்
- முனைவர் க.உமாராணி - 192

அ) இலக்கியங்களில் அறிவியல்

முனைவர் சே.அமீருதீன்
உதவிப்பேராசிரியர், தமிழாய்வுத்துறை
ஜமால் முகமது கல்லூரி (தன்னாட்சி)
திருச்சிராப்பள்ளி - 620020

'நலந்தோன்றி மண்தோன்றா காலத்தே முன் தோன்றி மூத்த குடி ...ழ்' என்பதற்கு இணங்க தமிழனின் அறிவாற்றல் என்பது மிகத் ...ன வாய்ந்ததாகக் கருதப்படுகின்றது. ஏனெனில் பழந்தமிழரின் ...ங்கள் அணுவில் தொடங்கி அண்டம் வரை பாடுகின்றன ...ளோடு அறிவுசார் கருத்தினையும் ஏற்று மனிதர்களை சிந்திக்கவும் ...ன்றன.

"அணுவைத் துளைத்து ஏழ்கடலைப் புகட்டி
நூகத் தறித்த குறள்"[1]

...வையார் திருக்குறளின் பெருமையினை புகழ்ந்துள்ளார் என்பது ...ந்தக்கது. மேலும், மேகமானது கடலில் உள்ள நீரை முகந்துக் ...ந்து பெய்தது என்ற தமிழரின் கூற்று இப்போது அறிவியல் ...மினை உணரும் போது வியப்பளிக்கிறது.

"நீரின்றி அமையாது உலகு"[3] பலகோடி உயிரினங்களை ...யது இந்த உலகம். அந்த உயிரிகளுக்கு நீர் மூலப்பொருள்

"நீருந்நடலும் தன்நீர்மை குன்றும் தடிந்தெழிலி
நன்னீர்மை தாகி விடின்"[2]

...றம் உரைப்பதில் தமிழுக்கு நிகர் தமிழே!' எனினும் அந்த ...ல் இன்று அறிவியல் உண்மைகளை வெளிக்கொணரும் ...உலக மக்களுக்கு வியப்பையும் அளிக்கின்றன.

...ழ் மொழியானது முன்னைப் பழமைக்கும் பின்னைப் புதுமைக்கும் ...ந்த மொழியாக கருதப்படுகின்றது. பதினென் கீழ்க்கணக்கு ... பதினோர் நூற்கள் சிறப்பான பல்வேறு அறக்கருத்தினைப் ...கின்றன. இக்கால நடைமுறை அறிவியல் அணுகுமுறைக்கு ... கருத்துக்களை எடுத்துரைப்பது இவ்வாய்வின் நோக்கமாகும்.

...றிவியல் கூறுகள்

என்பது தமிழரின் கோட்பாடு. மழைநீரின் அறிவியல் கண்டுபிடிப்பு நிலைகளில் உள்ள நீர் கதிரவனின் வெப்பத்தால் ஆவியாதி முகிலாக உருவாகின்றது.

அந்த நீர் குளிர்ந்து மீண்டும் மழையாகப் பொழிந்து பல்வேறு நிலைகளில் தேங்குகின்றது. இதுவே 'நீர் சுழற்சி' என அழைக்கப்பெறுகின்றது. இந்த நீரியல் கோட்பாடு கடலிலிருக்கும் உ நீரை முகந்து ஆவியாகி, பின்பு மழை நீராகிய நன்னீரைப் பொழிகின்ற அதுபோல தீதில்லாத மனிதர்கள் தீயவர்களுடன் சேரும் பொழு தீயவர்களாக மாற்றம் அடைகின்றார்கள், என்பதினை அறநூல்க எடுத்துக்காட்டுகின்றன.

அறிவியல் கூறும் இலக்கியம்

திருமூலரின் கருத்தான உடம்பை வளர்க்கும் முறை யாதெனி எனின் உடலுடன் உயிர் வளர்க்கும் திறன் ஆகும். இதனை,

"உடம்பார் அழியின் உயிரார் அழிவர்"[14]

என்கிறார் திருமூலர்.

குறுந்தொகை பாடலில் நல் தேவகுலத்தார் கூறும் அறிவிய செய்தி மனிதர்களுக்கு வியப்பை அளிக்கிறது.

"நிலத்திலும் பெரிதே வானினும் உயர்ந்தன்று
நீரினும் ஆர் அளவு இன்றே சாரல்
கருங் கோல் குறிஞ்சி பூக் கொண்டு
பெரும் தேன் இழைக்கும் நாடனொடு நட்பே"[15]

என்ற பாடலடியில் தலைவன் தலைவியின் மேல் வைத்திருக்கும் அன்பா பூமியைக் காட்டிலும் பெரியது வானத்தை காட்டிலும் உயரமானது கடலை காட்டிலும் அளத்தற்கு அரிய ஆழம் உடையது என்ற இயற்கையி அழகிய உவமையினை கையாண்டு அனைவரும் புரியும் வண்ணம் இ அன்புக்கு நிகர் இவ்வுலகில் எதுவுமே இல்லை என்பதை உணர்த்த இப்பாடல் அடிகள் மூலம் அறியலாகிறது.

திருக்குறளும் அறிவியலும்

திருவள்ளுவர் தம் குறளில் கூறும் நல்லதொரு கருத்துக்கள் வியப்பளிக்கும் வகையில் வித்தாகவும் ஆராய்ந்து பார்க்கும் பட்சத்தில்

...ழுவிய செய்திகளை தாம் அனுபவித்து கூறினால் கூட ... சொல்ல முடியாது.

...ந்து அறையில் யாராலும் கூறுவது என்பது இயலாதது ... வரிகள் உலக மக்களின் மொழி ... சென்று அனைத்து மனிதர்களையும் சென்றடைந்து ... என்றால் அது மிகையாகாது.

...ல் 'உலகு' என்ற முழுமதம் முழுவில் உலகு என்ற ... உலம், பூமி, நாடு, உலகத்தார், உயர்ந்தோர், சான்றோர், ... சொற்களுள் ஒன்று என பல்வேறு அர்த்தங்கள் ... நினை வள்ளுவர் கடவுள் வாழ்த்து என்னும் அதிகாரத்தில்,

... முதல எழுத்தெல்லாம் ஆதி
... முதற்றே உலகு"[5]

...கள் எல்லாம் அகரம் என்னும் ஒலி எழுத்தை ... கொண்டுள்ளன. அது போல உலகத்தில் உள்ள உயிர்கள் ...மையே கடவுளை முதலாகக் கொண்டுள்ளன என்கிறார். ... 'உலகு' என்ற அடிச்சொல்லிற்குச் சுற்றுதல் என்று பொருள் ...கின்றான் இதன் அடியாகப் பிறந்தது தான் 'உலகம்' ... சொல். மேலும்,

...ழுந்தும் பின்னது உலகம் அதனால்
... முயலே தலை"[7]

...ழில் செய்து சுழன்றாலும் ஏர் தொழிலின் பின் நிற்கின்றது. ...வை நன்புற்றாலும் உழுவுத் தொழிலே சிறந்தது என்ற ...பறைசாற்றுகின்றது. இதில் உலகத்தில் எண்ணற்ற தொழில் ...களுக்கெல்லாம் முதன்மை வாய்ந்தது உழுவுத்தொழிலே ... வள்ளுவர் இக்கருத்தினை நாம் பார்க்கும் போது மனித ...யான தேவை உணவு, இரண்டு உடை, மூன்று இருப்பிடம் ...ற்றியமை வகிக்கின்றது. உணவின் முக்கியத்துவத்தை ...ர் கூறியுள்ளார். இதனை மணிமேகலையும் **"உண்டி ...உதவினோர்க்கோதே"**[8] என்கிறது. மேலும், பாரதியோ **"தனி ...உணவில்லையெனில் இந்த ஜகத்தினை அழித்திடுவோம்"**[9] ...வாயிலாக நாம் உணவின் முக்கியத்துவத்தை அறியலாம்.

பதினென் கீழ்க்கணக்கு நூல்களில் அறிவியல்

தமிழர்களுடைய வாழ்க்கை நெறிமுறைகளை மிகச்சிறந்த முறையில் கூறும் நூல் என்று பார்க்கும் போது அது பதினென்கீழ்க்கணக்கு நூல்கள் என்று பெருமையாகக் கூறலாம். பதினென்கீழ்கணக்கு நூல்களான நாலடியார், நான்மணிக்கடிகை, இனியவை நாற்பது, இன்னா நாற்பது, கார் நாற்பது, களவழி நாற்பது, ஐந்திணை ஐம்பது, திணைமொழி ஐம்பது, ஐந்திணை எழுபது, திணை மாலை நூற்றைம்பது, முப்பால், திரிகடுகம், ஆசாரக் கோவை, பழமொழி, சிறுபஞ்சமூலம், முதுமொழிக்காஞ்சி, ஏலாதி, கைந்நிலை அல்லது இன்னிலை ஆகியவையாகும்.

இப்பதினென்கீழ்க்கணக்கு நூல்கள் மொத்தம் ஏறக்குறைய 3[illegible] பாடல்களைக் கொண்டுள்ளது. பதினென்கீழ்க்கணக்கு நூல்களுள் [illegible] நூல்கள் அகப்பொருள் நூல்கள் 6, புறப்பொருள் நூல் 1 ஆகும். பதினென்கீழ்க்கணக்கு நூல்களில் அறிவியல் செய்திகள் நிறைய காணலாகின்றன. அந்த வகையில் ஆசாரக்கோவை என்னும் நூல் வாயிலாகக் காணப்படும் அறிவியல் செய்திகளை காண்போம்.

ஆசாரக் கோவை என்பதன் பொருள் ஒழுக்கங்களின் தொகுப்பு என்று கூறலாம். ஒழுங்கான செய்திகளை தொகுத்த கோவை என்றும் கூறலாம். ஆசாரம் என்ற சொல் ஒழுக்கம் என்ற பொருளில் பயன்படுத்தப்படுகிறது. நாள்தோறும் வாழ்க்கையில் கடைபிடிக்க வேண்டிய ஒழுக்கங்களையும் இந்நூல் தெளிவாகச் சுட்டுகின்றது.

உடுத்தல், உண்ணல், உறங்கள் போன்ற தன் ஒழுங்கு முறைகளை இந்நூல் எடுத்துக் காட்டுகின்றது. நோய்கிருமிகள் வராமல் தடுக்க பல வழிமுறைகளையும் எடுத்துக்காட்டுகிறது.

"ஆலும் வேலும் பல்லுக்கு உறுதி"[10]

என்ற பழமொழி உணர்த்துகிறது. இந்நூலிலும் அதிகாலையில் பல்துலக்க வேண்டும் என்பதை,

"நாளந்தி கோல் தின்று ஆண்கழீஇத்....."[11]

என்ற வரி மூலமும் அறியலாம்.

வடதிசையிலும் கோணத்திலும் தலை வைத்து படுக்கக் கூடாது. பிறருடைய அழுக்கு ஆடையை அணிதல் கூடாது. பலர் நடுவில் நின்று

உதறக் கூடாது, எதிர்க்காற்றில் எச்சில் உமிழக் கூடாது
உறங்கக் கூடாது. வாசல் படி முன்பு உறங்குதல் கூடாது
முளளியார் நவில்கின்றார்.

மனைவியை நீங்கியிருக்குதல் காலமும் நீங்காதுறையுங்
என்ற.

"மூன்றா நாள் முந்நாளும் நோக்கார்: நீர் ஆடியபின்
ஈரா நாளும் இகவற்க! என்பதே
மீப் அறிவாளர் துணிவு"[12]

மனைவிக்கு பூப்பு நிகழ்ந்தால், நாள் மூன்றும் அவரை நோக்கார்,
பன்னிரண்டு நாளும் அகலாது இருத்தல் நன்மையாகும் என்பர்
ஆய்ச்சியாளர் மனைவியின் மாத சுழற்சி காலத்தில் மனைவியுடன்
நாட்கள் சேராமல் பிறகு அவர் குளித்து சுத்தமாக இருக்கும்
நாளிலிருந்து பனிரெண்டு நாட்கள் பிரியாமலும் இருத்தல் நன்று
அறிவியல் சார்ந்த கருத்தை ஆசிரியர் கூறுகின்றார்.

நம்பி அகப்பொருளும் உணர்த்துகின்றது.

"பூத்த காலைப் புனையிழை மனைவியை
நீடிய பின் சூரா நாளும்
கருவிற்று உறூஉம் காலம் ஆதலின்
மீயர் பெறாஅன் பரத்தையிற் பிரிவோன்" [13]

பன்னிரண்டு நாளும் (பூப்பு நிகழும் காலம்) கருப்படும் காலம்
நலமகன் அப்பன்னிரண்டு நாளும் தலைவியைப் பிரியாது
வேண்டும் என்பதை அறிவுறுத்துகின்றது.

நூல்களில் அறிவியல் செய்திகள் நிறைந்து காணப்படுகின்றன
அதற்கான காரணங்கள் என்று பார்க்கும் போது அதனை ஆசிரியர்
கூறவில்லை என்றே காணமுடிகின்றது. ஆனால், அதற்கான
இன்றைய அறிவியல் ஆராய்ச்சியாளர்கள் கூறும்
காணும் போது அது உண்மை என்றே புலப்படுகின்றது.
கால கட்டத்தில் புலவர்கள் இதனை அறிந்தே கூறியிருக்க
நாம் கருதலாம். ஏனெனில் இவ்வளவு நுட்பமாக அறிந்தால்

தான் இலக்கியங்களின் வாயிலாக அனைத்து மக்களுக்கும் கொண்டு
வழிவகுத்து கூற இயலும் இல்லையெனில் இவ்வாறு புலவர்கள் கூறியிரு
இயலாது. அன்றைய தமிழர் அறிவியல் சார்ந்த பல அறிவினை கொ
வாழ்ந்தமைக்கு தமிழ் இலக்கியங்களில் காணலாகும், அறிவியல் கூறு
சான்றளிக்கின்றன.

அடிக்குறிப்பு

1. திருவள்ளுவ மாலை, ஔவையார்
2. திருக்குறள், எண்.17
3. திருக்குறள், எண்.20
4. திருமூலர், திருமந்திரம்
5. குறுந்தொகை, பா.எண்.3
6. திருக்குறள், எண்.1
7. திருக்குறள், எண்.1031
8. மணிமேகலை
9. பாரதியார் கவிதைகள்
10. பழமொழி நானூறு
11. ஆசாரக்கோவை, பா.எண்.9
12. ஆசாரக் கோவை, பா.எண்.42
13. நம்பி அகப்பொருள், நூற்பா எண்.91

செம்மொழி இலக்கியங்களில் தமிழ் அறிவியல்

(பன்னாட்டுக் கருத்தரங்க ஆய்வுக் கட்டுரைகள்)














பதிப்பாசிரியர்கள்

முனைவர் சு.சத்தியா

முனைவர் க.ஆனந்தி

முனைவர் க.முத்தழகி

திருமதி பா.அனுராதா

முனைவர் த.அமுதஜோதி

முனைவர் வா.சண்முகப்பிரியா

தமிழ்த்துறை

பான் செக்கர்ஸ் மகளிர் கல்லூரி

தஞ்சாவூர்

மே - 2022

நூல் விபரம்

நூலின் பெயர்	:	**செம்மொழி இலக்கியங்களில் தமிழ் அறிவியல்**
பதிப்பாசிரியர்கள்	:	முனைவர் சு.சத்தியா முனைவர் க.ஆனந்தி முனைவர் க.முத்தழகி திருமதி பா.அனுராதா முனைவர் த.அமுதஜோதி முனைவர் வா.சண்முகப்பிரியா
மொழி	:	தமிழ்
முதற்பதிப்பு	:	மே 2022
நூல் அளவு	:	1x8
பக்கம்	:	494 + xxiv
விலை	:	ரூ. 600
தரக்குறியீட்டு எண் (ISBN)	:	978-93-81429-23-5
பதிப்புரிமை	:	**தமிழ்த்துறை,** பான் செக்கர்ஸ் மகளிர் கல்லூரி, தஞ்சாவூர்.
வெளியீடு	:	**ஸ்ரீ முருகன் பப்ளிகேஷன்ஸ்,** இராஜராஜன் வணிக வளாகம், தஞ்சாவூர்.
நூல் வடிவமைப்பு	:	**கே.பி.எஸ்.அச்சகம்,** புதிய வீட்டுவசதி வாரியம், தஞ்சாவூர்.
அச்சாக்கம்	:	**த.கூ.ஒ.தி., சீகன் பால்கு அச்சகம்** மற்றும் வெளியீட்டகம், திருச்சி.

15. அகநானூற்றில் ஒரெழுத்தொருமொழியும் அறிவியலும்
- முனைவர் இரா.இந்து - 95
16. நற்றிணையில் அறிவியல் செய்திகள்
- முனைவர் இரா.தனலெட்சுமி - 99
17. இலக்கியங்களில் அறிவியல்
- முனைவர் ம.மருதமுத்து - 105
18. சமய அறிவியல் ஒரு பார்வை
- இரா.அன்பழகன் - 109
19. சஞ்சீவி பர்வதத்தின் சாரலில் காப்பிய அமைப்பு
- முனைவர் இரா.ஜெயஸ்ரீ - 116
20. அறிவியல் நோக்கில் திருக்குறள்
- முனைவர் ச.சு.அருள்பிரகாஷ் - 123
21. வானளந்த பத்துப்பாட்டு
- முனைவர் கரு. முருகன் - 128
22. சங்க இலக்கியத்தில் வானிலைச் செய்திகள்
- முனைவர் அ.சையத் ஜாகீர் ஹுசன் - 133
23. பட்டினப்பாலையில் அறிவியல் செய்திகள்
- முனைவர் க.இக்பால் - 139
24. செவ்விலக்கியங்களில் அறிவியல் கூறுகள்
- முனைவர் வே.சிவானந்தம் - 144
25. புறப் பாடல்களில் அறிவியல் செய்திகள்
- முனைவர் செ.சுகவனேஸ்வரன் - 150
26. சங்க இலக்கியப் பாடல்களில் கால கணிப்பு முறைகள்
- மு.அப்துல் சமது - 156
27. அற இலக்கியங்களில் அறிவியல்
- முனைவர் சே.அமீருதீன் - 163
28. சிலப்பதிகாரமும், பிற இலக்கிய அறிவும்
- முனைவர் கு.நாராயணசாமி - 169
29. சங்க இலக்கியங்களில் வானியல் செய்திகள்
- முனைவர் அ.ஜனார்த்தலி பேகம் - 174
30. பழந்தமிழரின் வியத்தகு அறிவியலறிவு
- முனைவர் க.செல்வி - 182
31. செம்மொழி இலக்கியங்களில் தாவரம்
- முனைவர் ம.ப.தமிழ்ச்செல்வி - 187
32. தொல்காப்பியத்தில் முதற்பொருள்
- முனைவர் க.உமாராணி - 192

சங்க இலக்கியப் பாடல்களில் கால கணிப்பு முறைகள்

மு.அப்துல் ர
உதவிப் பேராசி
தமிழாய்வுத்து
ஜமால் முகமது கல்லூரி (தன்ன
திருச்சிராப்பள்ளி - 62

முன்னுரை

சங்ககால மக்களின் வாழ்க்கை முறையானது ஒரு
கணிப்பினைப் பின்பற்றியே வாழ்ந்திருந்தனர். பொருளீட்டச் சென்ற தலை
திரும்பி வருவதற்கான காலம், தலைவியை மீண்டும் சந்திப்பதாகச் சொ
சென்ற காலம் கார்காலம், இயற்கையில் ஏற்படும் கால மாறுதல்க
கணித்தவர்கள் நிலத்திற்கு ஏற்ப காலத்தையும் நாட்களை
பகுத்தளித்தவர்கள். ஒலி அளவையும், கால அளவையும் கண்
தந்தவர்கள். பொழுதைப் பெரும்பொழுது, சிறுபொழுது என்றும் பிரித்தவ
சங்ககாலத்தவர்கள். அவர்கள் நமக்களித்த காலக்கணிப்பைப் ப
ஆராய்வதே இக்கட்டுரையாகும்.

காலம்

காலம் என்பது தன்போக்கில் நகர்ந்து கொண்டே இருக்
பொதுவாகக் காலத்தினைச் சூரியனை மையமாக வைத்
கணக்கிடப்படுகிறது. மனிதர்களின் வாழ்வும் காலத்தைச் சார்ந்தே நிகழ்கி
அறிவியல் தொழில் நுட்ப வளர்ச்சியின் முதன்மையானதாகக் க
நிகழ்கிறது. தமிழர்கள் காலத்தினைச் சிறுபிரிவு பெரும் பிரிவு எ
பிரித்ததன் மூலம் அவர்களின் அறிவு நுட்பம் நமக்கு புலனாகிறது.

"மறந்த ஒழுக்கத்து ஓரையும் நாளும்
துறந்த ஒழுக்கம் கிழவோற்கு இல்லை"

(தொல்காப்பியம்.நூ.1081)

களவொழுக்கத்தின் போது ஓரை நாள் முதலியவற்றைப் பார்த்
கொண்டு கூட்டத்தைத் துறக்கும் ஒழுக்கத்தை உடையவன் தலை
என்று குறிப்பிடுகிறது.

"ஓரை என்ற சொல்லைத் தொல்காப்பியர் நேரம், காலம்
***பொருளில் குறிப்பிடுகிறார். தொல்காப்பியரின் கூற்று, மூலச் செய்

...னும் சொல்லினின்றும் விரிவுபட்ட சொல்லான ஓரை சொல்லைப் ...து" என்ற கருத்து இங்கு கவனிக்கத்தக்கது.

(விக்டர் ம.சோ. உலகளாவிய தமிழ், பக்.163-164)

தொல்காப்பியர் கூறும் நேரம் காலம் என்ற பொருளின் ...டையிலேயே, பிறப்பியல் கூறுபவர்கள் நல்லோரை, தீயோரை என்று ...ன்னர். ஓரை (காலம்) என்ற தமிழ்ச்சொல் ஹோரா (Hora) ...ரேக்க மொழியிலும் சொல்லப்பட்டுள்ளது. ஹோரஸ் (Horus) ...ன்றிய மொழியில் காணப்படுகிறது. கால அளவைக் குறிக்கும் ...ன்ற ஆங்கிலச் சொல், ஓரை என்ற தமிழ்ச் சொல்லின் திரிபே ...ரை என்ற சொல்லானது,

"ஓரையும் ஆயமும் நொச்சியும் காண்தொறும்
நீவார் கண்ணேன் கழலும் என்னினும்"

(நற்றிணை.143:2-3)

"நெடுந்தொடை வேய்ந்த நீர்வார் கூந்தல்
மகளிர் அஞ்சி சுர்ஞெண்டு"

(குறுந்தொகை.401:2-3)

"ஓர ஆயத்து ஒண்தொடி மகளிர்
கழல் உழுத இருஞ்சேறு கிளைப்பின்"

(புறநானூறு.176:1-2)

...ங்க இலக்கியப் பாடல்கள் வழி ஓரை என்ற சொல்லானது மகளிர் ...ட்டினைக் குறிக்கும் சொல்லாகவும் பயன்பட்டுள்ளமையை ...கின்றது.

...ரிய கொள்கைகள்

...லம் பற்றிய கொள்கைகள் குறித்து,

"காலம் என்பது கருத்தளவிலானது, நுண்மையானது, ...யது மாறிக் கொண்டே இருக்கிறது. பொருள்களுக்கு இடையே ...டைவெளியும், கால இடைவெளியும் ஒன்றை ஒன்று சார்ந்து ...பஞ்சமானது காலம், நீளம், அகலம், ஆழம் என்னும் நான்கு ...களைக் கொண்டது" என்று மகாலட்சுமி குறிப்பிடுகிறார்.

(மகாலட்சுமி. தி., இலக்கியத்தில் சோதிடம், ப.1)

சூரியன், சந்திரன், நட்சத்திரங்கள் முதலான வளிமண்டல பொருள்களின் ஆதிக்கத்தில் பூமியில் வாழும் மனிதர்களது வாழ்க்கை நிகழ்ச்சிகளைக் காலக்கணிதம் எனும் ஜோதிடம் கணித்துக் கூறுகிறது.

காலக்கணிப்பு

காலக்கணிப்பில் தமிழர்கள் நுண்ணறிவுத் திறன் பெற்றவர்களாகத் திகழ்ந்தார்கள். வளி மண்டலத்தில் நிகழும் இயக்கங்களைக் குறித்து காலங்கள் கணிக்கப்பட்டுள்ளன. கண் இமைக்கும் காலம், கை நொடிக்கும் காலமும் ஒரு மாத்திரையாகவும், மிகச் சிறிய கால அளவையும் அளவிட்டிருந்தனர். எழுத்துக்களின் மாத்திரையை,

"கண் இமைநொடிஎன அவ்வே மாத்திரை
நுண்ணிதன் உணர்ந்தோர் கண்ட ஆறே"

(தொல்காப்பியம்.நூ.7)

என்ற தொல்காப்பிய நூற்பா காலக்கணிப்பில் தமிழரின் திறனை விளக்க மிகச் சிறந்த சான்றாகும். இதன் மூலம் சங்ககால தமிழர்களின் அறிவு நுட்பம் புலனாகிறது.

ஓரை என்ற சொல்லானது,

"ஓரையும் ஆயமும் நொச்சியும் காண்தொறும்
நீர்வார் கண்ணேன் கழலும் என்னினும்"

(நற்றிணை.143:2-3)

"நெடுந்தொடை வேய்ந்த நீர்வார் கூந்தல்
ஓரைமகளிர் அஞ்சி ஈர்ஞெண்டு"

(குறுந்தொகை.401:2-3)

"ஓரை ஆயத்து ஒண்தொடி மகளிர்
கேழல் உழுத இருஞ்சேறு கிளைப்பின்"

(புறநானூறு.176:1-2)

என்ற சங்க இலக்கியப் பாடல்கள் வழி ஓரை என்ற சொல்லானது மகளிர் விளையாட்டினைக் குறிக்கும் சொல்லாகவும் பயன்பட்டுள்ளமையை அறியமுடிகிறது.

காலப்பகுப்பு

வைகறை, விடியல், நண்பகல், மாலை, எற்பாடு, யாமம் என ஒரு நாளினை ஆறு பிரிவுகளாக பிரித்துள்ளனர்.

நடு இரவுக்குப் பின் கதிரவன் தோன்றுவதற்கு முற்பகுதிக்கு உள்ள
லையரை என்றும், கதிரவன் தோன்றியதற்கு முற்பகுதிக்கு உள்ள
ல்லை என்றும், கதிரவன் இருந்து அதிக வெப்பத்தைக் கொடுக்கும்
ண்பகல் என்றும், கதிரவன் மறைவதற்கு முன்பு உள்ள காலம்
ன்றும், கதிரவன் மறைந்த பிறகு நடு இரவுக்கு முன்பு உள்ள
ஏறாடு என்றும், இரவுப்பகுதியில் நடுவில் உள்ள காலம் யாமம்
ன்று கூறியிட்டுள்ளனர். இதனை,

"காதும் மலையும் முல்லை, குறிஞ்சி
கூறும் யாமம் என்மனார் புலவர்
மன்றல் பருவமும் உரித்தென மொழிப
லைகரை விடியல் மருதம், எற்பாடு
ஞ்சலாதல் மெய்பெறத் தோன்றும்
நிலைநிலைத் திணையே நண்பகல் வேனிலொடு
முடி நிலை உரித்தென மொழிப
திலதைப் பிரிவும் நிலைபெறத் தோன்றினும்
டரியதாகும் என்மனார் புலவர்"
(தொல்காப்பியம்.நூ.952-957)

ஆசிரியர்களின் வழி தொல்காப்பியர் காலப்பகுப்பைச்
சுட்டுகிறார்.

மேலும், தமிழர்கள் ஓர் ஆண்டினை ஆறு பிரிவுகளாகப் பிரித்தனர்.
ஒரு பிரிவிலும் இரண்டு மாதங்களைக் கொண்டும் ஒவ்வொரு
நூலைக் குறிக்கும் வகையிலும் அமைக்கப்பட்டுள்ளது. அவையாவன,

"ேர்காலம் - ஆவணி, புரட்டாசி
கதிர்காலம் - ஐப்பசி, கார்த்திகை
முன்பனிகாலம் - மார்கழி, தை
பின்பனிகாலம் - மாசி, பங்குனி
இளவேனில் - சித்திரை, வைகாசி
முதுவேனில் - ஆனி, ஆடி"
(முருகன் க.சி., தொல்காப்பியமும் வேளாண்மையும், ப.271)

முருகன் தம்முடைய தொல்காப்பியமும் வேளாண்மையும் எனும்
நூலில் செய்துள்ளார்.

ஓராண்டு
வருடமாகும்.

ஆண்டு யாமத்தின் இறுதிப் பகுதியே வைகறைப் பொழுதாகும்.

"பொறிமயிர் வாரணம் வைகறை இயம்ப"
(மதுரைக்காஞ்சி.673)

என்ற மதுரைக்காஞ்சி பாடல்கள் மூலம் வைகறையில் துயிலெழுவதற்கு வைகறை நெருங்கிவிட்டது என கோழிகள் கூவுவதாக குறிப்பிடப்பட்டுள்ளது அறிய முடிகிறது. இதேபோன்று,

"குக்கூ என்றது கோழி, அதன் எதிரே
தாக்கென் றன்று என்தூஉ நெஞ்சம்
தோள் தோய் காதலர்ப் பிரிக்கும்
வாள்போல் வைகறை வந்தன்றால் எனவே"
(குறுந்தொகை.157:1-4)

என்ற குறுந்தொகைப் பாடல் வரிகள் கோழி கூவிய ஒலி கேட்டு தன்னுடை தோளுடன் பொருந்தியுள்ள காதலரைப் பிரியவிருக்கும் வைகறைப் பொழு வரப்போகிறதே என்று பெண்ணின் மனத்துடிப்பினை அழகா எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

நாழிகை

'அல்லும் பகலும் அறுபது நாழிகையும்' என்பது பழமொழி. இன்ற காலத்தில் நேரம், மணி என்று குறிப்பிடுவனவற்றை அன்றையத் தமிழர்க நாழிகை என்று குறிப்பிட்டுள்ளனர். ஒரு நாழிகை என்பது 24 நிமிடங்க ஆகும். இதுவே அன்றைய காலத்தில் சிறிய மூல அளவை ஆகும்.

கால நேரத்தினை அறிந்து கொள்ள இப்போது கடிகாரங்க இருப்பது போல சங்ககாலத்தில் நாழிகை வட்டினால் கணித்து நாழிகை சொல்வோர் இருந்தனர். பண்டைத் தமிழர்கள் காலத்தைக் கணிப்பதில் சிறந்தவர்களாக இருந்தனர் என்பதனை,

"பொழுதளந்து தறியும், பொய்யா மாக்கள்
தொழுது காண் கையர் தோன்ற வாழ்த்தி"
(முல்லைப்பாட்டு.55-56)

என்ற முல்லைப்பாடல் வழி அறியமுடிகிறது.

மழைக்காலங்களில் கதிரவனைப் பார்த்து நாளிகை கணி முடியாத காலங்களில் சிறிய பாத்திரங்களின் அடிப்பகுதியில் சி துளைகளை உண்டாக்கி அப்பாத்திரத்தில் நீரை ஊற்றுவர். அப்பாத்திரத்தி துளை வழியாக நீர் வெளியேறுவதை வைத்து நாழிகையினை சங்ககா தமிழர்கள் அறிந்து வந்துள்ளனர்.

...டைத் தமிழர்கள் மனிதனின் வாழ்நாளினை ஒரு பொழுது, ...ஒரு கிழமை, ஒரு திங்கள், ஒரு ஆண்டு என்று கணக்கிடும் ...அறிந்திருந்தனர். ஒரு நாளினை பல மணித்துளிகளாகப் ...'ஓரை' என்றும் 'நாழிகை' என்றும் பெயர் சூட்டியிருந்தார்கள் ...முலம் புலனாகிறது.

...து ஒரு தடவைச் சூரியனை சுற்றி வரும் காலத்தை ...குறிப்பிடுவர்.

...உதயத்தை இலக்காகக் கொண்டு பூமி ஒரு தடவை ...சூரியமான நாள் என்று பெயர். சராசரி சூரியமான ...24 மணி நேரம். ஒரு குறிப்பிட்ட நட்சத்திரத்தை இலக்காகக் ...ஒரு முறை சுழலும் காலத்திற்கு நட்சத்திரமான நாள் ...சராசரி நட்சத்திரமான நாள் 23 மணி 56 நிமிடம்" என்று ...கின்றார்.

(விக்டர் ம.சோ., வானியலும் தமிழரும், ப. 292)

...ரைய காலத்தில் பகல் மற்றும் இரவு சேர்ந்த காலப்பகுதியை ...குறிப்பிடுகிறோம். ஒரு நாளில் பகலாகவும், பாதி இரவாகவும் ...வருகின்றன. நாள் என்ற சொல்லானது சங்கப் பாடல்களில் ...பகல்' எனும் சொற்களைப் பயன்படுத்தியுள்ளதை காணலாம்.

'...விரும்பின் வெண் திங்கள்
...வந்தான் முறை முறைக்"

(புறநானூறு.400:1-2)

...ற்ற பாடல்களில் 'மூவைந்தான் முறைமுற்றுவான்' என்பது ...நாள் வளர் பிறையைக் குறிக்கின்றது. இவ்வாறு ஒவ்வொரு ...ஒளியானது வளர்ந்து வரும் என்பதனை சங்கத்தமிழர்கள் ...னர்.

...ஒருமுறை சூரியனை சுற்றும் கால அளவானது நாள் என்றும், ...ஒரு முறை சுற்றி வரும் காலத்தினை மாதம் எனவும் ...பாடல்கள் வழி வெளிப்படுத்துகின்றன.

...வாழ்க்கையில் காலம் என்பது மிக முக்கியமான ...காலத்தைக் கணிப்பதில் சங்க கால புலவர்கள் சிறந்த

அறிவு நுட்பத்தைப் பெற்றிருந்தனர். சங்ககால மக்கள் காலத்தை
கணித்ததோடு மட்டுமல்லாமல் அதனை சரியான முறையில் பதிவு
உள்ளனர். ஒவ்வொரு கால நிலைகளுக்கு ஏற்றவாறு ஓராண்டை
மாதங்களைப் பிரித்து வைத்திருந்ததன் மூலம் அவர்களின் அறிவு நுட்
நமக்கு நன்கு புலனாகிறது. மேலும் இரவு பகல் என்பது தானாக நிகழ்
சூரியன், சந்திரன், பூமி ஆகியவற்றின் சுழற்சியின் காரணமாகத்தான்
நிகழ்கிறது என்பதையும் அக்கால மக்கள் நன்கு உணர்ந்திருந்தனர்
புவிக்கு ஈர்ப்புவிசை உண்டு என்பதையும் அறிந்திருந்தனர். இவை
சங்க கால மக்கள் சிறந்த அறிவு நுட்பத்தினைப் பயன்படுத்தி வாழ்ந்
வந்துள்ளமையை அறிந்து கொள்ள முடிகிறது.

செம்மொழி இலக்கியங்களில் தமிழ் அறிவியல்

(பன்னாட்டுக் கருத்தரங்க ஆய்வுக் கட்டுரைகள்)














பதிப்பாசிரியர்கள்

முனைவர் சு.சத்தியா

முனைவர் க.ஆனந்தி

முனைவர் க.முத்தழகி

திருமதி பா.அனுராதா

முனைவர் த.அமுதஜோதி

முனைவர் வா.சண்முகப்பிரியா

தமிழ்த்துறை

பான் செக்கர்ஸ் மகளிர் கல்லூரி

தஞ்சாவூர்

மே - 2022

நூல் விபரம்

நூலின் பெயர்	:	**செம்மொழி இலக்கியங்களில் தமிழ் அறிவியல்**
பதிப்பாசிரியர்கள்	:	முனைவர் சு.சத்தியா முனைவர் க.ஆனந்தி முனைவர் க.முத்தழகி திருமதி பா.அனுராதா முனைவர் த.அமுதஜோதி முனைவர் வா.சண்முகப்பிரியா
மொழி	:	தமிழ்
முதற்பதிப்பு	:	மே 2022
நூல் அளவு	:	1x8
பக்கம்	:	494 + xxiv
விலை	:	ரூ. 600
தரக்குறியீட்டு எண் (ISBN)	:	978-93-81429-23-5
பதிப்புரிமை	:	**தமிழ்த்துறை,** பான் செக்கர்ஸ் மகளிர் கல்லூரி, தஞ்சாவூர்.
வெளியீடு	:	**ஸ்ரீ முருகன் பப்ளிகேஷன்ஸ்,** இராஜராஜன் வணிக வளாகம், தஞ்சாவூர்.
நூல் வடிவமைப்பு	:	**கே.பி.எஸ்.அச்சகம்,** புதிய வீட்டுவசதி வாரியம், தஞ்சாவூர்.
அச்சாக்கம்	:	**த.கூ.ஒ.தி., சீகன் பால்கு அச்சகம்** மற்றும் வெளியீட்டகம், திருச்சி.

15. அகநானூற்றில் ஒரெழுத்தொருமொழியும் அறிவியலும்
- முனைவர் இரா.இந்து - 95
16. நற்றிணையில் அறிவியல் செய்திகள்
- முனைவர் இரா.தனலெட்சுமி - 99
17. இலக்கியங்களில் அறிவியல்
- முனைவர் ம.மருதமுத்து - 105
18. சமய அறிவியல் ஒரு பார்வை
- இரா.அன்பழகன் - 109
19. சஞ்சீவி பர்வதத்தின் சாரலில் காப்பிய அமைப்பு
- முனைவர் இரா.ஜெயஸ்ரீ - 116
20. அறிவியல் நோக்கில் திருக்குறள்
- முனைவர் ச.சு.அருள்பிரகாஷ் - 123
21. வானளந்த பத்துப்பாட்டு
- முனைவர் கரு. முருகன் - 128
22. சங்க இலக்கியத்தில் வானிலைச் செய்திகள்
- முனைவர் அ.சையத் ஜாகீர் ஹுசன் - 133
23. பட்டினப்பாலையில் அறிவியல் செய்திகள்
- முனைவர் க.இக்பால் - 139
24. செவ்விலக்கியங்களில் அறிவியல் கூறுகள்
- முனைவர் வே.சிவானந்தம் - 144
25. புறப் பாடல்களில் அறிவியல் செய்திகள்
- முனைவர் செ.சுகவனேஸ்வரன் - 150
26. சங்க இலக்கியப் பாடல்களில் கால கணிப்பு முறைகள்
- மு.அப்துல் சமது - 156
27. அற இலக்கியங்களில் அறிவியல்
- முனைவர் சே.அமீருதீன் - 163
28. சிலப்பதிகாரமும், பிற இலக்கிய அறிவும்
- முனைவர் கு.நாராயணசாமி - 169
29. சங்க இலக்கியங்களில் வானியல் செய்திகள்
- முனைவர் அ.ஜனார்த்தலி பேகம் - 174
30. பழந்தமிழரின் வியத்தகு அறிவியலறிவு
- முனைவர் க.செல்வி - 182
31. செம்மொழி இலக்கியங்களில் தாவரம்
- முனைவர் ம.ப.தமிழ்ச்செல்வி - 187
32. தொல்காப்பியத்தில் முதற்பொருள்
- முனைவர் க.உமாராணி - 192

செவ்விலக்கியங்களில் அறிவியல் கூறுகள்

முனைவர் வே.சிவானந்தம்
உதவிப்பேராசிரியர்
தமிழாய்வுத்துறை
ஜமால் முகமது கல்லூரி (தன்னாட்சி)
திருச்சிராப்பள்ளி-20

முன்னுரை

தமிழ்மொழியின் இலக்கியப் பரப்பில் காலத்தால் முற்பட்ட இலக்கியம் சங்க இலக்கியமாகும். பாண்டிய மன்னர்கள் தலைநகரங்களில் தமிழ்ப் பேரவை அமைத்து தமிழ்மொழியின் இலக்கிய பழமையினைக் காத்து வந்தனர். இப்பேரவைப் புலவர்களால் சங்கம் என்னும் பெயரில் செயல்பட்ட இப்பழந்தமிழ் இலக்கியத்தில் தனிப்பாடல்களாக 2381 பாடல்கள் கிடைத்துள்ளன. இவற்றுள் 1862 பாடல்கள் அகத்திணைப் பாடல்களாகும். ஒட்டு மொத்தமாகச் சங்கப்பாடல்களைப் பாடிய புலவர்களில் அகத்திணையை மட்டும் பாடியவர்கள் 378 பேர்களில் 27 பேர் பெண்பாற் புலவர்களாவர். இத்தகு தொன்மை வாய்ந்த இலக்கியம் நம் தமிழர்களின் எண்ணங்கள், பழக்க வழக்கங்கள், நம்பிக்கைகள், வீரம், விருந்தோம்பல் எனப் பலவற்றை எடுத்தியம்பியுள்ளது.

அறிவியல்

அறிவு அற்றங்காக்கும் கருவி என திருவள்ளுவர் கூறியுள்ளார். அறிவின் நுட்பமான மறுமலர்ச்சியே அறிவியலாகும். தமிழ் இலக்கியத்தில் ஐம்பூதங்கள் வானிலை, உயிரியல், வானவூர்தி மருத்துவம், தூய்மையாக்கப்பட்ட குடிநீர் பற்றிய செய்திகளைக் காண்பதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

உலகத்தின் தோற்றம்

ஐம்பூதங்களால் உருவானது இவ்வுலகமெனில் அது எவ்வி என்ற கேள்வி அறிவியலுக்கு சவாலாக அமைந்தது. ஒரு காலத்தி பரிபாடலில்

"கருவளர் வானத்திசை யிற்தோன்றி
உருவறிவாரா ஒன்றன் ஊழியும்
உந்துவளி கிளர்ந்த உளமுழ் ஊழியும்
சென்றதீச் சுடரிய ஊழியும் பணியொடு

தன்பெயல் தலைஇய ஊழியும் அவையிற்
தண்முறை வெள்ள மூழ்கியார் தருபு
உள்ளிபிகிய இருநிலத் தூழியும்"
(பரி.2:5-11)

ாய்ப்பட்டுள்ளது.

தில் வானிலிருந்து காற்றும் காற்றிலிருந்து தீயும் தீயிலிருந்து
நிருந்து நிலமும் தோன்றிய நிலைகள் கூறப்பட்டுள்ளன. இவை
ஞ் கதிரவனில் பிரிந்து பூமி நீண்ட காலத்திற்கு நெருப்புக் கோளமாக
து என்றும் அது காலப்போக்கில் சிறிது சிறிதாக குளிர்ந்து
ாக மாறி, பின் நெடுநாட்களுக்குப் பிறகு நிலம் தோன்றியது
உலகத்தின் தோற்றம் குறித்து பல அறிவியல் உண்மைகளை
றது. அறிவியல் தொழில்நுட்பம் இல்லாத காலத்தில் தமிழரின்
குறித்த அறிவு எண்ணி எண்ண வியப்பில்லாதது.

ரிபாடல்கூறிய செய்தியை புறநானூறும் அவ்வாறே கூறுகின்றது.
மண் திணிந்த நிலனும்
நிலன் ஏந்திய விசும்பும்
விசும்பு தைவரு வளியும்
வளித் தலைகிய தீயும்
நீ முரணிய நீரும் என்றாங்கு
ஐம்பெரும் பூதத்து இயற்கை போல"
(புறம்.2:1-6)

ால் செறிந்த நிலம், நிலத்தின் கண் ஓங்கியிருக்கும் வானம்
பொருந்தித் தடவி நிற்கும் காற்று, காற்றினால் பெருகும் தீ,
ாறுபட்ட நீர் என்று ஐந்து வகையான ஆற்றல்களை உடையது
. அந்த இயற்கையைப் போன்று உன்னைப் போற்றிப் புகழாத
ன் பிழையை நிலம் போல பொறுக்கின்றாய். அந்தப்
னை அழிக்க செய்யும் ஆராய்ச்சி வானமளவு அகன்தாகவும்
ய நார்படையின் வலிமை காற்றின் வலிமையையும் ஒத்தன.
அழிப்பதில் தீயைப் போலவும். அந்தப் பகைவர்கள் உன்னை
லத்தில் நீர் போலத் தன்மையான அருள் செய்கின்றாய்.
ஐம்பெரும் பூதத்து இயற்கையுடன் நீ ஒப்பாக விளங்குகின்றாய்
முரஞ்சியூர் முடிநாகராயர் சேரமான் பெருஞ்சோற்று
னையானை ஐம்பெரும் பூதத்துடன் ஒப்பிட்டு சொல்லும் பாங்கு
ில் சிறப்பாகப் பேசப்படுகின்றது.

[illegible]

[illegible]

[illegible]

ன்றறி வதுவே உற்றறி வதுவே
ரண்டறி வதுவே அதனொடு நாவே
ன்றறி வதுவே அவற்றொடு மூக்கே
ன்கறி வதுவே அவற்றொடு கண்ணே
ந்தறி வதுவே அவற்றொடு செவியே
றறி வதுவே அவற்றொடு மனனே"

(தொல்.மரபு.நூ.583)

தற்பாவால் உயிர்களின் பரிணாம வளர்ச்சி உயிர்களின் டனும் அதனோடு இணைந்த மெய், வாய், மூக்கு, கண், செவி ஐம்பொறிகளும் மனமும் ஆகிய அறுவகை வாயில்களையும் யிர்கள் சிறந்து விளங்கும் இயல்பினை அறிவியல் நோக்கில் ள்ள தொல்காப்பியரின் திறம் போற்றத்தக்கது.

ன்றைய மனிதன் கண்ட கனவை இன்றைய அறிவியல் ம் நிஜமாக்கியுள்ளது. தேடல் இருக்கும் இடத்தில் தான் வெற்றி ன்று பறவையைக் கண்ட மனிதன் தானும் பறக்க நினைத்தான். ல் இல்லாத போதும் தன் முயற்சியைக் கைவிடவில்லை. விளைவு ன் துணையோடு இன்று விண்ணில் பறக்கின்றான். இவ்விமானங்கள் ப குறிப்புகள் சங்கப் பாடல்களிலும், காப்பியங்களிலும் பயின்று ருவதைக் காணமுடிகின்றது.

லவன் ஏவா வானவூர்தி" (புறம்.27:8)

னால் பாடப்பெறும் புகழுடையோர், வானில் வலவனால் படாது இயங்கும் விமானத்தினைத் தாம் செய்யும் நல்ல ன முடித்தபின் அடைவர் என்பது அறிவுடையோர்களின் கருத்தாக ப்படுகிறது.

ல இலக்கியங்கள் மருத்துவ முறைகள் குறித்தும் மருந்துப் ள் குறித்தும், மருத்துவன் இயல்புகள் குறித்தும் சுட்டிச் ன்றன. ஆயினும் சங்க இலக்கியத்தின் தொடர்ச்சியாகவும் ல் காணப்படும் திருக்குறளில் மருந்து மருத்துவம் மருத்துவன் நோய் கண்டறியும் முறைகள் நோயாளிக்குத் துணை செய்வோர் ன விரிவாகப் பேசப்பட்டுள்ளதை நாம் அறிகிறோம்.

அக்காலத்தில் மருத்துவர் அறவோன் (நற்:136) மருத்துவன் (கலி.17:20, 21, 137:24-25, புறம்.173:11) என அழைக்கப்பட்டனர். தொல்காப்பியர் நோய்க்கு மருந்து அறிதர் (தொல்.அகம்.192) என்கிறார். வள்ளுவர் கற்றான் (குறள்949) தீர்ப்பான் (குறள்.950) எனக் குறிப்பிடுகிறார். குற்றான் என்பது மருத்துவ நூல்களைக் கற்றுத் தேர்ந்தவன் என்பதையும் தீர்ப்பான் என்பது நோயினைத் தீர்க்கும் மருத்துவ திறன் பெற்றவன் என்பதையும் குறிக்கும்.

மருத்துவர் என்பவர் நோயுற்றவர் வேட்கை கொள்ளும் அனைத்தையும் வழங்காமல் நோயின் தன்மைக்கு ஏற்ப மருந்துகளை ஆராய்ந்து கொடுத்து நோயினைக் குணப்படுத்தும் தன்மை வாய்ந்தவராக இருந்ததை

"அரும்பிணி உறுநர்க்கு வேட்டது கொடாஅது
மருந்து ஆய்ந்து கொடுத்த அறவோன் போல"
(நற்.136:2-3)

என்பதை நற்றிணை சுட்டுகிறது. அதுபோல நோய்க்குத் தகுந்த மருந்தினை ஆராய்ந்துக் கொடுத்து உடலைப் பிணியிலிருந்து காத்து நன்மை புரியும் மருத்துவனது

"யாக்கையுண் மருத்துவன் ஊட்டிய
மருந்துபொல் மருந்தாகி" **(கலி.17:19-20)**

என்ற கலித்தொகையும் விளக்குகிறது.

இம்மருத்துவத்துறையில் மருந்தாளும் செவிலியும் முக்கிய இடம்பெறுகிறார். நோய்குணமடையும் தன்மையானது. நோயுற்றவன், நோயைத் தீர்க்கும் மருத்துவன், மருந்து, அருகிலிருந்து காலம் தவறாமல் மருந்தை கொடுக்கும் செவிலியர் ஆகியோரைப் பொறுத்தே அமையும் என்பதை

"உற்றவன் தீர்ப்பான் மருந்துழைச் செல்வானென்று
அப்பால்நாற் கூற்றே மருந்து" **(குறள்.950)**

என்று வள்ளுவர் கூறியுள்ளார்.

முடிவுரை

சங்க இலக்கியம் ஒரு கடல் கற்பவருக்குப் பல்துறை அறிவு இருந்தாலன்றி சங்க இலக்கியத்தின் முழுப்பொருளையும் அறிதல் சற்று

...கோர் குறிஞ்சிப் பூக்கொண்டு பெருந்தேன் இழைக்கும்
...ஒரு குறுந்தொகைப் பாடலை விளங்கிக் கொள்வதற்கே
...அறிவுகள் வேண்டும். அறிவியல் ஆய்வு முறையில் சங்க
...ஆய்வு செய்து பொருளை வெளிக் கொணர்ந்தால்
...செவ்வியல் இலக்கியங்களை உலகமே வியந்து பாராட்டும்
...ஐயமில்லை.

...ல்கள்

...டல் மூலமும் உரையும், NCBH அம்பத்தூர், சென்னை
...நூறு மூலமும் உரையும் NCBH அம்பத்தூர், சென்னை
...ணை மூலமும் உரையும், NCBH அம்பத்தூர், சென்னை
...நூறு மூலமும் உரையும், NCBH அம்பத்தூர், சென்னை
...தொல்காப்பியம் பாவலரெறு பாலசுந்தரனார் ஆராய்ச்சி
...ண்டிகையுரை
...குறுந்தொகை மூலமும் உரையும், NCBH அம்பத்தூர், சென்னை
...நூறு மூலமும் உரையும், NCBH அம்பத்தூர், சென்னை
...சிலப்பதிகாரம், ந.மு.வேங்கடசாமி நாட்டார் உரை
...சிவகசிந்தாமணி, உ.வே.சாமிநாதஅய்யர் உரை
...கலித்தொகை மூலமும் உரையும், NCBH அம்பத்தூர், சென்னை.

செம்மொழி இலக்கியங்களில் தமிழ் அறிவியல்

(பன்னாட்டுக் கருத்தரங்க ஆய்வுக் கட்டுரைகள்)














பதிப்பாசிரியர்கள்

முனைவர் சு.சத்தியா

முனைவர் க.ஆனந்தி

முனைவர் க.முத்தழகி

திருமதி பா.அனுராதா

முனைவர் த.அமுதஜோதி

முனைவர் வா.சண்முகப்பிரியா

தமிழ்த்துறை

பான் செக்கர்ஸ் மகளிர் கல்லூரி

தஞ்சாவூர்

மே - 2022

நூல் விபரம்

நூலின் பெயர்	:	**செம்மொழி இலக்கியங்களில் தமிழ் அறிவியல்**
பதிப்பாசிரியர்கள்	:	முனைவர் சு.சத்தியா முனைவர் க.ஆனந்தி முனைவர் க.முத்தழகி திருமதி பா.அனுராதா முனைவர் த.அமுதஜோதி முனைவர் வா.சண்முகப்பிரியா
மொழி	:	தமிழ்
முதற்பதிப்பு	:	மே 2022
நூல் அளவு	:	1x8
பக்கம்	:	494 + xxiv
விலை	:	ரூ. 600
தரக்குறியீட்டு எண் (ISBN)	:	978-93-81429-23-5
பதிப்புரிமை	:	**தமிழ்த்துறை,** பான் செக்கர்ஸ் மகளிர் கல்லூரி, தஞ்சாவூர்.
வெளியீடு	:	**ஸ்ரீ முருகன் பப்ளிகேஷன்ஸ்,** இராஜராஜன் வணிக வளாகம், தஞ்சாவூர்.
நூல் வடிவமைப்பு	:	**கே.பி.எஸ்.அச்சகம்,** புதிய வீட்டுவசதி வாரியம், தஞ்சாவூர்.
அச்சாக்கம்	:	**த.கூ.ஒ.தி., சீகன் பால்கு அச்சகம்** மற்றும் வெளியீட்டகம், திருச்சி.

15. அகநானூற்றில் ஒரெழுத்தொருமொழியும் அறிவியலும்
- முனைவர் இரா.இந்து - 95
16. நற்றிணையில் அறிவியல் செய்திகள்
- முனைவர் இரா.தனலெட்சுமி - 99
17. இலக்கியங்களில் அறிவியல்
- முனைவர் ம.மருதமுத்து - 105
18. சமய அறிவியல் ஒரு பார்வை
- இரா.அன்பழகன் - 109
19. சஞ்சீவி பர்வதத்தின் சாரலில் காப்பிய அமைப்பு
- முனைவர் இரா.ஜெயஸ்ரீ - 116
20. அறிவியல் நோக்கில் திருக்குறள்
- முனைவர் ச.சு.அருள்பிரகாஷ் - 123
21. வானளந்த பத்துப்பாட்டு
- முனைவர் கரு. முருகன் - 128
22. சங்க இலக்கியத்தில் வானிலைச் செய்திகள்
- முனைவர் அ.சையத் ஜாகீர் ஹுசன் - 133
23. பட்டினப்பாலையில் அறிவியல் செய்திகள்
- முனைவர் க.இக்பால் - 139
24. செவ்விலக்கியங்களில் அறிவியல் கூறுகள்
- முனைவர் வே.சிவானந்தம் - 144
25. புறப் பாடல்களில் அறிவியல் செய்திகள்
- முனைவர் செ.சுகவனேஸ்வரன் - 150
26. சங்க இலக்கியப் பாடல்களில் கால கணிப்பு முறைகள்
- மு.அப்துல் சமது - 156
27. அற இலக்கியங்களில் அறிவியல்
- முனைவர் சே.அமீருதீன் - 163
28. சிலப்பதிகாரமும், பிற இலக்கிய அறிவும்
- முனைவர் கு.நாராயணசாமி - 169
29. சங்க இலக்கியங்களில் வானியல் செய்திகள்
- முனைவர் அ.ஜனார்த்தலி பேகம் - 174
30. பழந்தமிழரின் வியத்தகு அறிவியலறிவு
- முனைவர் க.செல்வி - 182
31. செம்மொழி இலக்கியங்களில் தாவரம்
- முனைவர் ம.ப.தமிழ்ச்செல்வி - 187
32. தொல்காப்பியத்தில் முதற்பொருள்
- முனைவர் க.உமாராணி - 192

சங்க இலக்கியங்களில் வானியல் செய்திகள்

முனைவர் அ. ஜனார்த்தனி
உதவிப் பேராசிரியர், தமிழாய்வுத்துறை
ஜமால் முகமது கல்லூரி (தன்னாட்சி)
திருச்சிராப்பள்ளி - 620 020

முன்னுரை

தமிழ் மொழி இலக்கியமானது உலக இலக்கியங்களில் தொன்மையும், பெருமையும் உடையதாக விளங்குகிறது. சங்க இலக்கியங்கள் தனிச்சிறப்புடையதாக திகழ்கிறது. தமிழர்களுடைய வரலாற்றுக்கும், கற்பனைத்திறனுக்கும், அறிவுப் பூர்வமான செயல்களை கூறுவதிலும் சங்க இலக்கியப் பாடல்கள் தனித்தன்மை வாய்ந்ததாக விளங்குகின்றது. சங்க இலக்கியத்தில் மனிதனுடைய வாழ்வியல் சார்ந்த உணர்வுகள் மட்டுமின்றி பல அறிவு சார்ந்த நுட்பங்களையும், அறிவியல் செய்திகளையும் புலவர்கள் தங்களது பாடல்களில் பதிவு செய்துள்ளமையை காண முடிகிறது. சங்கப் பாடல்களில் வானியல் சார்ந்த செய்திகள் குறிப்பிடப்பட்டுள்ளது. சூரியன், சந்திரன், நட்சத்திரங்கள் குறித்த செய்திகள் பலவிடங்களில் காணப்படுகின்றன. சங்க இலக்கியத்தில் காணலாகும் வானியல் சார்ந்த கருத்துக்களை வெளிப்படுத்துவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

வானியல்

விண்வெளியில் காணப்படும் பொருட்களைப் பற்றி ஆராய்ந்தறியும் அறிவியல் துறை வானியல் (Astronomy) எனப்படும். வானியல் அறிவானது மிகவும் தொன்மை வாய்ந்ததாகும். ஆதிகாலத்தில் வாழ்ந்த மனிதன் சூரியனையும், சந்திரனையும் அறிய முற்பட்டதின் விளைவாகவே வானியல் நுட்பம் தோன்றலாயிற்று. நடோடியாக வாழ்வினைத் தொடங்கிய மனிதன் இன்று விண்வெளிக்குச் சென்று கால் தடத்தினை பதிக்கும் அளவிற்கு முன்னேறி இருப்பது அறிவியல் வளர்ச்சியாகும். பண்டைத் தமிழர்கள் தனக்கென உயர்ந்த நாகரீகத்தையும், பண்பாட்டையும் பெற்றிருந்ததோடு அறிவு சார்ந்த நுட்பங்களையும் பெற்றிருந்தனர். பரந்து விரிந்த வான வெளிப்பகுதியில் காணப்படும் பேரண்டங்கள், விண்மீன்கள், சூரியன், சந்திரன் மற்றும் மனித அறிவுக்குப் புலப்படாத பல புதுமைகள் காணப்படுகின்றன.

சனின் இயக்கம், கோள்களின் பெயர்கள், கோள்களின் இயக்க
ந்தும் தோன்றிய முறை, மழையினை கணிக்கும் முறை,
னால் உலகம் இயங்குதல் போன்றவற்றை பண்டைத் தமிழர்கள்
அறிந்திருந்தனர்.

"பண்டைக் காலத்தில் வானியலை ஆய்ந்து தெளிந்து, வானியல்
ன்ன மீன்கள், கோள்கள், அவற்றின் நகர்வுகள் பற்றிய செய்திகளை
ன்கள். கணியர் என்ற தமிழ் மரபினரேயாவர். தமிழகத்தின்
னைத் கணியர்கள் என்றே அழைத்தனர். அதனால் கணியர்கள்
என்றும் கணக்கர் என்றும் சொல்லப்பட்டனர்"

(விக்டர் ம.சோ. தொல்காப்பியச் சிந்தனைகள், ப. 158)

டர் குறிப்பிடுவதன் மூலம் சங்ககாலத்திலேயே வானியல் பற்றிய
நடந்துள்ளமையை அறிய முடிகிறது.

ள்கள்

ழங்காலத்தில் இருந்தே தமிழர்களுக்கு விண்மீன்களின் மீது
கை இருந்து வந்துள்ளது. மனித வாழ்வில் ஏற்படும் துன்பங்களுக்கு
ன் காரணம் என்ற எண்ணமானது கோள்களை வணங்கும் நிலைக்கு
னை அழைத்துச் சென்றது. விண்வெளியில் காணப்படும்
லகத்தும் மக்களுக்கும் இடையே உள்ள தொடர்பை அறிவிக்கும்
னாக சோதிடம் விளங்குகின்றது.

தமிழர்கள் தங்களது வாழ்க்கையைச் செம்மைப்படுத்தவும்,
ந்தவும், அவனது எதிர்பார்ப்புகளை நிறைவு செய்யவும் தனது
கையோடு இணைத்துப் பார்த்து அதன் அடிப்படையில்
ந்நூறையை உருவாக்கினர்.

'ஒருவர் பிறக்கும் நேரத்தில், விண்ணில் நட்சத்திரங்கள் அல்லது
ள் இருக்கும் நிலையினை அடிப்படையாகக் கொண்டு அவர்தம்
இயல்புகள், வாழ்க்கை முறை ஆகியவற்றைக் கணிப்பது
தும்" என்ற அனுராதாவின் கூற்றி இங்கு நோக்கத்தக்கதாகும்.

(அனுராதா. ப. சங்கப் பேழை, ப. 111)

ங்ககாலத்தில் கோள்கள் வானில் இயங்கும் நிலைக்கு ஏற்றவாறு
ராசி என்னும் அமைப்பு வகுக்கப்பட்டிருந்ததை,

"விரிகதிர் மதியமொடு வியல் விசும்புபுணர்ப்ப,
எரிசுடர் எழில்வேழமும் தலைபெனக் கீழிருந்து
தெருவினிடைப் படுத்து மூன்று ஒன்பதிற் றிருக்கையுள்
உருகெழு வெள்ளிவந் தேற்றியல் சேர;"
(பரிபாடல்.11:11-10)

என்ற பரிபாடல் பாடல் வழி மொத்தமாக 27 விண்மீன்களையும் 12 இராசிக்குள் அடங்கியுள்ளதாக குறிப்பிடுகிறது. இதன்மூலம் ஒவ்வொரு கோளுக்கும் உரிய இராசியினை அறிய முடிகிறது. இன்றும் நிலவில் மேஷம், மிதுனம் முதலான ராசிகள் மக்களின் ஜாதகக் கணிப்பில் உள்ளது குறிப்பிடத்தக்கது.

தலைவன் தீய ராசிகளின் போது தலைவியைப் பார்க்க செல்வதை தவிர்த்து விடுகிறான் என்ற செய்தியை,

"மறைந்த ஒழுக்கத்து ஓரையும் நாளும்
துறந்த ஒழுக்கம் கிழவோற்கு இல்லை"
(தொல்காப்பியம்.1081)

என்று தொல்காப்பிய நூற்பா உணர்த்துகிறது.

வெள்ளிக்கோள்

வெண்மை நிறத்தில் காட்சியளிக்கின்ற கோள் வெள்ளிக் கோளாகும். காலை அல்லது மாலை நேரத்தில் தான் வானில் வெள்ளிக்கோள் தோன்றும். வெள்ளிக்கோளானது அதிக ஒளி வீசக்கூடியது என்பதை,

"பயங்கெழு வெள்ளி யாநிய நிற்ப"
(பதிற்றுப்பத்து.69:14)

என்ற பதிற்றுப்பத்து பாடல் குறிப்பிடுகின்றது. சூரியக்குடும்பத்தில் புதனுக்கும் பூமிக்கும் இடையே உள்ள கோள் வெள்ளியாகும். கோள்களின் மாற்று இயங்கு தன்மை, விளங்கும் திசை போன்றவற்றைக் கொண்டு பல நிலை மாற்றங்கள், மழை பொழிதல், வாழ்க்கை மாறுதல்கள் போன்றவற்றை முன்னதாகவே அறியும் அறிவு நுட்பத்தினை பெற்று வாழ்ந்து வந்துள்ளனர். பட்டினப்பாலையின் தொடக்க அடிகளே வானியல் கருத்துக்களைக் கொண்டதாக அமைந்துள்ளதை,

"வசையில் புகழ் வயங்கு வெண் மீன்
திசை திரிந்து தெற்கேகினும்

நன்றய தளியுணவிற்
ற்மேல் புயன்மாரி
ன்னொய்யினும் தான்பொய்யா
னைத் தலைய கடற்காவிரி"

(பட்டினப்பாலை.1-6)

உலகில் குற்றமில்லாத புகழையுடைய வெள்ளிக்கோளானது வடதிசையில் நில்லாது, தென்திசையின் கண் போகினும், தன்னைப் பழமைத்துளியே உணவாக உடைய வானம்பாடித் துளியைப் பொழிந்துபடி மழைபெய்யாது பொய்த்துப் போனாலும் காவிரியாறு நீரை என்ற குறிப்பிடுவதன் மூலம் வெள்ளிகோளானது தென்திசையில் தோன்றாது மழைபெய்யாது பெரும் பஞ்சம் ஏற்படும் எனும் கருத்தினை முன்வைத்து.

மேலும், வெள்ளியானது வடதிசையில் தோன்றினால் மழைபெய்து வளம் பெறும் என்பதை,

"வெள்ளி தோன்றப் புள்ளுக்குர லியம்பப்
பனி விடியற பகடுபல வாழ்த்தித்"

(புறநானூறு.385:1-2)

என்னும் புறநானூற்றுப் பாடல் வழி அறியமுடிகிறது.

"வெள்ளி தென்புலத் துறைய விளைவயற்
புனல் வாடிய பயனில் காலை"

(புறநானூறு.388:1-2)

"வெள்ளி தென்புலம் படரினும்
வற்றல் காவிரி வந்து கவர்பூட்டத்"

(புறநானூறு. 35:7-8)

என்னும் புறநானூற்று பாடலடிகள் மூலம் வெள்ளிக்கோளின் இயக்கம் அறியப்படுகிறது.

வெள்ளிக்கோளானது கரிய நிறத்தினையுடையது. இதனை,

"கலம்மின் புகையினும், தூமந் தோன்றினும்"

(புறநானூறு. 117:1)

என்ற புறநானூற்று பாடல் வரிகள் சனிக்கோள் புகைந்து எல்லா திசையிலும் பரவும் இதனால் புகை தோன்றிப் பெருந்தீங்கு விளையும் என்பதை உரை முடிகிறது.

விண்மீன் எரிந்து பூமியில் விழுந்தால் பூமிக்குத் தீங்கு விளைவிக்கும். இதனை தீய நிமித்தம் என்று தமிழர்கள் கருதினர். இதனைப் பற்றிய நம்பிக்கைச் சார்ந்த இலக்கியக் குறிப்புகளை நம் இலக்கியங்களில் காணமுடிகிறது.

"திசையிரு நான்கு முற்க முற்கவும்"
(புறநானூறு.41:4)
"கனைரிபரப்பக் காலெதிர்பு பொங்கி
ஒருமீன் வீழ்ந்தன்றால், விசும்பினானே"
(புறநானூறு.229:11-12)

என்ற புறநானூற்று பாடலடிகள் மூலம் எரி நட்சத்திரத்தைப் பற்றி அறியலாம் மேலும்,

"கடற்கோள், எரிமலை, பெருவெள்ளம், வறட்சி ஆகியவற்றுக்கு வின்வெளியிலுள்ள கோள்நிலை மாற்றமும் ஒரு காரணம் என்று கருதின
(மதிவாணன். இரா., பழந்தமிழரின் வான நூலறிவு, ப.

என்ற மதிவாணனின் கருத்தின் மூலம் பண்டைத் தமிழர்கள் விண்வெளிப் பாதையில் உள்ள கோள்களின் மாற்றத்தினால் பூமியில் ஏற்படும் மாற்றங்களை அறிந்திருந்தனர் என்பது புலனாகிறது.

சில சமயங்களில் கோள்களுக்கு இடையே ஏற்படும் ஈர்ப்புவிசையால் விண்வெளிப்பாதையில் விலகி அதிவேகமாக விரைந்து வரும். இவற்றை வால்மீன் அல்லது வால் நட்சத்திரம் என்பர். இது சிதறிய பகுதியோடு வால் போல் காட்சியளிக்கும் அது புவி ஈர்ப்பு விசையோடு சுற்றுவதே இதற்கு காரணமாகும். பல ஆண்டுகளுக்கு ஒருமுறை கதிரவனை வால் நட்சத்திரம் சுற்றி வருவதனை,

"அகன் ஞாலம் பெரிது வெம்பினும்
மிகவானு ளெரி தோன்றினும்
குளமினொடுந் தாட் புகையினும்"
(புறநானூறு.395:33-35)

திகளால் உலகிற்குப் பெருந்தீங்கு ஏற்படும் என்ற செய்தியும் ரை அறிய முடிகிறது.

ரியனும்

இப்புவியானது சூரியனை மையமாகக் கொண்டு தான் து. இதனை,

"ஞெண்டுறற் கனலியொடு மதிவலந் திரிதரும்"
(பெரும்பாணாற்றுப்படை.17)

"உலகம் உவப்ப வலன்ஏர்பு திரிதரு
மலர்தலை ஞாயிறு கடல்கண் டாஅங்கு"
(திருமுருகாற்றுப்படை.1-2)

என்ற சங்க இலக்கிய பாடல்கள் வழி புவி மையக் கொள்கை ரிய மையக் கொள்கைகளை சங்க தமிழர்கள் அறிந்துள்ளமை ிந்து.

ரு (சூரியன்)

நம் வாழும் புவிக்கு மிக அருகில் உள்ள விண்மீன் ஞாயிறு சூரியனைப் பற்றி அறிந்து கொள்ளும் அறிவியலை சூரிய வானியல் சூரிய வானியலை அறிவதன் மூலம் மற்ற விண்மீன்களின் ப்பினை அறிந்து கொள்ளலாம்.

சிவந்த ஞாயிற்றின் இயக்கத்தையும், அதன் பாதையையும், அதன் சுற்றிய நீள் வட்டத்தையும், காற்று இயங்கும் திசை போன்றவற்றை நோக்கு சிந்தனையோடும், அறிவு நுட்பத்தோடும் சங்ககால ர் சிந்தித்துள்ளதை,

"செஞ்ஞாயிற்றுச் செலவும் ஞாயிற்றுப்
பரியும் பரிப்புச் சூழ்ந்தமண் டிலமும்"
(புறநானூறு.30:1-2)

புறநானூற்று பாடல் வழி அறியமுடிகிறது. மேலும்,

"விரிகதிர் ஞாயிறு விசும்பி வர்ந்தன்ன"
(புறநானூறு.228:8)

"தெறுகதிர்க் கனலி தென்றிசைத் தோன்றினும்"
(புறநானூறு.397:24)

என்ற புறநானூற்று வரிகள் மூலம் பல கிரகங்களை உடை ஞாயிற்றின் இயல்பினை அறிய முடிகிறது. ஞாயிற்றின் சூழற்சியால் நி இரவு, பகல் உருவாகிறது என்ற அறிவு நுட்பத்தை உணர்ந்தவர்களா இருந்தனர் என்பதை,

"மின்றிகழ் விசும்பிற் பாயிரு ளகல
ஈண்டுசெலன் மரபுற் றன்னியல் வழாஅ
துரவுச்சினந் திருகிய வுருகெழு ஞாயிறு"
(புறநானூறு.25:1-3)

ஞாயிறு தன் இயல்பில் மாறாது இருப்பதை, தலையாலங்கானத்து செருவென்ற நெடுஞ்செழியனின் அருள் உள்ளத்துக்கு ஒப்பிட்டு கல்லாடனார் தெரிவிக்கிறார்.

திங்கள் (சந்திரன்)

பகற்பொழுதினில் ஞாயிறு ஒளி தருவது போல இரவுப் பொழுதில் ஒளி தருவது திங்கள் ஆகும். திங்களானது வளரும் போது பதினைந்து நிலைகளை அடைவது போலவே தேய்கையிலும் பதினைந்து நிலைகளை அடைகிறது. இதனை,

"அறையும் பொறையு மணந்த தலைய
எண்ணாட் டிங்க ளனைய கொடுங்கரைத்"
(புறநானூறு.118:1-2)

என்ற பாடல் வழி அறியலாம். மேலும்,

"ஆளள் நிறைமதி அலர்தரு பக்கம் போல்
நாளின் நளிவரைச் சிலம்பு தொட்டு
நிலவுப் பரந்தாங்கு நீர்நிலம் பரப்பி
உலகு பயம்பகர ஓம்புபெரும் பக்கம்"
(பதிற்றுப்பத்து.11:31-34)

என்ற பதிற்றுப்பத்து பாடல் வரிகள் நிலவானது நாள்தோறும் வளர்ந்து அதன் ஒளியானது உலகெங்கும் பரவுவது போல, மலைச்சாரல் தொடங்கி எங்கும் நீரைப்பரப்பி உலகத்திற்குப் பயனை விளைவித்து பாதுகாக்கும் வையை எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

சங்க கால மனிதன் தான் வாழும் வாழ்க்கை முறையினை மட்டும் அறிந்தி வாழவில்லை. தன் கண்களுக்குத் தெரியாத, புலப்படாத செய்திகளையும் அறிந்திருந்தனர். இயற்கையையும், பஞ்ச னையும் வணங்கிய மனிதன் அதனை தனது ஆராய்ச்சிகளின் மூலம் ிப்பிடுகிறான். வானின் நிறம், கோள்களின் நிறம், அவற்றின் அமைப்பு அவை செயல்படும் தன்மை ஆகியவற்றையும் கோள்கள் செயல்படும் னை சங்க கால மனிதன் தம் பாடல்கள் வழி உலகிற்கு ந்தியுள்ளமையும் அவர்களே சிறந்த அறிவியலாளர்கள் என்பது த்தக்கதாகும்.

Vol - 3 -1&1S May 2022
Online Version : www.jmcjarj.org

ISSN (P) : 0973-0303
ISSN (O) : 2582-5941

JARJ

Jamal Academic Research Journal : an Interdisciplinary



தமிழக முஸ்லிம்களின் வரலாறு, பண்பாடு, இலக்கியம்

HISTORY, CULTURE AND LITERATURE OF MUSLIMS OF TAMIL NADU

பதிப்பாசிரியர்கள்
பேரா. கா. முகமது இஸ்மாயில்
முனைவர் தா. உமர் சாதிக்
முனைவர் ச.அ.சையத் அகமது பிரோசு

ஜமால் முகமது கல்லூரி (தன்னாட்சி)
ஆற்றல் வளத்தனித்தகுதியும்
தேசியத்தர மதிப்பீட்டு மூன்றாம் சுற்றில் 'A' தகுதிச் சான்றும்
DBT -நட்சத்திரக் கல்லூரித்திட்டம் மற்றும் DST-FIST நிதிநல்கையும் பெற்றது
(பாரதிதாசன் பல்கலைக்கழக இணைவு பெற்றது)
திருச்சிராப்பள்ளி- 620 020

Since 1951

தமிழக முஸ்லிம்களின்
வரலாறு, பண்பாடு, இலக்கியம்
History, Culture and Literature of
Muslims of Tamil Nadu

பதிப்பாசிரியர்கள்

பேரா.கா.முகமது இஸ்மாயில்

முனைவர் தா.உமர் சாதிக்

முனைவர் ச.அ.சையத் அகமது பிரோசு

Since 1951

ஜமால் முகமது கல்லூரி (தன்னாட்சி)

ஆற்றல் வளத்தனித்தகுதியும்

தேசியத் தர மதிப்பீட்டு மன்றம் சுற்றில் 'A' தரச்சான்றும்

DBT- நட்சத்திரக் கல்லூரித் திட்டம் மற்றும் DST-FIST நிதிநல்கையும் பெற்றது

(பாரதிதாசன் பல்கலைக்கழக இணைவு பெற்றது)

திருச்சிராப்பள்ளி - 620 020.

தமிழ்நாடு, இந்தியா

தமிழக முஸ்லிம்களின் வரலாறு, பண்பாடு, இலக்கியம்

பதிப்பாசிரியர்கள்	:	பேரா.கா.முகமது இஸ்மாயில் முனைவர் தா.உமர் சாதிக் முனைவர் ச.அ.சையத் அகமது பிரோசு
வகை	:	பன்னாட்டுக் கருத்தரங்க ஆய்வுக் கட்டுரைகளின் தொகுப்பு (தமிழ் மற்றும் ஆங்கிலம்)
பக்கங்கள்	:	378
வெளியீடு	:	ஜமால் முகமது கல்லூரி (தன்னாட்சி), திருச்சிராப்பள்ளி - 620 020
அச்சாக்கம்	:	தி பிரிண்டிங் ஹவுஸ், திருச்சி -23

JARJ

Jamal Academic Research Journal : an Interdisciplinary

ISSN (P) : 0973-0303

ISSN (O) : 2582-5941

Online Version : www.jmcjarj.org

History, Culture and Literature of Muslims of Tamil Nadu

Guest Editors	:	Prof.K.Mohamed Ismail Dr.T.Umar Sadiq Dr.S.A.Syed Ahmed Firoz
Subject	:	Research Articles of an International Seminar (English and Tamil)
Pages	:	378
Publication	:	Jamal Mohamed College (Autonomous) Tiruchirappalli - 620 020
Printing	:	The Printing House, Trichy -23

14	∴பிக்ஹ மாலை பாடல் கூறும் ஷியா முஸ்லிம்களின் வாழ்வியல் முறைகள் மற்றும் கடமைகள் **- P.Karthikeyan & Dr.B.Karthikeyan**	85
15	The Legacy of Nawab Rule In South Arcot District- A Study **- Mr.J.Pushparaj & Dr.B.Hameed Basha**	89
16	Muslims Cultural And Educational Development In Tamil Nadu **- R. Poorana Chandra & Dr.G.Kasthuri Thilagan**	92
17	Wakf Administration in Tamil Nadu with Special Reference to MSS Wakf Board College **- Mr. A Habibullah & Dr.A.Akbar Hussain**	96
18	கரூர் பள்ளப்பட்டி இஸ்லாமியர்களின் தனித்தன்மை – ஓர் ஆய்வு **- முனைவர் அ.அக்பர் உசேன்**	105
19	செய்னம்பு நாச்சியார் மான்மியத்தில் திராவிட மானிடவியற் கூறுகள் **- முனைவர் ச.அ.சையத் அகமது பிரோக**	110
20	இந்திய சுதந்திர போராட்டத்தில் ஜமால் முகமது கல்லூரி நிறுவனர்களின் பங்களிப்பு **- முனைவர் மௌ.முகமது தாஜ்தீன்**	117
21	பஞ்சிக்கொட்டி என்கிற பஞ்சின இஸ்லாமியர்கள் - ஓர் ஆய்வு **- முனைவர் அ.அக்பர் உசேன் & திரு. ரா.விக்னேஷ்குமார்**	122
22	ஆய்வு நோக்கில் இஸ்லாமிய சிறுகதையியல் கோட்பாடு **- திரு.நி.அமிருதீன் & முனைவர் க.சாகுல் அமீது**	126
23	தமிழக வரலாற்றில் இசுலாம் **- முனைவர் இரா.பிரகதாம்பாள்**	135
24	தமிழக வரலாற்று ஆவணங்களில் இசுலாமியரும் கொடையும் **- முனைவர் இரா.சந்தானம்**	141
25	தமிழ் நாடக இலக்கியத்திற்கு முஸ்லிம்களின் பங்களிப்பு **- முனைவர் சை.ஆசிக் ஹமீது**	150
26	தமிழகத்திற்கு முஸ்லிம்களின் வருகையும் சீறாப்புராணமும் **- D. சங்கீதா**	158
27	நாகையந்தாதி பாடல் கூறும் வாழ்வியல் முறைகள் - ஓர் ஆய்வு **- கே.வீரா & முனைவர் B. கார்த்திகேயன்**	169
28	அண்ணல் நபி பெருமானார் பிள்ளைத் தமிழ் இலக்கியத்தில் பெண்ணியம் **- முனைவர் எஸ்.புனிதா**	174
29	முஸ்லிம் பெரியார்கள் நால்வரின் வரலாற்றுப் பதிவுகள் **- ச. அப்துல் ஹக்கீம்**	179
30	புதினங்களினூடாகப் புலப்படும் இசுலாமியர் திருமணச் சடங்குகள்	186

JARJ Jamal Academic Research Journal-an Interdisciplinary ISSN(P): 0973-0303
S. A. FIROZ, JARJ-Vol-3-1-May-2022:110-116 ISSN(O): 2582-5941

Dravidian Anthropological Elements in Seinanbu Nachiyar Maanmiyam

செய்னம்பு நாச்சியார் மான்மியத்தில் திராவிட மானிடவியற் கூறுகள்

Dr. S.A.SYED AHMED FIROZ
Assistant Professor of Tamil,Jamal Mohamed College (Autonomous)
Tiruchirappalli – 620 020. India.

Abstract:

Abdul Khader Levvai was a Tamil Poet lived in Srilanka. He wrote many books. Seinanbu Naachiyar Maanmiyam book is one among them. Customs followed by muslims living in Eastern Province of Srilanka are elaborated in this book. This book was written in Tamil Traditional Poetry style. Totally 153 Stanzas are there. It is Classified in two major parts. The relationship of Marriage Should be truthful. But the Selfish people turned it to be trade. The customs followed by the people had an anthropological impact. Dravidian Anthropology is research work done by a renowed Tamil Anthropologist S.Bhakthvatsala Bharathi. This Research Article identifies the Dravidian Anthropological Elements in Seinanbu Nachiyar maanmiyam.

Key Words : Seinanbu Nachiyar Maanmiyam, Kavinar Abdul Khader Levvai,Dravidian Anthropology,Cultural Generality

ஆய்வுச் சுருக்கம்

கவிஞர் அப்துல் காதர் லெவ்வை அவர்கள் எழுதிய ஒரு சிற்றிலக்கியம் செய்னம்பு நாச்சியார் மான்மியம் என்ற நூலாகும். இந்நூலில் வெளிப்படும் திராவிட மானிடவியற் கூறுகளை இக்கட்டுரை தொகுத்துக் காண முனைகிறது.

திறவுச் சொற்கள்

- செய்னம்பு நாச்சியார் மான்மியம்
- கவிஞர் அப்துல் காதர் லெவ்வை
- திராவிட மானிடவியல்
- பண்பாட்டுப் பொதுமை

கவிஞர் அப்துல்காதர் லெவ்வை (1913-1984) இருபதாம் நூற்றாண்டின் எழுத்து முன்னோடி கவிஞர்களுள் ஒருவர். பன்னி ஆசிரியராகப் பணியாற்றிய இவர் செய்னம்பு நாச்சியார் மான்மியம், ஸஹ் சரிதம், இறைநேச நாயகம், மெய்நெறி, இக்பால் இதயம் உள்ளிட்ட நூற்களின் ஆசிரியர். உமர்கய்யாம் பாடல்களை ருபாய்யாத் என்னும் பெயரில் தமிழாக்கம் செய்துள்ளார். இலங்கை சாஹித்திய மண்டலப் பரிசை இந்நூல் பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது. இவர் எழுதியுள்ள செய்னம்பு நாச்சியார் மான்மியம் என்ற நூல் அருகியும் ஆசாரங்களை வலைப்படுத்துகிறது. இது இரு பகுதிகளைக் கொண்டதாக விளங்குகிறது. மனித வாழ்க்கையில் வெளியும் சடங்குகள் மானிடவியல் ஆய்விற்குச் சிறந்த தரவுகளாக அமைவது குறிப்பிடத்தக்கது.

ஆய்வுச் சிக்கல்

ஒரு நாட்டில் தோன்றும் இலக்கியம் பிற நாடுகளில் வாழும் மக்களின் பண்பாட்டைப் பிரதிபலிக்குமா என்ற சிக்கலை மையமாகக் கொண்டு இந்த ஆய்வு நிகழ்த்தப்பெற்றுள்ளது.

ஆய்வு முறையியல்

பகுப்பாய்வு, தொகுப்பு முறை ஆய்வு, விளக்கமுறை ஆய்வு ஆகியன அடிப்படை முறையியலாகவும் மானிடவியல் நோக்கு சிறப்பு நிலை ஆய்வுமுறைமையாகவும் பின்பற்றப்பட்டுள்ளது.

செய்னம்பு நாச்சியார் மான்மியம்

மணம் சகிகாண் படலம் தொடங்கி நாச்சி அறிவு பெற்ற படலம் வரையிலான முதற்பகுதியில் 16 படலங்களும் 153 பாடல்களும் இடம்பெற்றுள்ளன. காட்டாறு பாவா படலம் தொடங்கி பள்ளிவாசற் படலம் முடிய உள்ள இரண்டாம் பகுதியில் 8 படலங்களும் 120 பாடல்களும் இடம்பெற்றுள்ளன. மரபுக் கவிதையில் அமைந்துள்ள இந்நூல் இலங்கை கிழக்கு மாகாண முஸ்லிம் மொழி வழக்கைப் பெற்று விளங்குகிறது. வட்டார வழக்குச் சொற்களை அனைவரும் எளிதில் புரிந்து கொள்ள உதவும் பொருட்டு வழக்குச் சொல் விளக்கத்தை நூலின் இறுதியில் நூலாசிரியர் தந்துள்ளார்.

மான்மியம் என்றவுடன் அனைவரின் நினைவுக்கும் வருவது கவிமணி தேசிக விநாயகம் பிள்ளையவர்கள் இயற்றிய நாஞ்சில் நாட்டு மருமக்கள் வழி மான்மியம் என்ற நூலாகும். மருமக்கள் தாயம் என்ற சமூக அமைப்புமுறை மீதான சாடலை முன்வைத்த இந்நூலே பிள்ளை சேர நாட்டில் சீர்திருத்த மேலியக்கம் வடிவம் கொள்ள வழிவகுத்தது[1] என கவாநிதி சு.வித்தியானந்தன் அவர்கள் சுட்டிக்காட்டுகிறார். உலகைப் பார்த்துச் சிரித்து மகிழவும் பிரச்சினைகளைத் தூர நின்று நோக்கவும் அங்கத வெளிப்பாடு உதவுகிறது. சிரிப்புடன் சிந்தனையைச் சேர்ப்பது இந்நூலின் தனிச்சிறப்பாக அமைந்துள்ளது. வழக்கிழந்த நம்பிக்கைகள், சடங்குகள், நல முறைகளின் பொருந்தாமையை இந்நூல் பெருமளவில் கலனப்படுத்துகிறது.

திராவிட மானிடவியல்

திராவிடம் என்பது மரபினம் ஆகும். இந்தியத் துணைகண்டத்தின் தொன்மையான இனமாக இது விளங்குகிறது. மக்கள், பிரதேசம், மொழி ஆகியவற்றைக் குறிக்கும் இச்சொல் சமூகப் பண்பாட்டின் அமைப்புனமாகும். வரலாற்று மொழியியல் என்ற கருத்திற்கு அப்பால் இனம், சமூகம், பண்பாடு ஆகிய தளங்களில் திராவிடம் எனும் கருத்தினம் மிகவும் பொருந்துகிறது. திராவிட மொழியியல் என்ற ஆய்விற்கு செக்கோஸ்லோவேகிய அறிஞர் கமில் சுவலபில் மிகச்சிறந்த முன்னோடியாக விளங்குகிறார். சமூகம், உறவுமுறை, திருமணம், விழாக்கள், சமயம், தொன்மங்கள் ஆகியன மானிட வியல் ஆய்வில் முதன்மை பெறுகின்றன. பக்தவத்சல பாரதி எழுதியுள்ள திராவிட மானிடவியல் என்ற நூலே இந்த ஆய்விற்குத் துணைமை ஆதாரமாக அமைகின்றது.

சடங்கியல்

பருவ வயதைக்கூட அடையாத பாத்துமா என்ற சிறுமிக்கும் அகமது என்ற இளைஞருக்கும் நடை பெறும் திருமண நிகழ்வில் இடம்பெறும் சடங்குகளின் தொகுப்பை செய்னம்பு நாச்சியார் மான்மியம் என்ற நூலின் முதற்பகுதி விளக்குகிறது. இந்தப் பகுதியில் ஒவ்வொரு படலத்திலும் ஒவ்வொரு வகையான சடங்குகள் பற்றிய செய்திகள் இடம்பெற்றுள்ளன. தம் வாழ்வியலிற்கான பாதுகாப்புக் கவசமாக சடங்குகளை ஆதிகால மனிதர்கள் கருதினார்கள். அவை வல்லாண்மையின் குறியீடுகளாக மாறி உண்மை வாழ்வைக் கேள்விக்குட்படுத்தும் போக்குகளை இந்நூல் ஆவணப்படுத்துகிறது.

செப்பு அனுப்புதல்

திருமணப் பேச்சு தொடங்குவதற்கு முன்னர் மணமகள் வீட்டார் சார்பாக மணமகன் வீட்டார்க்கு பெரிய செப்பு ஒன்றை அனுப்புவார்கள். மாப்பலகாரம் செய்து செப்புக்குள் நிரப்பி மணமகள் வீட்டுப் பெண்மணிகள் மணமகன் இல்லத்தில் சேர்க்க வேண்டும். செப்பின் அளவு அதனுள் இடம்பெறும் பலகாரங்களின் வகைகள் மற்றும் எண்ணிக்கைகள் அவரவர் பொருளாதார அந்தஸ்துக்கு ஏற்ற நிலையில் மாறும். பாத்துமாவின் அம்மா மரியம் பீவி கொடுத்து அனுப்பிய செப்பு தன் கண்ணியத்திற்கு இழுக்கு ஏற்படுத்திவிட்டதாக சீற்றம் அடைகிறார் மணமகன் அகமதுவின் அம்மா செய்னம்பு. இவருடைய பெயரில் தான் ஆசிரியர் இந்த இலக்கியத்தை இயற்றியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

முதன் முதல் வந்தது முணுமுணுக்காதே
இதெல்லாம் பெரியதால் எடுக்கப்படாது

பாட்டன் முட்டன் பழக்கிய வழக்கம்
வீட்டுக்கு வந்ததை விரும்புதல் வேண்டும்
பன்னிர் மாவிடம் பங்கு வைக்க விழு

என்ற காசிம் பாவாவின் கூற்றின் வாயிலாக மனைவி செய்னம்புவின் சினத்தைத் தணிப்பதோடு மட்டுமல்லாமல் செப்பு அறுப்பும் படலத்தின் இலக்குகளையும் கவிஞர் புலப்படுத்துகிறார். முன்னோர் காலப் பழக்கத்தை அடிப்படையாக வைத்து தற்காலத்தில் அந்தஸ்து பார்ப்பது விட்டொழிக்க வேண்டிய பண்பு என்பதோடு மங்கல நிகழ்வுகளில் வழங்கப்பெறும் சிற்றுணவுகள் குறிப்பிட்ட இல்லத்தார்க்கு மட்டும் உரியதாக ஆக்கிக் கொள்ளாமல் கற்றத்தார்க்கும் பங்கிடப்பட வேண்டும் என்றும் இங்க எடுத்துரைக்கப்படுகிறது.

மணம் பேசு படலம்

கற்றத்தார் முன்னிலையில் திருமண நிச்சிதார்த்த நிகழ்வில் பேசப்படும் கொடுக்கல் வாங்கல் பேசுகளும் இதில் புரோகிதர்களின் பங்களிப்பையும் மணம் பேசு படலத்தில் கவிஞர் கடிந்துரைக்கிறார். கைக்கூலி, சீதனம், ஆதனம், காணி, தென்னந்தோப்பு, வீடு, வளவு என் மணமகளின் தந்தையின் ஒட்டுமொத்த சொத்து சுகத்திலும் பங்கு கேட்டும் வியாபரப் பேச்சுவார்த்தை போன்றே நிச்சிதார்த்த நிகழ்வு நடைபெறுவதைக் கவிஞர் காட்சிப்படுத்துகிறார். தங்களுக்கு வேண்டப்பட்டவர்களுக்குச் சாதகமாக இடைத்தரகர்கள் செயல்படுவது போன்று,

பத்துக் கொடுத்தால், பதினாயிரம் வரும்
அல்லாஹ் தருவான்

என்ற ஆலிம் அவர்களின் கூற்று சமயப் புளிநத்தன்மையைக் கேள்விக்குட்படுத்துகிறது.

ஆண்டுக் கத்தம் ஆசார் வீட்டில்
அடுக்காய் வருமென் றவரே அறிவார்

என ஆலிமின் இயல்பு எடுத்துரைக்கப்படுகிறது. கத்தம் என்பது சமய நிகழ்வையும் அதனையொட்டிய விருந்து வைபவத்தையும் குறிக்கும். இஸ்லாமிய சமயத்தில் நல்ல நேரம் பார்க்கும் நடைமுறை சமய அடிப்படையிலான நடைமுறையாக இல்லாவிட்டாலும் வளர்பிறை பத்து கழிந்து வரும் வியாழன் நல்ல நாள் என குறித்துக் கொடுக்கும் தன்மை இங்கு குறிப்பிடத்தக்கது. மதம் சார்ந்த தாக்கங்களைவிட புனிசார்ந்த தாக்கங்கள் மிக வலிமையானவை என்று நூலாசிரியரே முன்னுரையில் குறிப்பிடுவது இங்கு நினைவுகூரந்தக்கது. பருவ வயதை எட்டாத பாத்துமாவை ஒரு வழியாகப் பேசி முடித்து காசிம் பாவா மற்றும் செய்னம்பு தம்பதியரின் மகன் அகமதுவிற்கு மணமுடித்து ஒன்றரை வருடம் கழித்து பாத்துமா பருவ மங்கை ஆகின்றாள். இல்லறம் கைக்கூட வேண்டிய நேரத்தில் ஆண்கள் பேசிமுடித்த கைக்கூலி பேரத்தில் தன் செல்வாக்கை நிலைநாட்ட முனைகிறார் செய்னம்பு. மணமக்கள் வாழ தாம் வாழ்ந்த வீட்டைத் துறக்கின்றனர் பாத்துமாவின் பெற்றோர் இசுமான் கண்டு, மரியம் பீவி ஆகியோர். பிசின்றி காவியையும் விடாப்பிடியாக வீட்டையும் பெற்றதோடு திருப்தி கொள்ளாமல் ஒட்டுமொத்த சொத்தையும் கையாடல் செய்ய திட்டமிடுகிறார் செய்னம்பு. இல்லற வாழ்க்கைத் தொடங்கி சூழந்தைப் பேற்றிற்குப் பிறகே பேசிய சீதனத்தை வழங்குதல் மர் மரபு என இசுமான் கண்டு பேசியதை அலட்சியப்படுத்தி 'எழுதித் தந்தான் இருந்து வாழ' என்று மகனின் மனதில் பிரிவினைத் தூபத்தைத் தூவுகிறார். தாய் சொல்லைத் தட்டாத மகன் அகமது மனைவியைப் பிரிய துணிகிறார். நிச்சிதார்த்தத்தை வியாபார பேரத்தன்மையோடு முன்னின்று நடத்திய சமய நிறுவனமே மணவிலக்கையும் முறைப்படி நடத்திவைக்கிறது. எல்லாம் முடிந்தபின் பாத்துமா ஒரு குழந்தைக்குத் தாயாகிறார். கைக்கூலி என்ற சமுதாய அவலத்திற்குக் காரணமாக இருப்பது ஆணாதிக்கமா பெண்ணாதிக்கமா என்பதை இப்பிரதி விவாதத்திற்கு உட்படுத்துகிறது. இஸ்லாமிய சமய நடைமுறைகளுக்கு முற்றிலும் விரோதமான போக்கு சமுதாயத்தில் எங்கனம் புரையோடியுள்ளது என்பதை இந்நூல் ஆவணப்படுத்துகிறது. திருமணத்திற்கு முன் மணமக்களின் சம்மதம் கேலை என்ற நிபந்தனை இங்கு காற்றில் பறக்கவிடப்படுகிறது.

விருந்தோம்பல் பண்பாடு

உளவு நாகரிகம் ஓர் இனத்தின் முக்கியமான கலாச்சார அடையாளங்களில் ஒன்றாகும். தமிழர் உளவு என்ற மானிடவியல் நூலை பக்தவத்சல பாரதி அவர்கள் தொகுத்துள்ளார். இலங்கை கிழக்கு மாகாண தமிழ் மொழி

போல் இசுலாமியர்களின் உணவியல் தனித்துவங்களைச் செய்னம்பு நாச்சியார் மான்மியம் என்ற நூல் பெரிதளவில் அடையாளப்படுத்துகிறது. உணவு என்பது வயிற்றுப்பசியைப் போக்கும் இரணம் என்பதைவிட அது ஓர் அந்தஸ்தின் அடையாளம் என வடிவம் கொள்கிறபோது அது விமரிசனத்திற்கு ஆளாகிறது. உண்ணுங்கள் பருகுங்கள் வீண் விரயம் செய்யாதீர்கள் என்று திருக்குர்ஆன் வழிகாட்டுகிறது. திருமணச் சடங்குகளில் அளிவதற்கும் பலகாரத் தட்டுகளின் எண்ணிக்கை மண வீட்டின் பொருளாதார செல்வாக்கை உலகுக்கு எடுத்துக்காட்டும். குர்ஆன் நெறியில் எளிமை, வீண் விரயம் மறுப்பு ஆகியன எடுத்துரைக்கிறபோது மண்சார்ந்த அடையாளங்களை மறுக்கும் தூய்மைவாதப் போக்கு எனச் காட்டப்படுகிறது.

மாப்பலகாரம், அரிமா ரொட்டி, கோழிக்கறி, தயிறு சீனி, வெற்றிலைப் பாக்கு நிச்சியதார்த்த விருந்தோம்பலில் இடம்பெறும் உணவு வகைகளாக இந்நூல் இயம்புகிறது. பால், பழம், வெற்றிலை புதுமணத் தம்பதிகளுக்கு ஊட்டப்படும் நிலை காணப்படுகிறது. முட்டைப் பொரியல், முழுக் கோழிகறி, பல்கலைப் பண்டம் ஆகிய மாமியார் வீட்டில் புதுமாப்பிள்ளைக்குப் பரிமாறப்படும் உணவுகளாக விளங்குகின்றன. சம்பந்தி வாதேபில் எற்பட்ட தடுமாற்றத்தில் சீற்றம் கொண்ட செய்னம்புவின் கோபத்தை ஆற்றுப்படுத்த மணமகன் வீட்டுத் தண்டமாக இருபது கோழி அப்பம் செய்து அனுப்பப்படுகிறது. சமயப் பாடசாலைகளில் கல்வி பயிலும் மாணவர்கள் திருக்குர்ஆனின் ஒவ்வொரு பாகத்தையும் ஓதத் தொடங்கும் முன்னர் ஆசிரியருக்கு பாக்கு, வெற்றிலை, பழம், பணம் ஆகியன வழங்கும் வழக்கம் சட்டிக்காட்டப்படுகிறது. அச்சப் பலகாரம் ஹஜ்ஜுப் பெருநாளின் அடையாளமாக விவரிக்கப்படுகிறது. பதினைந்து கடாரம் பாந்து நிறையும் ஊர்க் கந்தூரி நிகழ்வும் முக்கியமானது. ஓதல் இறைவேட்டலைத் தொடர்ந்து சோற்றைப் பங்கு வைக்கும் முறை

பாதீடு, உண்டாட்டு, கொசடை [5]

என்ற புறத்தினைக் கோட் பாட்டை நினைவுபடுத்துகிறது.

சமயக் கல்வி

ஆணுக்கும் பெண்ணுக்கும் கல்வி கட்டாயம் என்று வலியுறுத்துகிறார் நபிகள் நாயகம். கல்வி இந்த சமுதாயத்தின் தொலைந்து போன சொத்து அது எங்கு கிடைத்தாலும் அள்ளிக் கொள்ளுங்கள் என்றும் இறைத்தூர் போதிக்கின்றார். சமயம், உலகியல் எனக் கல்வியை இசுலாம் நெறி பாகுபடுத்திப் பார்க்கவில்லை என்பதை சீனா சென்றேனும் சீரானக் கல்வியைப் பெறுக என்ற பொன்மொழி உணர்த்துகிறது. எதோ ஒரு புலர்ந்த அடையாளமாக சீனா குறிப்பிடப்படவில்லை. அப்போது சீனா நாடு காகிதத்தின் பயன்பாட்டை உணரத் தொடங்கியிருந்தது என்பது குறிப்பிடத்தக்கது. காகிதம் என்ற சொல்லின் வேர்ச்சொல் அறபி மொழிக்குரியது என்பது வியப்பிற்குரியது. நாலாம் வகுப்பு நான்கு மாதம் ஓதற் பள்ளியில் ஒரு மாதம் என இளம் காளையர் அகமதுவின் கல்விந்நருநி பகடி செய்யப்படுகிறது. ஓதற் பள்ளி என்பது சமயக் கல்வி நிறுவனத்தைக் குறிக்கிறது.

ஆறுவயதில் ஆலிமிடமே
ஓதப் போனான் ஓதி முடித்தான்
சுமான் இஸ்லாம் எல்லாம் படித்தான்
எட்டு வயதில் இரண்டாம் வகுப்பில்
தமிழும் படித்தான் தத்தையும் பார்த்தான்
போதும் படிப்பு புள்ளை படித்தது
ஆளும் பெரியதாய் ஆகி விட்டதால்
வீட்டிலே நிறுத்தினார்; விட்டில் ஆனான் [6]

எனக் காலம் நீரானப் பெண் கல்வியைப் பாத்துமாவின் வாழ்க்கை வழியே கவிஞர் விளக்குகிறார். ஓலைக்கூரை, மண் தரை என்ற கட்டிட அமைப்பு பலகை, அச்சு உள்ளிட்ட கருவிகள் குற்றியில் போடல், கட்டி வைத்தல், பிரம்பு போன்ற தண்டனைகள் என சமயக் கல்வி நிறுவனப் போக்ககாக அருகிவரும் ஆசாரங்கள் பகுதி இரண்டின் ஓதுற பள்ளிப் படலம் மூலம் ஆசிரியர் எடுத்துரைக்கிறார். இதே பகுதியில் பெண்களுக்கு சமய விழிப்புணர்வை எடுத்துரைக்கும் வகையில் ஒழுங்கு செய்யப்படும் அரங்கு குறித்து நோன்பில் வாதே சொல்லும் படலம்

எடுத்துக்கூறுகிறது. முறை சார்ந்த கல்வியிலிருந்துப் பெண்களைத் தடுத்து வைத்துவிட்டு குடும்பப் பெண்களைச் சமயக் கூட்டங்களுக்கு வரவழைத்து மார்க்கக் கல்வி கொஞ்சம் கேளிக்கைகள் மிச்சம் என்ற நிலையை வளர்த்துவிடும் முன்பாட்டை நூலாசிரியர் சாடத் தவறவில்லை.

பெயர்கள்

தனி மனித அடையாளமாக மட்டுமின்றி மொழி, பண்பாடு, புவிசார்ந்த குறியீடாகவும் ஆட்பெயர்கள் விளங்குகின்றன. தமிழ் மொழிச்சூழல் தமிழ்கூறும் நல்லுலகின் பொதுமைப் பண்பாக உள்ள நிலையில் வடமொழி அறமி, ஆங்கிலம் சார்ந்த சொற்களில் பெயர்கள் கொண்டு இலங்குவது சமூக உறவுகளில் அன்னியத் தன்மை உண்டாக்குவதை மறுக்கவியலாது. ஆனால் சாதாரண மக்கள் தங்களுக்கான பெயர்களில் மண் சார்ந்த அடையாளங்களைத் தகவமைப்பதில் தாராளத் தன்மை காட்டுவதை சாவர் கமீது, சக்கிரிக் காக்கா, உதுமான் தம்பி, உங்க சாச்சா, வெள்ளத்தம்பி, வேங்க மரைக்கார், சிவத்த மாமி, பொன்னி நாச்சி, போடியார் சாச்சி, முக்காட்டுக் காரி, செம்மம்பு நாச்சி, காக்கா ஆதம், இசுமான் கண்டு, காசிம் பாவா, முகிதீன் காக்கா, சின்னத் தம்பி, சீனி முகம்மது, காட்டாறு பாவா, பதினெட்டு மரைக்கார், சீனிகண்டு மரைக்கார், சீப் மரைக்கார், பூக்கண்டு மரைக்கார், கள்ளாடி ஆலிம், களிக்கம்பு ஆலிம், காட்டார் லெவ்வை, கருவாட்டு லெவ்வை, கோட்டார் லெவ்வை, மூத்தார் ஹாஜி, மூக்குத்தி ஹாஜி, மாங்காட்டு ஹாஜி, மரம் வெட்டி வாவா, மருதோன்றி நானா, மேலோட்டிக் காக்கா ஆகிய பெயர்கள் உணர்த்துகின்றன. தொழில், தோற்றம், மரபு, உறவு ஆகியன பெயர்களில் தாக்கம் புரிவதைக் காணமுடிகிறது. இப்பெயர்கள் வழியாக எந்தவகையான ஏற்றத் தாழ்வுகளும் கற்பிக்கப்படவில்லை என்பதும் உணரத்தக்கது.

விழாக் கோலங்கள்

பண்பாட்டுக் கோலத்தை வரையறை செய்வதில் விழாக் கோலங்கள் மிகவும் முக்கியத்துவம் பெற்றுள்ளன. சமய நிலைகளைத் தாண்டி பொருளாதாரக் கவனங்களை விழாக்கள் பெற்று விளங்குவதை மறுக்க இயலாது. மணவிழா பேச்சுவார்த்தையின் முதல் படியாக மௌலூது என்ற நிகழ்வு முக்கியமானது. இறைத்தூதர் மீதான ஆசிமொழிகளைப் பாடல்களாக இசைக்கப்பெறும் நிகழ்வு எனப் பொது நிலையில் மௌலூது பரிந்து கொள்ளப்பட்டாலும் அதன் மூடாக வெளிப்படும் விருந்தோம்பல் வைபவம் புரோகித் தன்மையின் வெளிப்பாடாகவே அறியப்படுகிறது. விருந்தோம்பல் செய்ய பணவசதி உடையவர் மட்டுமே இந்த நிகழ்வை ஒழுங்காற்ற இயலும் என்பதிலிருந்தான் இருப்பவன் இல்லாதவன் என்ற பாகுபாடு தொடங்கும் புள்ளியாக மாறுகிறது. மஞ்சள் துண்டு, மருதோன்றிக் கிண்ணம், காகடன் கைப்பெட்டி, குரவைக்கூத்து, குடைபிடித்தல், மேளதாளம் பறை, பொட்டாக்கு ஆகியன மருதோன்றி எடுத்துப்போதல் சடங்கின் கூறுகளாகும். மங்களநீர், காவின் புத்தகம், கல்யாணப் புத்தகம், சலாம் கூறுதல், மாமனாரின் படிகால் இருந்துரிமை ஆகியன தாலி கட்டும் படலத்தின் அங்கங்களாக விளங்குகின்றன. பைத்து, பட்டாக, மச்சினன் மச்சான் கால் கழுவுதல் திருமணத்திற்கு முன் கைக்கூலி அன்பளிப்புகளை உறுதிப்படுத்துதல் தன்மைகள் விழாக்கால போக்கில் நடைபெறுவது கவனத்திற்குரியது.

"வண்ணான் மறித்தான் வண்ணப்பரிசு கேட்டு"

என்னும் தொடர் சமய நல்லிணக்க மதிப்பியலைச் சுட்டுகிறது. மாப்பிள்ளைக்கு மச்சினன் காவல் என்ற நிலை மாமன் மச்சான் உறவின் சிறப்பியல்பை நினைவுகூர்கிறது. மட்டக்களப்பில் மருத நிலப் பண்பாட்டின் தாக்கம் அதிகம் என்ற ஆசிரியரின் கருத்து மேற்கூறிய செய்திகளுடன் ஒப்பிடத்தக்கது. முகூர்த்த மௌலூது, சீரியல் செட்டு, துஆ, ஒற்றை சகன் சாப்பாடு, ஜரிகை கவனு அணிந்து குதிரை ஊர்வலம் என சன்னத்துக் கலியாணம் வருணிக்கப்படுகிறது. மஞ்சலாட்டம், களிக்கம் படித்தல், கப்பல் இழுத்தல், புலவர் பாட்டு, கீதாப் பிரசங்கம், பக்கீர் தகரா, அண்ணாவியாரின் அம்மானை, காசிம் படைப்போர், முகைதீன் மாலை இலக்கியங்களின் காப்புக் கவிதை தோத்திரக் கவிகளாக பாடும் தன்மை ஹஜ்ஜுப் பெருநாளின் வெளிப்பாடுகளாக விரித்துரைக்கப்படுகிறது. வெளிநூர் பயணக்காரர்கள் ஊர் திரும்புதல், இல்லப் பராமரிப்புகள், சுன்னத்து வைபவங்கள் என ஹஜ்ஜு மதம் கல்யாண மதமாக வருணிக்கப்படுகிறது. காட்டாறு பாவா படலம், கருமாரிப் படலம் ஆகிய பகுதிகள் சமுதாயத்தில் புரையோடியுள்ள புரோகிதத்தின் கூறுகளை விளக்குகிறது.

வட்டார சமூகங்களின் உறவுமுறைகள் அனைத்தும் பொது மூலத்தில் இருந்து தோன்றி வளர்ந்தவை என்பதனால் தான் தமிழகத்தின் பல பகுதிகளில் உள்ள நடைமுறைகள் கிழக்கு இலங்கையில் வெளிப்படுவதைக் காணமுடிகிறது. தொல் திராவிடத்தின் குடிவழி என்ற ட்ரவுட்மன் என்பவரின் கருதுகோள்[8] கவனிக்கத்தக்கதாகும். சிங்களர்கள் வினங்களாலும் அவர்கள் திராவிட உறவுமுறையைக் கொண்டிருப்பவர்கள் என்ற கருத்தும் இங்கு நினைக்கத்தக்கது. இந்து, முஸ்லிம், பௌத்தர் என்ற பாகுபாடு இல்லாமல் இலங்கையில் வாழும் அனைவரும் பண்பாட்டாலும் சமூக அமைப்பாலும் தென்னிந்திய முறையைப் பின்பற்றுகின்றனர் என இலங்கை வரலாறு என்றும் தம் நூலில் காட்ரிங்டன்[9] கூறுவதைப் பக்தவத்சல பாரதி நினைவுகூர்கிறார். சிங்கள மக்களின் திருமண முறைகள், உறவுமுறைச் சொற்கள், மணக்கொடை, குடும்ப அமைப்பு, சொத்துரிமை ஆகியன அனைத்திலும் திராவிடத் தாக்கம் மலிந்திருப்பதை நூர் யால்மன் என்ற மானிடவியலாளர் பதிவு செய்கிறார். இலங்கையில் வாழும் சிங்களர் மேற்கு வங்கம், ஒடிசா ஆகிய பகுதிகளோடு பூர்வ இனத் தொடர்பு கொண்டவர்கள். இலங்கையை நோக்கிய அவர்களுடைய இடப்பெயர்வு நிலவழியில் தமிழகம் ஊடாக தலைமுறைகள் தாண்டி நிகழ்ந்ததனால் தமிழர் பண்பாட்டின் ஊடாட்டங்கள் இலங்கையில் இனம், மொழி, சமயம் எல்லைகளைத் தாண்டிப் பரவலாக நிலைபெற்றுள்ளது. பிராமணர்கள், முஸ்லிம்கள், பௌத்தர்கள் அனைவரிடம் தென்னிந்திய உறவுத் தாக்கம் திருமண முறைகளில் வெளிப்படுகின்றன[10] என்ற கருத்தும் இங்கு கவனிக்கத்தக்கது.

திராவிட நாகரிகம் வேளாண் அடிப்படை சார்ந்தது. நிலம், நீர் என்ற ஆதாரங்கள் கைவிட்டுப் போய்விடக்கூடாது என்ற அக்கறையே திருமண உறவுகளைக் கட்டமைத்தது, விவசாயத்தில் பயிர் நட்டால் மகசூல் கிடைக்கும் என்பது போன்று இறந்தவரைப் புதைத்தால் வம்சம் தழைக்கும் என்ற கருத்துரு வேளாண்மைச் சமூக மரபைக் கட்டமைத்தது[11].

இந்திய மட்டுமன்றி தமிழகமும் கிராமங்களில்தான் வாழ்கின்றது. ஒவ்வொரு கிராமமும் நாட்டின் அலகுகளாக பொருளாதாரத் தற்சார்பும் தன்னிறைவும் கொண்டு விளங்குகின்றன. கிராமங்களைக் குட்டிக் குடியரசுகள்[12] என்கிறார் நூலாசிரியர். திருவிழாக்கள் மூலம் கிராம மக்களின் கூட்டுமனம் ஒருங்கிணைக்கப்பட்டு நெருக்கடிகள் தீர்க்கப்படுகின்றன. கூட்டுமனத்தை வலுவாகப் புதுப்பிக்கும் ஊடகமாகத் திருவிழாக்கள் விளங்குவதாக லெவிஸ்ட்ராஸ் கூறுவது நினைவுகூரத்தக்கது[13] உயர்வு – தாழ்வு, உள்ளே – வெளியே, நாடு - காடு, அதிகாரமுடையவர் – அதிகாரமற்றவர், என்ற எதிரினைகள் இருபெரும் போராண்மைகளை முன்னிறுத்தி உருவாக்கும் தர்க்க உறவே ஆண்பெண் தர்க்கமாக உருமாறுகிறது. இரவும் இல்லாத பகலும் இல்லாத ஒரு வேளையில் தான் கொல்லப்பட வேண்டும் என இரணியன் வரம் பெறுகிறார். சூரியன் சாய்ந்து பகல் மறைந்து இரவு தொடங்கும் கணநேரத்தில் இரணியன் கொல்லப்படுகிறார். இந்த நேரமே இரணிய வேளை என்றழைக்கப்படுகிறது. இந்த அசாதாரணக் காலத்தை மீவியல்பு காலம் என்கின்றனர். இந்த வேளையில் உணவு உண்ணக்கூடாது என்ற நம்பிக்கையும் மக்களிடையே உண்டு.

தொகுப்புரை

- இலங்கையில் வாழும் சிங்களர்கள் தொல்திராவிட குடிவழியினர் என்று நிரூபிக்கப்படுகிற நிலையில் அங்கு வாழும் தமிழைத் தாய்மொழியாகக் கொண்ட இசுலாமியர் தொல்திராவிடர் என்பதற்கு மேலதிக சான்றுகள் தேவையில்லை.
- செய்னம்பு நாச்சியார் மான்மியத்தில் வெளிப்படும் உறவுமுறை, மணக்கொடை, குடும்ப அமைப்பு, சொத்துரிமை ஆகிய விடயங்களில் திராவிட மானிடவியற் கூறுகள் மலிந்திருப்பதைச் சான்றுகள் வழியே அறியலாம்.
- வேளாண்மை தொல் திராவிடர் மரபுத் தொழில் திருமண உறவை இதன் மீதே கட்டமைக்கும் நிலையில் காணி, தோப்பு, வளவு சீதனப் பொருளாகப் பார்க்கும் நிலை கவனத்திற்குரியன.
- இசுலாமியர் இறந்தால் புதைக்கின்றனர்.

- 500 குடிகள் கொண்ட தன்னிறைவு கிராமத்தையும் மக்களின் கூட்டுமன வெளிப்பாட்டையும் பள்ளிவாசல் படம் பிடித்துக்காட்டுகிறது.
- ஆண்கள் மட்டுமே பேசி இறுதி செய்த திருமண உறவை தன் ஆதிக்க வல்லாண்மையால் முறியடிக்கிறாள் செல்லம்பு. இங்கு தோற்றது மணவுறவன்று. ஆண் ஆதிக்க மனநிலை. செல்லம்புவின் வெற்றியில் அவளது கணவர் காசிம் பாவாவின் மறைவு கணக்கிடுத்தப்படுகிறது.
- சூரியன் உதயமாகத் தொடங்கி முழுமையாக உதயம் ஆகும் வரையிலான நேரம், சூரியன் உச்சியில் உள்ள நேரம், சூரியன் மறையத் தொடங்கி முழுவதுமாக மறையும் வரையிலான நேரம் ஆகியன தொழுகை நடத்தக்கூடாத நேரம் என்ற கருத்தில் இரண்டு வேளை சிந்தனையுடன் ஒப்பிடத்தக்கது.

முடிவுரை

தொகுப்புரையில் ஆய்வுக் கட்டுரையில் கண்டெடுக்கப்பட்ட மெய்மைகள் தொகுத்துரைக்கப்பட்டுள்ளன. சிலசிறு ஆய்வுகளின் வழியே பெரும்பெரிய கருத்தியல்களை முன்வைப்பது ஆய்வு முறைமையன்று என்பதை கட்டுரையாளர் உணர்ந்துள்ளார். இலக்கியப் பிரதிகளை மட்டுமே மூலமாக கொள்ளாமல் மக்கள் வழக்காறுகளை களப்பணி வழி கண்டடைவதன் மூலம் இங்கு கூறப்பட்டுள்ள ஆய்வு முடிவுகள் இன்றும் வலுவாக நிறுவ இயலும்.

அடிக்குறிப்புகள்

1. கவிஞர் அப்துல் காதர் லெப்பை, (1967), செய்னம்பு நாச்சியார் மான்மியம் (அணிந்துரை), மணிக்குரல் பதிப்பகம், கல்முனை, இலங்கை
2. மேலது, ப.5
3. மேலது, ப.7
4. மேலது, ப.1
5. முனைவர் எ.வே.சுப்பிரமணியன் (உ.ஆ.), (1993), தொல்காப்பியம், ப.376, மணிவாசகர் பதிப்பகம், சென்னை
6. கவிஞர் அப்துல் காதர் லெவ்வை, (1967), செய்னம்பு நாச்சியார் மான்மியம் ப.13, மணிக்குரல் பதிப்பகம், கல்முனை, இலங்கை
7. மேலது, ப.18
8. பக்தவத்சல பாரதி, (2018), திராவிட மானிடவியல், ப.103, காலச்சுவடு, பதிப்பகம், நாகர்கோவில்
9. மேலது, ப.104
10. மேலது, ப.108
11. மேலது, ப.143
12. மேலது, ப.149
13. மேலது, ப.159

Reference

1. Kavinar Abdul Khader Levvai, (1967) Seinanbu Nachiyar Maanmiyam (Preface), Manikural Publication, Gallinna, Srilanka
2. Ibid, 5
3. Ibid, 7
4. Ibid, 1
5. Su.Vc.Subramanian (Text Editor), (1993) Tholkappiyam, p.376, Manivasagar Publication, Chennai
6. Kavinar Abdul Khader Levvai, (1967) Seinanbu Nachiyar Maanmiyam, p.13, Manikural Publication, Galhinna, Srilanka
7. Ibid, 18
8. Bhakthavatsala Bharathi, (2018) Dravida Maanidaviyal, p.103, Kalachuvadu Publication, Nagar Kovil
9. Ibid, 104
10. Ibid, 108
11. Ibid, 143
12. Ibid, 149
13. Ibid, 159

Vol - 3 -1&1S May 2022
Online Version : www.jmcjarj.org

ISSN (P) : 0973-0303
ISSN (O) : 2582-5941

JARJ

Jamal Academic Research Journal : an Interdisciplinary



தமிழக முஸ்லிம்களின் வரலாறு, பண்பாடு, இலக்கியம்

HISTORY, CULTURE AND LITERATURE OF MUSLIMS OF TAMIL NADU

பதிப்பாசிரியர்கள்
பேரா. கா. முகமது இஸ்மாயில்
முனைவர் தா. உமர் சாதிக்
முனைவர் ச.அ.சையத் அகமது பிரோசு

ஜமால் முகமது கல்லூரி (தன்னாட்சி)
ஆற்றல் வளத்தனித்ததகுதியும்
தேசியத்தர மதிப்பீட்டு மூன்றாம் சுற்றில் 'A' தகுதிச் சான்றும்
DBT -நட்சத்திரக் கல்லூரித்திட்டம் மற்றும் DST-FIST நிதிநல்கையும் பெற்றது
(பாரதிதாசன் பல்கலைக்கழக இணைவு பெற்றது)
திருச்சிராப்பள்ளி- 620 020

Since 1951

தமிழக முஸ்லிம்களின் வரலாறு, பண்பாடு, இலக்கியம்

பதிப்பாசிரியர்கள்	:	பேரா.கா.முகமது இஸ்மாயில் முனைவர் தா.உமர் சாதிக் முனைவர் ச.அ.சையத் அகமது பிரோசு
வகை	:	பன்னாட்டுக் கருத்தரங்க ஆய்வுக் கட்டுரைகளின் தொகுப்பு (தமிழ் மற்றும் ஆங்கிலம்)
பக்கங்கள்	:	378
வெளியீடு	:	ஜமால் முகமது கல்லூரி (தன்னாட்சி), திருச்சிராப்பள்ளி - 620 020
அச்சாக்கம்	:	தி பிரிண்டிங் ஹவுஸ், திருச்சி -23

JARJ

Jamal Academic Research Journal : an Interdisciplinary
ISSN (P) : 0973-0303
ISSN (O) : 2582-5941
Online Version : www.jmcjarj.org

History, Culture and Literature of Muslims of Tamil Nadu

Guest Editors	:	**Prof.K.Mohamed Ismail** **Dr.T.Umar Sadiq** **Dr.S.A.Syed Ahmed Firoz**
Subject	:	**Research Articles of an International Seminar** **(English and Tamil)**
Pages	:	**378**
Publication	:	**Jamal Mohamed College (Autonomous)** **Tiruchirappalli - 620 020**
Printing	:	**The Printing House, Trichy -23**

நி. அமிருதீன்
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை,
ஜமால் முஹம்மது கல்லூரி (தன்னாட்சி),
திருச்சிராப்பள்ளி- 620 020.

14	∴பிக்ஹு மாலை பாடல் கூறும் ஷியா முஸ்லிம்களின் வாழ்வியல் முறைகள் மற்றும் கடமைகள் **- P.Karthikeyan & Dr.B.Karthikeyan**	**85**
15	The Legacy of Nawab Rule In South Arcot District- A Study **- Mr.J.Pushparaj & Dr.B.Hameed Basha**	**89**
16	Muslims Cultural And Educational Development In Tamil Nadu **- R. Poorana Chandra & Dr.G.Kasthuri Thilagan**	**92**
17	Wakf Administration in Tamil Nadu with Special Reference to MSS Wakf Board College **- Mr. A Habibullah & Dr.A.Akbar Hussain**	**96**
18	கரூர் பள்ளப்பட்டி இஸ்லாமியர்களின் தனித்தன்மை – ஓர் ஆய்வு **- முனைவர் அ.அக்பர் உசேன்**	**105**
19	செய்னம்பு நாச்சியார் மான்மியத்தில் திராவிட மானிடவியற் கூறுகள் **- முனைவர் ச.அ.சையத் அகமது பிரோசு**	**110**
20	இந்திய சுதந்திர போராட்டத்தில் ஜமால் முகமது கல்லூரி நிறுவனர்களின் பங்களிப்பு **- முனைவர் மௌ.முகமது தாஜ்தீன்**	**117**
21	பஞ்சிக்கொட்டி என்கிற பஞ்சின இஸ்லாமியர்கள் - ஓர் ஆய்வு **- முனைவர் அ.அக்பர் உசேன் & திரு. ரா.விக்னேஷ்குமார்**	**122**
22	ஆய்வு நோக்கில் இஸ்லாமிய சிறுகதையியல் கோட்பாடு **- திரு.நி.அமிருதீன் & முனைவர் சு.சாகுல் அமீது**	**126**
23	தமிழக வரலாற்றில் இசுலாம் **- முனைவர் இரா.பிரகதாம்பாள்**	**135**
24	தமிழக வரலாற்று ஆவணங்களில் இசுலாமியரும் கொடையும் **- முனைவர் இரா.சந்தானம்**	**141**
25	தமிழ் நாடக இலக்கியத்திற்கு முஸ்லிம்களின் பங்களிப்பு **- முனைவர் சை.ஆசிக் ஹமீது**	**150**
26	தமிழகத்திற்கு முஸ்லிம்களின் வருகையும் சீறாப்புராணமும் **- D. சங்கீதா**	**158**
27	நாகையந்தாதி பாடல் கூறும் வாழ்வியல் முறைகள் - ஓர் ஆய்வு **- கே.வீரா & முனைவர் B. கார்த்திகேயன்**	**169**
28	அண்ணல் நபி பெருமானார் பிள்ளைத் தமிழ் இலக்கியத்தில் பெண்ணியம் **- முனைவர் எஸ்.புனிதா**	**174**
29	முஸ்லிம் பெரியார்கள் நால்வரின் வரலாற்றுப் பதிவுகள் **- ச. அப்துல் ஹக்கீம்**	**179**
30	புதினங்களினூடாகப் புலப்படும் இசுலாமியர் திருமணச் சடங்குகள்	**186**

JARJ Jamal Academic Research Journal-an Interdisciplinary
N.Amirudeen et al, JARJ-Vol-3-1-May-2022:126-134
ISSN(P): 0973-0303
ISSN(O): 2582-5941

ஆய்வு நோக்கில் இஸ்லாமிய சிறுகதையியல் கோட்பாடு

Theroy of Islamic Short Story: A Research Study

N.Amirudeen[1], Dr. S. Shahul Hameed[1]

[1]*Assistant Professor PG and Research Department of Tamil, Jamal Momamed College (Autonomous) Tiruchirappalli – 620 020. India*

Abstract

Islamic Short Story theory is About Short Stories on Social Ideas Social Problems, Soultions and Islamic Values. This Article Examines the above Hypothesis . The Following sub head lines are discussed in the Article such as the Nostalgia of the mature virgins, kindness, the unchanging affection of the step mother, the remarriage of the brides maides, the femininity, the burden of the family, the poverty, things found out, the oppression of workers, poverty and motherhood. Each short story is briefly reviewed taking into account the total page number of the article.

Keywords : Islam, Short Story, Dowry, Rice, Marriage, Nostalgia, Poverty, Maturity, Theory, groom, Goat, Work, Motherhood and Feminism.

ஆய்வுச்சுருக்கம்

இஸ்லாமிய சிறுகதையியல் கோட்பாடு என்பது இஸ்லாமியச் சிறுகதைகளில் சமூகச் சிந்தனைகளும், சமூகச் சிக்கல்களும், தீர்வுகளும், இஸ்லாமிய விழுமியங்களும் நிறைந்திருக்கின்றன என்பதாகும். இக்கோட்பாட்டையே கருதுகோளாகக் கொண்டு இக்கட்டுரை ஆய்வு செய்யப்பட்டுள்ளது. முதிர் கன்னிகளின் ஏக்கம், நற்குணம், மாற்றாந்தாயின் மாறாத பாசம், கைம்பெண் மறுமணம், பெண்ணுரிமை, குடும்ப பாரம், வறுமை, கண்டெடுத்த பொருள், தொழிலாளர்கள் மீதான அடக்குமுறை, வறுமை மற்றும் தாய்மை ஆகியவற்றை உட்தலைப்புகளாகக் கொண்டு ஆராயப்பட்டுள்ளது. கட்டுரையின் பக்க எண்ணிக்கையைக் கணக்கில் கொண்டு ஒவ்வொரு சிறுகதையும் சுருக்கமாக ஆய்வு செய்யப்பட்டுள்ளது.

ஆய்வுக் களம்

இஸ்லாமிய இலக்கியக் கழகத்தால் வெளியிடப்பட்ட இஸ்லாமியச் சிறுகதைகள் எனும் தொகுப்பில் இடம்பெற்ற ஜே.எம்.சாலி எழுதிய நெருஞ்சிப்பூ , ஷேக்கோ எழுதிய மாடிவீட்டு மாப்பிள்ளை, கருணா மணாளன் எழுதிய மௌனத்தின் நாவுகள், ஏ.ஏ.ரஷீத் எழுதிய உபகாரம், வி.நூர்.முகமது எழுதிய சம்மதமா?, சி.ஜே.ஷாஜஹான் எழுதிய பரீதா வேலைக்குப் போகிறாள், ஆளூர் ஜலால் எழுதிய நாவூரம்மா, ஆர்னிகா நாசர் எழுதிய கண்டெடுத்த பொருள், இருகூரான் எழுதிய சோறு மற்றும் தூயவன் எழுதிய மடி நனைந்தது ஆகிய பத்து சிறுகதைகள் இந்த ஆய்வுக்காக எடுத்தாளப்பட்டுள்ளன.

கலைச்சொற்கள்: இஸ்லாம், சிறுகதை, வரதட்சணை, சோறு, திருமணம், சித்தி, ஏக்கம், வறுமை, முதிர்கன்னி, கோட்பாடு, மாப்பிள்ளை, ஆடு, வேலை, தாய்மை, பெண்ணுரிமை.

முன்னுரை

மணிக்கொடி என்ற இலக்கிய இதழின் மூலம் தமிழில் சிறுகதைகள் எழுச்சியுற்ற போதிலும் தமிழ் இஸ்லாமிய சமூகத்தில் சிறுகதை இலக்கியம் அப்போது தோன்றவில்லை. இஸ்லாமிய எழுத்தாளர்களும் பெரிதாக ஆர்வம் காட்டவில்லை. அதற்குக் காரணம் இலக்கியப் படைப்பானது இஸ்லாமியக் கோட்பாடுகளை மீறிச் சென்று விடுமோ என்ற குற்ற உணர்ச்சி இஸ்லாமிய சமூகத்திடம் மிகைத்து இருந்தது. ஒரு கோட்பாட்டை தவறாக எழுதுவது, தவறாக புரிந்து கொள்வது என்ற இரண்டு வகை நிலைப்பாடுகள் இருக்கும். இதில் இரண்டாவது வகை மக்களிடையே மிக வேகமாக பரவி விட வாய்ப்புண்டு. இப்படிப்பட்ட சூழலில் இஸ்லாமிய சிறுகதைகளை எழுதுவதற்காக துணிந்து, தொடர்ந்து எழுதி வந்தவர்களை நாம் பாராட்டியே ஆகவேண்டும்

முதிர்கன்னிகளின் ஏக்கம்

சில குடும்பங்களில் கன்னிப் பெண்களுக்கு திருமணம் தள்ளிப் போய்க் கொண்டே இருக்கும். அச்சூழலில் அப்பெண்களின் ஏக்கத்தை வார்த்தைகளில் வடிக்க இயலாது. இதற்கு சற்று அடுத்த நிலையாக ஒரு குடும்பத்தில்

இளையவளுக்கு திருமணம் நிகழ்ந்து, மூத்தவள் கன்னியாகவே இருந்து கொண்டு தங்கையின் திருமண வாழ்வை எக்கத்தோடு பார்க்கும் காட்சிகளையும், மூத்தவளின் இதயக் குமுறல்களையும், அவளின் நிறைவேறாத ஆசைகளையும் ஜே.எம்.சாலி தன்னுடைய நெருஞ்சிப்பூ என்ற சிறுகதையின் வாயிலாக நமக்கு உணர்த்துகிறார்.

ஜுபைதாவும், முனீராவும் இணைபிரியாத அக்கா தங்கைகளாக இருந்தார்கள். ஜுபைதாவை பெண் பார்க்க வந்த மாப்பிள்ளை, தங்கை முனீராவை பிடித்திருக்கிறது என்று சொல்ல... குடும்பத்தில் ஒரே குழப்பம். ஜுபைதாவே அனைவரையும் சமாதானம் செய்து, இது நல்ல சம்பந்தம். இதை விட்டால் நமக்குத்தான் நஷ்டம். எனவே தங்கையின் படிப்பு முடிந்தவுடன் அடுத்த வருடம் இத்திருமணத்தை நடத்தி விடலாம் என்றாள். தந்தையும் யோசித்துப் பார்த்தார். மூத்தவள் சொல்வது சரிதான். இவளுக்கும் ஒரு வரன் பார்த்து, இருவரின் திருமணத்தையும் ஒரே மேடையில் வைத்து விடவேண்டும் என்று முடிவு செய்து விட்டார்.

அதற்குப் பிறகு பல வரன்கள் வந்துவிட்டன. எதுவும் மூத்தவளுக்கு பொருந்தவில்லை. சுபைதாவுக்கு வயது ஏறிக் கொண்டே இருக்க, முனீராவுக்கு திருமணம் முடிந்துவிட்டது. அடுத்த பதினைந்தாவது நாளில் ஜுபைதாவுக்கு நல்ல வரன் ஒன்று வந்தது. திருமணம் நடக்க இருந்த கடைசி நேரத்தில் சீர்வரிசை போதவில்லை என்று மாப்பிள்ளை வீட்டார் திருமணத்தை நிறுத்தி விட்டுச் சென்று விட்டார்கள்... இதனால் ஜுபைதா திருமணத்தையே வெறுக்க ஆரம்பித்தாள். *இந்த வாழ்க்கையே வேண்டாம். காசு பணத்துக்கு சந்தைக் கடைச் சரக்கு மாதிரி விலைபேசி வாங்குகிறவர்களோடு மனங்கலந்து என்னால் வாழ முடியாது. உணர்ச்சியற்றவர்களோடு வாழ்வதைவிட ஊமைப் பெண்ணாகவே இருக்கிறேன். உங்கள் அமைதியைக் குலைக்கிற எந்த காரியத்திற்கும் நான் உடந்தையாக மாட்டேன்... அத்தா* [1] என்று ஜுபைதா கெஞ்சினாள். வரதட்சணையால் திருமண வாழ்க்கை மறுக்கப்படும் கன்னிப்பெண்களின் இதயக் குமுறலை எழுத்தாளர் இங்கு அழகாக வடித்துள்ளார்.

அடுத்த வருடத்திலேயே கர்ப்பம் தரித்த முனீரா பிரவசத்திற்காக தாய்வீடு வந்துவிடுகிறாள். அவளை தாயன்போடு கவனித்து வருகிறாள் ஜுபைதா. ஒருநாள் வீட்டில் யாரும் இல்லாத நேரத்தில் திடீரென்று வந்து நின்றவன் ஜுபைதாவின் பள்ளி பருவத்து நண்பன் சித்திக். வீட்டில் யாரும் இல்லையா? நான் பிறகு வருகிறேன் என்ற வெட்கம் கலந்த வார்த்தைகளை வீசி விட்டு புறப்பட்டு விட்டான்.

அவன் வந்து போனதிலிருந்து ஜுபைதாவின் உள்ளத்தில் ஒரு தென்றல் வீச ஆரம்பித்தது. ஏற்கனவே இருவரும் ஒருவரை ஒருவர் புரிந்து கொண்டிருந்தார்கள். படிப்பு முடிந்த கையோடு வெளிநாடு சென்று விட்டதால், கடந்த பத்தாண்டுகளாக அவனை பார்க்க முடியவில்லை. காலப்போக்கில் ஜுபைதாவும் அவனை மறந்திருந்தாள். இப்போது மீண்டும் அவன் வந்ததில் அவளுக்கு அவ்வளவு மகிழ்ச்சி. சித்திக் தனது வீட்டில் நான் ஜுபைதாவையே திருமணம் செய்து கொள்வேன். ஆனால் இம்முறை வெளிநாட்டுப் பயணம் சென்று முடித்து வந்த பிறகு தான் திருமணம் என்று உறுதிபடச் சொல்லி விட்டான். அதனால் தான் என்னவோ சித்திக் வீட்டுக்குச் சென்ற ஜுபைதாவை அவனுடைய தாயார் மருமகளாகவே பார்க்க ஆரம்பித்துவிட்டார். அவளை அழைத்து தலை நிறைய மல்லிகைப் பூவைச் சூட்டி நெஞ்சோடு அணைத்துக் கொண்டார். வெட்கத்தோடு வீடு திரும்பிய ஜுபைதா, அடுத்து அவன் எப்பொழுது இந்தியா திரும்புவான். எப்போது திருமண வாழ்க்கை துவங்கும் என்று சிந்திக்க ஆரம்பித்தாள்.

இரண்டு மூன்று மாதங்கள் கூட கழிந்திருக்காது. திடீரென்று ஒரு செய்தி. வெளிநாட்டில் நடந்த தொழிற்சாலை விபத்தில் சித்திக் மாண்டு போனான். செய்தியறிந்து அடியற்ற மரம் போல் வீழ்ந்தாள் ஜுபைதா. அதே நேரம் என்ன செய்கிறாய் ஜுபைதா? உன் தங்கைக்கு ஆண் குழந்தை பிறந்திருக்கிறது. சீக்கிரமாக வா.. என்ற சத்தத்தைக் கேட்டு, தனக்காக அழுவதா? இல்லை தங்கைக்காக சிரிப்பதா? என்று தெரியாமல் சோகங்களை மறைத்துக்கொண்டு புன்சிரிப்போடு குழந்தையைப் பார்க்க ஓடி வருகிறாள் முதிர்கன்னி ஜுபைதா. பல முதிர் கன்னிகளின் திருமணக் கனவு சிதைந்து போவதை ஜுபைதா என்ற பாத்திரத்தின் வழியே எழுத்தாளர் ஜே.எம்.சாலி நமக்கு விளக்கியுரைக்கிறார்.

நற்குணம்

ஷேக்கோ எனப்படும் எஸ்.எம்.எஸ் முகமது காசீம் எழுதிய மாடிவீட்டு மாப்பிள்ளை என்ற சிறுகதையில் ஏழை, பணக்காரன் என்ற முரண்பாடு உடைக்கப்படுகின்றது. எஸ்.எம்.புரவிஸன் ஸ்டோர் முதலாளி காஜா

ISSN(P): 0973-0303
ISSN(O): 2582-5941

மைதீனுக்கு ஒரு மகனும் ஒரு மகளும் இருந்தார்கள். மகன் பத்தாவது தேர்ச்சி பெறாததால் தந்தையுடன் கடையில் உதவியாக இருக்கின்றான். இக்கடையில் பத்து வருடங்களுக்கு முன்பு எடுபிடியாக வந்து சேர்ந்தவன் மன்சூர் அலி. கடுமையான உழைப்பால் முதலாளியிடம் நற்பெயர் பெற்றவன். மன்சூர் அலிக்கும் ஒரு தங்கை உண்டு.

ஒருநாள் மன்சூர் அலி நல்லெண்ணெய் டின்னை கொட்டிவிட எண்ணெய் முழுவதும் சாலையில் ஓடி வீணாகி விடுகின்றது. ஆனால் முதலாளி எதுவும் சொல்லவில்லை. சில வாரங்கள் கழித்து முதலாளி, டேய் மன்சூர் உங்க அம்மாவை நான் வரச் சொன்னதாகச் சொல்லு... என்கிறார். மன்சூருக்கு உள்ளத்தில் பயம் கொப்பளித்தது. தான் நல்லெண்ணையைக் கொட்டிய விஷயத்தை கூறி, எச்சரிப்பதற்காகத்தான் அழைக்கிறார் என்று எண்ணிக்கொண்டான்.

அடுத்த நாள் தன் அம்மாவை முதலாளி வீட்டுக்கு அனுப்பி வைத்தான். அங்கு முதலாளி, தன் மகளுக்கு மன்சூரைத் திருமணம் செய்து வைக்க விரும்புவதாகக் கூறுகிறார். *என்னத்தா திடீர்ன்டு சொல்றிய...? எனக்குக் கையும் ஓடலெ, காலும் ஓடலெ!.... எங்கிட்டயும் ஒரு குமரு வூட்லெ சமஞ்சு இருக்குது. அதெ ஒருத்தன் கையில புடிச்சுக் குடுத்துப்புட்டுத்தானேத்தா, இவனுக்கு ஆகவேண்டியதைப் பார்க்கணும்...*[2]. என்று மன்சூரின் அம்மா படபடவென பேசினாள்.

அதைக்கேட்ட முதலாளி, நீங்க சம்மதிச்சா என் மகள் ஜமீலாவை உங்கள் மகன் மன்சூருக்கு கட்டி கொடுக்கின்றேன். என் மகன் அன்வருக்கு உங்கள் மகள் மரியம் பீவியை கட்டி வைக்கிறேன். ஒரே நாளில் இருதிருமணங்களையும் வைத்துவிடலாம் என்று கூறினார். மன்சூர் அலியின் உறவினர்களிடம் கலந்து பேசி, அம்மா சம்மதம் தெரிவிக்கவே, ஒரு நல்ல நாளில் இரு திருமணங்களும் நிறைவேறின. ஏழை வீட்டு மகனுக்கு பணக்கார வீட்டு மகள் மனைவியாக அமைந்தாள். பணக்கார வீட்டு மகளுக்கு அந்த ஏழை வீட்டு மகன் கணவனாக ஆனான்.

இப்படிப்பட்ட திருமணங்கள் தொடர்ந்து நடந்தால் சமூகத்தில் ஏழை முதிர்கன்னிகள் இருக்க வாய்ப்பே இல்லை என்று ஊர் பேசிக்கொண்டிருந்தது என்று ஆசிரியர் கதையை முடிக்கின்றார். இக்கதையில் நற்குணத்தை மட்டுமே பார்த்து தன் பிள்ளைகளுக்கு திருமணத்தை முடிக்கும் ஒரு செல்வந்தரின் நல்ல உள்ளத்தையும், திருமணம் நிச்சயிக்கப்படும் பொழுது மண மக்களின் நற்குணத்தையே பிரதானமாக பார்க்கவேண்டும் என்ற இஸ்லாமியக் கருத்தையும் இக்கதை விளக்குகின்றது.

மாற்றாந்தாயின் மாறாத பாசம்

ஒருவனுடைய வாழ்க்கையில் நுழையும் இரண்டாவது மனைவி முதல் தாரத்துக் குழந்தைகளை துன்பப்படுத்தும் நிகழ்வுகள் ஆங்காங்கே நடந்து கொண்டுதான் இருக்கின்றன. பொதுவாக சித்தி என்றாலே கொடுமை என்பது எழுதப்படாத பொருளாக மாறிவிட்டது. இச்சூழலில் மாற்றாந்தாயின் மற்றொரு அன்பு முகத்தை மௌனத்தின் நாவுகள் என்ற கதை வழியாக கருணா மணாளன் நமக்கு அழகுபடச் சுட்டிக் காட்டுகிறார்.

ஃபரீத் மற்றும் ஹபீபா தம்பதியருக்கு ஷகீலா என்ற மூன்று வயதான பெண் குழந்தை ஒன்று இருந்தது. உடல்நலக்குறைவால் ஹபீபா இறந்துவிட்டாள். ஃபரீத் அதே பகுதியில் உள்ள விவாகரத்து பெற்ற, நசீர் என்ற பத்து வயது ஆண் குழந்தைக்குத் தாயான நஜ்மா என்ற பெண்ணை மறுமணம் செய்து கொள்ள விரும்பினான். ஆனால் உறவினர்கள் கடுமையாக இதனை எதிர்த்தனர். உன்னுடைய இறந்துபோன மனைவி ஹபீபா மிகவும் இரக்க குணம் வாய்ந்தவள். ஆனால் இந்த நஜ்மா அப்படியல்ல. இளம் வயதானாலும் வாய்த்துடுக்கு உடையவள். கறாராகப் பேசக்கூடியவள். இவளைத் திருமணம் செய்து கொண்டால் உன் மகள் ஷகீலாவை சரியாக பார்த்துக் கொள்ள மாட்டாள். எதையும் ஏற்றுக் கொள்ளாத ஃபரீத் ஆடம்பரமின்றி சிறிய கூட்டத்தைக் கூட்டி, நஜ்மாவை மறுமணம் புரிந்து கொண்டான்.

திருமண சடங்குகள் அனைத்தும் முடிந்து, அனைவரும் சென்ற பிறகு நஜ்மாவின் பையன் நசீரும், ஃபரீதின் குழந்தை ஷகீலாவும் மூலையில் உட்கார்ந்து விளையாடிக்கொண்டிருந்தார்கள். என் குழந்தையை நம் குழந்தையாக நீ கவனிக்க வேண்டும் என்ற உறுதிமொழியை ஃபரீத், நஜ்மாவிடமிருந்து பெற்றுக்கொண்டான். அதன்பின் நஜ்மாவின் குணம் முற்றிலும் மாறிப்போனது. தன் மகனை கவனிப்பதை விட்டுவிட்டு ஃபரீதின் மகளை மிக

ISSN(P): 0973-0303
ISSN(O): 2582-5941

அதிகமாக நேசித்து, கவனித்து வந்தாள். தின்பண்டம் கேட்டு அழும்பொழுது, நசீருக்கு கடலை பொட்டலமும், ஷகீலாவுக்கு பாதாம் அல்வாவும் வாங்கிக் கொடுத்தாள்.

ஒரு கட்டத்தில் சிறுவன் நசீர் மனம் வெதும்பிப் போனான். தன்னை தாயும் கவனிப்பதில்லை, தந்தையும் கவனிப்பதில்லை என்று வருந்தி வீட்டை விட்டு ஓடிப் போய் விட்டான். எங்கு தேடியும் நசீர் கிடைக்கவில்லை. இப்போதுதான் முதன்முறையாக நசீருக்காக நஜ்மா அழ ஆரம்பித்தாள். அழுதுகொண்டே பேச ஆரம்பித்தாள்.

சிறுவயது முதலே நான் என் சித்தியிடம் சொல்ல முடியாத கொடுமைகளை அனுபவித்து வளர்ந்து வந்தேன். அந்தச் சூழல் உங்கள் மகளுக்கு வந்து விடக் கூடாது என்பதற்காக என் மகன் என்றும் பார்க்காமல் நசீரை நான் கவனிக்காமல் விட்டுவிட்டேன்.. ஃபரீத் குறுக்கிட்டு, நீ கவலைப்படாதே.. அவனை எங்கிருந்தாலும் கண்டுபிடித்து கொண்டு வந்துவிடலாம் என்று கூற..... வேண்டாமென நஜ்மா தடுக்கிறாள்.

மேலும்... *ஆமாங்க நசீர் திரும்பி வந்துவிட்டால், அவன் மறுபடியும் எங்கே ஓடிப் போய் விடுவானோ என்ற தயக்கத்தில் நான் அவன் மீது பரிவு காட்டினால்..... இதுவரை நான் அவனுக்கு ஊட்டி வந்த பத்திய வாழ்க்கையைக் கெடுத்ததாக ஆகிவிடும். மேலும் அவன் மீது பரிவைக் கொட்டத் துவங்கினால் ஷகீலா மீது தான் வைத்திருக்கும் அன்பு எங்கே குறைந்துவிடுமோ என்ற கூச்சமும் ஏற்படுகிறது. தாய் இல்லாத ஒரு குழந்தை மீது நான் செலுத்திவரும் அன்பிற்கு பகரமாக இறைவன் அவன் மீது கருணை வைத்து, அவனை எங்கிருந்தாலும் வாழவைப்பான். என் இதயத்தில் இருந்து எழும் இந்த ஆசைகள் என் மகன் நசீரை வாழவைக்கும்* [3] எனக்கூறி நா தழுதழுக்கிறாள்.

மாற்றாந் தாயின் மாறாத உண்மையான அன்பை எழுத்தாளர் இக்கதையின் வழியாக உணர்ச்சி பொங்க உருவகித்துள்ளார்.

கைம்பெண் மறுமணம்

ஏ.ஏ. ரஷீத் எழுதிய உபகாரம் என்ற சிறுகதை இளம் விதவைக்கு வாழ்வு தருவதைப் பற்றி பேசுகிறது. தன் ஐந்து வயது மகன் நாசரையும் தன் மனைவி மைமூனாவையும் விட்டு விட்டு இறந்து போனார் வண்டிக்கார மைதீன். உடல் அடக்கம் செய்ய ஊர் கூடியது. இந்த அபலைப் பெண்ணுடைய வாழ்வாதாரம் குறித்து பல்வேறு குரல்கள் எழும்பின. இறுதியில் ராவுத்தர் *இதிலே பேசுற தென்னயிருக்கு அனாதைகளுக்கு ஆதரவு தர வேண்டியது நம்ம மார்க்க கடமையாச்சே .... நீங்களெல்லாம் சொல்றதுக்கு முன்னாடியே நான் ஒரு முடிவுக்கு வந்துட்டேன். இந்தப் பொண்ணும் அவளோட குழந்தையும் நம்ம குடும்பத்திலே ஒருவராக அவங்க ஆயுசு பரியந்தம் இருந்துட்டுப் போகட்டும்....*[4] என்று பேசவே, கூட்டம் அமைதியானது.

மூன்று நாட்களுக்குப் பிறகு தன் சொந்த வீட்டை விட்டுவிட்டு, தன் மகனுடன் ராவுத்தர் வீட்டில் அடைக்கலம் புகுந்தாள் மைமூனா. ராவுத்தர் அவளின் குடும்பத்திற்கு மிகப் பெரிய உபகாரம் செய்துவிட்டதாக மக்கள் பாராட்டினர். சில நாட்கள் நன்முறையில் நடத்தப்பட்டாள். நாட்கள் செல்லச் செல்ல சம்பளம் இல்லாத வேலைக்காரியாக மாறிப்போனாள். ராவுத்தரிடம் தன் கணவன் வாங்கிய ஆயிரம் ரூபாய் கடனுக்கு பகரமாக தன் வீட்டையும் எடுத்துக் கொண்டு தன்னையும் வேலைக்காரியாக மாற்றி விட்டிருக்கிறார் என்று பிறகு தான் தெரிந்தது,

இச்செய்தி எப்படியோ ராவுத்தரின் தங்கை மகனான இக்பாலுக்கு தெரிகிறது. சில நாட்களில் மீலாது விழா வரவே, அன்று காலை ஒரு பெண்மணியை விட்டு உறவினர் வீட்டுக்கு செல்வதாக கூறி மைமூனாவையும், அவளுடைய குழந்தையையும் தன் வீட்டுக்கு அழைத்து வருகிறான் இக்பால்.

மைமூனாவை காணாது ராவுத்தர் தேடிக் கொண்டிருக்கும் போது ஒருவர் வந்து, நீங்கள் இறந்து போன வண்டிக்கார மைதீன் இடம் வாங்கிய கடன் தொகையான ஆயிரம் ரூபாயை உங்களிடம் இக்பால் கொடுத்து வரச் சொன்னார் என்று ஆயிரம் ரூபாயை கொடுத்துவிட்டு, தயவு செய்து அவளுடைய வீட்டை அவளிடம் ஒப்படைத்து விடுங்கள் என்று கூறிச் சென்றார்.

அதே நேரத்தில் அந்த மீலாது விழாவில் ஓர் அறிவிப்பு வெளியாகிறது. இந்த மீலாது விழா இப்பொழுது மணமேடையாக மாறப்போகிறது. மணமகன் - அப்துல் கபூர், மணமகள் – மைமூனா. அனைவரும் இருந்து

இத்தம்பதிகளுக்காக பிரார்த்தனை செய்துவிட்டு செல்லுங்கள்... மைமூனா என்ற அந்த இளம் விதவைக்கு மறுமணம் நடக்கிறது. அதற்கு மிகவும் உதவியாக இருந்தவன் இக்பால். இதைக்கண்ட ராவுத்தர் மனம் மாறி, மணமக்களுக்கு ஆயிரத்து ஒரு ரூபாய் வழங்கிச் செல்கிறார். இக்கதையில் இளம் விதவைக்கு ஏற்படும் துன்பங்களையும், வேதனைகளையும் போக்குவதற்காக அவளுக்கு மறுமணம் அவசியம் என்பதை ஆசிரியர் அழகாக உணர்த்துகிறார்

பெண்ணுரிமை

திருப்பத்தூரை சேர்ந்த வி.நூர்.முகம்மது என்ற எழுத்தாளர் முதல் தமிழ் இஸ்லாமிய சிறுகதையை சம்மதமா என்ற தலைப்பில் 1945 இல் எழுதினார். இது பெண்ணுரிமையை வலியுறுத்தும் புரட்சிகரமான கதையாக அமைந்துவிட்டது. தஞ்சாவூரில் மிகவும் செல்வாக்கு பெற்ற காசிம் மரைக்காயரின் மகன் புக்காரி ராணுவத்தில் சேர்ந்து பெரிய பதவி பெற்று திரும்பி வருகிறான். திருச்சியின் பெரும் பணக்காரரும், முன்கோபியுமான அபூபக்கர் சாஹிபின் ஒரே செல்ல மகள் மும்தாஜ். ஊரிலேயே பெண்களில் மிக அதிகமாக எஸ்.எஸ்.எல்.சி வரை படித்த ஒரே பெண். புக்காரி - மும்தாஜ் திருமணம் பேசி முடிக்கப்படுகிறது.

புக்காரியின் நண்பர்கள் அவனை உசுப்பி விடுகின்றனர். ஒரு பெண்ணை பார்க்காமலேயே திருமணம் செய்வது எப்படி சரியாகும்? ஒருவேளை அவள் அழகில்லாமல் இருந்துவிட்டால், உன் வாழ்க்கை முழுவதும் நாசமாகிவிடும். எனவே எப்படியாவது திருமணத்திற்கு முன்பு அவளை ஒருமுறை நேரில் பார்த்துவிட்டு சம்மதம் சொல்லிவிடு. உனக்கு பிடிக்கவில்லை என்றால் மறுப்பு தெரிவித்து, திருமணத்தை நிறுத்தி விடு.... என்று தூபம் போட்டார்கள். நான் மணப்பெண்ணைப் பார்த்தே ஆகவேண்டும் என்று ஒற்றைக்காலில் நின்று அடம் பிடிக்க ஆரம்பித்தான் புக்காரி. முதலில் அதிர்ந்து போன தந்தை, மகனின் பிடிவாதக் குணத்தைக் கண்டு வேறு வழியில்லாமல் மாப்பிள்ளைத் தோழனான நண்பன் நசீரை திருச்சிக்குத் தூதுவராக அனுப்பி வைக்கிறார்.

நஜீர் கொண்டு வந்த செய்தியை கேட்டவுடன், அபூபக்கர் வானத்துக்கும் பூமிக்குமாய் குதித்தார். இப்படிப்பட்ட சம்பந்தமே வேண்டாம். இந்தத் திருமணத்தை உடனடியாக நிறுத்துங்கள் என்று கத்தி கூச்சலிட ஆரம்பித்தார். உள்ளே இருந்த மும்தாஜ் தந்தையை அழைத்து, மாப்பிள்ளை என்னைப் பார்ப்பது அகௌரவம் எனில், திருமணம் நின்று விடுவதும் கௌரவக் குறைச்சல் தானே? எனவே இத்திருமணம் நடைபெற ஏற்பாடு செய்யுங்கள் என்று கூறி விட்டாள். மாப்பிள்ளை, பெண்ணைப் பார்த்த அடுத்த நிமிடமே திருமணம் என்பதை இரு வீட்டாரும் ஒப்புக்கொண்டார்கள்.

அடுத்து பெண் பார்க்கும் படலம் தொடங்கியது. தேநீர் கொண்டு வந்து புக்காரிக்கு கொடுத்த மும்தாஜ், வினாடியில் வீட்டினுள் சென்று விட்டாள். புக்காரிக்கு மனம் நிறைந்து விட்டது. அடுத்த சில நிமிடங்களில் விவாக ஒப்பந்தம் செய்ய அனைவரும் தயாராகிக் கொண்டிருக்கும் நிலையில், வீட்டுக்குள்ளிருந்து கூச்சல் கேட்டது. மணமகள், மாப்பிள்ளையை வேண்டாம் என்று கூறிய செய்தி பிறகுதான் அனைவருக்கும் தெரிந்தது. பிள்ளர் மும்தாஜ் பேச ஆரம்பித்தாள். தந்தையே, நீங்கள் திடீரென்று ஏழையாக மாறிவிட்டாலும் இவர் என்னை வேண்டாம் என்று சொல்லி இருப்பார். துரதிஷ்டவசமாக நான் அழகற்று இருந்தாலும் இவர் என்னை வேண்டாம் என்று சொல்லி இருப்பார். இப்படிப்பட்டவர் எனக்கு வேண்டாம். திருமணத்திற்கு முன் மணமக்கள் இருவரிடமும் உண்மையாக சம்மதம் கேட்க இஸ்லாம் கட்டளையிடுகிறது.

ஆனால் சமூகம் மணமகனிடம் உண்மையாகவும் மணப்பெண்ணிடம் அர்த்தமற்ற கேலிச் சடங்காகவும் தானே.... சம்மதமா? என்ற கேள்வியைக் கேட்கிறது. *திருமணத்தை மறுப்பதற்கு மணப்பெண்ணாகிய எனக்கும் உரிமை இருக்கிறது என்பதை அந்த மடையர்களுக்குப் புரிய வைப்பதற்காகவே இந்தக் கூட்டத்தை நான் கூட்டினேன் ....*[5] என்று கூறியபடி மும்தாஜ் உள்ளே சென்று விட்டாள். இஸ்லாத்தில் பெண்ணடிமைத்தவம் இல்லை என்ற போதிலும், சில இஸ்லாமிய குடும்பங்களில் பெண்களுக்கான உரிமைகள் மறுக்கப்படுகிறது. அதில் முக்கியமான ஒன்று திருமண உரிமை. இச்சூழலில்தான் பெண்களுக்கும் திருமணத்தை மறுப்பதற்கு உரிமை உண்டு என்பதை இச்சிறுகதை ஆணித்தரமாக வலியுறுத்துகிறது.

ISSN(P): 0973-0303
ISSN(O): 2582-5941

குடும்ப பாரம்

சி.ஜே.ஷாஜஹான் எழுதிய பரீதா வேலைக்கு போகிறாள் என்ற சிறுகதையில் ஒரு பெண் குடும்ப பாரத்தைச் சுமப்பது குறித்து பேசப்படுகிறது. சாதாரண தையல்காரரான ரஹ்மானுக்கும், செல்வந்தரின் மகள் பரீதாவுக்கும் திருமணம் நடைபெறுகிறது. வீட்டோடு மாப்பிள்ளையாக இருக்க ரஹ்மான் மறுக்கவே இருவரும் தனிக்குடித்தனம் செல்கிறார்கள். காலச்சக்கரம் சுழல இரு பிள்ளைகள் பிறக்கிறார்கள். புதிதாக மெட்ராஸ்டெய்லர் வந்துவிடவே ரஹ்மானுக்கு வருமானம் குறைகிறது. பசியால் பட்டினியால் நால்வரும் வாடுகின்றனர்.

ஒரு கட்டத்தில் ரஹ்மானின் நண்பர் சுந்தரத்தின் தொழிற்சாலையில் வேலைக்குச் செல்ல பரீதா முடிவு செய்து கணவனின் அனுமதி பெறுகிறாள். கடைவீதிக்கு சென்ற கணவன் விபத்தில் சிக்கி பிணமாக வீடு திரும்புகிறான். போற்றுவோர் போற்ற, தூற்றுவோர் தூற்ற, தன் பிள்ளைகளைக் காப்பாற்ற வேண்டி வேலைக்கு கிளம்புகிறாள் பரீதா. இக்கதையில் பெண்களும் குடும்பப் பொறுப்பை சுமக்க முடியும் என்பதை ஆசிரியர் உறுதிபடக் கூறுகிறார்.

வறுமை

வறுமைக்கு பல உருவங்கள் இருப்பது போல் பல படித்தரங்கள் இருக்கின்றன. வறுமையில் இருப்பவன் தன்னை விட மிகவும் வறுமையில் இருப்பவனை இளக்காரமாக, கேவலமாக பார்க்கின்றான் என்பதை நாவூரும்மா என்ற கதை மூலமாக நமக்கு தோலுரித்து காட்டுகிறார் ஆளூர் ஜலால்.

அந்த வீட்டில் நாவூரும்மா, அவளுடைய அம்மா மற்று வறுமை குடியிருந்தது. 20 வயதான நாவூரும்மா ஒரு நாளைக்கு 50 பைசா, 60 பைசாவுக்கு பீடி சுற்றித் தருவாள். வாய்க்கும் வயிற்றுக்கும் போதாத காலத்தில் கல்யாணத்துக்கு எங்கே போவது....அந்தத் தெருவில் நடந்து முடிந்த ஒரு மிகப்பெரிய கல்யாணத்தை நாவூரும்மா அசை போட்டுக் கொண்டிருந்தாள். நாவூரும்மா..... நாவூரும்மா..... என்ற சத்தம் கேட்டு திரும்பிய பொழுது, மைதீன் காஜா நின்று கொண்டிருந்தான். ஒரு கையை லேசாக மடக்கி சாய்த்துக் கொண்டு, வாயின் ஓரத்தில் நீரை ஒழுக விட்டுக்கொண்டு, சொத்தையான கருத்த பாசியை பற்களில் படிய விட்டுக்கொண்டு அவன் சிரிப்பது ஒரு மாதிரியாக இருக்கும். பார்த்தால் சூட்டிப்பில்லாதவன் போல இருந்தாலும், தெருக்காரர்கள் சொல்லும் வேலையை சரியாகச் செய்து விடுவான்.

நாவூரும்மா மீது அவனுக்கு தனி இஷ்டம். அடிக்கடி அவள் வீட்டுத் திண்ணையில் வந்து படுத்துக் கொள்வான். பல வரன்கள் வந்து போய்விட அவளுக்கு மைதீன் காஜா மீது ஒரு விருப்பம். ஒருநாள் நாவூரும்மா தன் அம்மாவிடம் தைரியத்தைக் கூட்டிக்கொண்டு பேசினாள்..... எனக்கு செலவே இல்லாம மைதீன் காஜாவ கல்யாணம் பண்ணி விடுறியா.? இதைக் கேட்டவுடன் அம்மா பதறினாள். உனக்கு பைத்தியம் பிடிச்சு போச்சோ?. அந்தப் பையன் இனிமேல் இங்க வரப்படாது என கத்தினாள்..

அடக்கி வைத்த உணர்வுகளை கொட்ட ஆரம்பித்தாள் நாவூரும்மா. *ஊரிலே உள்ளவனுவ கெட்டிகிறதுக்கு பணம் கேக்குறானுவோ, தெருவுல போற எவனாவது கட்டிக்குவானாண்ணு பார்த்தேன்..... ஒருத்தன் வந்தான். அவனும் ரெண்டு பிள்ளைக்காரன். மைங்காஜாவையாவது கட்டிக்கலாமுன்னு கேட்டேன். அம்மாவும் கவுரவம் பாக்கறா* [6].....என்று புலம்பி விட்டு, பீடி அடுக்க ஆரம்பித்தாள். வறுமையில் வாடுபவர்கள் கூட தன்னைவிட தாழ்ந்த நிலையில் உள்ளவர்களை வெறுக்கிறார்கள் என்ற நிலையை நாவூரும்மாவின் அம்மா கதாபாத்திரத்தின் வழியே எழுத்தாளர் நமக்கு விளக்குகிறார்.

கண்டெடுத்த பொருள்

ஆர்னிகா நாசர் எழுதிய கண்டெடுத்த பொருள் என்ற சிறுகதை வாயிலாக ஒரு பொருள் கண்டெடுக்கப்பட்டால் இஸ்லாமிய சட்டப்படி என்ன செய்ய வேண்டும் என்பது விளக்கப்பட்டுள்ளது.

கடிகாரக் கடை வைத்திருக்கும் 45 வயது கமால் பாட்சாவுக்கு மனைவி, இரு குழந்தைகள். ஒரு நாள் கமாலின் தோட்டத்திற்குள் ஒரு ஆட்டுக்குட்டி நுழைந்துவிட, அதை விரட்டுகிறான் கமால். யாருடைய ஆடு வழி தவறி வந்து விட்டது என்று எண்ணி விசாரிக்கின்றான். ஆட்டு உரிமையாளர் கிடைக்கவில்லை. அப்போது கமாலின் மகன்... அப்பா இதை நாமே வைத்துக்கொள்வோம் என்று கூறுகிறான்... அதற்கு *ஜும்மா தொழுகைக்கு*

பின் என் வீட்டுத் தோட்டத்தில் ஒரு உயிருள்ள பொருளை கண்டெடுத்து இருக்கேன். அது தன்னுடைய பொருள்தான்றதுக்கான ஆதாரத்தை காட்டிட்டு பொருளை வாங்கிடலாம்னு அறிவிப்பு பண்றேன். ஆட்டுக்கு சொந்தக்காரன் கிடைச்சாலும் கிடைக்கலாம்...7.....என்றார் கமால். அப்போதும் உரிமையாளர் வரவில்லை என்றால்.....?.. இது மகனின் கேள்வி. அடுத்தடுத்து மேலும் இரண்டு ஆண்டுகள் காத்திருக்கலாம் அப்பொழுதும் உரிமையாளர் வரவில்லை என்று சொன்னால், நாம் வைத்துக் கொள்ளலாம் என்றார் கமால்.

கேபிள் டிவியில் விளம்பரம் கொடுத்து, பலரிடம் சொல்லி ஊருக்கே தெரிந்துவிட்டது கமாலிடம் ஆடு இருக்கிறது என்று. ஆனாலும் உரிமையாளர் வரவே இல்லை. மூன்று வருடம் கழிந்து விட்டது. இப்பொழுது அந்தக் குட்டிஆடு 18 கிலோ உடைய பெரிய ஆடாக வளர்ந்துவிட்டது. கமால் அதனை கண்ணும் கருத்துமாக வளர்த் வந்தான். உரிமையாளர் வராததால், பக்ரீத் அன்று தான் கண்டெடுத்த ஆட்டை குர்பானி கொடுத்தான் கமால் பாட்சா. கறித்துண்டுகளைச் சிறுசிறு பங்காகப் பிரித்து அக்கம்பக்கத்தில் உள்ள அனைவர் வீட்டுக்கும் கொடுத்தனுப்பினான். பக்கத்து வீட்டில் உள்ள அகமதுவும் அக்கறியை பெற்றுக்கொண்டான்.

பிறகு அகமது தன் மகனை அழைத்து, கமால் பாட்சா கண்டெடுத்த ஆட்டுக்குட்டி நம்முடையது என்றாள். மேலும்.... கமால் எப்ப பார்த்தாலும், நாம மார்க்கப்படி வாழணும்.. ஹதீஸ்ல இத சொல்றாங்க. அத சொல்றாங்க.. என்று சொல்லிக்கொண்டே இருப்பான்.. அவனை சோதனை செய்து பார்க்கவே, சந்தைக்குச் சென்று 500 ரூபாய்க்கு ஆட்டுக்குட்டியை வாங்கி அவன் தோட்டத்தில் யாருக்கும் தெரியாமல் விட்டு விட்டு வந்தேன். ஆனால் அவன் பேச்சில் மட்டுமல்ல, செயலிலும் வீரன் என்று நிரூபித்து, மூன்றாண்டுகள் பத்திரமாய் வளர்த்து வந்து இருக்கின்றான்... என்று கூறிக்கொண்டிருக்கும் போதே அகமதுவின் 10 வயது மகள் ஓடிவந்தாள்.

அப்பா இந்த 500 ரூபாய் நோட்டு கசங்கிய படி நம் வீட்டு வாசலில் கிடந்தது. என்ன செய்யலாம்? உரியவர்கள் வந்து பெற்றுச் செல்லும்படி அறிவிப்பு செய்யலாமா? என்று கேட்டாள். அதெல்லாம் கிடையாது கண்டெடுத்த பொருள் நமக்குத்தான் சொந்தம். நீ யார் கிட்டயும் சொல்லாதே... என்று அகமது மகளை விரட்டி விட்டான். சற்று நேரத்தில் நாலாவது வீட்டு சமியுல்லா தன் தொலைந்து போன 500 ரூபாய் நோட்டைத் தேடி வந்தார். ஆனால் அகமது தான் 500 ரூபாயை பார்க்கவே இல்லை என்று அவனையும் விரட்டிவிட்டார்.

அகமது முஸ்லிமாக பிறந்தவன். கமால் பாட்சாவோ மூமினாகவே (இஸ்லாமிய சட்டப்படி) வாழ்பவன். அல்லாஹ் மூமின்களை அதிகம் நேசிக்கிறான். அகமது கணக்கில் பத்து மடங்கு பாவத்தையும் கமால் கணக்கில் பத்து மடங்கு புண்ணியத்தையும் கூட்டி வைப்பான் என்றனர் வானவர்கள். பூமிக்கு புரியாத புதிர் மொழியில்..... என்று ஆசிரியர் கதையை முடிக்கிறார். இக்கதையில் கண்டெடுத்த பொருளை உரியவர்கள் வந்து பெற்றுக் கொள்ளும் வரை சுமார் மூன்று ஆண்டுகள் அதை பாதுகாக்க வேண்டும் என்ற இஸ்லாமிய சட்டத்தை ஆசிரியர் வெளிப்படுத்தியுள்ளார்.

தொழிலாளர்கள் மீதான அடக்குமுறை

இன்று உலகம் முழுவதிலும் உள்ள சிறியதும் பெரியதுமான பல தொழிற்சாலைகளில் தொழிலாளர்கள் அடக்குமுறைக்கு உள்ளாக்கப்பட்டு, அவர்களுக்கான உரிமைகள் மறுக்கப்படுகின்றன. அவர்கள் நசுக்கப் படுகிறார்கள். அவர்களின் உழைப்பு உறிஞ்சப்படுகிறது. என்பது நியாயமான உண்மையே. இருகூரான் எழுதிய சோறு என்ற சிறுகதை பதின்ம வயது இளைஞர்கள் தொழிலாளர்களாக மாற்றப்படுவதும், அவர்களுக்கு ஏற்ற உணவு தரப்படாத அவல நிலையையும், அவர்களுக்காகப் பரிந்து பேசக்கூடிய நபரைத் தண்டிக்கக் கூடிய முதலாளித்துவ சமூகத்தையும் குறித்து பேசுகிறது.

ஒரு மலை அடிவாரத்தில் தேயிலைத் தோட்ட தொழிலாளர்களுக்காக கம்பெனி சார்பில் மளிகைக் கடை ஒன்று வெள;ளைக்காரன் காலத்திலேயே ஆரம்பிக்கப்பட்டிருந்தது. அதை முதலாளி இபுராஹிம் கடந்த 30 ஆண்டுகளாக கான்ட்ராக்ட் எடுத்து நடத்தி வருகிறார். வெளியூர்களில் இருந்து வந்த பதினெட்டு வயதுக்குட்பட்ட 15 இளைஞர்கள் தொழிலாளர்களாக இங்கு தங்கி பணிபுரிந்து வருகின்றனர். அவர்களுக்கு சமையல் செய்வதற்காக மாசுத்தா என்கின்ற மகம்மது சுல்தான் என்ற முன்னாள் ராணுவ ஊழியர் இருக்கிறார். அவர் இங்கு வேலையில்

சேர்ந்து முப்பது ஆண்டுகள் ஓடிவிட்டன. அவர் ராணுவத்தில் ரொட்டி தான் சுட்டார்; என்றாலும், இந்த வயதிலும் அவரிடம் ஒரு ராணுவ மிடுக்கு இருக்கும்.

சென்ற பக்ரீத்துக்கு முதல் மாதம் தான் வேலைக்கு சேர்ந்தவன் சின்ன அத்துர்ரஹ்மான். பத்தாவதுக்கு மேல் படிக்கவைக்க முடியாத ஏழ்மையினால் அவனுடைய தாய் பல்லடத்தில் இருந்து அவனை இங்கே அனுப்பி விட்டாள். சின்னவனுக்கு எழுத்துக்கள் முத்து முத்தாக வருவதால், முதலாளி அவனை பேரேடு, சிட்டை, அடங்கல் எழுதப் பழகி விட்டார்.

மேலும் உனக்கு இப்பொழுது சம்பளம் மாதம் 30 ரூபாய். நீ நன்றாக கணக்கு வழக்குகளை பழகிய பிறகு மாதம் ஐம்பது ரூபாய் தருகிறேன் என்று வாக்குறுதி தந்தார் முதலாளி. ஆனால் நடந்ததோ வேற..... *மொத மாசமே பெருநாள் வந்துடுச்சே சின்னவா. அதுக்கு துணிமணி எடுத்ததற்கு உன் கணக்கிலேயே பத்துவளி வச்சா அந்தக் கடன் முடிய இனியும் ஆறேழு மாசம் ஆகும் அதனாலே சம்பளத்தை கூட்டிக்கிற சமாச்சாரம் அப்புறம் பார்த்துக்கிடலாம் பழையபடியே முப்பது வரவை என்று பேச்சு மாறிவிட்டார் ....*[8]. என்ற இவ்வார்த்தைகள் தொழிலாளர்களுக்கு ஆசை காட்டி மோசம் செய்யப்படுவதை உணர்த்துவதாக அமைகின்றது.

மாசுத்தா குருமா தாளித்தால், அந்த மலை முழுவதும் மணக்கும். அவ்வளவு கைப்பக்குவம் அவருக்கு... கடை பையன்களுக்கு எப்போதும் புளிச்சாறு, ஓலை கருவாட்டு என்று சாதாரண குழம்பு போட்டதனால், அவர்களுடைய நாக்கு செத்து விட்டது. ஆளாளுக்குக் கேட்க ஆரம்பித்தார்கள். மாசுத்தா எப்போ நெய்ச்சோறு போடுவீங்க?.... மாசுத்தாவுக்கு கடை பையன்கள் மீது அளவு கடந்த பாசம் இருந்தது.

இன்றைக்கு முதலாளியோ வெளியூர் போய் விட்டார். அவர் வருவதற்குள் பையன்களுக்கு நல்ல நெய்ச்சோறு செய்து போட்டு விட வேண்டும் என்று மாசுத்தாவின் மனம் துடித்தது. வேகமாகச் சென்று ஒரு கோழியை அடித்து மணக்க மணக்க நெய்ச்சோறு, குருமா தயார் செய்துவிட்டார். இரவு வரவேண்டிய முதலாளி போன காரியம் சீக்கிரமாக முடிந்து விட்டதால் மதியமே வந்து விட்டார். சுமையலறைப் பக்கம் வருவதற்கு முன்பே அவருக்கு குருமா வாசனை தூக்கியது. முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடிக்க ஆரம்பித்தது.....யாருடா இன்னிக்கு நெய்ச்சோறு வைக்கச் சொன்னது? சொல்லுங்கடா யார் சொன்னது? கத்தினார் முதலாளி. மாசுத்தா தைரியமாகச் சொன்னார். நான் தான் செய்தேன் பயலுகளுக்கு நல்ல சோறு குழம்பு போடவே இல்லை. அதனால தான் செஞ்சேன் என்றார்.

கடும் கோபம் கொண்ட முதலாளி இந்தக் கிழவனோட கணக்கை முடிச்சு இவன வீட்டுக்கு அனுப்பி வையுங்க. இவனை வேலைக்கு வச்சா என் சொத்தையெல்லாம் கரைச்சு விடுவான் என்று கத்திக் கொண்டே இருந்தார். *யார் கணக்கை எவன்டா தீர்க்கறது.?. நீ எழுதற கணக்கை நீயே தான் தீர்த்துக்கணும். கொண்டு போய் உன் கபரஸ்தான் லே போடுடா உன் பணத்தையும் காசையும். அவனவன் வரவையும், செலவையும் எங்கிருந்தோ ஒருத்தன் எழுதிக்கிட்டிருக்கான்னு யோசிக்காம, இந்த பசங்க வேர்வையைக் காசாக்கி நீ எழுதி வைக்கிறது அவ்வளவும் பாவத்தோட கணக்கு. இதைத் தீர்க்க வேண்டியது இங்க இல்லடா... அங்கே... அங்கே...*[9] என்று கத்திக் கொண்டே போனார் மாசுத்தா .... கடுமையாக உழைக்கும் தொழிலாளியின் இரத்தத்தைச் சுரண்டும் ஒவ்வொருவரும் நாளை இறைவனிடம் பதில் சொல்லியே ஆகவேண்டும் என்ற இஸ்லாமியக் கருத்தை எழுத்தாளர் இங்கு பதிவு செய்கிறார்..

தாய்மை

தூயவன் என்ற அக்பர் எழுதிய மடி நனைந்தது என்ற சிறுகதை தாய்மை குறித்து பேசுகிறது. நிறைமாத கர்ப்பிணியான ஆபிதா தன் கணவர் அன்வருடன் பிரசவத்திற்காக மருத்துவமனைக்கு செல்கிறாள். அங்கு குழந்தை பிறந்து இறந்து விடவே, சொல்ல முடியா துன்பத்துடன் மருத்துவமனையை விட்டு வெளியே வருகிறாள்.

வீட்டுக்கு வருவதற்காக பேருந்தில் பயணம் செய்யும் பொழுது எதிர்ப்புறத்தில் ஒரு அழகான குழந்தை ஒன்று தாயின் மடியில் விளையாடிக் கொண்டிருக்கிறது. அக்குழந்தையை அப்படியே அள்ளி எடுத்து அணைக்க அபிதாவின் தாய்மை துடிக்கிறது. ஒருகட்டத்தில் குழந்தையை கையில் வாங்குகிறாள் ஆபிதா. குடித்த பாலை அக்குழந்தை கக்குகிறது

அபிதாவின் மடி நனைகிறது. ஐயையோ உங்க புடவையெல்லாம் அசிங்கமாய்ட்டுதேம்மா எனப் பதறித் துடித்தாள் குழந்தையின் தாய். அசிங்கமா ? இல்லை. இது ஆனந்தம் எனக்கூறி கண்களை மூடிக்கொண்டாள் ஆபிதா. கரகரவென்று மடி நனைந்து கொண்டு வந்தது. அப்போது அதன் அபரிமிதமான வெப்பம் ஆபிதா புல்லரிக்க வைத்து கொண்டிருந்தது. மெய்மறந்த நிலை தாய்மை சுகம். அது இப்படி மடி நெனைக்கிற போதும் கிடைப்பதுண்டு என்ற உண்மை ஆபிதா வைப்போல் பெற்று பறிகொடுத்த அவர்களுக்குத்தான் தெரியும் .இல்லையா? [10] என்று கதை நிறைவடைகிறது. இக்கதையைப் படிப்பவர்கள் நிச்சயமாக கண்ணீர் சிந்துவர். அந்த அளவிற்கு வரிக்குவரி தாய்மை உணர்ச்சி பொங்கப் பொங்க கதையைப் படைத்திருக்கிறார் ஆசிரியர்.

முடிவுரை

தமிழ்ச் சிறுகதை உலகில் இஸ்லாமியச் சிறுகதைகள் ஒரு தனி இடத்தை பெற்றுள்ளன. இக்கதைகளில் இஸ்லாமிய விழுமியங்களையும், சமூக சிக்கல்களையும், அதற்கான தீர்வுகளையும் ஆங்காங்கே பதிவு செய்து, இஸ்லாமிய சிறுகதையியல் கோட்பாட்டை எழுத்தாளர்கள் பின்பற்றியிருப்பதை மேற்கண்ட பத்து சிறுகதைகளின் வாயிலாக இக்கட்டுரை ஆய்ந்து கூறியுள்ளது.

அடிக்குறிப்புகள்

01. கவிக்கோ அப்துல் ரகுமான் (முதன்மை பதிப்பாசிரியர்) (2007),
இஸ்லாமியச் சிறுகதைகள் ப.180, இஸ்லாமிய இலக்கியக் கழகம், சென்னை 2.
02. மேலது, ப.54
03. மேலது, ப.200
04. மேலது, ப.100
05. மேலது, ப.08
06. மேலது, ப.226
07. மேலது, ப.485
08. மேலது, ப.129
09. மேலது, ப.136
10. மேலது, ப.217

Reference :

1. Kaviko. Abdul Rahuman, Chief Editor (2007), Islamiya Sirukathaikal, P.180, Islamiya Ilakkiya Kalagam, Chennai – 02
2. Ibid. 54
3. Ibid. 200
4. Ibid. 100
5. Ibid. 08
6. Ibid. 226
7. Ibid. 485
8. Ibid. 129
9. Ibid. 136
10. Ibid. 217

ஜமால் முகமது கல்லூரி (தன்னாட்சி), திருச்சிராப்பள்ளி

சமூகத்தில் வாழும் அடித்தட்டு மக்கள் குறிப்பாக சிறுபான்மை இஸ்லாமிய சமுதாய மக்கள் பயன்பெறும் வகையில் ஹாஜி எம்.ஜமால் முஹம்மது சாஹிபு மற்றும் ஜனாப் என்.எம். காஜாமியான் ராவுத்தர் ஆகிய வள்ளல் பெருமக்களால் 1951 -ஆம் ஆண்டு தோற்றுவிக்கப்பட்ட அரசு உதவி பெறும் தன்னாட்சிக் கல்லூரி ஆகும். இது பாரதிதாசன் பல்கலைக்கழகத்துடன் இணைவு பெற்றது. இக்கல்லூரியில் 25 இளநிலை மற்றும் 20 முதுநிலைப் பட்டப்படிப்புகள் உள்ளன. 19 துறைகள் ஆய்வுத் துறைகளாகத் திகழ்கின்றன. கல்லூரியில் பயிலும், மொத்த மாணவ, மாணவிகளின் எண்ணிக்கை சுமார் 12,000 ஆகும். மேலும், 145 அரசு ஊதியம் பெறும் பேராசிரியர்கள் உட்பட மொத்தம் 497 பேராசிரியர்கள் இக்கல்லூரியில் பணியாற்றி வருகிறார்கள். இக்கல்லூரி 1976 இல் வெள்ளி விழாவையும், 2001 இல் பொன் விழாவையும் 2011 இல் வைர விழாவையும் கொண்டாடி மகிழ்ந்தது. 2001 இல் NAAC குழுவால் ஐந்து நட்சத்திரத் தகுதி வழங்கப் பெற்றது. 2004-2005 கல்வியாண்டு முதல் தன்னாட்சிக் கல்லூரியாக விளங்குகின்றது. இக்கல்லூரி NAAC குழுவால் 2009 ஆம் ஆண்டிலும் மீண்டும் 2016 ஆம் ஆண்டிலும் 'A' தகுதிக் கல்லூரியாக அங்கிகரிக்கப் பெற்றது. 2011-2012 கல்வியாண்டு முதல் பல்கலைக்கழக மானியக் குழுவால் ஆற்றல்வளத் தனித்தகுதி பெற்ற கல்லூரியாக அங்கிகாரம் வழங்கப்பட்டுள்ளது. இந்திய அரசு மனிதவள மேம்பாட்டுத் துறையின் கல்லூரித் தரவரிசை பட்டியலில் இக்கல்லூரி 2020-21ஆம் ஆண்டில் இந்திய அளவில் 65ஆம் இடம் பெற்றது. இத்தகு சிறப்புகளைப் பெற்ற ஜமால் முகமது கல்லூரி சமூகத்திற்கு உயர்கல்வியை வழங்கும் தன்மையால் சிறந்த நிர்வாகிகளையும், கல்வியாளர்களையும், அறிவியலாளர்களையும், சமூக ஆர்வலர்களையும், அறிவு மற்றும் ஆளுமைத் திறன்மிக்கோரையும் கணினி வல்லுநர்களையும் உருவாக்கி வருகிறது.

முதுகலைத் தமிழாய்வுத்துறை

கல்லூரித் தொடங்கப் பெற்ற 1951 ஆம் ஆண்டு முதலே தமிழ்த்துறையும் இயங்கி வருகின்றது. 1979 ஆம் ஆண்டு முதுகலை வகுப்பும் 2003-2004 கல்வியாண்டில் ஆய்வுப் படிப்புகளும் தொடங்கப் பெற்று முதுகலைத் தமிழாய்வுத்துறையாக இத்துறை பரிணமித்து வருகிறது. இதுவரை 35 ஆய்வாளர்கள் முனைவர் பட்டத்தையும் 200 ஆய்வாளர்கள் ஆய்வியல் நிறைஞர் பட்டத்தையும் பெற்றுள்ளனர். இளநிலை தமிழிலக்கிய பட்ட வகுப்புகள் தன்னிதிப் பிரிவில் ஆண்கள் மற்றும் மகளிர் பிரிவில் இயங்கி வருவதும் குறிப்பிடத்தக்கது. அறக்கட்டளைப் பொழிவுகள், பல்கலைக்கழக மானியக்குழு உதவியுடன் நடைபெறும் சிறப்புப் பொழிவுகள் மற்றும் பன்னாட்டு அளவிலான தேசியக் கருத்தரங்குகள் மாணவர்களின் அறிவுப் பசியைப் போக்கும் வற்றாத ஊற்றுகளாக விளங்குகின்றன. இறையருட் கவிமணி கா.அப்துல் கபூர், பெரும்புலவர் டாக்டர் சி.நயினார் முகம்மது, முனைவர் பீ.மு.மன்சூர் போன்ற துறையின் முன்னோடிகள் வாயிலாக ஜமால் முகமது கல்லூரி முதுகலைத் தமிழாய்வுத்துறை பன்னாட்டு அளவிலான கவனத்தை ஈர்த்துள்ளது எனில் மிகையாகாது.

முதுகலை வரலாற்று ஆய்வுத்துறை

இஸ்லாமிய வரலாற்றுத்துறை 1951ஆம் ஆண்டு கல்லூரி தொடங்கிய ஆண்டு முதலே இயங்கத் தொடங்கியது. 1967ஆம் ஆண்டு அரசியல் மற்றும் பொது நிர்வாகத்துறை என்ற பெயரில் செயல்படத் தொடங்கி 1976 ஆம் ஆண்டு முதல் வரலாற்றுத்துறை என்ற பரிணாமத்தைப் பெற்றது. 2004 ஆம் ஆண்டு சுற்றுலா மற்றும் பயண மேலாண்மைஎன்ற வேலைவாய்ப்புப் படிப்பு பல்கலைக்கழக மானியக்குழு உதவியுடன் தொடங்கப்பட்டது. முதுகலை வரலாறு பட்டப்படிப்பு 2005 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது. ஆய்வியல் நிறைஞர் படிப்பு 2007ஆம் ஆண்டிலும் 2016-2017 கல்வி ஆண்டு முதல் முனைவர் பட்ட ஆய்வுத்துறையாகவும் இத்துறை பரிமளிக்கிறது.

இஸ்லாமிய தமிழ்ப் பண்பாட்டு ஆய்வு மையம்

தமிழக முஸ்லிம்களின் வரலாறு, பண்பாடு குறித்து ஆய்வு மேற்கொள்ளும் பொருட்டு ஜமால் முகமது கல்லூரியில் இஸ்லாமிய தமிழ்ப் பண்பாட்டு ஆய்வு மையம் என்னும் ஆய்வு இருக்கை 2017 டிசம்பர் மாதத்தில் தொடங்கப்பட்டது. தமிழ்நாடு அரசு அருங்காட்சியகத்துறையின் மேனாள் உதவி இயக்குநரும், தமிழக முஸ்லிம்கள் வரலாறு குறித்த ஆய்வாளருமான முனைவர் ஜெ.ராஜாமுகமது (புதுக்கோட்டை) இந்த ஆய்வு மைய இயக்குநராகப் பொறுப்பேற்றுள்ளார்.

Printed & Published by **Dr. S. Ismail Mohideen,** Principal, Jamal Mohamed College, (Autonomous) and published from Jamal Mohamed College, 7 Race Course Road, Tiruchirapalli-20. and Printed by Mrs. Zeenath Beevi at The Printing House, 6, Khajamalai Main Road, (Near Collectors Bungalow), Kajamalai, Tiruchirappalli - 620 023.
Editor-in-Chief : **Dr. S. Ismail Mohideen**

Vol - 3 - 1&1S May 2022
Online Version : www.jmcjarj.org

ISSN (P) : 0973-0303
ISSN (O) : 2582-5941

JARJ

Jamal Academic Research Journal : an Interdisciplinary



தமிழக முஸ்லிம்களின் வரலாறு, பண்பாடு, இலக்கியம்

HISTORY, CULTURE AND LITERATURE OF MUSLIMS OF TAMIL NADU

பதிப்பாசிரியர்கள்
பேரா. கா. முகமது இஸ்மாயில்
முனைவர் தா. உமர்பாதின்
முனைவர் ச.அ.சையத் அகமது பிரோஸ்

ஜமால் முகமது கல்லூரி (தன்னாட்சி)
ஆற்றல் வளத்தனித்தகுதியும்
தேசியத்தர மதிப்பீட்டு மூன்றாம் சுற்றில் 'A' தகுதிச் சான்றும்
DBT -நட்சத்திரக் கல்லூரித்திட்டம் மற்றும் DST-FIST நிதிநல்கையும் பெற்றது
பாரதிதாசன் பல்கலைக்கழக இணைவு பெற்றது)
திருச்சிராப்பள்ளி- 620 020

Since 1951

ஜமால் முகமது கல்லூரி (தன்னாட்சி), திருச்சிராப்பள்ளி

சமூகத்தில் வாழும் அடித்தட்டு மக்கள் குறிப்பாக சிறுபான்மை இஸ்லாமிய சமுதாய மக்கள் பயன்பெறும் வகையில் ஹாஜி எம்.ஜமால் முஹம்மது சாஹிபு மற்றும் ஜனாப் என்.எம். காஜாமியான் ராவுத்தர் ஆகிய வள்ளல் பெருமக்களால் 1951 -ஆம் ஆண்டு தோற்றுவிக்கப்பட்ட அரசு உதவி பெறும் தன்னாட்சிக் கல்லூரி ஆகும். இது பாரதிதாசன் பல்கலைக்கழகத்துடன் இணைவு பெற்றது. இக்கல்லூரியில் 25 இளநிலை மற்றும் 20 முதுநிலைப் பட்டப்படிப்புகள் உள்ளன. 19 துறைகள் ஆய்வுத் துறைகளாகத் திகழ்கின்றன. கல்லூரியில் பயிலும், மொத்த மாணவ, மாணவிகளின் எண்ணிக்கை சுமார் 12,000 ஆகும். மேலும், 145 அரசு ஊதியம் பெறும் பேராசிரியர்கள் உட்பட மொத்தம் 497 பேராசிரியர்கள் இக்கல்லூரியில் பணியாற்றி வருகிறார்கள். இக்கல்லூரி 1976 இல் வெள்ளி விழாவையும், 2001 இல் பொன் விழாவையும் 2011 இல் வைர விழாவையும் கொண்டாடி மகிழ்ந்தது. 2001 இல் NAAC குழுவால் ஐந்து நட்சத்திரத் தகுதி வழங்கப் பெற்றது. 2004-2005 கல்வியாண்டு முதல் தன்னாட்சிக் கல்லூரியாக விளங்குகின்றது. இக்கல்லூரி NAAC குழுவால் 2009 ஆம் ஆண்டிலும் மீண்டும் 2016 ஆம் ஆண்டிலும் 'A' தகுதிக் கல்லூரியாக அங்கிகரிக்கப் பெற்றது. 2011-2012 கல்வியாண்டு முதல் பல்கலைக்கழக மானியக் குழுவால் ஆற்றல்வளத் தனித்தகுதி பெற்ற கல்லூரியாக அங்கிகாரம் வழங்கப்பட்டுள்ளது. இந்திய அரசு மனிதவள மேம்பாட்டுத் துறையின் கல்லூரித் தரவரிசை பட்டியலில் இக்கல்லூரி 2020-21ஆம் ஆண்டில் இந்திய அளவில் 65ஆம் இடம் பெற்றது. இத்தகு சிறப்புகளைப் பெற்ற ஜமால் முகமது கல்லூரி சமூகத்திற்கு உயர்கல்வியை வழங்கும் தன்மையால் சிறந்த நிர்வாகிகளையும், கல்வியாளர்களையும், அறிவியலாளர்களையும், சமூக ஆர்வலர்களையும், அறிவு மற்றும் ஆளுமைத் திறன்மிக்கோரையும் கணினி வல்லுநர்களையும் உருவாக்கி வருகிறது.

முதுகலைத் தமிழாய்வுத்துறை

கல்லூரித் தொடங்கப் பெற்ற 1951 ஆம் ஆண்டு முதலே தமிழ்த்துறையும் இயங்கி வருகின்றது. 1979 ஆம் ஆண்டு முதுகலை வகுப்பும் 2003-2004 கல்வியாண்டில் ஆய்வுப் படிப்புகளும் தொடங்கப் பெற்று முதுகலைத் தமிழாய்வுத்துறையாக இத்துறை பரிணமித்து வருகிறது. இதுவரை 35 ஆய்வாளர்கள் முனைவர் பட்டத்தையும் 200 ஆய்வாளர்கள் ஆய்வியல் நிறைஞர் பட்டத்தையும் பெற்றுள்ளனர். இளநிலை தமிழிலக்கிய பட்ட வகுப்புகள் தன்னிதிப் பிரிவில் ஆண்கள் மற்றும் மகளிர் பிரிவில் இயங்கி வருவதும் குறிப்பிடத்தக்கது. அறக்கட்டளைப் பொழிவுகள், பல்கலைக்கழக மானியக்குழு உதவியுடன் நடைபெறும் சிறப்புப் பொழிவுகள் மற்றும் பன்னாட்டு அளவிலான தேசியக் கருத்தரங்குகள் மாணவர்களின் அறிவுப் பசியைப் போக்கும் வற்றாத ஊற்றுகளாக விளங்குகின்றன. இறையருட் கவிமணி கா.அப்துல் கபூர், பெரும்புலவர் டாக்டர் சி.நயினார் முகம்மது, முனைவர் பீ.மு.மன்சூர் போன்ற துறையின் முன்னோடிகள் வாயிலாக ஜமால் முகமது கல்லூரி முதுகலைத் தமிழாய்வுத்துறை பன்னாட்டு அளவிலான கவனத்தை ஈர்த்துள்ளது எனில் மிகையாகாது.

முதுகலை வரலாற்று ஆய்வுத்துறை

இஸ்லாமிய வரலாற்றுத்துறை 1951ஆம் ஆண்டு கல்லூரி தொடங்கிய ஆண்டு முதலே இயங்கத் தொடங்கியது. 1967ஆம் ஆண்டு அரசியல் மற்றும் பொது நிர்வாகத்துறை என்ற பெயரில் செயல்படத் தொடங்கி 1976 ஆம் ஆண்டு முதல் வரலாற்றுத்துறை என்ற பரிணாமத்தைப் பெற்றது. 2004 ஆம் ஆண்டு சுற்றுலா மற்றும் பயண மேலாண்மைஎன்ற வேலைவாய்ப்புப் படிப்பு பல்கலைக்கழக மானியக்குழு உதவியுடன் தொடங்கப்பட்டது. முதுகலை வரலாறு பட்டப்படிப்பு 2005 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது. ஆய்வியல் நிறைஞர் படிப்பு 2007ஆம் ஆண்டிலும் 2016-2017 கல்வி ஆண்டு முதல் முனைவர் பட்ட ஆய்வுத்துறையாகவும் இத்துறை பரிமளிக்கிறது.

இஸ்லாமிய தமிழ்ப் பண்பாட்டு ஆய்வு மையம்

தமிழக முஸ்லிம்களின் வரலாறு, பண்பாடு குறித்து ஆய்வு மேற்கொள்ளும் பொருட்டு ஜமால் முகமது கல்லூரியில் இஸ்லாமிய தமிழ்ப் பண்பாட்டு ஆய்வு மையம் என்னும் ஆய்வு இருக்கை 2017 டிசம்பர் மாதத்தில் தொடங்கப்பட்டது. தமிழ்நாடு அரசு அருங்காட்சியகத்துறையின் மேனாள் உதவி இயக்குநரும், தமிழக முஸ்லிம்கள் வரலாறு குறித்த ஆய்வாளருமான முனைவர் ஜெ.ராஜாமுகமது (புதுக்கோட்டை) இந்த ஆய்வு மைய இயக்குநராகப் பொறுப்பேற்றுள்ளார்.

Printed & Published by **Dr. S. Ismail Mohideen,** Principal, Jamal Mohamed College, (Autonomous) and published from Jamal Mohamed College, 7 Race Course Road, Tiruchirapalli-20. and Printed by Mrs. Zeenath Beevi at The Printing House, 6, Khajamalai Main Road, (Near Collectors Bungalow), Kajamalai, Tiruchirappalli - 620 023.
Editor-in-Chief : **Dr. S. Ismail Mohideen**

தமிழக முஸ்லிம்களின் வரலாறு, பண்பாடு, இலக்கியம்

பதிப்பாசிரியர்கள் : பேரா.கா.முகமது இஸ்மாயில்
முனைவர் தா.உமர் சாதிக்
முனைவர் ச.அ.சையத் அகமது பிரோசு

வகை : பன்னாட்டுக் கருத்தரங்க ஆய்வுக் கட்டுரைகளின் தொகுப்பு
(தமிழ் மற்றும் ஆங்கிலம்)

பக்கங்கள் : 378

வெளியீடு : ஜமால் முகமது கல்லூரி (தன்னாட்சி),
திருச்சிராப்பள்ளி - 620 020

அச்சாக்கம் : தி பிரிண்டிங் ஹவுஸ், திருச்சி -23

JARJ

Jamal Academic Research Journal : an Interdisciplinary
ISSN (P) : 0973-0303
ISSN (O) : 2582-5941
Online Version : www.jmcjarj.org

History, Culture and Literature of Muslims of Tamil Nadu

Guest Editors : **Prof.K.Mohamed Ismail**
Dr.T.Umar Sadiq
Dr.S.A.Syed Ahmed Firoz

Subject : **Research Articles of an International Seminar**
(English and Tamil)

Pages : **378**

Publication : **Jamal Mohamed College (Autonomous)**
Tiruchirappalli - 620 020

Printing : **The Printing House, Trichy -23**

	- முனைவர் செ.ஆமினா பானு	
31	விசுவநாதபுர இஸ்லாமியர் திருமணச் சடங்கு முறைகள் - முனைவர் வ.மாலிக்	197
32	உலக ஒருமைப்பாட்டிற்கு நபிகளாரின் வழி - முனைவர் செ.சுகவனேஸ்வரன்	204
33	Biography of Sufi Saint Peer Mohamed Appa as Gleaned from his Tamil Literature **- Dr. J Augustin**	217
34	Social reforms of E.V. Ramasamy and self-respect movement among the Muslims of Tamilnadu **- Dr.H.K. Sulaiman Khan**	223
35	Madrassa-An Islamic System Of Education In Kerala And Tamil Nadu – A Comparative Study **- K.Noushad**	231
36	கவிக்கோ அப்துல் ரகுமான் கவிதைகளில் ஓர் இறைத்தத்துவம் - முனைவர் அ.மா.முகமது ஹாரிஸ்	235

SUPPLEMENTARY

1	இஸ்லாமிய நாவல்களில் பெண்களின் பிரச்சனைகள் - R.முகம்மது ரபீக்	01
2	தமிழக முஸ்லிம்களின் தொழில் - வணிக வரலாறு - திருமிகு எஸ்.ஏ.முகம்மது இப்ராஹிம்	16
3	மேலப்பாளைய இஸ்லாமியர்களின் பண்பாட்டுப் பழக்கவழக்கங்கள் - ஒரு பார்வை - முனைவர் ஓ.மு.சே.அமீர் அம்சா பீவி	29
4	இசுலாம் சமயம் கூறும் அறமும் அறவாழ்வு முறைகளும் - முனைவர் கா.மைதீன்	35
5	சிங்கப்பூர்த் தமிழ் முஸ்லிம்கள் - எம்.இலியாஸ்	39
6	இஸ்லாமியத் தமிழ் இலக்கியம் - கே.ஏ.ஜெஹபர் உசேன்	46
7	தமிழக முஸ்லிம்களின் வரலாறு, பண்பாடு, இலக்கியம், சமய நல்லிணக்கம் - முனைவர்.வெ.கோகிலாதேவி	53
8	நயீமா சித்திக்கின் சிறுகதைகளில் பெண்மன உளவியல் - முனைவர் ஷி.ர்.பா	57

JARJ Jamal Academic Research Journal-an Interdisciplinary
Mohammed Harris, JARJ-Vol-3-1-May-2022:235-241
ISSN(P): 0973-0303
ISSN(O): 2582-5941

Monotheism in the poems of Kaviko Abdul Rahuman

கவிக்கோ அப்துல் ரகுமான் கவிதைகளில் ஓர் இறைத்தத்துவம்

Dr. A. M. Mohammed Harris
Assistant Professor, Research Department of Tamil,
Jamal Mohammad College (Autonomous), Tiruchirappalli - 620 020.

Abstract:

Today's human life is full of religious misunderstandings. At their base fights arise and unrest arises. Thus human unity is distorted and love in the human mind has changed into hatred. When there is an understanding between religions there is a theological idea that there is only one God and there are many thousands of names for him. Many poets have written poems in the style of 'Kaviko Abdul Rahuma', which explores and clarifies in the minds of the people by their thoughts that 'God is It is a mistake to say that Islam only proclaims one God. Islamic poets tend to expose to us the philosophical nature of all religions claiming to be monotheistic. Through love'. The Lord is the only one who claims Himself all the time. The purpose of the article is to explore and establish this character.

Key Words: A theological philosophy, the need for incarnation, Messenger and Biology, the similarity between the occult, Religious Reconciliation

Corresponding Author E-Mail: mohamedharis2008@gmail.com

ஆய்வுச்சுருக்கம்:

இன்றைய மனித வாழ்வில் சமயம் சார்ந்த புரிதலின்மை நிறைந்து உள்ளது. அவற்றின் அடிப்படையில் சண்டைகள் ஏற்பட்டு அமைதியின்மை எழுகின்றது. இதனால் மனித ஒற்றுமை சிதைந்து மனிதன் மனதில் அன்பின்றி வெறுப்புணர்வு பெருகி விடுகின்றது. சமயங்களுக்கு இடையே உள்ள புரிதல் ஏற்படுகின்றபோது இறைவன் ஒருவனே அவனுக்கு பெயர்கள் பல ஆயிரம் என்ற இறையியல் சார்ந்த எண்ணங்களினால் மக்களின் மனத்தில் 'அன்பின் வழியே இறை' என்பதை உணர்ந்தி அத்தகைய இறை ஓரிறைவனே என்பதை ஆராயந்து தெளிவுபடுத்தும் தன்மையில் கவிஞர்கள் பலர் கவி படைத்துள்ளனர் அவ்வகையில் 'கவிக்கோ அப்துல் ரகுமானின் கவிதைகளில் ஓர் இறைதத்துவம்' மிகுந்து காணப்படுகின்றது. இஸ்லாம் மட்டுமே ஓர் இறையைப் பறைசாற்றுகிறது என்று கூறுவது பிழையாகும். எல்லா சமயமும் ஓரிறைவனையே கூறுகின்றது என்ற மெய்யியல் தன்மையை இசுலாமியக் கவிஞர்கள் நமக்கு புலப்படுத்த முனைகின்றனர். இவரின் கவிதைகளின் வழியாக சமயங்கள் இடையே உள்ள வேறுபாடுகளை கலைந்து இறைவன் ஒருவனே அவனையே எல்லா சமயமும் கூறுகின்றது. இத்தன்மையை ஆராய்ந்து நிலைநாட்டுவதே கட்டுரையின் நோக்கமாகும்.

திறவுச் சொற்கள்

ஓர் இறைத் தத்துவம், அவதாரத்தின் தேவை, இறைத்தூதும் வாழ்வியலும், மறைகளுக்கிடையே உள்ள ஒற்றுமை, சமய நல்லிணக்கம்

ISSN(P): 0973-0303
ISSN(O): 2582-5941

மனிதனைச் சமைக்கவே சமயங்கள்

உலகத்தில் தோன்றிய அத்துனைச் சமயமும் ஒரே இறைவனாலேயே தோற்றுவிக்கப்பட்டது. அந்தந்த நிலத்தில் வாழும் மக்களின் காலத்திற்கும் மனிதனின் மனப் பக்குவத்திற்கும் ஏற்ப இறைமறை வழங்கப்பட்டது. மனித மனத்தைச் சமைப்பதற்காகவே சமயம் எழுந்தன. இச்சமயம் மனித வாழ்வோடு ஒன்றியுள்ளது. பிறப்பு தொடங்கி இறப்பு வரை சமயம் மனித வாழ்வின் ஒட்டி உள்ளது. இச்சமயம் தான் தனித்தனியாக பிரிந்து கிடந்த மனித இனத்தை ஒன்றுபடுத்தியது. ஆனால், இப்போது மனித இனத்தை பிளவு படுத்துவது இச்சமயம் தான் என்று எண்ணும் நிலைக்கு மாறி உள்ளது அல்லது மாற்றப்பட்டுள்ளது. இதற்குக் காரணம் புரிதல் இன்மையே எனலாம். எந்த சமயம் எல்லா நிலத்திற்கும் எல்லா காலத்திற்கும் ஒத்து வருகின்றதோ அந்த சமயம் முழுமை பெற்றது எனலாம். உதாரணத்திற்கு நம் மண்ணில் காலத்திற்கு ஏற்றாற்போல் வாழ்வு முறையை வழிகாட்ட அவதாரங்கள் அடுத்தடுத்த காலத்திற்கு ஏற்றாற்போல் தோன்றின. நம் மண்ணில் மச்சவதாரம் மட்டுமே போதும் என்றால் கூர்மவதாரம் ஏன் தோன்றியது. கூர்ம அவதாரம் மட்டுமே போதுமென்றால், வராக அவதாரம் ஏன் தோன்றியது. வராக அவதாரம் மட்டுமே போதும் என்றால் சிம்மா அவதாரம் ஏன் தோன்றியது. சிம்மா அவதாரம் மட்டுமே போதும் என்றால் வாமண அவதாரம் ஏன் தோன்றியது. வாமண அவதாரம் மட்டுமே போதும் என்றால் பரசுராம அவதாரம் ஏன் தோன்றியது. பரசுராம அவதாரம் மட்டுமே போதும் என்றால் இராம அவதாரம் ஏன் தோன்றியது. இராம அவதாரம் மட்டுமே போதும் என்றால் பலராம அவதாரம் ஏன் தோன்றியது. பலராம அவதாரம் மட்டுமே போதும் என்றால் கண்ண அவதாரம் ஏன் தோன்றியது. கண்ணஅவதாரம மட்டுமே போதும் என்றால் இறுதி அவதாரமான கல்கி அவதாரம் ஏன் தோன்ற வேண்டும். ஒன்றின் தேவையும் புலக்கமின்மையும் வரும்போது அடுத்த தேவை எழுகின்றது. கல்கி அவதாரத்துக்கு பின்னும் முஹம்மது நபிக்குப் பின்னும் அவதாரங்களோ நபிகளோ மீண்டும் தேவை இல்லாவண்ணம் முழுமையாக மறை பூர்த்தியாகிவிட்டது. என மறைகள் கூறுகின்றது. இன்னொரு வகையில் சொல்வதானால் ஒரு செல் உயிரினம் அமீபாவில் தொடங்கிய உயிரின பரிணாம வளர்ச்சியால் மனித இனம் என்ற உச்சத்தோடு முழுமை பெறுகின்றது. அதுபோல அவதாரமும் நபித்துவமும் கல்கி மற்றும் முகமது நபி(சல்) மூலம் முழுமை பெறுகின்றது. உலகில் எல்லா பகுதிக்கும் இறைவன் மக்களை நேர்வழிப்படுத்த தமது தூதர்களை அனுப்பினான். அவர்களுக்கு மறையையும் சட்டத்தையும் வழங்கினான். அத்தூதர்களும் அவர்கள் வழங்கிய சட்டங்களும் வேறுபடும். ஆனால், வேதங்களின் உண்மை நிலை மாறுவதில்லை. அவ்வுண்மையில் முதன்மையானது ஓரிறைத் தத்துவமாகும் இத்தத்துவம் எல்லா வேதங்களிலும் மாறாத பதிந்துள்ளது.

"ஒவ்வொரு வகுப்பினருக்கும் நம்மால் அனுப்பப்பட்ட ஒரு தூதர் உண்டு"1

இத்தூது எதற்கென்றால் உண்மையை நிலைநாட்டவே அமைகிறது எங்கெல்லாம் இவ்வுண்மை மறக்கப்பட்டு உண்மைக்கு மாறு ஏற்படுகின்றதோ அப்பொழுது

"எப்போதெல்லாம் தர்மம் அழிந்து அதர்மம் எழுச்சி பெறுமோ அப்போது நான் என்னை பிறப்பித்துக் கொள்கின்றேன்"2

மனித குலத்தை அறத்தின் பக்கம் நடத்தவும் அறவழி தவறிய மனிதரை

எச்சரிக்கவே அவதாரங்கள் தோன்றியதாகக் கூறப்படுகிறது இத்தன்மை திருக்குர்ஆனில்

"அச்சமூட்டி "எச்சரிக்கை செய்யும் (நம்முடைய) தூதர் வாராத எந்த வகுப்பாரும் பூமியில் இல்லை"3

என்று இறைவன் தனது திருமறையில் குறிப்பிடுகின்றான். மேலும், அத்தகைய தூதர்கள் வாழ்ந்த நிலத்தில் உள்ள மொழியின் வழியாகவே மறை வழங்கப்பட்டது என்பதை,

"(நபியே) ஒவ்வொரு தூதும் (தம் மக்களுக்கு) தெளிவாக விவரித்துக் கூறும் பொருட்டு, அவருடைய மக்களின் மொழியைக் கொண்டே (போதனை புரியுமாறு) நாம் அவர்களை அனுப்பி வைத்தோம்"4

எனவே, நிலம் மொழிக்கு ஏற்ப மறை வழங்கப்பட்டது என்பதை நம்மால் உணர முடிகின்றது. மேலும், எல்லா நபிமார்களைப் பற்றியும் இறைவன் திருக்குர்ஆனில் கூறவில்லை, தூதர்களாக அவர்களில் சில நபிமார்களின் வரலாற்றை மட்டும் இறைவன் கூறியுள்ளான் என்பதை,

ISSN(P): 0973-0303
ISSN(O): 2582-5941

"நபியே! நிச்சயமாக உமக்கு முன்னர் தூதர்கள் பலரை அனுப்பினோம் அவர்களில் சிலருடைய சரித்திரத்தை நாம் உமக்கு கூறியிருக்கின்றோம் அவருடைய வரலாற்றை நாம் உமக்குக் கூறவில்லை"5 என்று இறைவன் நபியின் வழியாக உலகிற்கு அறிவிப்பு செய்கின்றான். எனவே, அனைத்து இறைத்தூதர்களையும் அனைத்து மறைகளையும்

ஏற்பவரே முழுமையான முஸ்லிம் ஆவார். அதாவது, எல்லா மறையில் உள்ள உண்மைகளை மட்டும் ஏற்க வேண்டும். உண்மையே நிரந்தரமானது. அவ்வுண்மை ஒன்று தான் மாறாது. அவ்வுண்மையின் ஊற்றாக இருக்கின்ற இறைவன் ஒருவனே.

ஓர் இறைத்தத்துவம்

சில சமயம் பல தெய்வங்களைச் சுட்டுவதாக இருப்பினும் இணங்கி பார்க்கின் அச்சமயங்களில் இறைவன் ஒருவனே என்ற பொருண்மை ஊடுருவியுள்ளதைக் காணமுடிகின்றது. எல்லாச் சமயங்களிலும் புறநிலை பாடு அகநிலை பாடு என்பது உள்ளது. புறநிலை பாடு சமயத்திற்கு சமயம் மாறுபடும் ஆனால் அக நிலைப்பாடு மாறுபடாது. அத்தகைய அகநிலையாவற்றிளும் முக்கியமானது ஓர் இறை தன்மையாகும். அனைத்து சமயமும் இறைவன் ஒருவனே என்ற பதத்தில் ஒன்றுபட்டு போகின்றது. அத்தகைய இறைவனுக்கு உருவம் இல்லை என்பதை, யஜூர் மறையில்

'ந தஸ்ய பிரதிமா அஸ்தி'6

இதன் பொருள் இறைவனுக்கு உருவமில்லை என்பது ஆகும் இதில் பிரதிமா என்ற சொல்லுக்கு பிரம்மம் என்று பொருள்படும், இவற்றோடின்றி,

"ஏகம் ப்ரஹம் த்லித்ய நாஸ்தே/ எநன் நா நாங்கே கின்சன்"7

தெய்வ வாக்கிங் பொருள் இறைவன் ஒருவனே இருவர் இல்லை இல்லவே இல்லை இல்லவே இல்லை சிறிது கூட இல்லை என்று 'பிரம்ம சூத்திரம்' அறுதியிட்டு மனிதர்களுக்கு பகர்கின்றது. அதர்வண மறையில், அந்யதா சரணம் நாஸ்தி என்ற பகுதியில்,

"அந்யதா சரணம் நாஸ்தி த்வம் ஏவ சரணம் மம/ தங்மாத் காருண்ய பாவேன ரக்க்ஷ ரக் மஹேங்வதர்"8

இதன் பொருள் இப்பரம்பொருளைத் தவிர வேறெதற்கும் சரணடைவதில்லை என்ற உறுதி வெளிப்படுத்துகிறது. மேலும், இறைவனின் குணங்களைக் குணத்தன்மையை உணர்ந்த அறிஞர்கள் இறைவனின் குணத்தை உணர்த்தும் பெயர்களைச் சூட்டி இறைவனை வணங்கி மகிழ்ந்தனர் இத்தன்மையை

"அவர்கள் கடவுளை வர்ணன், இந்திரன், மித்திரன், சூரியன், அக்னி என பல பெயர்களில் அழகுபட அழைத்தனர் இவை அனைத்தும் அவனின் தன்மைகளை சிறப்பை உணர்த்துவதாக இருந்தன"9

இவ்வாறு மேலே கூறியதைப் போல பெயர் வெவ்வேறாக இருப்பினும் கடவுள் என்பது ஒரே பரம்பொருளே என்று நாம் உணர முடிகின்றது.

மேலும், பகவத்கீதையில்,

"நீங்கள் சூரியனையும் சந்திரனையும் வழிபடுகிறார்கள்! அவ்வாறு வழிபடுவதும் என்னையே சேருகிறது என்றாலும், அது எப்படிப்பட்டது எனில் ஒர் செடியின் வேரிலே நீர் ஊற்றாமல் அதன் காயிலும் கனியிலும் நீர் ஊற்றுவதற்கு ஒப்பாகும்"10.

இதில் வேரில் நீர் ஊற்றுதல் என்பது பரம்பொருளை வழிபடுவதாகும் காயிலும், கனியிலும் நீர் ஊற்றுதல் என்பது பரம்பொருளுக்கு இணையாக மற்றவற்றை வழிபடுவதாகும்.

"வேறுபடும் சமயமெலம் புகுந்து பார்க்கின்/ விளங்கும் பரம்பொருளே"11

இந்த தன்மையைக் காண முடிகிறது என்பதைக் கவிஞர்

"நான்/ எங்கே சென்றாலும்/ அது உன் சபையாகவே/ இருக்கிறது"12

இத்தன்மையை கவிக்கோ அப்துல் ரகுமான் தன் கவிதைகளில் பதிவு செய்து சமய நல்லிணக்கத்தை மக்கள் மனதில் பதிகிறார். இப்பரம்பொருளையே எல்லா சமயமும் அழைக்கின்றது என்பதை பாரதியார் ஆத்திச்சூடியில்,

"ஆத்திச்சூடி இளம்பிறை அணிந்து / மோனத் திருக்கும் முழுவெண் மேனியன்/ கருநிறங் கொண்டு பாற்கடல் மிசைக் கிடப்போன்/ முகமது நபிக்கு மறையருள் புரிந்தோன்/ ஏசுவின் தந்தை எனப்பல மதத்தினர்/ உருவகத் தாலே உணர்ந்து உணராது/ பலவகை யாகப் பரவிடும் பரம்பொருள்/ ஒன்றே அதனியல் ஒளியுறு மறிவாம்/ அதனிலை கண்டார் அல்லலை அகற்றினார்/ அதனருள் வாழ்த்தி அமரவாழ் வெய்துவோம்"13 என்று பாரதியார் கூறுகின்றார். இறைவன் ஒருவனே அவன் பெயரையே பலர் தாம் உணர்ந்த வாரு இறைப் பண்பினைப் பெயராகச் சூட்டுகின்றனர் என்பதை பாரதியார் நமக்கு புலப்படும் வண்ணம் கடவுள் வாழ்த்தாக படைத்துக் காட்டுகிறார் இத்தன்மையை கவிக்கோ அப்துல் ரகுமான்

"அரன் என்றழைப்பினும்/ வரம் கொடுப்பவன் நீ/ அரியென றிசைப்பினும்/ சரியென் றிசைப்பாய்/ கர்த்தர் என்றுரைப்பினும்/ அர்த்தம் நீதான்/ அல்லா எனினும் நீ/ அல்லாது வேறு யார்?"14 என்று கவிக்கோ அப்துல் ரகுமான் இறைவனின் பெயர் வெவ்வேறாக இருப்பினும் இறைவன் ஒன்றுதான் என்ற வேதக்கருத்துக்களைக் கவி புனைந்து மனித இனம் உணர்ந்து அன்பு பாராட்ட வேண்டும் என்பதை வலியுறுத்தும் வண்ணமாக உணர்த்துகின்றார். மேலும், கிறித்தவ சமயத்தின் மறை,

"என்னைத் தவிர வேறு தெய்வங்கள் உனக்கு இருத்தல் ஆகாது. மேலும், விண்வெளியில் கீழே மண்ணுலகில், பூமிக்கு அடியில் நீர்த்திரனில் உள்ள யாதொன்றின் சிலையோ ஓவியத்தையும் நீ உருவாக்க வேண்டாம்! நீ அவற்றை வழிபடவோ அவற்றிற்குப் பணிவிடை செய்ய வேண்டாம். ஏனெனில், உன் கடவுளும், ஆண்டவருமாகிய நான் இதைச் சகித்துக் கொள்ள மாட்டேன்"15

என அல்லேலுயா கூறுவதாக திருவிவிலியம் எடுத்துரைக்கின்றது. இறைவனுக்கு உருவம் வழங்குதல் முடியாத ஒரு தன்மை உடையது எனவே அச்செயலை செய்வது பாவத்திற்கு உரியது என்பதை திருவிவிலியம் மனிதனை எச்சரிக்கின்றது. இத்தன்மையை கவிஞர்

"உன்னை/ வரைய முடியாது/ பூவை வரையலாம்/ வாசனையை/ எப்படி வரைவது?"16

இக்கவிதையில் பூவை அழகாக ஓவியம் வரைந்து விடலாம் ஆனால், அதன் மணத்தை வரைய முடியாது. இறைவனின் குணத்தின் ஒருசில தன்மையினை சிலையாக வடித்து விடலாம். சான்றாக கொற்றவையின் சினம் கொண்ட உருவத்தை கல்கத்தா காளி சிலையின் மூலம் நாம் அறியலாம். ஒவ்வொரு சிலையும் இறைவனின் ஒவ்வொரு குணத்தை மட்டும் வெளிப்படுத்தும் தன்மையாக உள்ளது. ஆனால், முழு இறைவனின் தன்மையை எவராலும் சிலையாக, ஓவியமாக வரைந்து விடமுடியாது என்பதை கவிஞர் அழகுற புலப்படுத்துகிறது.

இறைவனை உணராமல் பூசல்

இன்றைய காலகட்டத்தில் இறைவனின் பெயர் சொல்லி பூசை மட்டுமல்ல, பூசல்களும் நடக்கின்றன. அதற்கு, காரணம் இறைவனின் அன்பார்ந்த பண்பு மனிதனிடம் இல்லாமையும் மனிதனின் சுயநலமும் எனலாம். இத்தன்மையைத் திருக்குர்ஆன்,

"மேலும், அவர்களிடம் நீங்கள் பூமியில் குழப்பம் செய்யாதீர்கள் என்று கூறப்பட்டால்; அதற்கு அவர்கள் நிச்சயமாக நாங்கள் சீர்திருத்தம் செய்வோர்தாம் (குழப்பவாதிகளல்ல) எனக் கூறுவார்கள். தெரிந்து கொள்வீராக! நிச்சயமாக அவர்கள்தான் குழப்பம் செய்கின்றார்கள் எனினும் (இதை) உணர மாட்டார்கள்"17

என்று திருக்குர்ஆன் மனித ஒற்றுமையை குழப்ப வரை குழப்பவாதிகள் என்று பறைசாற்றுகின்றது இத்தன்மையை கவிஞர் "ஒன்றாகத்தான் இருந்தோம்/ படைப்பு நம்மை/ வகிடெடுத்துப்பிரித்துச்/ சடைப்பின்னிப்/ பூ வைத்தது"18

இக்கவிதையின் வழி இறைவனின் உன் அத்தை உணர்ந்த மனிதன் அவனின் படைப்புத் திறனால் அவன் உணர்ந்த இறைவனின் குணத்தை வடிவமாக்கி தன் பக்தியை வெளிப்படுத்தினான் இதன் வழியாக பிரிவுகள் தோன்றி மனிதகுலம் மனிதகுலம் பின்னலாக பின்னிப்பிணைந்து சிக்கல் ஏற்பட்டு விட்டது என்பதை குறியீட்டின் வாயிலாக படைத்துக் காட்டுகின்றார். மேலும் ஓரிறைவனையே நாம் அனைவரும் தேடும் முயற்சியில் அல்லது உணரும் முயற்சியில் இருக்கின்றோம் என்பதை கவிஞர்

"உன் பாதையும் /
என் பாதையும்/ வெவ்வேறாக இருக்கலாம்/ ஆனால் அவை/
ஒரே கையின் ரேகைகள்"19

சமயங்களில் வேறுபாடுகள் இருக்கின்றன வேறுபாடுகள் இருப்பினும் சென்று சேரும் பாதை ஒரே இறைவனின் சென்றடையும் பாதைதான் என்பதை கவிஞர் குறியீட்டின் வாயிலாக நமக்கு அறிவுறுத்துகின்றார் மேலும் எல்லா சமயங்களையும் இறைவன் தான் தூக்கி தோற்றுவித்தான் என்பதை "ஒரே சூரியன்தான்/ வெவ்வேறு நாட்களை/ உண்டாக்குகிறான்"20

இக்கவிதையின் வழி ஒரே இறைவன் தான் மனிதனின் மன வளர்ச்சிக்கும் காலத்தின் சூழலுக்கு ஏற்றாற்போல மக்களுக்கு இறைத்தூதர் அல்லது அவதாரத்தின் வழியாக தனது ஞானத்தையும் கவிஞர் வேதத்தையும் வழங்கி மக்கள் வாழும் முறையை இறைவன் கற்றுத் தந்தான் இத்தன்மையை கவிஞர் குறியீட்டின் வாயிலாக ஒரே சூரியன் தான் வெவ்வேறு நாட்களில் உண்டாக்கினான் உண்டாக்குகிறான் என்பதில் கடவுள் சூரியன் என்பது கடவுளுக்கு குறியீடாகும் நாட்கள் என்பது குறிப்பிட்ட காலத்தில் வந்த தீர்க்கதரிசி அல்லது அவதாரம் இது இவற்றிற்கான குறியீடாகவும் அந்நாட்களில் வெளிப்பட்ட வாழ்வு ஞானம் வேதமாகவும் கவிஞர் குறிப்பிடுகின்றார் மேலும்

"உன் ஒவ்வொரு
அபிநயத்திலும்/ ஒவ்வொரு நாமம் /ரூபகம் கொண்டது"21

இக்கவிதையில் இறைவனின் ஒவ்வொரு குண நிலையும் ஒவ்வொரு அபிநயம் ஆகும் அந்த அபிநய வெளிப்பாட்டு குணமாகிய தன்மையில் நாமம் பிறக்கின்றது. குணத்தை ஊமையாக விளக்கம் முயற்சித்தான் மனிதன் உருவகம் ஆகிவிட்டான் அவ்விதமே உருவாய் இறைவனுக்கு வழங்கப்பட்டது. எனவே இறைவனை உணர்தல் என்பது யானையை உணர உட்பட்ட குருடர் நிலைப் போன்றதாகும். நான்கு கண்பார்வையற்றோர் யானையைக் காண முற்படுகின்றனர். ஒருவர் யானை என்பது உலக்கை என்று கூறினார். இன்னொருவரோ யானை என்பது தூண் என்று கூறினார். மூன்றாம் நபரோ யானை என்பது முரம் என்று கூறினார். நான்காம் நபரோ யானை என்பது துடப்பம் என்று கூறினார். நால்வர் உணர்ந்ததும் உண்மையே ஆகும். ஆனால் அவ்வுண்மையில் முழுமை இல்லை. ஒருவர் கையில் சிக்கியது யானையின் தும்பிக்கை இரண்டாம் நபரின் கையில் சிக்கியது யானையின் கால் மூன்றாம் நபரின் கையில் சிக்கியது யானையின் காது நான்காம் நபரின் கையில் சிக்கியது யானையின் வால் இத்தன்மையை கவிஞர் கவிக்கோ அப்துல் ரகுமான் குருடர்களின் யானை என்ற தலைப்பில்

" ஒவ்வொரு குருடனுக்கும் / ஏதாவது ஒன்று/ அகப்படுகிறது/ நிற்கும் இடத்தை பொறுத்து/ அகப்படுகிறது கைகளுக்குதான்/ கண்களுக்கல்ல/ ஏனெனில் அவர்கள்/ காண முடியாதவர்கள்"22

மக்கள் வாழ்கின்ற இடததிற்கும் காலத்திற்கும் ஏற்ப இறைவன் பற்றி ஞானத்தைப் பெறுகின்றனர். அவர் பெற்ற ஞானம் முழுமையாக இறைவனை அறியும் ஞானமாக இருக்க முடியாது.

ஏனெனில் இறைவன் எல்லை அற்றவன். இறைவனைப் பற்றி ஒவ்வொருவரும் அறிந்த ஞானம் உண்மையானதே ஆனால் அவை முழுமையானதல்ல எல்லோருடைய ஞானத்தையும் ஒன்று சேர்த்தாலே அது முழுமையான ஞானமாய் அமையும் இத்தன்மையை கவிஞர்

"உண்டு'ம்/ இல்லை'யும் சேர்ந்ததே/ முழு உண்மை/ எல்லா பக்கமும்/ நின்று பார்ப்பவனே/ உண்மையை/ முழுமையாக/ தரிசிக்கிறான்"23

என்று இன்றைய சமயப் பூசல் எழுவதற்கான காரணத்தை கவிஞர் அனைவரும் உணரும் வண்ணம் மாகவி படைத்துள்ளார்

தொகுப்புரை

- சமயம் என்பது மனிதனை பக்குவம் அடையச் செய்வதே கவிக்கோ அப்துல் ரஹ்மான் கவிதை வழி உணர்த்தப்பட்டுள்ளது.
- எல்லா சமயங்களிலும் ஓர் இறைத் தத்துவம் உள்ளமையை மறைகளின் வழி ஆராயந்து கவிக்கோவின் கவிதையின் உள்ளமையை நிரூபிக்கப்பட்டுள்ளது
- இறைவனையும் மற்ற சமயங்களில் முழுமையாக உணராமையே இறைப் பூசலுக்கு காரணங்கள் என்பதை கவிக்கோ அப்துல் ரகுமானின் கவிதை வழி ஆராயப்பட்டுள்ளது.

ISSN(P): 0973-0303
ISSN(O): 2582-5941

அடிக்குறிப்புகள்

1. திருக்குரான் - 35:24
2. பாரதியார் மொழிபெயர்ப்பு, ஸ்ரீகீதைப்பாட்டு, பாரதியார் புத்தகாலயம், சென்னை -17, முதல் பதிப்பு - 1997. (கீதை-4:7)
3. திருக்குர்ஆன்-35:24
4. மேலது -14:4
5. மேலது -40:78
6. http://syiya-syliya.blogspot.com
7. http://syliya-syliya.bogspot.com/2010/06/blog-post_1572.html?m=1
8. ரவி.கே.காணல் நீரைக் கடந்து, நிவேதிதா பதிப்பகம், சென்னை -92, முதல் பதிப்பு -2019. ப.-637
9. சிவத்தியாநாதத்த மஹர்ஷி (தமிழாக்கம்), ரிக் வேத ஸம்ஹிதை சாது அச்சுக்கூடம், சென்னை, முதல் பதிப்பு -1937. (ரிக்-1:164:46)
10. வலம்புரிஜான், பிராத்தனைப் பூக்கள், ஆஸாத் பதிப்பகம், சென்னை-86, முதல் பதிப்பு - 2021. (ப.78)
11. முனைவர் ஆறுமுகம், ப., (ப.ஆ), தாயுமாணவ சுவாமி பாடல்கள், பூம்புகார் பதிப்பகம், சென்னை - 108, முதல் பதிப்பு -2005. (ப.217)
12. அப்துல் ரகுமான், மின்மினிகலால் ஒரு கடிதம், நேஷ்னல் பப்ளிகேஷன்ஸ், சென்னை -17, முதல் பதிப்பு -2004. (ப. 142)
13. பாரதியார், பாரதியார் பாடல்கள், சாரதா பப்ளிகேஷன்ஸ், சென்னை-14, முதல் பதிப்பு -2005. ப.ஆ. கமலா முருகன் (ஆத்திச்சூடி கடவுள் வாழ்த்து)
14. அப்துல் ரகுமான், நேயர் விருப்பம், நேஷ்னல் பப்ளிகேஷன்ஸ், சென்னை -17, நான்காம் பதிப்பு – 2004. (ப.26)
15. திருவிவிலியம் 20:3-05
16. அப்துல் ரகுமான், மின்மினிகலால் ஒரு கடிதம், நேஷ்னல் பப்ளிகேஷன்ஸ், சென்னை -17, முதல் பதிப்பு -2004. (ப.137)
17. திருக்குர்ஆன்-2:11-12
18. அப்துல் ரகுமான், ரகசியப் பூ, நேஷ்னல் பப்ளிகேஷன்ஸ், சென்னை -17, முதல் பதிப்பு -2005. (ப.148)
19. அப்துல் ரகுமான், மின்மினிகலால் ஒரு கடிதம், நேஷ்னல் பப்ளிகேஷன்ஸ், சென்னை -17, முதல் பதிப்பு -2004. (ப.10)
20. அப்துல் ரகுமான், ரகசியப் பூ, நேஷ்னல் பப்ளிகேஷன்ஸ், சென்னை -17, முதல் பதிப்பு -2005. (ப.62)
21. அப்துல் ரகுமான், பறவையின் பாதை, நேஷ்னல் பப்ளிகேஷன்ஸ், சென்னை -17, முதல் பதிப்பு -2006.
22. அப்துல் ரகுமான், ஆலாபனை, நேஷ்னல் பப்ளிகேஷன்ஸ், சென்னை -17, முதல் பதிப்பு -1995. (பக்.93-94)
23. மேலது, (பக்.95-96)

Reference:

1. Quran - 35:24
2. Bharathiyar (translation),Sri Geethai paatti,BharathiyarButhagaalayam,chennai-17. First edition-1997.Author:Prof.Shanmuga Pillai. Keethai -4:7
3. Quran -35:24
4. Ibid -14:4
5. Ibid -40:78
6. http://syiya-syliya.blogspot.com
7. http://syliya-syliya.bogspot.com/2010/06/blog-post_1572.html?m=1
8. RaviK.Kaanal Neeraj Kadanthu, publication,Chennai 92.First edition-2019. p.637
9. Sivathiyanaananda Maharishi (translation), Rigvedha Samhidai,


ISSN(P): 0973-0303
ISSN(O): 2582-5941

Saadhu printers, Chennai,first edition-1937. Reek.-1:164:46
10. Valamburi John, Praarthanai Pookkal,Azad printers, Chennai 86, first edition-2001. p.78.
11. Dr.Arumugam B. Publisher, Thayumaanaswamy Padalgal,Boobbukar publication, Chennai 108. First edition-2005. p.217.
12. Abdul Rahuman, Minminikalaal Oru Kaditham, National publication, Chennai-17. First edition-2004. p.142.
13. Bharathiyar, Bharathiyar Padalgal.Saratha publication, Chennai 14. First edition-2005. Publisher: Kamala Murugan. (Athichudi Kadavul Valthu padal)
14. Abdul Rahman. Neyarviruppam, National publication, Chennai 17. Fourth edition-2004. p.26.
15. bible - 20:3-05
16. Abdul Rahuman, Minminikalaal Oru Kaditham, National publication, Chennai-17. First edition-2004. p.137.
17. Quran - 2:11-12
18. Abdul Rahman. Ragasiya Poo. National publication, Chennai 17.first edition-2005. p.148.
19. Abdul Rahuman, Minminikalaal Oru Kaditham, National publication, Chennai-17. First edition-2004. p.10.
20. Abdul Rahman. Ragasiya Poo. National publication, Chennai 17.first edition-2005. p.62
21. Abdul Rahman. Paravayin Paathai, National publication, Chennai 17. First edition -2006. p.38.
22. Abdul Rahman. Alaabanai, National publication, Chennai 17. First edition-1995.pp.93-94.
23. Ibid - pp.95-96

Vol - 3 -1&1S May 2022
Online Version : www.jmcjarj.org
ISSN (P) : 0973-0303
ISSN (O) : 2582-5941

JARJ

Jamal Academic Research Journal : an Interdisciplinary



தமிழக முஸ்லிம்களின் வரலாறு, பண்பாடு, இலக்கியம்

HISTORY, CULTURE AND LITERATURE OF MUSLIMS OF TAMIL NADU

பதிப்பாசிரியர்கள்
பேரா. கா. முகமது இஸ்மாயில்
முனைவர் தா. உமர் சாதிக்
முனைவர் ச.அ.சையத் அகமது பிரோசு

ஜமால் முகமது கல்லூரி (தன்னாட்சி)
ஆற்றல் வளத்தனித்தகுதியும்
தேசியத்தர மதிப்பீட்டு மூன்றாம் சுற்றில் 'A' தகுதிச் சான்றும்
DBT -நட்சத்திரக் கல்லூரித்திட்டம் மற்றும் DST-FIST நிதிநல்கையும் பெற்றது
(பாரதிதாசன் பல்கலைக்கழக இணைவு பெற்றது)
திருச்சிராப்பள்ளி- 620 020



ஜமால் முகமது கல்லூரி (தன்னாட்சி), திருச்சிராப்பள்ளி

சமூகத்தில் வாழும் அடித்தட்டு மக்கள் குறிப்பாக சிறுபான்மை இஸ்லாமிய சமுதாய மக்கள் பயன்பெறும் வகையில் ஹாஜி எம்.ஜமால் முஹம்மது சாஹிபு மற்றும் ஜனாப் என்.எம். காஜாமியான் ராவுத்தர் ஆகிய வள்ளல் பெருமக்களால் 1951 -ஆம் ஆண்டு தோற்றுவிக்கப்பட்ட அரசு உதவி பெறும் தன்னாட்சிக் கல்லூரி ஆகும். இது பாரதிதாசன் பல்கலைக்கழகத்துடன் இணைவு பெற்றது. இக்கல்லூரியில் 25 இளநிலை மற்றும் 20 முதுநிலைப் பட்டப்படிப்புகள் உள்ளன. 19 துறைகள் ஆய்வுத் துறைகளாகத் திகழ்கின்றன. கல்லூரியில் பயிலும், மொத்த மாணவ, மாணவிகளின் எண்ணிக்கை சுமார் 12,000 ஆகும். மேலும், 145 அரசு ஊதியம் பெறும் பேராசிரியர்கள் உட்பட மொத்தம் 497 பேராசிரியர்கள் இக்கல்லூரியில் பணியாற்றி வருகிறார்கள். இக்கல்லூரி 1976 இல் வெள்ளி விழாவையும், 2001 இல் பொன் விழாவையும் 2011 இல் வைர விழாவையும் கொண்டாடி மகிழ்ந்தது. 2001 இல் NAAC குழுவால் ஐந்து நட்சத்திரத் தகுதி வழங்கப் பெற்றது. 2004-2005 கல்வியாண்டு முதல் தன்னாட்சிக் கல்லூரியாக விளங்குகின்றது. இக்கல்லூரி NAAC குழுவால் 2009 ஆம் ஆண்டிலும் மீண்டும் 2016 ஆம் ஆண்டிலும் 'A' தகுதிக் கல்லூரியாக அங்கிகரிக்கப் பெற்றது. 2011-2012 கல்வியாண்டு முதல் பல்கலைக்கழக மானியக் குழுவால் ஆற்றல்வளத் தனித்தகுதி பெற்ற கல்லூரியாக அங்கிகாரம் வழங்கப்பட்டுள்ளது. இந்திய அரசு மனிதவள மேம்பாட்டுத் துறையின் கல்லூரித் தரவரிசை பட்டியலில் இக்கல்லூரி 2020-21ஆம் ஆண்டில் இந்திய அளவில் 65ஆம் இடம் பெற்றது. இத்தகு சிறப்புகளைப் பெற்ற ஜமால் முகமது கல்லூரி சமூகத்திற்கு உயர்கல்வியை வழங்கும் தன்மையால் சிறந்த நிர்வாகிகளையும், கல்வியாளர்களையும், அறிவியலாளர்களையும், சமூக ஆர்வலர்களையும், அறிவு மற்றும் ஆளுமைத் திறன்மிக்கோரையும் கணினி வல்லுநர்களையும் உருவாக்கி வருகிறது.

முதுகலைத் தமிழாய்வுத்துறை

கல்லூரித் தொடங்கப் பெற்ற 1951 ஆம் ஆண்டு முதலே தமிழ்த்துறையும் இயங்கி வருகின்றது. 1979 ஆம் ஆண்டு முதுகலை வகுப்பும் 2003-2004 கல்வியாண்டில் ஆய்வுப் படிப்புகளும் தொடங்கப் பெற்று முதுகலைத் தமிழாய்வுத்துறையாக இத்துறை பரிணமித்து வருகிறது. இதுவரை 35 ஆய்வாளர்கள் முனைவர் பட்டத்தையும் 200 ஆய்வாளர்கள் ஆய்வியல் நிறைஞர் பட்டத்தையும் பெற்றுள்ளனர். இளநிலை தமிழிலக்கிய பட்ட வகுப்புகள் தன்னிதிப் பிரிவில் ஆண்கள் மற்றும் மகளிர் பிரிவில் இயங்கி வருவதும் குறிப்பிடத்தக்கது. அறக்கட்டளைப் பொழிவுகள், பல்கலைக்கழக மானியக்குழு உதவியுடன் நடைபெறும் சிறப்புப் பொழிவுகள் மற்றும் பன்னாட்டு அளவிலான தேசியக் கருத்தரங்குகள் மாணவர்களின் அறிவுப் பசியைப் போக்கும் வற்றாத ஊற்றுகளாக விளங்குகின்றன. இறையருட் கவிமணி கா.அப்துல் கபூர், பெரும்புலவர் டாக்டர் சி.நயினார் முகம்மது, முனைவர் பீ.மு.மன்சூர் போன்ற துறையின் முன்னோடிகள் வாயிலாக ஜமால் முகமது கல்லூரி முதுகலைத் தமிழாய்வுத்துறை பன்னாட்டு அளவிலான கவனத்தை ஈர்த்துள்ளது எனில் மிகையாகாது.

முதுகலை வரலாற்று ஆய்வுத்துறை

இஸ்லாமிய வரலாற்றுத்துறை 1951ஆம் ஆண்டு கல்லூரி தொடங்கிய ஆண்டு முதலே இயங்கத் தொடங்கியது. 1967ஆம் ஆண்டு அரசியல் மற்றும் பொது நிர்வாகத்துறை என்ற பெயரில் செயல்படத் தொடங்கி 1976 ஆம் ஆண்டு முதல் வரலாற்றுத்துறை என்ற பரிணாமத்தைப் பெற்றது. 2004 ஆம் ஆண்டு சுற்றுலா மற்றும் பயண மேலாண்மைஎன்ற வேலைவாய்ப்புப் படிப்பு பல்கலைக்கழக மானியக்குழு உதவியுடன் தொடங்கப்பட்டது. முதுகலை வரலாறு பட்டப்படிப்பு 2005 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது. ஆய்வியல் நிறைஞர் படிப்பு 2007ஆம் ஆண்டிலும் 2016-2017 கல்வி ஆண்டு முதல் முனைவர் பட்ட ஆய்வுத்துறையாகவும் இத்துறை பரிமளிக்கிறது.

இஸ்லாமிய தமிழ்ப் பண்பாட்டு ஆய்வு மையம்

தமிழக முஸ்லிம்களின் வரலாறு, பண்பாடு குறித்து ஆய்வு மேற்கொள்ளும் பொருட்டு ஜமால் முகமது கல்லூரியில் இஸ்லாமிய தமிழ்ப் பண்பாட்டு ஆய்வு மையம் என்னும் ஆய்வு இருக்கை 2017 டிசம்பர் மாதத்தில் தொடங்கப்பட்டது. தமிழ்நாடு அரசு அருங்காட்சியகத்துறையின் மேனாள் உதவி இயக்குநரும், தமிழக முஸ்லிம்கள் வரலாறு குறித்த ஆய்வாளருமான முனைவர் ஜெ.ராஜாமுகமது (புதுக்கோட்டை) இந்த ஆய்வு மைய இயக்குநராகப் பொறுப்பேற்றுள்ளார்.

Printed & Published by **Dr. S. Ismail Mohideen**, Principal, Jamal Mohamed College, (Autonomous) and published from Jamal Mohamed College, 7 Race Course Road, Tiruchirapalli-20. and Printed by Mrs. Zeenath Beevi at The Printing House, 6, Khajamalai Main Road, (Near Collectors Bungalow), Kajamalai, Tiruchirappalli - 620 023.
Editor-in-Chief : **Dr. S. Ismail Mohideen**

	- முனைவர் செ.ஆமினா பானு	
31	விசுவநாதபுர இஸ்லாமியர் திருமணச் சடங்கு முறைகள் - முனைவர் வ.மாலிக்	197
32	உலக ஒருமைப்பாட்டிற்கு நபிகளாரின் வழி - முனைவர் செ.சுகவனேஸ்வரன்	204
33	Biography of Sufi Saint Peer Mohamed Appa as Gleaned from his Tamil Literature **- Dr. J Augustin**	217
34	Social reforms of E.V. Ramasamy and self-respect movement among the Muslims of Tamilnadu **- Dr.H.K. Sulaiman Khan**	223
35	Madrassa-An Islamic System Of Education In Kerala And Tamil Nadu – A Comparative Study **- K.Noushad**	231
36	கவிக்கோ அப்துல் ரகுமான் கவிதைகளில் ஓர் இறைத்தத்துவம் - முனைவர் அ.மா.முகமது ஹாரிஸ்	235

SUPPLEMENTARY

1	இஸ்லாமிய நாவல்களில் பெண்களின் பிரச்சனைகள் - R.முகம்மது ரபீக்	01
2	தமிழக முஸ்லிம்களின் தொழில் - வணிக வரலாறு - திருமிகு எஸ்.ஏ.முகம்மது இப்ராஹிம்	16
3	மேலப்பாளைய இஸ்லாமியர்களின் பண்பாட்டுப் பழக்கவழக்கங்கள் - ஒரு பார்வை - முனைவர் ஓ.மு.சே.அமீர் அம்சா பீவி	29
4	இசுலாம் சமயம் கூறும் அறமும் அறவாழ்வு முறைகளும் - முனைவர் கா.மைதீன்	35
5	சிங்கப்பூர்த் தமிழ் முஸ்லிம்கள் - எம்.இலியாஸ்	39
6	இஸ்லாமியத் தமிழ் இலக்கியம் - கே.ஏ.ஜெஹபர் உசேன்	46
7	தமிழக முஸ்லிம்களின் வரலாறு, பண்பாடு, இலக்கியம், சமய நல்லிணக்கம் - முனைவர்.வெ.கோகிலாதேவி	53
8	நயீமா சித்திக்கின் சிறுகதைகளில் பெண்மன உளவியல் - முனைவர் ஷி.:.பா	57

JARJ Jamal Academic Research Journal-an Interdisciplinary
S.Sugavaneshwaran, JARJ-Vol-3-1-May-2022:204-216
ISSN(P): 0973-0303
ISSN(O): 2582-5941

உலக ஒருமைப்பாட்டிற்கு நபிகளாரின் வழி

The Guidance of Prophet (Pbuh) to the Universal Unity

Dr. S.Sugavaneshwaran
Assistant Professor of Tamil, Jamal Momamed College (Autonomous),
Tiruchirappalli – 620 020. India

Abstract

Simplicity, Charity, Social harmony, Equality, Priority to poor, Remarriage, Tolerance and so on are the characteristics of the Prophet (Pbuh). This article explores his life causes to the contemporary Universal Unity, with the reference to Mu.Meth's "Nayagam Oru Kaviyam".

Keywords: Zakhat, Charity, Faith, Revelation, Salah, Monotheism.
Corresponding author E-Mail: sugavaneshwaranjmc84@gmail.com

கவிதை, கட்டுரை, புனைகதை இலக்கியங்கள் என்பன சமகால மக்களின் வாழ்வியலை துரிதமாகப் பேசும் இலக்கிய வடிவங்களாகும்.அந்த வகையில் நபிகள் நாயகம் அவர்களின் வாழ்க்கை வரலாற்றைக் கவிதைத்தொகுப்பாக்கி 'நாயகம் ஒரு காவியம்' எனும் காவியமாய்த் தந்திருப்பவர் மு.மேத்தா அவர்கள்.'இறைவன் (அல்லாஹ்) ஒருவனே அவனுக்கு இணை, துணை யாரும் இல்லை என்ற தத்துவத்தை முன்மொழிந்தவர் நபி அவர்கள்.அவரே இறுதியான இறைத் தூதர்.தன் ஓரிறைக் கோட்பாட்டை நிலைநிறுத்திய அவர்கள் மாற்று மதத்தை மதிக்கும் மாண்பு, ஏழைக்கு முன்னுரிமை, அனைவரும் சமம், பொறுமை குணம், ஈகைக்குணம் போன்ற மானுடத்திற்குத் தேவையான நல்லறத்தை வழியுறுத்தினார்.அத்தகைய நல்லறம் உலக ஒற்றுமைக்கு எவ்வாறு ஊன்றுகோளாகிறது என்பதை விவரிக்கிறது இக்கட்டுரை.

நபிகளாரின் தோற்றம்

இஸ்லாம் மார்க்கத்தைத் தோற்றுவித்த முகமது நபி அவர்கள் (நபிகள் நாயகம்) அரபு நாட்டில் உள்ள மெக்காவில் கி.பி.571ஆம் ஆண்டு ஏப்ரல் 20 ஆம் தேதி பிறந்தார். தான் பிறப்பதற்கு முன்பே தந்தையை இழந்தார். பிறகு சில ஆண்டுகள் முடிந்து தாயும் இறந்துவிட்டார்; தன் (தாத்தா) பாட்டனார் முத்தலிபு என்பவராலும் பிறகு தனது பெரிய தந்தை (பெரியப்பா) அபுதாலிபு என்பவராலும் வளர்க்கப்பட்டார். 40 ஆவது வயதில் நபிப்பட்டம் அவருக்கு அருளப்பட்டது. 63 வயதில் மரணமடைந்தார். முறையாக கல்வி பயிலாதவர். ஆனாலும் அனுபவ அறிவு அவரக்கு உதவியது. நபி அவர்களின் சிறப்பு குறித்து உலகவரலாறு, என்னும் நூல்,

"முறையான கல்வி பயிலாவிட்டாலும், சீரிய ஒழுக்கமும், நற்பண்புகளும் கொண்டவராக நபிகள் நாயகம் திகழ்ந்தார்.இளமையில் அவர் பல துயரங்களை

அனுபவித்தாலும், வர்த்தகம் செய்வதற்காகப் பல பகுதிகளுக்குச் சென்று வந்ததால் வாழ்க்கை அனுபவங்கள் பலவற்றைப் பெற்றார்.மக்களுக்குத் தொண்டுகள் புரிந்தார்"[1] என்று குறிப்பிடுகிறது.

இல்லாத ஏழை எளியவர்க்கு ஜக்காத் என்னும் ஏழைவரி கொடுக்கப்பட வேண்டும் என்ற கொள்கைகளை இஸ்லாம் தன் ஐம்பெரும் கடமைகளில் ஒன்றாக வலியுறுத்துகிறது.இக்கொள்கையை மக்களுக்கு எடுத்துக்கூறி தானே ஒரு முன்மாதிரியாக நபிகள் நாயகம் விளங்கினார்.தன் மனைவியின் செல்வமாயினும் அதை வறியவருக்கே வாரி வழங்கினார் என்று அவரது வாழ்க்கை வரலாறு சொல்கிறது. இதனைக் கவிதை வரிகளாக,

வையத்தில்
மனைவிக்குத் தெரிந்தே
மனைச் செல்வத்தினை
வறியவர்க் கெல்லாம்
வாரி வழங்கிய
முதல் மனிதரும்
கடைசி மனிதரும்
முகமதுதான்! [2]

என்று மு.மேத்தா குறிப்பிடுகிறார்.அதுபோலவே கதீஜா நாயகியின் மனமும் நம்பொருள் நமக்கானது அல்லது அது நம் கணவருக்கு உரித்தானது என்ற உயர்ந்த நற்குணம் கொண்டவராகவும் இருந்தார் என்பதை மேத்தாவின் கவிதை உணர்த்துகிறது.

முகமது அவர்களுக்கு
வள்ளல், எனும் பட்டம்
வழங்குவதற்காக
காலங்காலமாய்க்
காத்திருந்தது
கதீஜா நாயகியின்
கஜானா![3]

கதீஜா நாயகியின் உயர்ந்த குணத்தைப் பேசும் மேத்தா தன் சொக்க வைக்கும் வார்த்தைகளால் (நடை) வாசகர் மனதில் சிம்மாசனம் போட்டு அமர்கிறார்.

ISSN(P): 0973-0303
ISSN(O): 2582-5941

ஈகை

எழுத்துக்கு எளிமை என்ற அணிகலனையே சூட்டிப் பார்க்கும் மு.மேத்தா அவர்கள் வரலாற்றில் எளிமையின் இன்னுருவாய் வாழ்ந்த நபிகளாரின் எளிமை வாழ்க்கையைச் சிறப்புற கவிதையால் வடித்திருக்கிறார். மண்ணுலகில் வறுமை ஒழிந்து மானுடம் செழிக்க அனைவரும் இன்புற்று வாழ ஈகைக்குணம் தனிமனிதனுக்கு அவசியமானது. இருப்பவன் இல்லாதவனுக்குக் கொடுத்து உதவும் மனமிருந்தால் ஏழை பணக்காரன் என்ற பேதமிருக்காது என்ற கருத்தை வாய்மொழியாக மட்டும் சொல்லாமல் ஐம்பெரும் கடமைகளில் ஒன்றாகவே முன்மொழிந்திருக்கிறார் நபி அவர்கள். அது ஜக்காத் (ஈகை) என்னும் ஏழைவரி என்று அழைக்கப்படுகிறது.

காலடியில் மகுடங்கள்
காத்துக் கிடந்தன
இவரோ ஓர்
ஏழையாகவே
இறுதிவரை வாழ்ந்தார்!
உலக அதிசயங்களில்
இது ஓர்
ஒப்பற்ற அதிசயம்![4]

என்று நபிகளாரின் எளிமை வாழ்வை கவிதையால் சொல்கிறார் மு.மேத்தா. நபி அவர்கள் தனக்குப் பிறரால் கிடைத்த செல்வத்தை தனக்குப் பயன்படுத்தாமல் இல்லாத வறியவருக்குக் கொடுத்து மானுடத்தின் வறுமையைப் போக்கும் வள்ளலாய் வாழ்ந்தார்.செல்வத்தின் பயன் என்பது பிறருக்குக் கொடுப்பதில்தான் இருக்கிறது என்கிறது புறநானூறு.இதனை செல்வத்துப் பயனே ஈதல்[5] என்ற அடி சொல்லும்.எனவே மானுடம் மலர ஈகை என்னும் பெருங்குணம் வேண்டும் என்ற பெருஞ்சிந்தனையைச் சொன்னதோடு மட்டுமல்லாமல் அதைத் தன் இலக்கணமாய்ச் செய்தும் காட்டினார்.

மறுமணம்

கணவனை இழந்த பெண்ணுக்குக் காட்டுவது இல் என்றுரைப்பர்.குழந்தைமணம் கூடாது, பொருந்தாமணம் கூடாது என்றெல்லாம் முற்போக்கு எண்ணங்கள் தோன்றிய நாடு தமிழ்நாடு. ஆனால் 1500 ஆண்டுகளுக்கு முன்பாகவே 'கதீஜா நாயகி, என்னும் விதவைப் பெண்ணை மணந்து முற்போக்குப்

புரட்சியை விதைத்தார் நபி அவர்கள்' தமிழ்க் கவிஞர்களில் பாவேந்தர் பாரதிதாசன் மறுமணக் கொள்கையை ஆதரித்தவர்.

பேடகன்ற அன்றிலைப்போல் மனைவி செத்தால்
பெருங்கிழவன் காதல்செய்யப் பெண்கேட் கின்றான்
வாடாத பூப்போன்ற மங்கை நல்லாள்
மணவாளன் இறந்தால்பின் மணத்தல் தீதோ!
பாடாத தேனீக்கள், உலவாத் தென்றல்
பசியாத நல்வயிறு பார்த்த துண்டோ?[6]

என்ற கவிதை வரிகளின்மூலம் பாரதிதாசன் மறுமணக் கொள்கையை ஆதரித்தமை புலப்படுகிறது.இதனையே மு.மேத்தா அவர்களும் முகமது நபி அவர்களின் கொள்கையைக் கவிதையாக்கியுள்ளார்.

விதவையென் றொதுக்கு வாரா?
வீண்மொழி அடுக்கு வாரா?[7]

பெரியாரும் இச்சிந்தனைக்கு உரியவர்.கடவுள் ஏற்பாளரும் கடவுள் மறுப்பாளரும் இக்கொள்கைகளில் ஒன்றுபட்டு நிற்கின்றனர்.

வஹீ - அழைப்பு

பிலால் என்னும் கறுப்பினத்தவர் ஓரிறைக் கோட்பாட்டை ஏற்றுக் கொண்டவர். அவரை ஏழை என்றோ, கறுப்பர் என்றோ வெறுத்து ஒதுக்காமல் முதன் முதலில் பாங்கு சொல்ல அந்த கறுப்பினத்தவரையே அழைத்தார். ஏனென்றால் நிறத்தாலோ, பிறப்பாலோ எவரும் தாழ்ந்தவர் இல்லை என்ற உயர்ந்த கொள்கைப் பண்புடையவராக நபி அவர்கள் விளங்கினார். வெளிநாடுகளில் நிறமே பேதத்திற்குக் காரணமாக இருக்கின்றது. ஆனால் பன்நெடுங்காலத்திற்கு முன்பே கறுப்பினத்தவரை அழைத்து அங்கிகாரம் செய்து "மக்களைத் தொழுகைக்கு எவ்வாறு அழைக்க வேண்டுமென்று தீர்மானித்தபின், முதன் முதலாக பாங்கு சொல்லும் வாய்ப்பினை பிலாலுக்கே வழங்கினார்கள்"[8] என்பார் மு.மேத்தா

அத்தகைய பிலாலைப் பற்றி மேத்தா தம் கவிதைகளில்,

கறுப்பர் இனத்தில் பிறந்து வளர்ந்தவர்
அடிமையாய் இங்கும் அங்கும் அலைந்தவர்
நிலக்கரியாக நெடுநாள் வாழ்ந்தவர்
நபிகள் நாயகம் நயன விழிகளில்
பட்டதும் தொட்டதும் பசும்பொன் னானவர்

பிலால்என் பதுஅவர் பெயராம்!

....

குரலா லும்தம் கொள்கையி னாலும்
ஓங்கி வளர்ந்தவர் உன்னத மானவர்
அருள்மனங் கொண்ட அண்ணலின் தோழர்
அடிமை பிலாலின் தளையினை அகற்றித்
தாமதமின்றித் தன்வசம் வந்த
குயிலுக்கு விடுதலை கொடுத்தார்
பாங்குடன் அக்குயில் பாங்கு சொல்லவோ?[9]

என்று பிலாலின் வரலாறும் நபி அவர்களின் இரக்கக் குணமும் அநீதிக்கு எதிரான போர்க் குணமும் திறம்பட கவிதைகளில் வெளிப்படுகிறது.

அநீதிக்கு எதிரான குணம் கொண்டவரே நீதியின் மீது தாகம் கொண்டவர் ஆவர்.பிலால் என்பவர் நிறபேதத்தால் அல்லல்பட்டபோது அவரை விடுதலை செய்து அழைத்து நல்வழிப்படுத்தியவர் முகமது நபி அவர்கள். இதனைச் சிறப்பிக்கும் பொருட்டு நபி அவர்களின் நேர்மைச் சிறப்பை இவ்வாறு உரைப்பார்.

உறுகொடுமை செய்தவரை ஒடுக்க வேண்டும்!
ஒடுக்கப்பட் டிருப்போரை உயர்த்த வேண்டும்
வறியவரை ஏழையரைக் காக்க வேண்டும்
வருகின்ற பயணிகட்கும் உதவ வேண்டும்[10]

என்ற நபிகளாரின் ஒட்டுமொத்த நற்சிறப்பையும் மேற்கூறிய நான்கு வரிகள் வெளிப்படுத்துகின்றன.தொழுகை எவ்வளவு மேன்மையுடைய பண்பு என்பதையும் அதை நபி அவர்களால் பெற்று எத்தகைய சிறப்பை அடைந்தோம் என்பதையும் பின்வரும் கவிதை வரிகள் பகர்கின்றன.

பிறந்தபோது
எங்களுக்கு அழத் தெரிந்தது!
உன்னை
அறிந்தபோது தானே
தொழத் தெரிந்தது
தொழத் தெடங்கினோம்
அதனால்
தூக்கத்திலிருந்து

எழுத் தொடங்கினோம்![11]

என்ற வரிகள் நபிகள் நாயகத்தின் நேர்மைக்கும் சீரிய ஒழுக்கத்திற்கும் சான்றாக அமைவதோடு மட்டுமல்லாமல் தொழுகை என்ற இறைவழிபாட்டில் மக்கள் கொண்ட நம்பிக்கைக்குச் சான்றாகவும் அமைகிறது.

நேர்மை

செவிநுகர் கனிகளாய்த்
தேன்மொழிப் பேச்சும்
நினைவில் செயலில்
நேர்மையின் வீச்சும்[12]

என்று சொல்லிலும் செயலிலும் நேர்மையுடையவராகவே நபிகள் இருந்தார்.நின்ற சொல்லர் நீடுதோறும் இனியர், என்று நற்றிணையின் முதல் பாடலில் தலைவி தலைவனைக் கூறுவதாக இருக்கும் அந்த வரிக்குப் பொருத்தமானவராக நபி விளங்கினார் எனலாம். இங்கு ஒரு வித்தியாசம் நற்றிணைத் தலைவன் அகத்திற்கு (காதல்) மட்டும் தலைவராயிருக்க நபியோ! அகத்திற்கும், புறத்திற்கும் (நாடு, வீடு) தலைவராக இருக்கிறார்.ஏனென்றால் எதைச் சொன்னாரோ அதையே செய்தார் எதைச் செய்தாரோ அதையே சொன்னார்.இத்தகைய நேர்மையான மானுடப் பண்பு யாவர்க்கும் இருக்குமானால் நாட்டில் தொல்லைகள் அற்ற சமூகம் நின்று வாழும் என்பது திண்ணம்.

பாடங்கள் ஐந்து

எழுதப்படிக்கத் தெரியாத நபி அவர்கள் இந்த ஞாலத்திற்குப் புத்தகமானார்.ஏனென்றால் அவர் அல்லா (இறைவன்) என்னும் ஆசானிடத்தில் கற்றதனால் என்பார் கவிஞர் மு.மேத்தா.மேலும் உலகப் பல்கலைக்கழகத்தில் நபிகளின் பாடங்கள் ஐந்து அவை கலிமா, தொழுகை, நோன்பு, ஜக்காத், ஹஜ் என்கிறார். இதனை,

கல்லாத நபியே! நீங்கள்
கற்றதெல்லாம்
அல்லா என்னும்
ஆசானிடத்திலோ?
பள்ளிக் கூடத்தையே
பார்க்காத நீங்கள்
பள்ளிகளைக்

ISSN(P): 0973-0303
ISSN(O): 2582-5941

கட்டிக் கொடுத்தீர்களே
படைத்தவனை ஐவேளை
படிப்பதற்காகவோ?
.....
பாரெல்லாம் நடைபெறும்
உங்கள்
பல்கலைக் கழகத்தில்
பாடங்கள் ஐந்தோ?
கலிமா, தொழுகை,
நோன்பு, ஜக்காத்
பாடங்கள் ஐந்தே[13]

என்ற கவிதைமூலம் குறிப்பிடுகிறார்.

சுயநலமற்றவர்

தனிமனித வாழ்விலும் பொது வாழ்விலும் சுயநலமற்றவரே தூய மனிதராவர்.அத்தகைய சிறப்புக்கு உரியவர்கள் உலகத்தில் பலர் உண்டு.அவர்களில் நபிகள் நாயகம் முதன்மையில் இருக்கும் குறிப்பிடத் தகுந்தவர்.அண்ணல் நபி அவர்களுக்கு தம்முடைய மகள் ருக்கையா மற்றும் உம்முகுல் இருவரையும் அபூலகப் என்பவரின் இரண்டு மகன்களுக்கும் மணமுடித்து வைத்திருந்தார். அந்த இருபெண்களையும் மணவிலக்குச் செய்யுமாறு (விவாகரத்து) மகன்களுக்கு உத்தரவிட்டார் அபூலகப், அதன் படியே உத்பா என்ற மூத்த மகனும் உதைபா என்ற இளையமகனும் விவாகரத்துச் செய்து நபிகளாரின் வீட்டிற்கு அனுப்பி வைத்தனர். ஓரிறைக் கோட்பாட்டை பெருமானார் முன்மொழிந்ததால் தன் மகள்களின் வாழ்க்கைப் பறிபோனது. ஆனாலும் அன்று தான் கொண்ட கொள்கையில் மாறாமல், தன் குடும்பத்திற்காக கொள்கைகளை விட்டுக் கொடுக்காமல் உறுதியாக நின்றார். அதனால் இன்று வரலாற்றில் நிலைத்து நிற்கிறார்.

இடும்பைகள் செய்வோர்க் கிங்கே
இதயமே இல்லை! ஆனால்
குடும்பத் துயருக் காகக்
கொள்கையை இழப்பதாமோ?[14]

ISSN(P): 0973-0303
ISSN(O): 2582-5941

என்று கவிதைவரிகள் உணர்த்துகின்றன.குடும்பத்துயருக்காகத், கொள்கைகளை இழக்காதவர் என்றும் கூறலாம்.கொள்கைக்காக குடும்பத்தை இன்னலுக்கு உள்ளாக்கியர் என்றும் கூறலாம்.

இன்றைய தலைமை தொண்டனுக்குத் துன்பத்தையும் தலைமைக்குச் சுகத்தையும் எதிர்பார்க்கும் சுயநலமுடைய கூட்டமாகவே இருக்கிறது.தந்தை பெரியார் தம் பொதுவாழ்வில் தன் குடும்பப் பெண்களையும் பங்கெடுக்கச் செய்தார்.கள்ளுக்கடை மறியலில் பெரியாரின் மனைவி மற்றும் சகோதரி பங்கெடுத்தனர் என்பது பிரபஞ்சன் தம் கவிதைகளில் பதிவு செய்கிறார்.

தொண்டனுக்குச் சிறைவாசம்
தலைவனுக்குச் சுகவாசம் என்னும்
குண்டர் தலைவர்கள்
கோலோச்சும் காலத்தில்
தம் வீட்டுப்
பெண்டுகளைத் தண்டனைக்குத்
தந்த பெருமானி ![15]

என்பது கவிதை வரிகள்.இக்கவிதைவரி பெரியாருக்கும் பொருந்தும் நபி அவர்களுக்கும் பொருந்தும்.

இன்னலைப் பொறுத்த பொறுமைகள்

ஆன்மீகக் கருத்தையும் பகுத்தறிவாதக் கருத்தையும் சுதந்திரக் கருத்தையும் போதிக்க வந்த தலைவர்கள் அனைவரும் வெற்றி என்ற ஒன்றைப் பெற்றிருக்கிறார்கள் என்றால் அதற்குப் பொறுமை என்ற ஆயுதம் முக்கிய ஒன்றாக இருந்திருக்கிறது.

உலகத் தத்துவஞானி சாக்ரடீஸ், ஓரிறைக் கோட்பாட்டை உலகறியச் செய்தஏந்தல் நபி, பகுத்தறிவுக் கொள்கைகளை அஞ்சாமல் எடுத்துரைத்த தந்தை பெரியார் போன்றவர்கள் குறிப்பிடத் தகுந்தவர்கள்.

கிரேக்கத்தின் ஏதென்ஸ் நகரில் பகுத்தறிவுக் கொள்கைகளைப் பரப்பியவர் சாக்ரடீஸ்.முதல் மனைவி இறக்கவே இரண்டாவது திருமணம் செய்தார்.முதல் மனைவிக்கு எதிர்மறையான குணம் கொண்டவர்.தன் கணவனுக்கு எதுவுமே தெரியாது என்று நினைப்பாள்.வெட்டி.யாகப் பேசுபவர் என்று நகைப்பாள்.ஒருமுறை கணவனை அழைக்கிறார் சாக்ரடீஸ் பகுத்தறிவுப் பிரசங்கம் செய்து கொண்டிருக்கிறார்.அழைப்பு காதில் விழவில்லை பிறகு அவரின் மனைவி கத்துகிறார்.பிறகு பாத்திரத்தைத் தூக்கி வீசுகிறார். அதற்கும் செவிமடுக்காததால்

தண்ணீரைக் கொண்டுவந்து தலையில் கொட்டுகிறார்.அப்போது சாக்ரடீஸ் இவ்வாறு உரைக்கிறார்.

"இந்த எதிர்பாராத சம்பவத்தால் சாக்ரடீஸ் திடுக்கிட்டார்.என்றும், ஆத்திரம் அடையவில்லை தன் நண்பரைப் பார்த்து இவ்வளவு நேரம் வானம் மின்னியது, இடி இடித்தது இப்போது மழை பெய்கிறது. அவ்வளவுதான் என்று அமைதியாகக் கூறினார். என்கிறது உலக வரலாறு என்னும் நூல்.[16]

இருபதாம் நூற்றாண்டில் பகுத்தறிவுக் கொள்கைகளைப் பரப்ப வந்த பெரியார் சந்தித்த இன்னல்கள் பல உண்டு.ஆனால் அதற்கெல்லாம் அஞ்சா நெஞ்சம் கொண்டவராக விளங்கி பலரின் எதிர்ப்பைச் சந்தித்தார்.பகுத்தறிவுக் கருத்தைப் பரப்பும் இடத்தில் ஒருவன் செருப்பைக் கொண்டு வீசினான். அப்போது பெரியார் இன்னொரு செருப்பையும் வீசு நான் பயன்படுத்திக் கொள்கிறேன் என்று எதிர்மொழி தந்தார்.

யாரப்பா அங்கே....
ஒற்றை செருப்பை எறிந்தாய்
ஒன்றைக் கொண்டு என்ன செய்ய?
நெஞ்சில் உரம் இருந்தால்
மீதி இருப்பதையும் போட்டுவிடு
மிதித்து நடக்க உதவும்,
.....
.....
புற்றுக்குள் பாம்புகள்
புகுந்து மறைவது போல
ராமன் வாரிசு
நகர்ந்து மறைந்தான்
தமிழர், தலையில் சுமந்த
செருப்பை
முதன் முதலாகக்
காலில் போட்டு மிதித்தது
பெரியார் ஒருவரே [17]

என்று பிரபஞ்சனின் கவிதை வரிகளில் சாதிய ஏற்றத்தாழ்வு போகப் பெரியார் செய்த தொண்டும் பொறுமையும் சிறப்பானது என்பதை விளக்குகிறது.மனிதனுக்கு

மனிதன் அடிமை அல்ல ஒரு மனிதனின் காலில் இன்னொருவன் விழுதல் கூடாது போன்ற அடிமைத்தனத்திற்கு எதிரான முற்போக்குச் சிந்தனையை நபி அவர்கள் மக்களிடத்தில் கொள்கைப் பிரகடனம் செய்தவர். ஓரிறைக் கோட்பாட்டைச் சொல்ல முற்பட்டபோது பல இன்னல்களை அவர் சந்தித்தார்.அதில் குறைசியர்கள் குறிப்பிடத்தக்கவர்கள்.நபி அவர்களைக் கொல்ல முயற்சி செய்தவர்கள்.அதுபோல வயதானப் பெண்மணி ஒருவர் நபிகள் நாயகத்தின் கொள்கையை எதிர்த்து தினமும் அவர் தலையில் குப்பைக் கொட்டினார்.ஆனாலும் நபிகள் ஒருபோதும் பொறுமை இழக்காதவராகவே இருந்தார்.அந்தப் பெண் உடல் நிலை பாதிக்கப்பட்டபோது நலம் விசாரித்து ஆறுதல் கூறினார். இன்னா செய்தாரைத் தண்டித்தல் எப்படி என்றால் அவர்களுக்கு மேலும் நன்மை செய்வதே என்ற வள்ளுவரின் வாக்கினைப் போல் நபி அவர்களின் செயல்பாடு அமைந்தது. அந்தக் குப்பைக் கொட்டும் கிழவியின் செயலை மேத்தா தம் கவிதைகளில்,

குப்பைத் தன்மேல் கொட்டும் கிழவியைக்
கோபமாய் அண்ணல் பார்ப்பதில்லை!
கூவி வலம்வரும் கோகிலத் தின்குரல்
வெயிலில் புழுங்கி வேர்ப்பதில்லை

தப்பென அந்த மூதாட்டிக்குச்
சற்றும் குற்றம் தெரியவில்லை
தாஹா நபியின் நெஞ்சம் அதனால்
தணலாய் மாறி எரியவில்லை![18]

என்று நபிகளாரின் பொறுமையை மேற்கூறியக் கவிதைவரிகள் எடுத்துக் கூறின. தலைமைப் பொறுப்பில் இருக்கும் சான்றோன் எத்தகைய சகிப்புத் தன்மையைக் கொண்டிருக்க வேண்டும் என்பதற்கு நபிகள் நாயகம் ஒரு எடுத்துக்காட்டாகும்.

இறைவன்
அகிலத்திற்கே ஓர்
அருட்கொடையாக
சாந்த நபிகளை
ஜக்காத் வழங்கினான்[19]

ISSN(P): 0973-0303
ISSN(O): 2582-5941

என்ற வரிகள் நபிகள் நாயத்தின் அறவழிப்பாதை மண்ணுயிர்க்கெல்லாம் மகத்துவமாய் அமைந்தது என்று எடுத்துரைக்கிறது.இன்னும் சிறப்பாக, மற்றொரு இடத்தில் மேத்தா பதிவிடுகிறார்.

பசித்தவர்க் குணவும்
பதைத்தவர்க் குடையும்
நசிந்தவர்க் குயர்வும்
நல்கிய வள்ளலே![20]

என்ற வரிகள் பெருமானார் கையாண்ட மனித குலத்திற்குத் தேவையான சமூக நீதி சொல்கிறது.

அனைவரும் சமம்

மனிதனுக்கு மனிதன் பார்த்தால் தீட்டு, தொட்டால் தீட்டு என்ற வர்க்கபேதம் இன்னும் இம்மண்ணில் இருக்கிறது. ஆனால் பல நூறு ஆண்டுகளுக்கு முன்பே அனைவரும் சமம் என்ற சமத்துவத்தை மக்களுக்குப் போதித்ததோடு மட்டுமல்லாமல் அதன்படி வாழ்ந்தும் காட்டினார் நபி (ஸல்) அவர்கள்.இதனை மேத்தா தன் கவிதைகளில் பின்வருமாறு குறிப்பிடுகிறார்.

அவையிலே நுழையுங் காலை
அங்குளோர் எழுந்து நின்றால்
தவறென்பார்! அனைவ ரும்நாம்
சமம் என்பார்! தழுவிக் கொள்வார்![21]

முடிவுரை

நபி அவர்களின் வாழ்க்கை வரலாற்றைச் சொல்லும் நூலாக 'நாயகம் ஒரு காவியம்' என்னும் கவிதைத் தொகுப்பு அமைகிறது.சமத்துவக் கொள்கை, மறுமணக் கொள்கை, ஈகைக் குணம், ஏழைக்கு முன்னுரிமை, மாற்று சமுதாய மதிப்பு, பொறுமைக் குணம் போன்றவற்றை முன்மொழிகிறது.சாதியால், மதத்தால் பிரிந்திருக்கும் இன்றைய மனித குலத்திற்கு நபிகளாரின் 'ஞான உபதேசம், அறியாமை இருளைப் போக்குதட அரும் மருந்தாகும்' என்பதில் எவ்வித ஐயமும் இல்லை.அதன் பொருட்டே 'மார்க்கப் படகுக்கு மாலுமியாய் வந்தவரே!மானுடத்தின் மேன்மைக்கு மகத்துவங்கள் தந்தவரே' என்றார் மு.மேத்தா.

ISSN(P): 0973-0303
ISSN(O): 2582-5941

என்ற வரிகள் நபிகள் நாயத்தின் அறவழிப்பாதை மண்ணுயிர்க்கெல்லாம் மகத்துவமாய் அமைந்தது என்று எடுத்துரைக்கிறது.இன்னும் சிறப்பாக மற்றொரு இடத்தில் மேத்தா பதிவிடுகிறார்.

பசித்தவர்க் குணவும்
பதைத்தவர்க் குடையும்
நசிந்தவர்க் குயர்வும்
நல்கிய வள்ளலே![20]

என்ற வரிகள் பெருமானார் கையாண்ட மனித குலத்திற்குத் தேவையான சமூக நீதி சொல்கிறது.

அனைவரும் சமம்

மனிதனுக்கு மனிதன் பார்த்தால் தீட்டு, தொட்டால் தீட்டு என்ற வர்க்கபேதம் இன்னும் இம்மண்ணில் இருக்கிறது. ஆனால் பல நூறு ஆண்டுகளுக்கு முன்பே அனைவரும் சமம் என்ற சமத்துவத்தை மக்களுக்குப் போதித்ததோடு மட்டுமல்லாமல் அதன்படி வாழ்ந்தும் காட்டினார் நபி (ஸல்) அவர்கள்.இதனை மேத்தா தன் கவிதைகளில் பின்வருமாறு குறிப்பிடுகிறார்.

அவையிலே நுழையுங் காலை
அங்குளோர் எழுந்து நின்றால்
தவறென்பார்! அனைவ ரும்நாம்
சமம் என்பார்! தழுவிக் கொள்வார்![21]

முடிவுரை

நபி அவர்களின் வாழ்க்கை வரலாற்றைச் சொல்லும் நூலாக 'நாயகம் ஒரு காவியம்' என்னும் கவிதைத் தொகுப்பு அமைகிறது.சமத்துவக் கொள்கை, மறுமணக் கொள்கை, ஈகைக் குணம், ஏழைக்கு முன்னுரிமை, மாற்று சமுதாய மதிப்பு, பொறுமைக் குணம் போன்றவற்றை முன்மொழிகிறது.சாதியால், மதத்தால் பிரிந்திருக்கும் இன்றைய மனித குலத்திற்கு நபிகளாரின் 'ஞான உபதேசம், அறியாமை இருளைப் போக்குதட அரும் மருந்தாகும்' என்பதில் எவ்வித ஐயமும் இல்லை.அதன் பொருட்டே 'மார்க்கப் படகுக்கு மாலுமியாய் வந்தவரே!மானுடத்தின் மேன்மைக்கு மகத்துவங்கள் தந்தவரே' என்றார் மு.மேத்தா.

அடிக்குறிப்புகள்

1. ஐ.சண்முகநாதன், உலக வரலாறு, பூம்புகார் பதிப்பகம், சென்னை-18, செப்டம்பர் 2003, ப.11
2. மு.மேத்தா,நாயகம் ஒரு காவியம், மல்லிகைப் பதிப்பகம், சென்னை-90, ஜூன் 2003, ப.55
3. மேலது, ப.56
4. மேலது, ப.09
5. ச.வே.சுப்பிரமணியம், புறநானூறு மூலமும் தெளிவுரையும், மணிவாசகர் பதிப்பகம், சென்னை-108, ப.700
6. பாரதிதாசன் கவிதைகள், மணிவாசகர் பதிப்பகம், சென்னை-108, 6-ஆம் பதிப்பு 2008,ப.120
7. மு.மேத்தா,நாயகம் ஒரு காவியம், மல்லிகைப் பதிப்பகம், சென்னை-90, ஜூன் 2003, ப.51
8. மேலது, ப.98
9. மேலது, ப.98
10. மேலது, ப.43
11. மேலது, ப.137
12. மேலது, ப.38
13. மேலது, ப.39
14. மேலது, ப.92
15. பிரபஞ்சன், ஈரோடு தமிழர் உயிரோடு, கவிதா பதிப்பகம், சென்னை-17, ஜூலை 1998, ப.22
16. ஐ.சண்முகநாதன், உலக வரலாறு, பூம்புகார் பதிப்பகம், சென்னை-18, செப்டம்பர் 2003, ப.11
17. பிரபஞ்சன், ஈரோடு தமிழர் உயிரோடு, கவிதா பதிப்பகம், சென்னை-17, ஜூலை 1998, ப.37
18. மு.மேத்தா,நாயகம் ஒரு காவியம், மல்லிகைப் பதிப்பகம், சென்னை-90, ஜூன் 2003, ப.80
19. மேலது, ப.20
20. மேலது, ப.212
21. மேலது, ப.219

ISSN(P): 0973-0303
ISSN(O): 2582-5941

Reference

1. I.Sanmuganathan, Ulagavaralaru (Sep.2003), Poombukar Publications, Chennai-08, P.11
2. Mu.Metha, Nayagam Oru Kaviyam (June 2003), Malligai Publications, Chennai-90,P.55
3. Ibid, 56
4. Ibid, 09
5. Sa.Ve.Subramaniyan (Text Editor) (June. 2010), Purananooru, Manivasagar Publications, Chennai-108, P.700
6. Bharathidasan Kavithaigal, Manivasagar Publications, Chennai-108,P.120
7. Mu.Metha, Nayagam Oru Kaviyam (June 2003), Malligai Publications, Chennai-90, P.51
8. Ibid, 98
9. Ibid, 98
10. Ibid, 43
11. Ibid, 137
12. Ibid, 38
13. Ibid, 39
14. Ibid, 92
15. Prabanjan, Erode Thamilar Uiroodu (July, 1998),Kavitha Publications, Chennai-17,P.37
16. I.Sanmuganathan, Ulagavaralaru (Sep.2003), Poombukar Publications, Chennai-08, P.22
17. Prabanjan, Erode Thamilar Uiroodu(July, 1998), Kavitha Publications, Chennai-17, P.37
18. Mu.Metha, Nayagam Oru Kaviyam (June 2003), Malligai Publications, Chennai-90, P.80
19. Ibid, 20
20. Ibid, 212
21. Ibid, 219

Vol - 3 -1&1S May 2022
Online Version : www.jmcjarj.org

ISSN (P) : 0973-0303
ISSN (O) : 2582-5941

JARJ

Jamal Academic Research Journal : an Interdisciplinary



தமிழக முஸ்லிம்களின் வரலாறு, பண்பாடு, இலக்கியம்

HISTORY, CULTURE AND LITERATURE OF MUSLIMS OF TAMIL NADU

பதிப்பாசிரியர்கள்
பேரா. கா. முகமது இஸ்மாயில்
முனைவர் தா. உமர் சாதிக்
முனைவர் ச.அ.சையத் அகமது பிரோசு

ஜமால் முகமது கல்லூரி (தன்னாட்சி)
ஆற்றல் வளத்தனித்ததகுதியும்
தேசியத்தர மதிப்பீட்டு மூன்றாம் சுற்றில் 'A' தகுதிச் சான்றும்
DBT -நட்சத்திரக் கல்லூரித்திட்டம் மற்றும் DST-FIST நிதிநல்கையும் பெற்றது
(பாரதிதாசன் பல்கலைக்கழக இணைவு பெற்றது)
திருச்சிராப்பள்ளி- 620 020

Since 1951

தமிழக முஸ்லிம்களின் வரலாறு, பண்பாடு, இலக்கியம்

பதிப்பாசிரியர்கள்	:	பேரா.கா.முகமது இஸ்மாயில் முனைவர் தா.உமர் சாதிக் முனைவர் ச.அ.சையத் அகமது பிரோசு
வகை	:	பன்னாட்டுக் கருத்தரங்க ஆய்வுக் கட்டுரைகளின் தொகுப்பு (தமிழ் மற்றும் ஆங்கிலம்)
பக்கங்கள்	:	378
வெளியீடு	:	ஜமால் முகமது கல்லூரி (தன்னாட்சி), திருச்சிராப்பள்ளி - 620 020
அச்சாக்கம்	:	தி பிரிண்டிங் ஹவுஸ், திருச்சி -23

JARJ

Jamal Academic Research Journal : an Interdisciplinary
ISSN (P) : 0973-0303
ISSN (O) : 2582-5941
Online Version : www.jmcjarj.org

History, Culture and Literature of Muslims of Tamil Nadu

Guest Editors	:	Prof.K.Mohamed Ismail Dr.T.Umar Sadiq Dr.S.A.Syed Ahmed Firoz
Subject	:	Research Articles of an International Seminar (English and Tamil)
Pages	:	378
Publication	:	Jamal Mohamed College (Autonomous) Tiruchirappalli - 620 020
Printing	:	The Printing House, Trichy -23

9	இஸ்லாமியத் தமிழ்ச் சிறுகதைகள் தோற்றமும் வளர்ச்சியும் - திரு.மு.சாதிக் அலி	64
10	லால்பேட்டை, ஜாமிஆ மன்பஉல் அன்வார் அரபுக் கல்லூரியின் வரலாறும், வளர்ச்சியும் - திரு.அ.முஹம்மது யாசிர்	67
11	நாகூர் இ.எம்.ஹனீபாவின் இஸ்லாமிய பாடல்களில் ஆன்மீக சிந்தனைகளும், வரலாற்றுச் செய்திகளும்... - முனைவர் சே.அமீருதீன்	71
12	இந்தியாவில் இஸ்லாம் சமயம் - A.ஹபீப் முகம்மது	77
13	குணங்குடி மஸ்தான் சாகிபும் அவருடைய பராபரக்கண்ணியும் - முனைவர் கு.கண்ணன்	87
14	காயிதே மில்லத் இஸ்மாயில் சாகிப் - கலைஞர் மு.கருணாநிதி நட்புறவு - முனைவர் அ.ரசித்கான்	91
15	சீறாவில் அலிமா - ஆமினா கனவுகள் விளக்கம் - முனைவர் மு.சேக் அப்துல்லா	102
16	Contribution of Kunangudi Masthan Sahib to Tamil Literature **- Dr. V. Manimuthu**	107
17	Muslim Wedding Ceremony **- G. Sutha**	110
18	ஜே.எம்.சாலியின் ஆயுள் தண்டனை நாவலில் குகைவாசிகளின் வரலாறு - முனைவர் க.இக்பால்	114

JARJ Jamal Academic Research Journal-an Interdisciplinary ISSN(P): 0973-0303
SINCE 1951 K.Igbal, JARJ-Vol-3-1S-May-2022:114-119 ISSN(O): 2582-5941

ஜே.எம்.சாலியின் ஆயுள் தண்டனை நாவலில் குகைவாசிகளின் வரலாறு

முனைவர் க.இக்பால்,
இணைப்பேராசிரியர்,தமிழாய்வுத்துறை (தன்னிதிப் பிரிவு),ஜமால் முகமது கல்லூரி (தன்னாட்சி),திருச்சிராப்பள்ளி - 620 020.

முன்னுரை

ஜே.எம்.சாலியின் ஆயுள் தண்டனை நாவல் குர்ஆனின் பதினெட்டாவது அத்தியாயமான 'அல்கஹ்ப்' (குகை)-ஐ கருப்பொருளாகக் கொண்டு புனையப்பட்டது. இதில் வரும் வரலாற்று நிகழ்ச்சிகளான சில வாலிபர்கள் இஸ்லாத்தைக் காப்பிற்றிக் கொள்ள குகையில் தங்கிய நிகழ்வு, மூஸா நபியும் ஹில்ரு நபியும் சந்தித்து உரையாடியவைகள், இறுதிநாட்களில் தோன்ற இருக்கும் தஜ்ஜால் மற்றும் தோட்டக்காரர்களின் வரலாற்றுச் செய்திகள் நாவலில் படிப்பினையாகவும் பொறுமையைக் கைக்கொள்ள ஆதரவாகவும் கொள்ள வேண்டும் என்பவை சித்தரிக்கப்பட்டுள்ளன. இதனை ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கம் ஆகும்.

ஜே.எம்.சாலி (ஆசிரியர் குறிப்பு)

அறுபது ஆண்டுகளுக்கும் மேலாக தமிழிலக்கிய வானில் இலங்கிடும் நட்சத்திர எழுத்தாளர் ஜே.எம்.சாலி. இவரது எழுத்துலகப் பயணம் தமிழ் மண்ணில் தொடங்கி சிங்கப்பூரில் இன்றும் தொடர்கின்றது. சிங்கப்பூரிலும் மலேசியாவிலும் வெளிவந்த சாலியின் நெடுங்கதைகளான "அலைகள் பேசுகின்றன (1971), அழகே ஆர்க்கிட் மலரே (197() கவிதை தேடும் ராகம் (1981), நெஞ்சத்தைக் கொஞ்சம் தா (1982), நெருப்பு மலர் (1983), கனவுக் கன்னி (1983), ஆவிகள் அழைக்கின்றன (1985), தீண்டாத தென்றல் (1986), தேனிலவு (1987), வானம் தேடும் வெண்ணிலா (1987), புன்னகை மன்னன் (1987), மின்னல் பூ (1988), அழகிய முகங்கள் (1989), முகத்திரை (1994)" போன்றவை இவரது சிறந்த படைப்புகளாகும்.

சிங்கப்பூர் தமிழ் இஸ்லாமிய எழுத்தாளரான இவர் இரவாஞ்சேரியில் (10-04-1939) பிறந்தவர். இவர் 2015-ஆம் ஆண்டின் சிறந்த தென்கிழக்கு ஆசிய இலக்கிய விருது பெற்றவர். சிங்கப்பூர் தொலைக்காட்சி செய்தி ஆசிரியர், பள்ளாசிரியர், பத்திரிகையாளர். பல்வேறு இதழ்களில் சிறுகதைகள் தொடர்கதைகள், கட்டுரைகள் எழுதி வருபவர். இஸ்லாமியத் தமிழிலக்கியக் கழகத்தின் வெளிநாட்டுத் தொடர்பாளராக உள்ளார். இவரின் 'ஆயுள் தண்டனை' நாவல் திருச்சி ஜமால் முகமது கல்லூரி (தன்னாட்சி), தமிழாய்வுத்துறை, பாடத்திட்டத்தில் வைக்கப்பெற்றுள்ளது.

ஆயுள் தண்டனை கதைச்சுருக்கம்

கதாநாயகி ஹபீபா, 'நிஸ்வான்' மதரஸாவில் (பாடசாலையில்) ஜமீலா ஆலிமா என்ற ஆசிரியையிடம் பாடம் பயின்றவள். இந்த ஆசிரியை 'குகை' எனும் அத்தியாத்தில் உள்ள 'அல் கஹ்பு சூராவை' ஓது உன் மனதில் உள்ள கஷ்டம் நீங்கி தெளிவு கிடைக்கும் என்பார். அந்த மதரஸாவில் பயின்ற மாணவிகளின் சந்தேகத்தை ஆசிரியருக்கு அடுத்த நிலையில் இருந்து விளக்குவதில் ஹபீபா சிறந்து விளங்குகிறாள். நல்ல அறிவு, குணம், அழகு உடையவளாக ஹபீபா இருக்கின்றாள். புகாரியின் தாய் பல்கீஸ் நாச்சியார் ரொம்ப பிடிவாதக்காரி. அவளுடைய தோழி சலங்கையூர் சக்கீனாவுடன் சேர்ந்து திருமணத்திற்குச் செய்த சீர்வரிசைகள் குறைவாக இருக்கிறது எனக்குறைகூறி இருவரையும் பிரித்து வைக்கின்றனர். நகை சீர்வரிசை எல்லாம் தருகிற வரைக்கும் சேர்ந்து வாழக் கூடாது என்று பல்கீஸ் நாச்சியார் புகாரியைத் தன் மருமகனுடன் வெளிநாட்டுக்கு வேலைக்கு அனுப்பி வைக்கிறாள். ஹபீபாவை ஒரு வேலைக்காரியைப்போல் நடத்துகின்றாள். அவளும் இரண்டு வருடங்களாக இயந்திர வாழ்க்கையை வாழ்ந்தாலும் பொறுமையாக இருக்கிறாள். வெளிநாட்டிலிருந்து ஒருமுறை வந்த புகாரி ஹபீபாவை நெருங்குகிறான்.

இரண்டு வருடங்களுக்குப் பிறகு பல்கீஸ் நாச்சியாருக்கு உடலின் ஒரு பகுதியில் பக்கவாதம் ஏற்பட்டு மருத்துவமனையில் அனுமதிக்கப்படுகிறாள். புகாரியும் வெளிநாட்டில் இருந்து வருகிறான். ஜமீலா ஆலிமாவும் மருத்துவமனைக்கு பல்கீஸ் நாச்சியாரைப் பார்க்க வருகின்றார். ஜமீலா புகாரியிடம் இனி நீ கவலைப் படாதே

ISSN(P): 0973-0303
ISSN(O): 2582-5941

இனிமேல் இருவரும் சந்தோசமாக இருங்கள் உன் தாயாரை நான் பார்த்துக் கொள்கிறேன் என்று கூறுகிறான். புகாரியும் ஹபீபாவும் வீடு திரும்புகின்றனர். அப்ப நாச்சியாருக்குக் கிடைச்சிருக்கிறது ஆயுள் தண்டனையா? என்கிறாள் முத்து. அது அவன் (அல்லாஹ்) அறிஞ்சதுதான். என்கிறாள் ஜமீலா.

ஆயுள் தண்டனை நாவலின் கதைக் கரு

இஸ்லாமியக் குடும்பப் பின்னணியில் அமைந்த நாவல் இது. மருமகள் ஹபீபாவை வேலைக்காரியாக நடத்தும் மாமியார் நாச்சியார். மனைவிமேல் அதிக அன்பிருந்தும் தாய்க்குப் பயந்து அதை வெளிக்காட்டத் தயங்குகிறான் கதை நாயகன் புகாரி. தன் மகள் புகாரியையும் மருமகள் ஹபீபாவையும் ஒன்று சேராமல் தடுத்த நாச்சியாருக்கு உடலில் ஒரு பக்கமே விளங்காமல் போனது. அக்கிரமம் செய்பவர்களை இறைவன் தண்டிப்பான். அது சிலருக்கு உலகிலேயே கிடைத்துவிடுகிறது. இதுவே பல்கீஸ் நாச்சியாருக்குக் கிடைத்த இந்த ஆயுள் தண்டனையாகும்.

ஆயுள் தண்டனை கதாபாத்திரங்கள்

தலைமை மாந்தர்கள் : 1.ஹபீபா, 2.பல்கிஸ் நாச்சியார் (ஹபீபாவின் மாமியார்), 3.சலங்கையூர் சக்கினா.

துணைநிலை மாந்தர்கள் : 1. புகாரி (ஹபீபாவின் கணவர்), 2.டாக்டர் அக்பர் அலி, 3. நாதிரா (ஹபீபாவின் நாத்தனார்), 4. முத்து (எ) முத்தலிப், முத்து வீடியோ கடை உரிமையாளர், கம்ப்யூட்டர் கழினி – வாசகன் MCA பட்டதாரி,

நிகழ்ச்சி மாந்தர்கள் : 1.ஜமீலா ஆலிமா, 2.டாக்டர் கமலா (போலி) –வ.35, 3.டாக்டர் மரியம் பானு (டாக்டர் முனீரா), 4. 'பேனா முனை' பிர்தவ்ஸ் –சமுதாய எழுத்தாளர், 5.போஸ்ட் மேன் சிங்காரம், 6.பஷீர் – சக்கினா கணவர் – வக்கீல் குமாஸ்தா, 7.தம்பி துரை – நமது குரல் வெளியிடுபவர் 8.மூமின் அலி – வாசகர், 9.ஆதம் – பல்கீஸ் நாச்சியார் கணவர், 10.ஹபீபாவின் அம்மா, 11.அல்லா பிச்சை கறிக்கடை, 12.ஹபீபாவின் நிஸ்வான் தோழிகள்

ஆசிரியர் ஜே.எம்.சாலி அவர்கள் தன்னுடைய நாவலின் முன்னுரையில் 'முஸ்லிம் முரசு' இதழில் வெளிவந்த வாசகர் ஒருவரின் கடிதத்தை பதிவு செய்துள்ளார். இதனை,

"கணவர் வெளிநாட்டில் இருக்கும்போது மார்க்கத்திற்குப் புறம்பாக அன்னிய ஆண்களை வீட்டுக்குள் அனுமதிக்கும் நாதிரா, மருமகளை சம்பளமில்லாத வேலைக்காரியாக மட்டும் நினைக்கும் மாமியார் நாச்சியார், அடுத்த வீட்டு விஷயங்களில் மூக்கை நுழைத்து திம்மதியைக் கெடுக்கும் சக்கினா, மாமியாரின் கொடுமைகள் அனைத்தையும் தாங்கிக் கொண்டு பொறுமைகாக்கும் மருமகள் ஹபீபா, மனைவிமேல் பாசமிருந்தும் தன் தாய்க்குப் பயந்து அதை வெளிக்காட்டத் தயங்கும் மகன் புகாரி போன்ற கதாப்பாத்திரங்களின் மூலம் எடுத்துக்காட்டும் ஆயுள் தண்டனை நூல் ஆசிரியர் ஜே.எம்.சாலி" (ஜே.எம்.சாலி, ஆயுள் தண்டனை, ப.3) என்று பனைக்குளம் அபுஸார பேகம் என்ற வாசகர் பாராட்டியுள்ளார் என்தன் வாயிலாக நாவலின் பாத்திரப்படைப்பின் சிறப்பினை அறியமுடிகிறது.

குர்ஆனில் அல் கஹ்பின் சிறப்புகள்

திருக்குர்ஆனில் மொத்தம் 114 அத்தியாயங்கள் உள்ளன. இதில் பதினெட்டாவது அத்தியாயமாக இருப்பது 'அல் கஹ்ஃபு' ஆகும். இதில் 110 வசனங்கள் உள்ளன. இந்த சூராவை ஜும்ஆ நாளன்று ஓதுமாறு நபி (ஸல்) அவர்களின் கீழ்கண்ட நபிமொழி வலியுறுத்துகின்றனது.

"ஜும்ஆ நாளன்று கஹ்ப் சூராவை ஓதுபவர் எட்டு நாட்கள் (அடுத்த ஜும்ஆ வரை சகல குழப்பங்களிலிருந்தும் பாதுகாக்கப்படுவார். தஜ்ஜால் வந்துவிட்டாலும் அச்சமயத்தில் அவனுடைய குழப்பத்திலிருந்தும் பாதுகாக்கப்படுவார்கள் என்று (நபி) அவர்கள் கூறியதாக ஹஜ்ரத் அலீ (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்". (தல்ஸிர் இப்னு கஸீர்) என்பதன்வழி அறிய முடிகிறது.

இந்த நாவலில் ஹபீபாவின் ஆசிரியை ஜமீலா ஆலிமா அவர்கள் ஹபீபாவிற்கு எல்லா சிக்கல்களும் தீர தகை அத்தியாத்தை ஓதி வரும் படிக் கூறி இருந்தார். எனவே ஹபீபாவும் எப்போதும் இவ் அத்தியாத்தை அதிகமாக ஓதி வருவதை ஆசிரியர் பதிவு செய்து உள்ளார்.

"ஜனங்களுக்குப் பல உதாரணங்களை அல்லாஹ் சொல்லிக் காட்டியிருக்கிறான். இருந்தும் இவங்க தர்க்கம் பேசிகிட்டு இருக்காங்க. நேரான வழியைக் காட்டியும் திருந்தாத இவங்களுக்கு வேதனை இருக்கு" (ஜே.எம்.சாலி, ஆயுள் தண்டனை, ப.) இந்த கஹ்பு – குகை சூராவில் அல்லா எச்சரிக்கிறான் என்பதை இந்நாவலின்வழி அத்தியாயத்தின் கருத்துக்களை ஆசிரியர் பதிவு செய்துள்ளார்.

நாதிராவும் நாச்சியாரும் பேசிக்கொண்டே இருந்தனர். ஹபீபா இவர்களின் பேச்சில் கவனம் செலுத்தாமல் குர்ஆன் அத்தியாத்தில் கவனம் செலுத்தி இருந்ததைக் காணமுடிகிறது. இதனை "குகை – கஹ்பு அத்தியாத்தில் அவள் ஆழ்ந்திருந்தாள். கற்பனையை மிஞ்சும் சரித்திரங்கள்". (ஜே.எம்.சாலி, ஆயுள் தண்டனை, ப.55) என்ற கூற்றின்வழி ஆசிரியர் உணர்த்துகிறார்.

தோட்டக்காரர்களின் கதை முடிவினைக் கேட்டு கேட்டு ஹபீபா மனதில் அழியாத சித்திரங்களாகப் பதிவுசெய்யப்பட்டதை ஆசிரியர் எடுத்துரைக்கிறார். இதனை, "ஜமீலா ஆலிமாவிடம் அடிக்கடி கஹ்பு அத்தியாத்தியத்திலுள்ள சரித்திர போதனைகளைக் கேட்டு கேட்டு அவை மனதில் அழியாத சித்திரங்கள் ஆகிவிட்டன" (ஜே.எம்.சாலி, ஆயுள் தண்டனை, ப.56) என்கிறார்.

வாலாற்றினை அறியும் வேளையில் நிறைய படிப்பினைகள் இருப்பதை அறியமுடியும். அதைப்போல இந்த சூராவை திரும்ப திரும்ப படிப்பதன்மூலம் அது படிப்பினையாக இருப்பதை ஹபீபா உணருகிறாள். திரும்ப திரும்ப படித்தாலும் அது சலிப்போ அலுப்போ ஏற்படுவதில்லை. அடுத்து என்ன நடக்கும் என்பதை அறிந்தவன் இறைவன் ஒருவனே என்பதை நினைவுபடுத்துவதாக இந்த அத்தியாயம் அமைவதைக் காணமுடிகிறது.

"அஸ்ஹாபுல் கஹ்புகளாள அந்த குகைவாசிகள் சரித்திரத்தில் அல்லாஹ் எவ்வளவோ சொல்லியிருக்கான். எல்லா ரகசியங்களையும் அறிஞ்சவன் அவன்தான். அடுத்தபடியா என்ன நடக்குங்கிறதை அறிஞ்சவன் அவன்தான். அதைத்ததான் இந்த அத்தியாயம் நமக்குச் சொல்கிறது". (ஜே.எம்.சாலி, ஆயுள் தண்டனை, ப.156) ஜமீலா ஆலிமாவின் அந்தக் குரல் பிசிறு இல்லாமல் அன்றைக்கு கேட்டது போலவே இவள் செவியில் பாய்கிறது.

தோட்டக்காரனின் நிலை

குர்ஆன் அத்தியாயம் 18-இல் வசனம் எண் 32 முதல் 45 வரை தோட்டக்காரனின் நிலை குறித்துக் கூறப்பட்டுள்ளது. இதில் கூறப்பட்டுள்ள வசனங்களை ஆசிரியர் தனது நாவலில் கதையின் இடையே கூறிச் செல்கிறார்.

"உவமை, உண்மை ஒவியம்... இந்தத் தோட்டக்காரனின் கதையைத் திரும்பத் திரும்ப ஹபீபா ஓதி உணர்ந்து வருகிறாள். குகை அத்தியாத்தில் இன்னும் எத்தனை சரித்திரங்கள்" (ஜே.எம்.சாலி, ஆயுள் தண்டனை, ப.56) என்பதன்வழி குகை அத்தியாத்தில் இறைவன் பல சரித்திரங்களைக் குறிப்பிடுவதை அறியமுடிகிறது.

"(நபியே!) இரு மனிதர்களை அவர்களுக்கு உதாரணமாகவும் கூறுவீராக! அவ்விருவரில் ஒருவருக்கே நம் திராட்சைத் தோட்டங்கள் இரண்டைக் கொடுத்தோம். இன்னும் பேரீத்த மரங்களைக் கொண்டு அவ்விரண்டையும் சூழப்பட்டவை ஆக்கினோம். அவ்விரண்டித்தும் இடையில் (தானிய) விவசாயத்தையம் அமைத்தோம்" (திருக்குர்ஆன் 18:32) என்பதன்வழி அறியலாம்.

தோட்டக்காரனுக்கு எல்லை கடந்த மகிழ்ச்சியில் பேசிக்கொண்டிருந்த நண்பனிடம் பெருமையாகக் கூறுவதை ஆசிரியர்,

"உன்னைவிட நானே பொருள் படைத்தவன் நானே உன்னைவிட சந்ததியும் உடையவன். எந்தக் காலத்திலும் என் தோட்டத்தை யாரும் அழித்து விட முடியாது" (ஜே.எம்.சாலி, ஆயுள் தண்டனை, ப.55) என்பதாகவும் அதற்கு அவனின் நண்பன்,

"தவறு உன்னைப் படைத்தவனையே நீ நிராகரிக்கிறாய? யாவும் ஆண்டவன் தந்தவை என்பதை இந்தத் தோட்டத்தில் நுழைந்தபோதே நீ சொல்லியிருக்க வேண்டும். அவன் நினைத்தால் ஆபத்தை வானத்திலிருந்து இறக்கி இந்தத் தோட்டத்தையும் பாழ் வெளியாக்கிவிடக்கூடும்" (ஜே.எம்.சாலி, ஆயுள் தண்டனை, ப.55) என்பதன் வழி அறியலாம்.

ISSN(P): 0973-0303
ISSN(O): 2582-5941

"அவனே கூலி கொடுப்போரில் மேலானவன். பொருளும் மக்களும் வாழ்க்கையின் அலங்காரங்கள். நற்கருமங்களே இறைவனிடத்தில் நற்கூலியைப் பெறுதவதற்கும் நன்னம்பிக்கைக் கொள்வதற்கும் மேலானவையாகும் என்று தோட்டக்காரர்கள் கதையின் முடிவில் படிப்பினையாக இத்த வசனம் இடம்பெறுகிறது" (ஜே.எம்.சாலி, ஆயுள் தண்டனை, ப.56) என்பதன்வழி மனிதர்களுக்கு இறைவன் படிப்பினையாக இச்சரித்திர நிகழ்வை குறிப்பிட்டுள்ளதை குர்ஆனின் வசனங்களின்மூலம் நாவலில் ஆசிரியர் வெளிப்படுத்தியுள்ளார் என்பதை உணரமுடிகிறது.

குகைவாசிகளின் வரலாறு

பல புதிர்களுக்கு குகைவாசிகள் என்னும் அத்தியாத்தில் விடை இருப்பதாகவும் அது ஆச்சரியமான ஒன்றாக இருப்பதாகவும் ஆசிரியர் ஜமீலா ஹபீபாவிடம் தெரிவிப்பதன்வழி குகைவாசிகளின் சிறப்பினை அறியமுடிகிறது. இந்த அத்தியாயத்தின் வழியே நாம் குகைவாசிகளின் வரலாற்றினையும் அறிந்து கொள்ளும் விதமாக ஆசிரியர் படைத்துக் காட்டியுள்ளார்.

"அது நபி ரசூலுல்லா சொல்லித் தரும் சூட்சமம் என்று ஆலிமா கூறியது தழும்பேறி விட்டது. உண்மைதான். பல புதிருக்கு அந்த அத்தியாயத்தில் விடை இருக்கிறது. விடை காண முடியாத விஷயங்களும் அதில் இருக்கின்றன. அஸ்ஹாபுல் கஹ்பு எனும் குகைவாசிகள் ஆச்சரியமானவர்கள். அவர்கள் அந்தக் குகையில் எத்தனை வருடம் இருந்தார்கள்? அது மர்மக் கதைகளை மிஞ்சும் வரலாறு" (ஜே.எம்.சாலி, ஆயுள் தண்டனை, ப.138) என்பதை ஆசிரியர் குறிப்பிடுகிறார்.

"அவர்கள் தங்கள் குகையில் முன்னூறு வருடங்கள் தங்கினார்கள் (என்றும்), இன்னும் ஒன்பதையும் அதிகப்படுத்தினார்கள் (என்றும் சிலர் கூறுகின்றனர்" என்று குர்ஆன் வலியுறுத்துகிறது.

(திருக்குர்ஆன் 18:25)

"அவர்கள்) மூன்று பேர்தாம் – அவர்களில் நான்காவது அவர்களுடைய நாய் என்று (சிலர்) கூறுகின்றனர். (இல்லை) அவர்கள் ஐந்துபோர் தான் அவர்களில் ஆறாவது அவர்களுடைய நாய் என்று மறைவானதை ஊகம் செய்து (சிலர்) கூறுகிறார்கள். இன்னும் (சிலர்) ஏழுபேர் அவர்களில் எட்டாவது அவர்களுடைய நாய் என்று சொல்கிறார்கள். (நபியே) அவர்களுடைய எண்ணிக்கையை என்னுடைய இறைவன் தான் நன்கறிவான். சிலரைத்தவிர, மற்றெவரும் அவர்கள் பற்றி அறியமாட்டார்கள்" என்று கூறுவீராக! என்கிறது திருக்குர்ஆன். (திருக்குர்ஆன் 18:22)

"சில வாலிபர்கள் குகைக்குப் போனார்கள். அந்த நாட்டு அரசன் விக்கிரக ஆராதனை செய்யும்படி வற்புறுத்தியதை ஏற்றுக் கொள்ளாதவர்கள் அவர்கள். குகையில் அவர்களை நித்திரை செய்ய வைத்தான் அல்லாஹ். அவர்கள் எத்தனை பேர், எத்தனை வருஷம் அங்கே உறங்கினார்கள் என்ற கேள்விக்குப் பதில் யாருக்கும் தெரியாது என்பது வருஷமா, முந்நூறு வருஷமான்னு பல மாதிரி பேச்சு. அதை அறிஞ்சவன், தான் ஒருவனேன்னு அல்லாஹ்... சொல்றான்..." (ஜே.எம்.சாலி, ஆயுள் தண்டனை, ப.156) என்று திருமறையின் கருத்தினை ஆசிரியர் வெளிப்படுத்துகிறார்.

"அவர்கள் குகையில் முன்னூறு வருடங்கள் இருந்தனர் என்று சிலரும் அதற்கு அதிகமாக ஒன்பது வருடங்கள் இருந்தனர் என்று சிலரும் கூறுகிறார்கள். அவர்கள் அதில் இருந்த காலத்தை அல்லாஹ் நன்கறிவான். வானங்கள், பூமியில் மறைவாயிருப்பவை அவனுக்குரியவையே! அவற்றை அவன் எவ்வளவோ நன்கறாகப் பார்ப்பவன்; எவ்வளவொ நன்றாகக் கேட்பவன். அவனைத் தவிர இவற்றை நிர்வகிப்பவன் யாரும் இல்லை. அவனையன்றி வேறு தஞ்சமளிப்பவனைக் காணமாட்டீர்" (திருக்குர்ஆன் 18:25) (ஜே.எம்.சாலி, ஆயுள் தண்டனை, ப.138) என்பதன் வழியும் அறியலாம். இந்த குர்ஆன் வசனத்தில் கருத்தினை தேரிடையாக ஆசிரியர் தம் நாவலிலும் பதிவு செய்துள்ளார்.

முஸா (அலை) ஹில்ரு (அலை) இருவர் இடையே நடந்த சரித்திர நிகழ்வு

மூஸா நபி (அலை) மற்றும் ஹில்ரு (அலை) இருவர் சந்தித்த சரித்திர நிகழ்வை குர்ஆன் அத்தியாயம் 18இல் வசனம் 60 முதல் 82 வரை கூறுகின்றது.

மூஸா நபி (அலை) ஹிள்ரு (அலை) அவர்கள் உடன் பயணிக்க விரும்புகிறார். அதற்கு ஹிள்ரு (அலை) நான் எதை செய்தாலும் நீங்கள் ஏன்? எதற்கு? என்று கேள்வி கேட்கக் கூடாது என்ற நிபந்தனை உடன் அழைத்து சென்றார்கள்.

"இவ்வாறு முடிவு செய்துகொண்டு) அவ்விருவரும் சென்றவழியில் குறுக்கிட்ட ஒரு கடலைக் கடக்க கப்பலில் ஏறியபோது அவர் அதன் (ஒரு) பலகையைப் பெயர்த்து ஓட்டையாக்கி விட்டார். அதற்கு மூஸா, இதில் உள்ளவர்களை மூழ்கடிக்கவா? நீர் துவாரமிட்டீர்? நிச்சயமாக நீர் மிக்க அபாயகரமான ஒரு காரியத்தைச் செய்துவிட்டீர்" என்று கூறினார் (திருக்குர்ஆன் 18:71)

i) கப்பலின் ஒரு பலகையை ஓட்டை ஆக்கிவிட்டார்.

ii) சிறுவனை கொலை செய்து விட்டார்.

iii) விருந்து அழிக்காத அந்த ஊரில் உள்ள இடிந்த சுவரைக் கட்டினார்.

இதற்கு விளக்கம் கேட்கும்போது, திருக்குர்ஆனின் வசனங்கள் இதற்கு விளக்கவுரையாக அமைந்திருப்பதைக் காணமுடிகிறது. அவை பின்வருமாறு அமைகிறது.

அக்கப்பல் கடலில் (கூலி) வேலை செய்து கொண்டிருந்த (சில) ஏழைகளுக்குரியது. அதைக் குறைபடுத்தவே நான் கருதினேன். (ஏனென்றால் அது செல்லும் வழியில்) இவர்களுக்கு முன் ஓர் (அநியாயக்கார) அரசன் இருக்கிறான். அவன் (நல்ல) கப்பல்கள் அனைத்தையும் அநியாயமாக அபகரித்துக் கொள்கிறான். (அவனிடமிருந்து காப்பாற்றுவதற்காகவே அக் குறைபடுத்தினேன்)" (திருக்குர்ஆன் 18:79)

"(கொல்லப்பட்ட) அந்தச் சிறுவனோ அவனுடைய தாயும் தந்தையும் நல்ல நம்பிக்கையாளர்களாக இருக்கிறார்கள். அவன் (வாலிபத்தை அடைந்து அவ்விருவரையும் அநியாயம் செய்யும்படியும் (இறைவனை) நிராகரிக்கும்படியும் செய்து விடுவானோ என்று பயந்து அவ்வாறு செய்தோம்" (திருக்குர்ஆன் 18:80)

அந்தச் சுவரோ அப்படிட்டினத்திலுள்ள இரு அனாதைக் குழந்தைகளுக்குரியது. அதற்குக் கீழ் அவர்களுக்குச் சொந்தமான புதையல் ஒன்று இருக்கிறது. அவ்விருவரின் தந்தை மிக்க நல்ல மனிதராக இருந்தார். ஆகவே "உமது இறைவன் அவ்விருவரும் தங்கள் வாலிபத்தை அடைந்த பின்னர் தங்கள் புதையலை எடுத்துக் கொள்ளும்படிச் செய்ய நாடினான். எனவே, அதுவரை அச்சுவர் விழுந்து விடாதிருக்கும்படி அதைச் செப்பனிட்டேன். இது உமது இறைவனின் அருள்தான். (இம்மூன்றில்) எதையும் நான் என் இஷ்டப்படி செய்துவிடவில்லை. நீர் பொறுத்துக் கொள்ள முடியாமல் போன (என்) செய்கைகளின் விளக்கம் இதுதான்" (என்று கூறி முடித்தார்)" (திருக்குர்ஆன் 18:82)

தஜ்ஜால்

தஜ்ஜால் என்பவன் உலக அழிவின் சமீபத்தில் வெளிப்படும் விசித்திரமனிதன் என்பது இஸ்லாமியர்களின் நம்பிக்கை ஆகும். உலக இறுதியின் பத்து அடையாளங்களில் தஜ்ஜாலின் வெளிப்பாடு மிக முக்கியமானதாகும்.

"தஜ்ஜாலைப் பற்றி நபிநாயகம் நிறைய சொல்லியிருக்காங்க. ஜனங்களை வழி கெடுக்கிறதுக்காக அவன் பாலைவனத்திலேருந்து கிளம்பிவருவான். அவனுக்கு ஒரு கண் மட்டுமே இருக்கும். தன்னை நபின்னு முதல்லே சொல்லுவான். பிறகு தானே, அல்லாஹ்னு வாதிப்பான். நரகத்தை சொர்க்கமா காட்டுவான். அவனை நம்பி மோசம் போகக் கூடாது. அவனை அழிக்க ஈசா நபி மறுபடியும் வருவாங்க..." (ஜே.எம்.சாலி, ஆயுள் தண்டனை, ப.137) என்பதாகவும்,

"தஜ்ஜால், சொர்க்கம் என்று காட்டும் நரகத்தில் நுழைபவர்கள் சூரத்துல் கஹ்பை – குகை அத்தியாத்தை ஓதினால் பாதுகாத்துக் கொள்ளலாம். அந்த அத்தியாத்தை ஓதி முடிக்கும் நேரத்துக்குள் வேதனை நீங்கிவிடும். இபுராஹிம் நபிக்கு நெருப்புக் குண்டம் குளிர்ந்தது போல் இவர்களுக்கும் தஜ்ஜாலின் நரகம் குளிர்ந்துவிடும்..." (ஜே.எம்.சாலி, ஆயுள் தண்டனை, ப.137) என்பதன்வழியும்

"தஜ்ஜாலைப் பற்றிய கற்பனை. உருவங்களைக் காட்டிலும் ஒரு தீய சக்தியைப் பற்றிய சிந்தனைதான் ஹபீபாவின் மனத்திரையில் பதிந்திருக்கிறது. உறுதியும் நம்பிக்கைப் பிடிப்பும் வலுவாக இருந்தால் தீக்குண்டத்தையே குளிர்ந்த தடாகம் ஆக்கிவிடலாம் குகை அத்தியாத்தை ஓதி உணர்வது பாதுகாப்புக் கவசம்...

ISSN(P): 0973-0303
ISSN(O): 2582-5941

கேடயம்." (ஜே.எம்.சாலி, ஆயுள் தண்டனை, ப.137) போன்ற கருத்துக்களின் மூலம் ஹபீபாவின் மனதில் தஜ்ஜாலைப் பற்றிய செய்திகள் பதிந்திருப்பதை ஆசிரியர் வெளிப்படுத்துகிறார்.

"சூரத்துல் கஹ்பின் ஆரம்ப மூன்று ஆயத்துக்களை ஓதுபவர், தஜ்ஜாலின் குழப்பதிலிருந்து பாதுக்காப்பட்டுவிட்டார்" என்று நபி (ஸல்) அவர்கள் கூறியதாக ஹஜ்ரத் அபுதர்தா (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள் (நூல்:திர்மிதீ)

யாஜூஜ் மாஜூஜ்

துல்கர்னைன் மலைவழியாக போய்கிட்டிருந்தார். அங்கேயும் ஜனங்களைப் பார்த்தார். அவங்க இவர்கிட்ட உதவி கேட்டாங்க. யாஜூஜ் மாஜூஜ் எனும் ஜனங்கள் தங்களுடைய பூமியில் புகுந்து தொந்தரவு செய்றாங்க அவங்க வராம தடுக்க ஒரு தடைச் சுவரை உண்டாக்கித்தந்தா தொகை வசூல் செய்து கொடுக்கலாமா என்றனர். இதனை ஆசிரியர்,

"துல்கனைன் அவங்க கிட்ட பொருளை எதிர்பாக்கல. அதை ஆண்டவன் தனக்கு குடுத்திருக்கறான்னு சொல்லி அந்தத் தடைச்சுவரைக் கட்ட உடலுழைப்பைத் தந்தால் போதும்னு துல்கர்னைன் சொன்னார். இரும்புப் பாளங்களையும் உருக்கிய செம்பையும் சேகரம் செய்து ரெண்டு மலை உச்சிக்கும் இடையிலே பெரிய தடுப்பை ஏற்படுத்திக் குடுத்தார் அவர். யாஜூஜ் – மாஜூஜ் கூட்டம் அவங்க வர முடியாம செய்திட்டார். அந்த சிக்கந்தர் துல்கர்னைன். அவருடைய சரித்திரத்தை அல்லா பெரிய படிப்பினையா நமக்குத் தந்திருக்கிறான். தீமையான ஒரு கூட்டம் விசுவாசிகளை நெருங்க முடியாம பாதுகாக்க துல்கர்னைனை ஒரு கருவியா பயன்படுத்தின மாதிரி, எவ்வளவோ காரியங்களை அவன் நடத்திக்கிட்டிருக்கிறான்..." (ஜே.எம்.சாலி, ஆயுள் தண்டனை, ப.166) என்பதாகக் குறிப்பிடுகிறார்.

"நீங்கள் (அதற்குத் தேவையான இரும்புப் பாலங்களை என்னிடம் கொண்டு வாருங்கள்" என்றும் கூறி "(அவற்றைக் கொண்டு வந்து இருமலைகளுக்கிடையில் இருந்த பள்ளத்தை நிறைத்து) இரு மலைகளின் உச்சிக்கு அவை சமமாக உயர்ந்த பின்னர் நெருப்பாக பழுக்கும் வரை ஊதுங்கள்" என்றார் (அதன் பின்னர்) "செம்பையும் என்னிடம் கொண்டு வாருங்கள். நான் அதை உருக்கி அதன் மீது ஊற்றுவேன்" என்றார் (திருக்குர்ஆன் 18:96) என்று குர்ஆன் குறிப்பிடுகிறது.

முடிவுரை

ஜே.எம்.சாலியின் ஆயுள் தண்டனை நாவலின் வழியே குகைவாசிகளைப் பற்றிய செய்தியை அறியமுடிகிறது. ஆயுள் தண்டனை நாவலில் தீயோருக்கு தண்டனை கிடைப்பதாகவும் நாவல் முற்றுபெறுகிறது. இதனையே இறைவன் தன் திருமறையான திருக்குர்ஆனிலும் பதிவு செய்திருப்பதை ஆசிரியர் தன் நாவலிலும் எடுத்தியம்பியுள்ளதை ஆய்வுகளின் வழியே நிறுவப்பட்டுள்ளன. இக்கட்டுரையின் வாயிலாக குகைவாசிகளைப் பற்றியும் நாவலின் ஊடே ஜே.எம்.சாலி அவர்கள் வெளிப்படுத்தியுள்ளார்.

சான்றாதாரம்

1. ஜே.எம்சாலி, ஆயுள் தண்டனை, மணிவாசகர் பதிப்பகம், 31, சிங்கர் தெரு, பாரிமுனை, சென்னை-108. முதல் பதிப்பு 2007

துணைமை சான்தாரங்கள்

1. திருக்குர்ஆன்,
2. ஹதீஸ், திர்மிதி

Vol - 3 -1&1S May 2022
Online Version : www.jmcjarj.org

ISSN (P) : 0973-0303
ISSN (O) : 2582-5941

JARJ

Jamal Academic Research Journal : an Interdisciplinary



தமிழக முஸ்லிம்களின் வரலாறு, பண்பாடு, இலக்கியம்

HISTORY, CULTURE AND LITERATURE OF MUSLIMS OF TAMIL NADU

பதிப்பாசிரியர்கள்
பேரா. கா. முகமது இஸ்மாயில்
முனைவர் தா. உமர் சாதிக்
முனைவர் ச.அ.சையத் அகமது பிரோசு

ஜமால் முகமது கல்லூரி (தன்னாட்சி)
ஆற்றல் வளத்தனித்ததகுதியும்
தேசியத்தர மதிப்பீட்டு மூன்றாம் சுற்றில் 'A' தகுதிச் சான்றும்
DBT -நட்சத்திரக் கல்லூரித்திட்டம் மற்றும் DST-FIST நிதிநல்கையும் பெற்றது
(பாரதிதாசன் பல்கலைக்கழக இணைவு பெற்றது)
திருச்சிராப்பள்ளி- 620 020

Since 1951

தமிழக முஸ்லிம்களின் வரலாறு, பண்பாடு, இலக்கியம்

பதிப்பாசிரியர்கள்	:	பேரா.கா.முகமது இஸ்மாயில் முனைவர் தா.உமர் சாதிக் முனைவர் ச.அ.சையத் அகமது பிரோசு
வகை	:	பன்னாட்டுக் கருத்தரங்க ஆய்வுக் கட்டுரைகளின் தொகுப்பு (தமிழ் மற்றும் ஆங்கிலம்)
பக்கங்கள்	:	378
வெளியீடு	:	ஜமால் முகமது கல்லூரி (தன்னாட்சி), திருச்சிராப்பள்ளி - 620 020
அச்சாக்கம்	:	தி பிரிண்டிங் ஹவுஸ், திருச்சி -23

JARJ

Jamal Academic Research Journal : an Interdisciplinary
ISSN (P) : 0973-0303
ISSN (O) : 2582-5941
Online Version : www.jmcjarj.org

History, Culture and Literature of Muslims of Tamil Nadu

Guest Editors	:	Prof.K.Mohamed Ismail Dr.T.Umar Sadiq Dr.S.A.Syed Ahmed Firoz
Subject	:	Research Articles of an International Seminar (English and Tamil)
Pages	:	378
Publication	:	Jamal Mohamed College (Autonomous) Tiruchirappalli - 620 020
Printing	:	The Printing House, Trichy -23

9	இஸ்லாமியத் தமிழ்ச் சிறுகதைகள் தோற்றமும் வளர்ச்சியும் - திரு.மு.சாதிக் அலி	64
10	லால்பேட்டை, ஜாமிஆ மன்பஉல் அன்வார் அரபுக் கல்லூரியின் வரலாறும், வளர்ச்சியும் - திரு.அ.முஹம்மது யாசிர்	67
11	நாகூர் இ.எம்.ஹனீபாவின் இஸ்லாமிய பாடல்களில் ஆன்மீக சிந்தனைகளும், வரலாற்றுச் செய்திகளும்... - முனைவர் சே.அமீருதீன்	71
12	இந்தியாவில் இஸ்லாம் சமயம் - A.ஹபீப் முகம்மது	77
13	குணங்குடி மஸ்தான் சாகிபும் அவருடைய பராபரக்கண்ணியும் - முனைவர் கு.கண்ணன்	87
14	காயிதே மில்லத் இஸ்மாயில் சாகிப் - கலைஞர் மு.கருணாநிதி நட்புறவு - முனைவர் அ.ரசித்கான்	91
15	சீறாவில் அலிமா - ஆமினா கனவுகள் விளக்கம் - முனைவர் மு.சேக் அப்துல்லா	102
16	Contribution of Kunangudi Masthan Sahib to Tamil Literature **- Dr. V. Manimuthu**	107
17	Muslim Wedding Ceremony **- G. Sutha**	110
18	ஜே.எம்.சாலியின் ஆயுள் தண்டனை நாவலில் குகைவாசிகளின் வரலாறு - முனைவர் க.இக்பால்	114

JARJ Jamal Academic Research Journal-an Interdisciplinary ISSN(P): 0973-0303
S.Ameerudeen, JARJ-Vol-3-1S-May-2022:71-76 ISSN(O): 2582-5941

நாகூர் இ.எம்.ஹனீபாவின் இஸ்லாமிய பாடல்களில் ஆன்மீக சிந்தனைகளும், வரலாற்றுச் செய்திகளும்...

முனைவர் சே.அமீருதீன்
உதவிப்பேராசிரியர், தமிழாய்வுத்துறை
ஜமால் முகமது கல்லூரி (தன்னாட்சி)
திருச்சிராப்பள்ளி - 620020

முன்னுரை

நாகூர் இ.எம்.ஹனீபா என்று அழைக்கப்படும் நாகூர் இஸ்மாயில் முஹம்மத் ஹனீபா 25 டிசம்பர் 1925-ல் பிறந்தார். இவர் தமிழகத்தில் இஸ்லாமிய பாடல்களைப் பாடி அதன்வழி ஆன்மீக சிந்தனைகளையும் இஸ்லாமிய வரலாறுகளையும் தனது கம்பீர குரல்வழி இஸ்லாமியர்கள் இஸ்லாமியர் அல்லாதவர்கள், மேலும் தமிழ் மொழி அறிந்த பல்வேறு நாடுகளில் வசிக்கும் மக்களின் மனதில் நீங்கா இடம் பிடித்தவர் என்று கூறுமளவிற்கு உலகலாவிய புகழுக்குரியவர்.

இவர் நாகூரில் முஹம்மத் இஸ்மாயில் மற்றும் மரியம்பீவி ஆகியோருக்கு மகனாக பிறந்து வாழ்ந்து வந்தார்.

பள்ளி மாணவனாக சுமார் 11 வயதில் பள்ளிக்கூட விழாக்களில் அரங்கேறியதாக கூறப்படும் நாகூர் ஹனீபாவின் கனீர்க்குரல் இஸ்லாமியர்களின் திருமணங்கள், தர்காக்களின் மேடைக் கச்சேரிகள் மற்றும் திமுகாவின் மாநாடுகள் உள்ளிட்ட பொதுக்கூட்ட மேடைகளில் தொடர்ந்து பல ஆண்டுகாலமாக தனித்துவமாக ஒலித்தது என்றால் இதனை யாராலும் மறுக்க முடியாது. கம்பீரமான குரலும் தெளிவான தமிழ் உச்சரிப்பும் அவரது தனித்துவம் என்றே கூறலாம். இதற்காக பலரிடமும் பாராட்டுக்களையும் பெற்றவர் ஆவார். இவரின் பாடலை பற்றி இக்கட்டுரையில் காண்போம்.

அகில இந்திய வானொலி

அகில இந்திய வானொலியில் காலை நேர தமிழ் ஒலிபரப்பில் ஹனீபா அவர்களின் பாடல்கள், இஸ்லாமிய மதப்பாடல்களில் இன்றளவும் தொடர்ந்து ஒளிபரப்பாகின்றன. மேலும், இலங்கை, சிங்கப்பூர், மலேசியா போன்ற பல்வேறு நாட்டு வானொலிகளிலும் இவரின் குரல் ஒலித்து வருகிறது.

அரசியல் பயணம்

ஒரு குறிப்பிட்ட அரசியல் கட்சியில் இருந்தாலும், அவருக்கு கட்சி கடந்தும் ரசிகர்கள் இருந்தனர். திமுகைச் சேர்ந்த ஹனீபா சட்டமன்ற மேலவை உறுப்பினராகவும் வக்ஃபு வாரியத்தலைவராகவும் இருந்துள்ளார். இவரது கர்ஜனை குரலினால் ஒலி பெருக்கியே தேவையில்லாத அளவிற்கு சத்தம் வெளிப்படும் பாடல்களும் உள.

"உடன் பிறப்பே! கழக உடன் பிறப்பே!
அண்ணாவின் வழியில் அயராது
உழைக்கும், பொன்னான கலைஞர்
கண்ணாக மதிக்கும் உடன் பிறப்பே!"

என்ற பாடல் வரிகள் தி.மு.க. கூட்டங்களில் ஒலிக்கத் தொடங்கியவுடன் தி.மு.க.வினர் சுரை வேட்டியுடனும் தோளில் கருப்பு சிவப்பு துண்டுடனும் உற்சாகமாகத் தொண்டர்கள் ஓடிவரும் காட்சி தேர்தல் சமயங்களில் தமிழகத்தில் எல்லா இடங்களிலும் காணப்படும். மேலும், கழகத் தொண்டர்களை ஊக்கப்படுத்தும் சிம்மக் குரலுக்குச் சொந்தக்காரர் இசைமுரசு நாகூர் ஹனீபா.

"அழைக்கின்றார் அண்ணா;
கல்லக்குடி கொண்ட கருணாநிதி வாழ்கவே!"

போன்ற தி.மு.க.வின் பிரச்சாரப் பாடல்களைப் பட்டி தொட்டியெங்கும் கொண்டு போய்ச் சேர்த்தவர். ஆனால் இவரை தி.மு.க. பிரசார பாடகர் என்று மட்டும் கூற இயலாது. திராவிட இயக்கம் தொடங்கப்பட்ட காலத்தில் இருந்தே பல ஊர்களில் மேடைகளில் பாடியுள்ளார். இவரது பாடலை தந்தை பெரியாரும் ரசித்து கேட்டுள்ளார். மேலும், அவரை பாராட்டி ஒரு ரூபாய் பரிசும் அன்றைய காலகட்டத்தில் கொடுத்துள்ளார். திராவிட முன்னேற்றக் கழகத்தின் எந்த ஒரு மாநாடும் நாகூர் ஹனிபாவுடைய இசையில்லாமல் தொங்கியதும் இல்லை முடிந்ததும் இல்லை. ஹனிபா பாடிப்பாடி மக்களைக் கவர்ந்த காட்சியை, அந்த மக்களில் ஒருவனாக நான் ரசித்து இருக்கிறேன், என்று தி.மு.க. தலைவர் கருணாநிதி அன்று கூறியுள்ளது பெருமைக்குரியது.

ஆன்மீக சிந்தனைகள்

சமயங்களை குறிப்பிட்டு கூறாமல் அனைவருக்கும் ஒரே இறைவன் என்ற கோட்பாட்டினை உணர்த்தும் வகையில் அனைத்து சமயத்தினரையும் கவரும் விதமாக உள்ள பாடல் என்று சொன்னால் அது,

"இறைவனிடம் கையேந்துங்கள்
அவன் இல்லை என்று சொல்லுவதில்லை"

என்ற பாடலே ஆகும். இப்பாடலில் இறைவனிடம் எப்படி நாம் கேட்க வேண்டும். இறைவனின் குணம் எத்தகையது மனிதர்களுக்கு எவ்வாறு அருட்கொடை வாரி வழங்குவான் இறைவன் என்பதனை உணர்த்துகின்றது. இறைவன், இல்லை என்று சொல்லும் மனம் இல்லாதவன், ஈடுயினை இல்லாதக் கருணையுள்ளவன், இன்னல் பட்டு எழும் குரலை கேட்கின்றவன், எண்ணங்களை இதயங்களை பார்க்கின்றவன், என்ற பாடல் வரிகள் மனிதர்களிடம் இறை தேடலை தூண் கின்றது.

"மலர்மிசை ஏகினான் மாணடி சேர்ந்தார்
நிலமிசை நீடுவாழ் வார்" *(குறள். 3)*

என்ற வள்ளுவரின் வரிக்கு இணங்க இறைவனின் படைப்பு அவன் ஆட்சி அதிகாரங்களை எடுத்துரைக்கும் தன்மைகளை,

"அலை முழங்கும் கடல் படைத்து அழகு
பார்ப்பவன்,
அலையின் மீதும் மலையின் மீதும் ஆட்சி
செய்பவன்"

என சிறப்புற கூறுகின்றார்.

"அல்லாஹ்
அல்ஹம்துலில்லாஹ்
எல்லாப்புகழும் அல்லாஹ்
உனக்கே சொந்தம் ஆகுமே"

என்ற பாடலின் மூலம் இஸ்லாமியர்களின் மனதில் ஆன்மீக சிந்தனையை நெஞ்சுரைய வைக்கின்றார்.

மக்கள் தன் மனம் உருகி கேட்கும் இவ்வுலக வாழ்க்கைக்கான தேடல்களும் இப்பாடல் அடிகளில் அமைந்துள்ளது.

"அருளைப் பொழிய
வேண்டும் உலகில்
அமைதி நிலவ வேண்டும்
வையகம் எங்கும்
அமைதியில்லை
தீய வன்முறையால் மக்கள்
படும் தொல்லை
நியாயம் தர்மம்
வர வேண்டும்
மக்கள் நிம்மதியாக வாழ
வேண்டும்
வல்லவனே மிக நல்லவனே
வாழ்வில் நன்னெறி
காப்பாய் இறையோனே"

என்று இறைவனை நெஞ்சுருகி பாடியுள்ளார். மேலும்,

"புவி அமைதிக்கு அருள்வாய்
மறையோனே"

என்று ஒட்டு மொத்தமாக உலகில் உள்ள அனைத்து உயிரினத்திற்கும் நல்வழியைக் கொடுக்க இறைவனிடம் மன்றாடும் பாடலாக அமைந்துள்ளது.

மற்றொரு பாடலில் இறைவனிடம் மன்றாடும் இவர் பாடல் வரிகளில்,

"எங்கும் நிறைந்தோனே
இருகரம் ஏந்துகிறேன் அல்லாஹ்
சங்கை மிகுந்தோனே சஞ்சலம் தீர்த்திடு யா
அல்லாஹ்
உன்னை அன்றி யார்தான் எனக்கு
உதவிடுவார் அல்லாஹ்
அன்பும் பண்பும் ஆற்றல் நிறைந்தோனே
அருள்வாய் யா அல்லாஹ்"

என்னும் வரிகளில் இறைவனை இறைஞ்சி கேட்டு உருகும் நிலையில் அமைந்துள்ளது. அடுத்து ஒரு பாடலில் இறைவனிடம் கண்ணில் நீர் துளிகள் மல்க கேட்பதாக அமைகிறது.

"நீராடும் கண்களோடு
நெஞ்சம் நிறை பாசத்தோடு
மாறாத ஈமானோடு யாரசூலல்லாஹ்!
நான் மனம் உருகி பாடுகின்றேன்
யா ரசூலல்லாஹ்!
மனம் உருகி பாடுகின்றேன் யா
ரசூலல்லாஹ்!"

என்று பாடும் இவர் இறைவனிடம் அருளை மழையாகப் பொழிய கேட்கின்றார்.

"அருள்மழை பொழிவாய் ரஹ்மானே
ஆலமெல்லாம் அழகாய் படைத்தோனே,
அண்ணல் நபியை தந்தோனே"

இந்த உலகத்தை அழகாய் படைத்தவனே நீ கூறும் ஆகுக என்ற சொல்லால் அனைத்தையும் படைத்தவனே சிறிது மனித்துளிகள் கூட உன்னை மறக்காமல் இருக்கும் ஆற்றலை நீ தருவாயாக. மேலும், உன்னை தவிர யார் இந்த உலகத்தில் உதவு முடியும் என்ற சொல் இறை நேசர்களை ஆழ்ந்து சிந்திக்க வைக்கின்றது.

இறைவன் அளித்த கடமைகள்

இறைவன் இஸ்லாமியர்களுக்கு அளித்த ஐந்து கடமைகளைப் பற்றி ஹனீபா அவர்கள் பாடியுள்ள பாடலில்,

"ஐந்து கடமைகளின் எத்தனை
தத்துவங்கள் அத்தனையும் சொர்கத்தின்
சங்கை மிகு முத்திரைகள்"

இப்பாடலில் ஐந்து கடமைகளையும் மக்களுக்கு எடுத்து இயம்புகின்றார்.

"தீனோரே கேளுங்கள் திருமறை வழி
வாழுங்கள்
என்றும்
சத்திய இஸ்லாத்தின் முத்தான கொள்கையின்
சொத்தாக கிடைத்திட்ட வேதம்"

என்று இஸ்லாமிய வேதமான திருமறையை சுட்டுகின்றார். இதில் இறைவன் மக்களுக்கு அளித்த ஐந்து கடமையினை நிறைவேற்றும் விதமாக எடுத்துரைக்கின்றார்.

நபிமார்களின் வரலாறு

இறைவன் என்பவன் ஒருவனே அவனே இந்த உலகம் யாவையும் படைத்து காத்து வழி நடத்திக் கொண்டிருப்பவன் அவன் உலகில் வாழும் மக்கள் அனைவரும் நேர்வழி அடைய அவன் அருளிய திருமறையில் ஒவ்வொரு சமுதாயத்திற்கும் நபிமார்களை அனுப்பியதாக கூறியுள்ளான். ஆகவே ஒரு இலட்சத்து இருபத்தி நான்கு ஆயிரம் நபிமார்களை இவ்வுலக மக்கள் நேர்வழியடைய அனுப்பியுள்ளான். அதன் படி இவ்வுலகிற்கு வந்த நபிமார்களில் இறைவன் திருமறையில் குறிப்பிட்ட நபிமார்களைப் பற்றி நாகூர் அனிபா தன் பாடல்களில் குறிப்பிடுகின்றார். இப்பாடல்களின் மூலம் நபிமார்கள் பட்ட துன்பங்கள் துயரங்கள் வாழ்க்கையில் கடந்து சென்ற இன்னல்களையும் வரலாராக கூறும் பாடல்களாய் அறியலாகிறது. இது போன்ற பாடல்களை கேட்கும் போது நபிமார்களின் வாழ்வினை எண்ணி கண்ணீர் விட்டவர்கள் எண்ணிலடங்காதோர் ஆவர்.

"மணலில் நடந்து இருளைக் கடந்து
மதினம் புகுந்த நபியே!"

என்ற வரிகளில் முகமது நபி (ஸல்) அவர்களைப் பற்றிய வரலாறு கூறும் செய்திகள் வெளிப்படுகின்றன.

"ஞானத்தின் திறவுகோல் நாயகம்
அல்லவா நபி நாயகம் அல்லவா

ISSN(P): 0973-0303
ISSN(O): 2582-5941

பள்ளி சென்று படித்ததில்லை பாடம்
எதும் கேட்டதில்லை
சொல்லி தரும் தகுதி இந்த
துனியாவில் எவர்க்குமில்லை!
அல்லாவே ஆசிரியர் அனைத்துமே
ஆச்சரியம் சொன்னதல்லாம் நீதிகளே!
சத்தியத்தின் செய்திகளே!"

என்ற பாடலில் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் கல்வித்திறன், அவரின் ஆசிரியர் மக்களுக்கு அருளிய சத்திய நீதியின் முறையினை அனைவருக்கும் புரியும் வண்ணம் பாடியுள்ளார்.

"உதயமே நபி உதயமே
உங்கள் வரவாலே உலகம்
சிறந்தது உங்கள் வரவாலே
உள்ளம் மகிழ்ந்தது
உங்கள் மொழியாவும் வழியானதே
உங்கள் வழியாவும் வாழ்வானதே"

என்ற பாடலில் நபி (ஸல்) அவர்களின் இவ்வுலகத்தின் வருகையையும் அவர்களின் வருகையினால் உலகம் சிறந்து விளங்குகின்றதையும் கூறியுள்ளார்.

"தாயிஃப் நகரத்து வீதியிலே எங்கள்
தாஹா ரசூல் நபி நடக்கையிலே
பாவிகள் செய்த கொடுமையினை எண்ணிப்பார்த்தால்
நெஞ்சம் துடிக்குதம்மா கண்கள் கண்ணீரை
வழக்குதம்மா
கல்லால் சில பேர் அடித்தார்கள்
கடும் சொல்லால் பல பேர் வதைத்தார்கள்
எல்லா துயரத்தையும் சகித்தார் நபி
அல்லா ஒருவன் என்றே உரைத்தார்"

என்ற பாடலை கேட்போர் நபி (ஸல்) அவர்கள் தாயிஃப் நகரத்தில் பட்ட துன்பங்கள் அறிந்து தானாகவே கண்கலங்கி விடுவர்.

"ஹஜ் பெருநாள் வந்த சரித்திரம்
கேளுங்கள் அங்கு இப்றாஹிம் நபி
செய்த தியாகத்தை தெரிந்து கொள்ளுங்கள்"

என்ற பாடலும்,

"அல்லாஹ்
அல்ஹம்துலில்லாஹ்
எல்லாப் புகழும் அல்லாஹ்
உலக்கே சொந்தம் ஆகுமே"

ISSN(P): 0973-0303
ISSN(O): 2582-5941

என்ற பாடல் அடிகளில் நெருப்பினை பூங்கா வனமாக்கி நபி இப்றாஹிம் உயிர் காத்தவனே. வரும் செய்திகள் நபி இப்றாஹிம் அவர்களின் வரலாற்றை கூறுகிறது.

மேலும், மூஸா நபி, யூசுப் நபி, யூனுஸ் நபி மற்றும் பல நபிமார்களின் வரலாறுகளை தம் பாடல் அடிகளின் மூலம் மொழிந்துள்ளார்.

"அறத்தான் வருவதே இன்பம் மற்றெல்லாம்
புறத்த புகழும் இல" *(குறள். 39)*

என்ற வள்ளுவரின் கூற்றிர்க்கு இணங்க நாகூர் இ.எம்.ஹனிபா அவர்கள் வாழ்த்து காட்டியுள்ளார்.

நிறையுரை

நாகூர் இ.எம்.ஹனிபா அவர்கள் தம் பாடல்கள் மூலம் இஸ்லாமியர் மற்றும் இஸ்லாமியர் அல்லாத சமயத்தினருக்கும் இஸ்லாம் என்றால் என்ன? இஸ்லாமிய மார்க்கம் எத்தகையது அதன் பயன் யாது? இறைவன் யார் ஓரிறைக் கோட்பாட்டின் பயன் என்ன? இறைவன் மக்களுக்கு அளித்த இறைவேதத்தின் கருத்து என்ன? நபிகளார் கூறிய இவ்வுலக வாழ்க்கை நெறி முறைகளைப் பின்பற்றுவதன் மூலம் மனிதர்கள் அடையும் பயன் யாது? நபிமார்களின் வரலாறு, நபித் தோழர்களின் வரலாறு அவர்கள் பட்ட துன்பங்கள் போன்றவற்றை தம் பாடல் மூலம் எடுத்துரைத்துள்ளார்.

இவர் இவ்வுலகை விட்டு பிரிந்தாலும் இவர் பாடல் உலகளாவி எல்லா இடங்களிலும் தமிழர்களின் மனதில் என்றும் நீங்க இடம் பிடித்து ஒலித்துக் கொண்டே இருக்கும் என்பதை எவ்விதத்திலும் மறுக்க இயலாது.

ஜமால் முகமது கல்லூரி (தன்னாட்சி)

Since 1951

ஆற்றல் வளத்தனித்தகுதியும்
தேசியத்தர மதிப்பீட்டு மூன்றாம் சுற்றில் 'A' தகுதிச் சான்றும்
DBT -நட்சத்திரக் கல்லூரித்திட்டம் மற்றும் DST-FIST நிதிநல்கையும் பெற்றது
பாரதிதாசன் பல்கலைக்கழக இணைவு பெற்றது)
திருச்சிராப்பள்ளி- 620 020

சுதந்திரத் திருநாள் அமுதப் பெருவிழா

முதுகலைத் தமிழாய்வுத்துறை, முதுகலை வரலாற்று ஆய்வுத்துறை

மற்றும்

இஸ்லாமிய தமிழ்ப் பண்பாட்டு ஆய்வு மையம்

இணைந்து நடத்தும்

பன்னாட்டுக் கருத்தரங்கம்

தமிழக முஸ்லிம்களின் வரலாறு, பண்பாடு, இலக்கியம்

நாள்: 24.05.2022, செவ்வாய்க்கிழமை

சான்றிதழ்

திருமிகு/திருமதி/முனைவர்.....அ. முஹம்மது யாசிர், உதவிப்பேராசிரியர்,.....
தமிழாய்வுத்துறை, ஜமால் முகமது கல்லூரி, திருச்சி.....அவர்கள்
24.05.2022 அன்று தமிழக முஸ்லிம்களின் வரலாறு, பண்பாடு, இலக்கியம் என்னும்
பொருண்மையில் நடைபெற்ற பன்னாட்டுக் கருத்தரங்கில்.....மொழிபெயர்ப்பு,.....
.....ஜாமி ஆ.....மனிய உலக் அன்வார் அரபுக்கல்லூரியின் வரலாறு - வளர்ச்சியும்.....என்ற தலைப்பில்
ஆய்வுக்கட்டுரை வழங்கினார் / பங்கேற்றார் எனச் சான்றளிக்கப்படுகிறது.

முனைவர் ச.அ.சையத் அகமது பிரோசு கருத்தரங்க அமைப்புச் செயலர்	முனைவர் தா.உமர் சாதிக் கருத்தரங்க அமைப்புச் செயலர்	கா.முகமது இஸ்மாயில் கருத்தரங்க அமைப்புச் செயலர்
முனைவர் அ.சையத் ஜாகீர் ஹசன் தலைவர் (பொ), முதுகலைத் தமிழாய்வுத்துறை	முனைவர் அ.அக்பர் உசேன் தலைவர், முதுகலை வரலாற்று ஆய்வுத்துறை	முனைவர் எஸ்.இஸ்மாயில் முகைதீன் முதல்வர்

Scanned with Oken Scanner

Vol - 3 -1&1S May 2022
Online Version : www.jmcjarj.org

ISSN (P) : 0973-0303
ISSN (O) : 2582-5941

JARJ

Jamal Academic Research Journal : an Interdisciplinary



தமிழக முஸ்லிம்களின் வரலாறு, பண்பாடு, இலக்கியம்

HISTORY, CULTURE AND LITERATURE OF MUSLIMS OF TAMIL NADU

பதிப்பாசிரியர்கள்
பேரா. கா. முகமது இஸ்மாயில்
முனைவர் தா. உமர் சாதிக்
முனைவர் ச.அ.செயத் அகமது பிரோசு

ஜமால் முகமது கல்லூரி (தன்னாட்சி)
ஆற்றல் வளத்தனித்தகுதியும்
தேசியத்தர மதிப்பீட்டு மூன்றாம் சுற்றில் 'A' தகுதிச் சான்றும்
DBT -நட்சத்திரக் கல்லூரித்திட்டம் மற்றும் DST-FIST நிதிநல்கையும் பெற்றது
(பாரதிதாசன் பல்கலைக்கழக இணைவு பெற்றது)
திருச்சிராப்பள்ளி- 620 020

Since 1951

Scanned with Oken Scanner

தமிழக முஸ்லிம்களின் வரலாறு, பண்பாடு, இலக்கியம்

பதிப்பாசிரியர்கள்	:	பேரா.கா.முகமது இஸ்மாயில் முனைவர் தா.உமர் சாதிக் முனைவர் ச.அ.செயத் அகமது பிரோக
வகை	:	பன்னாட்டுக் கருத்தரங்க ஆய்வுக் கட்டுரைகளின் தொகுப்பு (தமிழ் மற்றும் ஆங்கிலம்)
பக்கங்கள்	:	378
வெளியீடு	:	ஜமால் முகமது கல்லூரி (தன்னாட்சி), திருச்சிராப்பள்ளி - 620 020
அச்சாக்கம்	:	தி பிரிண்டிங் ஹவுஸ், திருச்சி -23

JARJ

Jamal Academic Research Journal : an Interdisciplinary
ISSN (P) : 0973-0303
ISSN (O) : 2582-5941
Online Version : www.jmcjarj.org

History, Culture and Literature of Muslims of Tamil Nadu

Guest Editors	:	Prof.K.Mohamed Ismail Dr.T.Umar Sadiq Dr.S.A.Syed Ahmed Firoz
Subject	:	Research Articles of an International Seminar (English and Tamil)
Pages	:	378
Publication	:	Jamal Mohamed College (Autonomous) Tiruchirappalli - 620 020
Printing	:	The Printing House, Trichy -23

Scanned with Oken Scanner

9	இஸ்லாமியத் தமிழ்ச் சிறுகதைகள் தோற்றமும் வளர்ச்சியும் - திரு.மு.சாதிக் அலி	64
10	லால்பேட்டை, ஜாமிஆ மன்பஉல் அன்வார் அரபுக் கல்லூரியின் வரலாறும், வளர்ச்சியும் - திரு.அ.முஹம்மது யாசிர்	67
11	நாகூர் இ.எம்.ஹனீபாவின் இஸ்லாமிய பாடல்களில் ஆன்மீக சிந்தனைகளும், வரலாற்றுச் செய்திகளும்... - முனைவர் சே.அமீருதீன்	71
12	இந்தியாவில் இஸ்லாம் சமயம் - A.ஹபீப் முகம்மது	77
13	குணங்குடி மஸ்தான் சாகிபும் அவருடைய பராபரக்கண்ணியும் - முனைவர் கு.கண்ணன்	87
14	காயிதே மில்லத் இஸ்மாயில் சாகிப் - கலைஞர் மு.கருணாநிதி நட்புறவு - முனைவர் அ.ரசித்கான்	91
15	சீறாவில் அலிமா - ஆமினா கனவுகள் விளக்கம் - முனைவர் மு.சேக் அப்துல்லா	102
16	Contribution of Kunangudi Masthan Sahib to Tamil Literature **- Dr. V. Manimuthu**	107
17	Muslim Wedding Ceremony **- G. Sutha**	110
18	ஜே.எம்.சாலியின் ஆயுள் தண்டனை நாவலில் குகைவாசிகளின் வரலாறு - முனைவர் க.இக்பால்	114

Scanned with Oken Scanner

JARJ Jamal Academic Research Journal-an Interdisciplinary ISSN(P): 0973-0303
Mohamed Yasir, JARJ-Vol-3-1S-May-2022:67-70 ISSN(O): 2582-5941

"லால்பேட்டை, ஜாமிஆ மன்பஉல் அன்வார் அரபுக் கல்லூரியின் வரலாறும், வளர்ச்சியும்"

அ. முஹம்மது யாசிர்,
உதவிப்பேராசிரியர்
தமிழாய்வுத்துறை,
ஜமால் முகமது கல்லூரி (த),
திருச்சிராப்பள்ளி - 620 020.
E-mail ID: jmcamy93@gmail.com

ஆய்வுச்சுருக்கம்

' எழுத்தறிவித்தவன் இறைவன்' என்ற சொல்லிற்கு இணங்க உலக கல்வியை கற்றுத் தருவதற்கு ஏராளமான மக்கள் ஆர்வம் செலுத்துகின்றனர். இருப்பினும் இஸ்லாமிய மார்க்க கல்வியை உலகளாவிய மக்களுக்கு கொண்டு செல்ல மதரசாக்கள் என்னும் அரபுக் கல்லூரிகளின் பங்களிப்பில் "லால்பேட்டை, ஜாமிஆ மன்பஉல் அன்வார் அரபுக் கல்லூரியின் செயல்பாட்டையும் வரலாறையும் ஆராய்ந்து இக்கட்டுரையில் சொல்லப்பட்டுள்ளது.

ஆய்வுக் களம்

ஜாமிஆ மன்பஉல் அன்வார் அரபுக் கல்லூரி, லால்பேட்டை, கடலூர் மாவட்டம் என்ற அரபுக் கல்லூரியால் 2013-ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட "ஜாமிஆ மன்பஉல் அன்வார் அரபுக் கல்லூரி 150-ஆம் ஆண்டுப் பெருவிழா சிறப்பு மலர்" இந்த ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது.

திறவுச் சொற்கள்

லால்பேட்டை, ஜாமிஆ மன்பஉல் அன்வார் அரபுக் கல்லூரி, மதரஸா, இஸ்லாமிய மார்க்கம், சாப்பாடு, பாடம், ஹள்ரத், சினிமா தியேட்டர்.

முன்னுரை

இறைவனால் படைக்கப்பட்ட மனிதர்கள் இந்த உலகில் எப்படி வாழ வேண்டும் என்பதை உணர்த்துவதற்காக இறைவன் உலக பொதுமறையாம் திருமறையாகிய திருக்குர்ஆனைப் படைத்து அதனை இறைத்தூதர் முஹம்மது நபியின் வாழ்க்கையின் வழியாக இந்த உலக சமுதாய மக்களுக்கு கற்றுத் தருவதற்காக ஏற்படுத்தப்பட்டது தான் தீனுல் இஸ்லாம் என்ற மார்க்கமாகும். இந்த இஸ்லாமிய மார்க்க கல்வியை நபிகளாருக்கு பின் அவர்களது தோழர்களாகிய சஹாபாக்கள் , தாபியீன்கள். தபா தாபியீன்கள், உலமாப் பெருமக்கள் என்று உலக இறுதி நாள் வரை இந்த கல்வியை முஸ்லிமான ஆண், பெண்களிடத்தில் கொண்டு சேர்ப்பது கடமையாக உள்ளது. இத்தகைய பணியில் சீரும் சிறப்புமாக செயல்பட்டு வருகின்ற லால்பேட்டை, ஜாமிஆ மன்பஉல் அன்வார் அரபுக்கல்லூரியின் அரும்பெரும் செயலையும், வரலாற்றையும், வளர்ச்சியையும் இக்கட்டுரையில் காண்போம்.

ஆய்வுச் சிக்கல்

இஸ்லாமிய மார்க்கத்திற்கு புறம்பான செயல்பாடுகள் இந்த சமுதாயத்தில் நிகழ்த்தப்படும் போது மதரஸாக்களும், முஸ்லிம் மக்களும் அதை எதிர்கொண்டு வெற்றி பெறுதல்.

ஆய்வு நோக்கம்

இஸ்லாமிய மார்க்க சட்ட திட்டங்களை நிலைநிறுத்துவதில் லால்பேட்டை, ஜாமிஆ மன்பஉல் அன்வார் அரபுக் கல்லூரி செயல்பட்ட முறையும். அந்த மதரசாவின் வளர்ச்சிக்கு அவ்வூர் மக்கள் ஆற்றிய தொண்டினை பற்றியும் ஆராய்வது ஆய்வின் நோக்கமாகும்.

ஆய்வு முறையியல்

இந்த ஆய்வு பகுப்பு முறை, தொகுப்பு முறை, விளக்கமுறை, சுருக்க முறை என்ற ஆய்வு முறைமையில் ஆய்வு நடத்தப்பட்டுள்ளது.

Scanned with Oken Scanner

கட்டுரைப் பொருண்மைகள்

கடலூர் மாவட்டத்தில் லால்பேட்டை என்ற ஊரின் பெயரைச் சொன்னாலே அறியப்படாத மக்கள் யாரும் இல்லை. இத்தகைய சிறப்பு இந்த ஊருக்கு கிடைக்க காரணமாக இருப்பது இஸ்லாமிய மார்க்க கல்வியை போதிக்கின்ற பாடசாலையாக பயின்று வரும் ஜாமிஆ மன்பஉல் அன்வார் அரபுக் கல்லூரி தான். ஏனெனில் தமிழகத்தில் அரபு கல்லூரிகளுக்கு இடையே எந்த அரபு கல்லூரியும் கொண்டாடாத 150-வது ஆண்டு விழாவை 2013-ல் லால்பேட்டையில் உள்ள அரபுக் கல்லூரி மட்டுமே முதலாவதாக கொண்டாடுகிறது. தற்போது அந்த அரபுக் கல்லூரி 159 -வது ஆண்டில் பயணித்துக் கொண்டிருக்கிறது. எல்லாம் வல்ல இறைவன் உலக இறுதிநாள் வரை இந்த அரபுக் கல்லூரியின் செயல்பாட்டை நிலைநிறுத்துவானாக ஆமீன். ஏனெனில் இந்த மதரஸாவில் பயின்ற மாணவர்கள் உலகம் முழுவதும் பரவி இஸ்லாமிய மார்க்க கல்விகளை மதரசாக்களின் மூலமாக கற்பித்து வருகின்றனர். அதுமட்டுமின்றி உலக அமைதிக்காகவும், இறைவனுடைய மார்க்கத்தை முஸ்லிமான ஆணும், பெண்ணும் அறிந்து இருப்பதனுடைய அவசியத்தை உணர்ந்து பல பகுதிகளில் ஆண்கள் மதரசாக்களும், பெண்கள் மதரசாக்களும் சிறப்பான முறையில் நடத்தப்பட்டு வருகின்றன. இதற்கு மூலகாரணமாக இருப்பது லால்பேட்டை, ஜாமிஆ மன்பஉல் அன்வார் அரபுக் கல்லூரியாகும். இம்மதரசாவை தோற்றுவித்த பெருமக்களை பற்றியும், அம்மதரசாவின் வளர்ச்சிக்கு அவ்வூர் மக்களின் பங்களிப்பையும் பின்வருமாறு காண்போம்.

மதரஸாவின் தோற்றம்

1864 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட ஜாமிஆ மன்பஉல் அரபுக் கல்லூரி என்ற மதரஸா, பெரிய ஹள்ரத் சி. அஹமது ஆலிம் (ரஹ்)அவர்களால் தொடங்கப்பட்டது அதைத் தொடர்ந்து 1945-ஆம் ஆண்டில் மன்பஉல் அன்வாரின் பொறுப்பாளராக அல்லாமா ஷெய்குள் மில்லத் ஜியாவுத்தீன் அஹ்மது அமானி ஹள்ரத் அவர்கள் வந்தபின் மாணவர்களின் எண்ணிக்கையும், புதிய கட்டிடங்களின் உருவாக்கமும் அதிகரித்து பெரும் முன்னேற்றம் அடைந்தது. இவர்களால் 1962-இல் மதரஸா நூற்றாண்டு விழாவும் கண்டது. அதைத்தொடர்ந்து 2013-இல் 150வது ஆண்டு விழாவையும் மவ்லானா மவ்லவி அ. நூருல் அமீன் ஹள்ரத் அவர்களால் பொறுப்பேற்று நடத்தப்பட்டது. தற்போது இவர்களின் பொறுப்பின் கீழ் மதரஸா பல ஆண்டு விழாக்களை சிறப்பாக நடத்திக் கொண்டு வருகிறது. இந்த மதரஸாவின் மூலமாக 500 க்கும் மேற்பட்ட மவ்லவி ஃபாஜில்களும், 1500 க்கும் மேற்பட்ட மவ்லவி ஆலிம்களும், 100 க்கும் மேற்பட்ட ஹாபிழ்களும் ஸனது பெற்று மார்க்கப் பணியில் ஈடுபட்டு வருகிறார்கள். இவர்களின் மூலம் உலகம் மக்கள் அனைவரும் பயன்பெற்று வருகின்றனர்.

இந்த ஜாமியா மன்பவுல் அன்வார் அரபுக்கல்லூரியைத் தோற்றுவித்தவர்கள் அரசர்களும், ஜமீன்தார்களும் அல்லர். அல்லாஹ்வைத் தவிர யாருக்கும் அஞ்சாத நெஞ்சம் உடைய ஆலிம் குடும்பத்தினரால் தான் நிறுவப்பட்டுள்ளது என்பது அனைவரும் அறிந்த ஒன்றே. அந்த வகையில் "முந்தைய மூத்த அறிஞர்களான உலமா பெருமக்களின் வரிசையில் மௌலானா அஹமது ஹள்ரத், மௌலானா ஹசனுத்தின் ஹள்ரத், மௌலானா முஹம்மது இஸ்மாயில் ஹள்ரத், மௌலானா முத்தவல்லி அப்துல் பாஸித் ஹள்ரத், மௌலானா அமானி ஹள்ரத், மௌலானா அப்துல்லா ஹள்ரத், மௌலானா முஹம்மது ஜெக்கரிய்யா ஹள்ரத், மௌலானா அப்துர் ரப் ஹள்ரத், இன்றைய முதல்வர் மௌலானா நூருல் அமீன் ஹள்ரத் என்று வரிசைப்படுத்தி பார்க்கும்போது இவர்களில் பெரும்பாலானவர்கள் ஜாமிஆ வில் சேவையாற்றிய ஆலிம்களின் குடும்ப தோன்றல்களாகவே இருக்கின்றனர்"1.

அந்த வகையில் சில சிறப்பு பெற்ற உலமா பெருமக்களினால் மதரஸா மேலும் மேலும் பல வளர்ச்சியை கண்டுள்ளது. அந்த வரிசையில் "அமானி ஹஸ்ரத் அவர்கள் மார்க்கக் கல்வியில் தேர்ந்தவர் என்பதை போலவே அரபி - தமிழ் ஆகிய இரு மொழிகளிலும் ஒப்பீடு செய்து இவ்விரு மொழிகளின் இலக்கணங்களும் எவ்வாறெல்லாம் ஒத்திருக்கின்றன என்பதை ஆய்வு செய்து அறிவித்த பேரறிஞர் ஆவார். தமிழின் தொன்மைக்கும் அரபியின் தொன்மைக்கும் சாட்சியாக அமானி ஹஜ்ரத் அவர்களின் ஆராய்ச்சி கட்டுரைகள் அமைந்துள்ளன, மவ்லானா ஜக்கரியா ஹஸ்ரத் அவர்கள் தமிழகத்தில் பல நூற்றுக்கணக்கான மஸ்ஜிதுகளுக்கு கிப்லா நிர்ணயம் செய்து துஆ செய்திருக்கிறார்கள். இன்றைக்கு கல்லூரி பேராசிரியராக உள்ள மவ்லானா எ.இ.எம்.அப்துர் ரஹ்மான் ஹள்ரத் அவர்கள் தமிழ்நாடு ஜமாஅத்துல் உலமா சபையின் தலைவர், ஹதீஸ் கலையில் தனி சிறப்பு

Scanned with Oken Scanner

பெற்ற அறிஞராக போற்றப்படுகிறார்"2. இவ்வாறு மதரசாவின் வளர்ச்சிக்காக பாடுபட்ட உலமா பெருமக்கள் ஏராளம்.

அனுபவம் நிறைந்த வார்த்தைகள்

உலமாப் பெருமக்கள் பாடத்தோடு சேர்ந்து உலக வாழ்விற்கான அனுபவம் நிறைந்த கதையாடல்களை சொல்லி மாணவர்களை உற்சாகப்படுத்தி இருக்கிறார்கள். அந்த வகையில் அமானி ஹஜ்ரத் அவர்கள் ஒரு பல்கலைக்கழகமாகவும், கல்வியின் ஊற்றாக திகழ்ந்திருக்கிறார்கள். "ஏழு பிறவிகளை நம்புகிற ஒருவன் குதிரை வண்டில் சவாரி செய்கிறான் . வண்டிக்காரர் முஸ்லிம். குதிரை வேகமாக ஓடட்டும் என்று திரும்பத் திரும்ப அடிக்கிறார். இதை பார்த்துக் கொண்டிருந்த பிரயாணி, தம்பி குதிரையை அடிக்காதே தேவையின்றி அடித்தால் அடுத்த பிறவியில் நீ குதிரையாகப் பிறப்பாய் அது மனிதனாக பிறந்து உன்னை அடிக்கும் என்றார். உடனே வண்டியை ஓட்டியவர் திரும்பி, ஐயா சென்ற பிறவியில் நான் குதிரையாக இருந்தேன். இந்த குதிரை மனிதனாக இருந்து என்னை மிகவும் அடித்து துன்புறுத்தியது அதற்காகத்தான் இப்போது அடிக்கிறேன் என்றாராம். பிரயாணியின் முகத்தில் ஈயாடவில்லை; ஒரு மாணவர் எதையோ திருடி விட்டார். மற்றவர்கள் பரபரப்பாக வந்து இந்த செய்தியை ஹஸ்ரத் அவரிடம் கூறி ஓதுகிற பையன் திருடலாமா? என்றெல்லாம் பேசிக் கொண்டிருந்தார்கள். அவர்கள் அமைதியாக பார்த்துக் கொண்டிருந்து விட்டு சொன்னார்கள். அடே, ஓதுகிறவன் திருடவில்லை - திருடவும் மாட்டான். திருடன் ஓத வந்து விட்டான். அவ்வளவுதான் பரபரப்பெல்லாம் பறந்தோடிப் போய்விட்டது"3.

சினிமா தியேட்டர்

உலகில் நடைபெறுகின்ற தீமைகளான கொலை, கொள்ளை, விபச்சாரம், மது, சூது, பெண் பலாத்காரம், சினிமா தியேட்டர் போன்றவைகளை எல்லாம் மனிதர்களுக்கு, இறைவனால் தடை செய்யப்பட்ட செயல்களாகும். ஆனால் மாற்றுமத சகோதரர்கள் லால்பேட்டை மண்ணில் உருவாக்கப்பட இருந்த சினிமா தியேட்டரை நிறுவ விடாமல் எதிர்த்து உலமா பெருமக்களும், மாணவர்களும், அவ்வூர் வாசிகளும் ஒற்றுமையாக செயல்பட்டு வெற்றி கண்டார்கள்."எந்த ஷரீஅத்தை உலகம் முழுவதும் வாழவைப்பதற்கு ஆன்மீக கலைக்கூடமாம் மன்பவுல் அன்வார் உதயமாகியதோ - அந்த பூமியாம் லால்பேட்டை புனித மண்ணில் 'கலை' என்ற பெயரில் கல்வியையும் ஒழுக்கத்தையும் உருச்சிதைத்து சிறுவர் வாலிபர் இளைஞர் மாணவர்கள் ஆண், பெண் அத்தனை பேர்களையும் சீரழிக்க செய்யும் சினிமா திரையரங்கு ஒன்றை கட்டி பார்ப்பதற்கு ஒரு கூட்டம் உதயமாகி விட்டது; ஊர் மக்களின் நலன் காக்க வருங்கால சமுதாயத்தின் ஒழுக்கம் காக்க மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் கலந்துகொண்டு மக்களின் மனதைக் கேட்க வரும் அந்தக் கூட்டத்தில் ஜாமிஆ மாணவர்களும் கலந்து கொள்வது, தங்களது எதிர்ப்பையும் எடுத்துச் செல்வது என்ற முடிவுக்கு வந்தோம்; அவர்கள் நினைத்தால் அதிகாரிகளின் பக்க பலத்தால் நினைத்ததை நடத்தி விட்டு போயிருக்கலாம். அப்படி அவர்கள் நினைக்கவில்லை மக்களின் நிலைகளையும் மாணவர்களின் நிலைகளையும் நியாய தராசில் நினைத்துப் பார்த்து நிறுத்துப் பார்த்ததில் அவர்களின் மனிதாபிமானமும் கண்ணியமிக்க பாரம்பரியமும் ஒற்றுமை உணர்வும் வருங்கால மானிட சமுதாயத்தின் அந்தஸ்துமே தலை தூக்கி நின்றது. மாணவர்களும் ஊர் மக்களும் இணைந்து எதிர்க்கும் இந்தப் போராட்டத்தில் பிற்கால ஒழுக்கமும் உயர்வும் இருக்கிறது, என்று அந்தக் கூட்டத்திலேயே லால்பேட்டையில் சினிமா தியேட்டர் கட்டக்கூடாது என்று பொதுமக்கள் முன்னே நன் முடிவு காணப்பட்டது"4. இவ்வாறு ஊரின் நலனுக்காக மதரஸா மாணவர்கள் பாடுபட்டு வெற்றி கண்ட பல நிகழ்வுகள் வரலாற்று நினைவாக உள்ளது.

மாணவர்களின் படைப்பாளுமை

மன்பவுல் அரபுக் கல்லூரியில் ஓதிய மாணவர்கள் பிற்காலத்தில் பல மதரஸாக்களின் தலைவர்களாகவும், பலநூல் வல்லுநர்களாகவும், இதழ் ஆசிரியர்களாகவும் திகழ்ந்திருக்கிறார்கள். அவர்களின் மூலம் தீனுல் இஸ்லாம் என்ற மார்க்கம் ஊடகங்களின் வழியாகவும் சமுதாய மக்களை சென்று அடைந்து பல நற்பலன்களை அடைய செய்திருக்கின்றது." 'விண்மீன்' ஆசிரியர் முதுவை கவிஞர் ஹாஜி அ. உமர் ஜாஃபர் பாஜில் மன்பயீ; 'குர்ஆனின் குரல்' ஆசிரியர் மவ்லானா, முப்தி,'அல்ஹாஜ் அசதுல் மில்லத்' அ.முஹம்மது அஷ்ரப் அலி ஹஜ்ரத் மன்பஈ அவர்கள்;சமுதாய கவிஞர் தா. காசிம் அவர்கள் (சரவிளக்கு ஆசிரியர்)"5.

Scanned with Oken Scanner

ISSN(P): 0973-0303
ISSN(O): 2582-5941

மதரஸா மாணவர்களுக்கு வீட்டு சாப்பாடு

லால்பேட்டை மன்பஉல் மதரஸாவில் பல அற்புத நிகழ்வுகள் நடந்து வருகின்றன. அந்த வகையில் எந்த ஊரிலும் இல்லாத ஒரு சிறப்பு லால்பேட்டைக்கு இருக்கிறது. அது என்னவென்றால் மதரஸாவில் ஓதக்கூடிய மாணவர்களுக்கு அவர் ஓதி முடிக்கும் காலம் வரை வீட்டிலிருந்து சாப்பாடு கொடுக்கப்படும். இந்த வழக்கம் இன்று வரை கடைபிடிக்கப்பட்டு வருகிறது. இப்படிப்பட்ட ஒரு நிகழ்வை எந்த ஒரு ஊரிலும் பார்க்க முடியாது." லால்பேட்டை மதரஸா விற்கும் மற்ற ஊர் மதரஸாவிற்கும் பல வேறுபாடுகள் உண்டு. மற்ற மதரஸாக்களில் மாணவர்களுக்கு உணவு மதரஸாவிலேயே சமைத்து தரப்படும். சில ஊர்களில் வீடுகளிலிருந்து கொஞ்சம் மாணவர்களுக்கும் மதரஸா சமையல் கொஞ்சம் மாணவர்களுக்கும் தரப்பட்டு வருகிறது; லால்பேட்டை மன்பவுல் அன்வார் தமிழகத்திற்கு ஒரு முன்மாதிரியாக, மதரஸா ஆரம்பிக்கப்பட்டு 10 மாணவர்கள் படித்த காலத்திலிருந்து இன்று ஜாமியா வாக செயல்பட்டு பலநூறு மாணவர்களுக்கு கல்வியை கற்று தந்து வரும். 150ஆம் ஆண்டும், அங்கு மாணவர்களுக்கு வீட்டு சாப்பாடு தான் மதரசா சமையல் என்பது மருந்துக்குக் கூட கிடையாது என்று கூறலாம்; கோட்டகுப்பம் மௌலவி நாஹிம் அவர்கள் ஏழு ஆண்டு ஒரே வீட்டில் மூன்று வேளையும் சாப்பிட்டு பட்டம் பெற்ற சம்பவமும். அவர்களுக்குப் பிறகு அவர்களின் சிறிய தாயார் மகன் முஹம்மது ஜூபைரை அங்கு சாப்பிட ஏற்பாடுகள் செய்து உறவை தக்க வைத்துக் கொண்ட சம்பவங்கள் ஏராளம். (மூன்று தலைமுறைகளாக ஒரே வீட்டில் மூன்று தலை முறை ஓதுரப் பிள்ளைகள் தொடர்ந்து சாப்பிட்டு உள்ளார்கள்); தங்களது வீட்டு சாப்பாட்டைக் கொடுத்து, தங்களது விவசாயத்திலிருந்து கிடைக்கும் வருமானத்தில் மதரசா நிர்வாகத்தை நடத்தி வரும் ஒரு ஊர் லால்பேட்டை தவிர வேறு எங்கும் இல்லை என்றே கூறலாம். வெளியூர் வசூல் இல்லாமல் ஊர் மக்களாலேயே மதரஸா இப்போதும் நடந்து வருவதைக் காணலாம்"6.

முடிவுரை

இக்கட்டுரையில் மேலே சொல்லப்பட்டவாறு தீனுல் இஸ்லாமிய மார்க்கத்தை நிலைநாட்டுவதில் மதரசாக்கள், உலமாக்கள், ஊர் மக்கள் எந்த அளவிற்கு பாடு படுகிறார்கள் என்பதை லால்பேட்டை, ஜாமிஆ மன்பஉல் அன்வார் அரபுக் கல்லூரி மூலம் அறிந்து கொள்ளப்படுகிறது.

முதன்மை நூல் ஆதாரம்

"ஜாமிஆ மன்பஉல் அன்வார் அரபுக் கல்லூரி 150-ஆம் ஆண்டுப் பெருவிழா சிறப்பு மலர்", மவ்லானா மவ்லவி அ.நூருல் அமீன் ஹள்ரத், 2013,ஜாமிஆ மன்பஉல் அன்வார் அரபுக் கல்லூரி, லால்பேட்டை, கடலூர் மாவட்டம்.

1. மேலது பக்கம்:278.
2. மேலது பக்கம்:278.
3. மேலது பக்கம்:285,287.
4. மேலது பக்கம்:293,294.
5. மேலது பக்கம்:295.
6. மேலது பக்கம்:298,299,301.

Scanned with Oken Scanner

சமூகத்தில் வாழும் அடித்தட்டு மக்கள் குறிப்பாக சிறுபான்மை இஸ்லாமிய சமுதாய மக்கள் பயன்பெறும் வகையில் ஹாஜி எம்.ஜமால் முஹம்மது சாஹிபு மற்றும் ஜனாப் என்.எம். காஜாமியான் ராவுத்தர் ஆகிய வள்ளல் பெருமக்களால் 1951 -ஆம் ஆண்டு தோற்றுவிக்கப்பட்ட அரசு உதவி பெறும் தன்னாட்சிக் கல்லூரி ஆகும். இது பாரதிதாசன் பல்கலைக்கழகத்துடன் இணைவு பெற்றது. இக்கல்லூரியில் 25 இளநிலை மற்றும் 20 முதுநிலைப் பட்டப்படிப்புகள் உள்ளன. 19 துறைகள் ஆய்வுத் துறைகளாகத் திகழ்கின்றன. கல்லூரியில் பயிலும், மொத்த மாணவ, மாணவிகளின் எண்ணிக்கை சுமார் 12,000 ஆகும். மேலும், 145 அரசு ஊதியம் பெறும் பேராசிரியர்கள் உட்பட மொத்தம் 497 பேராசிரியர்கள் இக்கல்லூரியில் பணியாற்றி வருகிறார்கள். இக்கல்லூரி 1976 இல் வெள்ளி விழாவையும், 2001 இல் பொன் விழாவையும் 2011 இல் வைர விழாவையும் கொண்டாடி மகிழ்ந்தது. 2001 இல் NAAC குழுவால் ஐந்து நட்சத்திரத் தகுதி வழங்கப் பெற்றது. 2004-2005 கல்வியாண்டு முதல் தன்னாட்சிக் கல்லூரியாக விளங்குகின்றது. இக்கல்லூரி NAAC குழுவால் 2009 ஆம் ஆண்டிலும் மீண்டும் 2016 ஆம் ஆண்டிலும் 'A' தகுதிக் கல்லூரியாக அங்கீகரிக்கப் பெற்றது. 2011-2012 கல்வியாண்டு முதல் பல்கலைக்கழக மானியக் குழுவால் ஆற்றல்வளத் தனித்தகுதி பெற்ற கல்லூரியாக அங்கிகாரம் வழங்கப்பட்டுள்ளது. இந்திய அரசு மனிதவள மேம்பாட்டுத் துறையின் கல்லூரித் தரவரிசை பட்டியலில் இக்கல்லூரி 2020-21ஆம் ஆண்டில் இந்திய அளவில் 65ஆம் இடம் பெற்றது. இத்தகு சிறப்புகளைப் பெற்ற ஜமால் முகமது கல்லூரி சமூகத்திற்கு உயர்கல்வியை வழங்கும் தன்மையால் சிறந்த நிர்வாகிகளையும், கல்வியாளர்களையும், அறிவியலாளர்களையும், சமூக ஆர்வலர்களையும், அறிவு மற்றும் ஆளுமைத் திறன்மிக்கோரையும் கணினி வல்லுநர்களையும் உருவாக்கி வருகிறது.

முதுகலைத் தமிழாய்வுத்துறை

கல்லூரித் தொடங்கப் பெற்ற 1951 ஆம் ஆண்டு முதலே தமிழ்த்துறையும் இயங்கி வருகின்றது. 1979 ஆம் ஆண்டு முதுகலை வகுப்பும் 2003-2004 கல்வியாண்டில் ஆய்வுப் படிப்புகளும் தொடங்கப் பெற்று முதுகலைத் தமிழாய்வுத்துறையாக இத்துறை பரிணமித்து வருகிறது. இதுவரை 35 ஆய்வாளர்கள் முனைவர் பட்டத்தையும் 200 ஆய்வாளர்கள் ஆய்வியல் நிறைஞர் பட்டத்தையும் பெற்றுள்ளனர். இளநிலை தமிழிலக்கிய பட்ட வகுப்புகள் தன்னிதிப் பிரிவில் ஆண்கள் மற்றும் மகளிர் பிரிவில் இயங்கி வருவதும் குறிப்பிடத்தக்கது. அறக்கட்டளைப் பொழிவுகள், பல்கலைக்கழக மானியக்குழு உதவியுடன் நடைபெறும் சிறப்புப் பொழிவுகள் மற்றும் பன்னாட்டு அளவிலான தேசியக் கருத்தரங்குகள் மாணவர்களின் அறிவுப் பசியைப் போக்கும் வற்றாத ஊற்றுகளாக விளங்குகின்றன. இறையருட் கவிமணி கா.அப்துல் கபூர், பெரும்புலவர் டாக்டர் சி.நயினார் முகம்மது, முனைவர் பீ.மு.மன்சூர் போன்ற துறையின் முன்னோடிகள் வாயிலாக ஜமால் முகமது கல்லூரி முதுகலைத் தமிழாய்வுத்துறை பன்னாட்டு அளவிலான கவனத்தை ஈர்த்துள்ளது எனில் மிகையாகாது.

முதுகலை வரலாற்று ஆய்வுத்துறை

இஸ்லாமிய வரலாற்றுத்துறை 1951ஆம் ஆண்டு கல்லூரி தொடங்கிய ஆண்டு முதலே இயங்கத் தொடங்கியது. 1967ஆம் ஆண்டு அரசியல் மற்றும் பொது நிர்வாகத்துறை என்ற பெயரில் செயல்படத் தொடங்கி 1976 ஆம் ஆண்டு முதல் வரலாற்றுத்துறை என்ற பரிணாமத்தைப் பெற்றது. 2004 ஆம் ஆண்டு சுற்றுலா மற்றும் பயண மேலாண்மைஎன்ற வேலைவாய்ப்புப் படிப்பு பல்கலைக்கழக மானியக்குழு உதவியுடன் தொடங்கப்பட்டது. முதுகலை வரலாறு பட்டப்படிப்பு 2005 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது. ஆய்வியல் நிறைஞர் படிப்பு 2007ஆம் ஆண்டிலும் 2016-2017 கல்வி ஆண்டு முதல் முனைவர் பட்ட ஆய்வுத்துறையாகவும் இத்துறை பரிமளிக்கிறது.

இஸ்லாமிய தமிழ்ப் பண்பாட்டு ஆய்வு மையம்

தமிழக முஸ்லிம்களின் வரலாறு, பண்பாடு குறித்து ஆய்வு மேற்கொள்ளும் பொருட்டு ஜமால் முகமது கல்லூரியில் இஸ்லாமிய தமிழ்ப் பண்பாட்டு ஆய்வு மையம் என்னும் ஆய்வு இருக்கை 2017 டிசம்பர் மாதத்தில் தொடங்கப்பட்டது. தமிழ்நாடு அரசு அருங்காட்சியகத்துறையின் மேனாள் உதவி இயக்குநரும், தமிழக முஸ்லிம்கள் வரலாறு குறித்த ஆய்வாளருமான முனைவர் ஜெ.ராஜாமுகமது (புதுக்கோட்டை) இந்த ஆய்வு மைய இயக்குநராகப் பொறுப்பேற்றுள்ளார்.

Printed & Published by **Dr. S. Ismail Mohideen,** Principal, Jamal Mohamed College, (Autonomous) and published from Jamal Mohamed College, 7 Race Course Road, Tiruchirapalli-20. and Printed by Mrs. Zeenath Beevi at The Printing House, 6, Khajamalai Main Road, (Near Collectors Bungalow), Kajamalai, Tiruchirappalli - 620 023.
Editor-in-Chief : **Dr. S. Ismail Mohideen**

Scanned with Oken Scanner